# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

## ஆண்டறிக்கை 2011

# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

ஆண்டறிக்கை 2011



# அதிமேதகு ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தி

அண்மைக்காலங்களில் தொலைத்தொடர்புத்துறையில் ஏற்பட்டுவரும் துரித விரிவாக்கம் இலங்கையை தென்னாசியப் பிராந்தியத்தில் மிகப் பரந்தளவு தொடர்புபடுத்தப்பட்ட சமூகங்களுக்கு மத்தியில் வைத்துள்ளது.

கடந்த தசாப்தத்தில் இத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி பொருளாதார முன்னேற்றத்திற்கு பெரிதும் பங்களிப்புச் செய்துள்ளதோடு 2011 ஆம் ஆண்டில் 18 மில்லியன் சந்தாதாரர்களையும் தாண்டுகின்றளவுக்கு செல்லிடத்தொலைபேசிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளது. நிலையான தொலைபேசி வசதிகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் சேர்த்து நாட்டில் மொத்த தொலைபேசி தொடர்புகளின் அளவு 20 மில்லியனையும்

கடந்துள்ளது. கடந்த தசாப்தத்தில் நிலையான இணையவசதிகள் மற்றும் மின்னஞ்சல் சந்தாதாரர்களின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது.

தொலைத் தொடர்புத்துறை, வர்த்தகத்துறையில் விரிந்த குழுமங்களுக்கும் நாட்டின் மொத்த தொழிற்சக்திக்கும் தகவலுக்கான டிஜிடல் வழிகளை இன்னும் பெற்றுக்கொள்ளாத சனத்தொகையின் விரிந்த பிரிவுகளுக்கு இணைப்பை வழங்குவதிலும் டிஜிடல் இணைப்பினை விரிவாக்குகின்ற வரவேற்கத்தக்க சவாலைக் கொண்டுள்ளது.

இலங்கை அண்மைக்காலங்களில் தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான குறிப்பிடத்தக்க வெளிநாட்டு முதலீட்டைக் கவர்ந்துள்ளது. இத்துறையை விரிவாக்குவதில் தொலைபேசி இயக்குநர்களும் பாரிய முதலீடுகளைச் செய்துள்ளனர். தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் வளர்ச்சி அதனை விரிந்த கிராமியத்துறைக்கும் கொண்டு செல்வதற்கு உதவியுள்ளது. இத்துறையில் ஏற்பட்டுவரும் வெற்றி அரசாங்கத்தின் ஒரு முக்கிய அபிவிருத்தி இலக்கான இலங்கையை தென்னாசியப் பிராந்தியத்தில் அறிவுக்கேந்திரமாக ஆக்குவதற்கு உதவும்.

நாட்டில் வினைத்திறனையும் போட்டித்தன்மையினையும் அதிகரிக்கும் அதேநேரம் இணையம் மற்றும் தகவல் தொழிநுட்ப விரிவாக்கத்துடன் தொலைத்தொடர்புத்துறையின் அபிவிருத்திக்கு வழிகாட்டுபவர்கள் சமூகத்தில் புதிய பிரிவுகளை ஏற்படுத்திவிடக்கூடிய டிஜிடல் பிரிவில் இயல்பாய் அமைந்திருக்கும் அபாயங்களைப் புரிந்து கொள்ள வேண்டுமென்பதோடு நாட்டில் விரிந்த புரோட்பேண்ட் வசதிகள் கிடைப்பதற்கான திட்டங்களினூடாக அதனைத்தீர்க்க வேண்டும்.

நாட்டில் அபிவிருத்தியை மிக மோசமாகப் பாதித்திருந்த பயங்கரவாதத்திற்கெதிரான மூன்று தசாப்தகாலபோர் முடிவுக்குவந்து இரண்டு வருடங்களில் இத்துறையில் ஏற்பட்டுள்ள அடைவுகள், மோதல் நிலைமைகளின்போதும் அதன் பின்னரும் மக்கள் மத்தியில் இணைப்பினை ஏற்படுத்துவதற்குத் தேவையான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்த அபிவிருத்தியை நோக்கிய கொள்கைகளை நாம் தொடர்ந்தும் பின்பற்றியிருந்தோம் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழிநுட்பம் அதிகமான மக்களை சென்றடையும்போது இந்த அறிவுச்சொத்துக்களும் தொழிநுட்பமும் பாரிய சமூக பிரச்சினைகளை உண்டுபண்ணும் விதத்தில் குறிப்பாக சிறுவர்களையும் இளைஞர்களையும் ஆபத்தில் தள்ளிவிடும்வகையில் பிழையாக பயன்படுத்தப்பட முடியும் என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அபிவிருத்தியின் இந்த முக்கிய துறையின் முறையான வளர்ச்சியை உறுதி செய்வதற்கு சனநாயக விதிமுறைகளுக்கு உட்பட்டவகையில் தொடர்ச்சியான விழிப்புணர்வு இருப்பது அவசியமாகும்.

தற்போது புனர்நிர்மாணத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் தேசிய அழுத்தம் கொடுக்கப்பட்டுவரும் நிலையில் சமாதானம், ஐக்கியம் மற்றும் நிலையான அபிவிருத்திக்கு உதவும் வகையில் தொலைத்தொடர்புத்துறைக்கு ஒரு பாரிய பங்களிப்பு உள்ளது.

எமது நாட்டில் இந்த முக்கியதுறையின் வளர்ச்சிக்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தேவையான வழிகாட்டலையும் சிறந்த தொழில்சார் தலைமைத்துவத்தையும் தொடர்ந்தும் வழங்குமென நான் நம்புகின்றேன்.





## தலைவரின் செய்தி

உலகின் சகல பாகங்களிலும் தொலைத் தொடர்புத் துறையானது வெகுவாக பரவலடைந்து காணப்படுகின்றது. இலங்கையானது ஆசிய பிராந்தியத்தில் தொலைத் தொடர்புத் துறையில் முன்னிலை வகிக்கும் நாடாகத் திகழ்கின்றது. காரணம், இப் பிராந்தியத்தில் நவீன தொலைத் தொடர்புகள் தொழில்நுட்பத்தைக் கொண்ட நாடாக இலங்கை இருக்கின்றமையாகும்.

மக்கள் தங்களுடைய வியாபாரங்களை முன்னேற்றுவதற்கும் தங்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்குமாக தொலைபேசிகளை அதாவது: கையடக்க மற்றும் நிலையான இணைப்புத் தொலைபேசிகளைப் மென்மேலும் பயன்படுத்துவதனை பார்க்கின்ற போது அந் நிலைமை உட்சாகத்தைத் தருகின்றது. நிலையான தொலைபேசி இணைப்பு மற்றும் கையடக்கத் தொலைபேசி இணைப்புக்களின் சந்தை பரவலானது முறையே 17.3% மற்றும் 87.8% ஆக இருப்பதுடன், மொத்த சந்தைப் பரவலானது 105% ஆக காணப்படுகின்றது. இந் நிலைமையானது வெளிகாட்டுவது யாதெனில் சில தசாப்தங்களுக்கு முன்னர் மக்கள் மத்தியில் ஒரு சொகுசுப் பண்டமாக இருந்த தொலைபேசியானது தற்பொழுது ஒரு பொதுப் பண்டமாக

உருவெடுத்துள்ளது. இது அபிவிருத்தி முன்னேற்றத்தின் தெளிவானதொரு முன்னேற்றக் குறிகாட்டியாகும். நாட்டில் தொலைத் தொடர்புகள் வசதிகளை விஸ்தரிப்புச் செய்வதற்கு அரசாங்கம் மற்றும் தனியார் துறையின் ஒருங்கிணைந்த முயற்சியின் காரணமாக இந்த முன்னிலை அடைவு எட்டப்பட்டுள்ளது.

இணையத்தளப் பாவனையானது தொலைத்தொடர்புகள் துறையின் துரித வளர்ச்சியினால் வசதியளிக்கப்பட்டுள்ளது. அதிக பிரச்சினைகளின்றி மக்கள் இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதற்கு இந்த கையடக்கத் தொலைபேசி மற்றும் டெலிகொம் வலையமைப்புக்களின் விஸ்தரிப்பு உதவி புரிந்துள்ளது. இலங்கையானது 2011 ஆம் ஆண்டில் இணையத்தளம் மற்றும் மின் அஞ்சல் பாவனையானது 4% ஆக பதிவு செய்துள்ளதுடன் இது 2000 ஆம் ஆண்டில் வெறுமனே 0.02% ஆகவே காணப்பட்டது. அதே வேளை இணையத்தளம் மற்றும் மின் அஞ்சல் பாவனையில் பாரிய முன்னேற்றமொன்று அண்மைக் காலங்களில் காணப்படுவதுடன், நாம் இந் நிலைமையை ஒரு வெற்றியாகக் கருதாது கிராமியப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களுக்கு விசேடமாக தேவையான வசதிகளை வழங்குவதற்கும் இணையத்தள வசதிகளை மேம்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். நாடு பூராகவும் உள்ள சகல சமுகக் குழுக்களும் மிகவும் இலகுவாகவும் குறைந்த செலவிலும் இணையத்தளத்தை பயன்படுத்துவற்கு வசதிகளை வழங்குமாறு இணையத்தள வழங்குனர்கள் அழைக்கப்படுகின்றனர். இந்த புரோட்பேண்ட் வசதியின் அறிமுகமானது ஒருவர் இன்னொருவருடன் தொடர்பு கொள்கின்ற விதம், தகவல்களுக்குப் பிரவேசித்தல், அறிவு மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல், ஒருவர் மற்றொருவருடன் வியாபாரங்களையும் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொள்ளல் போன்ற போக்குகளில் கருதத்தகு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதாரத்தில் புரோட்பேண்ட் வசதியின் தாக்கமானது வெகுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. புரோட்பேண்ட் வசதிகளினால் வழங்கப்படுகின்ற புதிய பிரயோகங்கள், சேவைகள் மற்றும் வியாபார வாய்ப்புக்களிலிருந்து சகல பிரஜைகளும் நன்மை அடையும் வகையில் புரோட்பேண்ட் தொடர்பான சிறந்த உபாயங்கள் மற்றும் திட்டங்கள் தற்பொழுது காலத்தின் தேவையாக உள்ளது. இணையத்தளமானது அதனது உச்ச வேகத்தை அடையும் வரை இச் சேவையின் உண்மையான தேவையின் அளவினை மதிப்பிட்டுக் கொள்ள முடியாது. இந்தக் கண்ணோட்டத்தில், புரோட்பேன்ட் இன்டனெட் இணையத்தள வசதி ஏற்பாடுகளை கண்காணிப்புச் செய்யும் பொருட்டு ஒரு கருவியானது தொலைத் தொடர்புகள் ஒழுங்கு முறைபடுத்தல் ஆணைக்குழுவினால் தாபிக்கப்பட்டுள்ளது. அத்தோடு பயன்படுத்துனர்கள் இணையத்தள பதிவிறக்க வேகத்தை பரீட்சித்துப் பார்க்க முடியும். இணையத்தள சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு தேசிய புரோட்பேண்ட் கொள்கையொன்றை உருவாக்கும் செயற்பாட்டில் இ.தொ.ஒ.ஆ ஈடுபட்டு வருகின்றது.

"இ-நேபள்" செயற்திட்டம் மற்றும் "ஒரு பாடசாலையை இணை ஒரு சமுகத்தை இணை" செயற்திட்டங்களானது சர்வதேச தொலைத் தொடர்புகள் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இ.தொ.ஒ.ஆ. ஆல் அமுல்படுத்தப்படுகின்றது. இந்தச் செயற்திட்டங்களின் ஊடாக தகவல் தொழில் நுட்பத்தின் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதில் பின்னடைவில் உள்ள பிரதேசங்கள் மற்றும் பாடசாலைகளை ஊக்கப்படுத்துவதற்கு முக்கியமாக உதவி புரியக் கூடும். நாட்டில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் கணனிகள் மற்றும் இணையத்தள வசதிகளை வழங்குவது எமது இலக்காகும். வழங்கப்பட்டுள்ள தகவல் தொழில் நுட்பத்தை உச்ச அளவு பயன்படுத்துமாறும் அதன் ஊடாக சமுகத்திற்கும் எதிர் காலத்திற்கும் நன்மை தரக் கூடிய உலகளாவிய அறிவை பெற்றுக் கொள்ளுமாறும் நான் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

லலித் வீரதுங்க
தலைவர்



## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (இ.தொ.ஒ.ஆ – TRCSL) தொழிற்பாடுகள், செயலாற்றுகை மற்றும் பலதரப்பட்ட பிரிவுகள் மற்றும் அலகுகளின் பதவியணி தொடர்பான தகவல்களை இவ் அறிக்கை உள்ளடக்கியுள்ளது. 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் ஒவ்வொரு பிரிவு மற்றும் அலகின் செயலாற்றுகையின் கீழ் கலந்துரையாடப்பட்டுள்ளன.

முன்னணி அரச நிறுவனம் ஒன்று என்ற அடிப்படையில், இலங்கையில் தேசிய தொலைத் தொடர்புகள் ஒழுங்குமுறைப்படுத்தல் தேசிய முகவரகமாக இ.தொ.ஒ.ஆ. காணப்படுகின்றது. அதிகரித்து வருகின்ற போட்டிச் சந்தையில் சவால்களுக்கு சாதகமான செயற்பாடுகளை மேற்கொண்டு பொதுமக்கள் ஆர்வத்தைப் பாதுகாக்கும் அதேவேளை தொலைத் தொடர்புகள் ஒழுங்குமுறைப்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதன் ஊடாக தொலைத்தொடர்புகள் துறையினை நிலையான விதத்தில் அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பாக முக்கிய பொறுப்பினை கையேற்று உறுதிப்பாடுடன் செயற்பட்டு வருகின்றது. நாட்டில் தொலைத் தொடர்புக் கட்டமைப்பை உலக தரத்திற்கு முன்னேற்றும் பொருட்டு உள்நாட்டில் செயற்படுகின்ற சலக தொலைத் தொடர்பு செயற்படுத்துனர்களுக்கும் உதவி புரிவதற்கு அர்ப்பணிப்புடன் இ.தொ.ஒ.ஆ செயற்படுகின்றது. தொலைத் தொடர்புகள் கைத்தொழில் துறையின் தொழில்நுட்ப அறிவு முன்னேற்றத்திற்காக முன்னுரிமை வழங்கி தொலைத் தொடர்புச் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற கம்பனிகளை ஊக்கப்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் உபாயங்களை இ.தொ.ஒ.ஆ அமுல்படுத்தும். இ.தொ.ஒ.ஆ தனது வழமையான தொழிற்பாடுகளுக்கு மேலதிகமாக தொலைத் தொடர்புகள் துறையின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு 2011 ஆம் ஆண்டில் பல செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக இ.தொ.ஒ.ஆ முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றமையினை இவ் அறிக்கை வெளிப்படுத்துகின்றது.

2011 ஆம் ஆண்டு நிறைவில் 5083 தொலைத் தொடர்புக் கோபுரங்கள் நாடு பூராகவும் காணப்படுகின்றன. அத்தோடு 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2011 ஆம் ஆண்டில் 25% அதிகரிப்பொன்றாகும். கோபுர நிர்மாணங்கள் தொடர்பாக பார்க்கின்ற போது, 2010 ஆம் ஆண்டில் இரண்டு பிரதான நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன அவையாவன:

அதி மேதகு சனாதிபதி அவர்களினால் கொக்காவில் நகரில் ஒரு பல் தொழிற்பாட்டு கோபுரமொன்று திறந்து வைக்கப்பட்டமை மற்றும் கொழும்பு மாநாகரில் பல் நோக்க கோபுரம் மற்றும் களியாட்ட நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றும் கைசாதிடப்பட்டமை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பரப்புக்கள் தொடர்பாக மூன்று மிக முக்கிய ஆய்வுக் கற்கைகள் பல்கலைக்கழகத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளன. விசேட தேவைகளைக் கொண்டவர்களுக்கான ஐசிரி (ICT) திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்று மற்றும் பொது மக்கள் மற்றும் தனியார் - மக்கள் பங்காண்மையுடனான செயற்திட்டமொன்றான "பாடசாலையொன்றை தொடர்புபடுத்தல் ஒரு சமுகத்தை தொடர்புபடுத்தல்" என்ற செயற்திட்ட தலைப்பு (4பி) மாதிரி போன்றன ஊடாக சமுகத்தில் தொழில்நுட்ப அறிவு தேர்ச்சி குறைந்த சமுகத்தவர்கள் ஐசிரி (ICT) வசதிகளை வழங்கும் நோக்கத்துடனும் பின்தங்கிய பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களையும் கவனத்திற் கொண்டு இந்த செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

சர்வதேச அலுவல்கள் தொடர்பாக, இலங்கையானது பொதுநலவாய நாடுகளின் தொலைத்தொடர்புகள் அமைப்பின் (CTO) தலைமைத்துவத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை மிகவும் திருப்பதிகரமான ஒரு அடைவாக இலங்கை தொலைத் தொடர்புகள், கைத்தொழில் துறையில் காணப்படுவதுடன், மேலும் 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களுக்கான குளோபல் சிம்போசியம் (GSR) போன்ற அதி உயர் நிகழ்வுகளை நடாத்தும் உபசரணை நாடாக வருவதற்கும் எமக்கு இயலுமை கிடைத்தமை மாபெரும் வெற்றிகளாகும். இந்த நிகழ்வானது இலங்கையின் பெயரினை சர்வதேச ரீதியாக மேம்படுத்துவதற்கு ஒரு அரிய சந்தர்ப்பமாக அமைந்ததுடன் சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் எம் நாட்டிற்கு கிடைக்கப் பெறுவதற்கு வெகுவாக ஊக்கம் வழங்கியும் உள்ளது.

தொலைத்தொடர்புத் துறை தொடர்பான அறிவு, அபிவிருத்தித் திறன்கள் மற்றும் மாற்றமடையும் மனோபாவம் போன்ற கண்ணோட்டங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பதவியணியர்களுக்கு பல பயிற்சி வாய்ப்புக்களை இ.தொ.ஒ.ஆ வழங்கியுள்ளது. தொலைத் தொடர்புத் துறை தொடர்பான தகவல்களை விசேடமாக ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பெற்றுக் கொள்வதற்கு இ.தொ.ஒ.ஆ. நூல் நிலையச் சேவையானது பாரிய அளவான நன்மைகளை வழங்குகின்றது.

சர்வதேச தொலைத் தொடர்புகள் ஒன்றியத்தின் தொழில் தேர்ச்சியாளர்களின் (வல்லுனர்கள்) ஒத்துழைப்புடன் எனலொக் தொழில் நுட்பத்திலிருந்து டிஜிடல் தொழில்நுட்பத்திற்கு நிலைமாற்றம் பெறுவதற்கான திட்டமொன்று தயார் செய்யப்பட்டுள்ளது. தேசிய திட்டக் குழுவானது உரிய அமைப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கி இ.தொ.ஒ.ஆ இன் சிரேட்ட அலுவலர் குழாத்தின் தலைமைத்துவத்தின் கீழ் ஒரு அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது. எனலொக் தொழில்நுட்பத்திலிருந்து டிஜிடல் தொழில்நுட்பம் நோக்கி நிலைமாற்றம் அடைவதானது வெண்நிற ஒளி வினைத்திறன், உயர் ஒளி மற்றும் ஒலி தரத்தினையும் புதிய வியாபார வாய்ப்புக்களையும் அதிகரித்துக் கொள்வதற்கும் நன்மை பயக்கும். சர்வதேச தொலைத் தொடர்புச் சேவைகள் மற்றும் ஏனைய செயற்படுத்துனர் சேவைகள் தொடர்பாக வானொலி பேண்ட் வசதிகளை ஒதுக்கி வழங்குவதற்கு இந்த முறைமை உதவி புரியும்.

பொறுப்புக்களை நிறைவு செய்யும் அதே வேளை இ.தொ.ஒ.ஆ தனது பதவியணியின் நலன்புரி மற்றும் விநோதச் செயற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றமை மிக முக்கியமானதொரு விடயமாகும்.

இ.தொ.ஒ.ஆ இன் பதவியணி ஒரு குழுவாக இயங்கி நிறுவனத்திற்கு நம்பிக்கையுடன் கையளிக்கப்பட்ட தொழிற்பாடுகளை 2011 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளமை தொடர்பாகவும் அவர்களுடைய அளப்பரிய பங்களிப்பு தொடர்பாகவும் அவர்களுக்கு நன்றியறிதலைத் தெரிவிப்பதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

அனுச பெல்பிட்ட
பணிப்பாளர் நாயகம்

# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (ரீஆர்சீஎஸ்எல்) உள்ளடக்கம் மற்றும் 2011 திசெம்பர் 31ல் பதவியணி

## ஆணைக்குழு

திரு. லலித் வீரதுங்க
- தலைவர்

திரு. அனுச பல்பிட
- உறுப்பினர்

திரு. எஸ்.எஸ். சஹபந்து
- உறுப்பினர்

திரு. பிரசன்ன தி சில்வா
- உறுப்பினர்

## தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைமைப் பதவியணி

திரு. அனுச பல்பிட
- பணிப்பாளர் நாயகம்

## ஆணைக்குழு அலுவலகம்

திருமதி ஆர்.எஸ். குணரத்ன
- ஆணைக்குழுவின் பதிற்கடமை செயலாளர்

## நிர்வாகப் பிரிவு

திரு. யூ.என். ரொட்ரிகோ
- மதியுரைஞர்/பணிப்பாளர் நிர்வாகம் (பதிற்கடமை)

திரு. எஸ்.பீ.எஸ். பெரேரா
- பிரதிப் பணிப்பாளர் நிர்வாகம் மற்றும் மனித வளம்

## கொள்கைகள் மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவு

திரு. எம்.கே. ஜெயசேகர
-பிரதிப் பணிப்பாளர்/ கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள்

திரு. ஐ.எம். ஜவுசி - உதவிப் பணிப்பாளர்/ சர்வதேச உறவுகள்

திரு. ஆர்.எம்.ஜே.கே.பீ. ரத்னாயக
- உதவிப் பணிப்பாளர்/கொள்கை

## பொருளாதார அலுவல்கள் பிரிவு

திரு. எச்.என். ஜயவீர
- பணிப்பாளர்/பொருளாதார அலுவல்கள்

திருமதி. சம்பாவராகொட
- பிரதிப் பணிப்பாளர்/முறைப்பாடுகள்

திரு. எச்.டப்.கே.இந்திரஜித்
- பதில் பிரதிப் பணிப்பாளர்/போட்டி மற்றும் உதவிப் பணிப்பாளர் - துறைப் பகுப்பாய்வு

திருமதி. எச்.பீ.எம். பதிரண
- உதவிப் பணிப்பாளர்/செயற்பாட்டு பகுப்பாய்வு

திரு. சீ.என். பலிஹவந்தன
- உதவிப் பணிப்பாளர்/வரிகள்

திருமதி. சிரியானி மாவல்லகே
- உதவிப் பணிப்பாளர்/பாவனையாளர் உறவுகள்

## ஸ்பெக்ட்றம் முகாமைத்துவப் பிரிவு

திரு. ஆர்.ஜீ.எச்.கே. ரணதுங்க
- பிரதிப் பணிப்பாளர்/ஸ்பெக்ட்றம் முகாமைத்துவம்

திரு. ஈ.என்.பீ.கே. ரத்னபால
- உதவிப் பணிப்பாளர் /எஸ்எம்/ஒளிபரப்பு மற்றும் கண்காணிப்பு

செல்வி. கே.எஸ்.எம். விசாகா
- உதவிப் பணிப்பாளர்/எஸ்எம்/நிலையான சேவைகள்/செய்மதிச் சேவைகள்

திரு. கே.ஏ.டீ. பர்னாந்து
- உதவிப் பணிப்பாளர்/எஸ்எம்/தகவல் தொழில்நுட்பம்

திருமதி. ஆர்.எம்.டீ.கே.பீ. லிவேரா
- உதவிப் பணிப்பாளர் /எஸ்எம்/நடமாடும் சேவைகள்

திருமதி. எஸ்.ஏ.ஆர். கமலநயனா
- உதவிப் பணிப்பாளர் /Aeronautical மற்றும் கடல்கடந்த சேவைகள்

திரு. எஸ்.சீ. வகிஸ்டா
- உதவிப் பணிப்பாளர்/உள்ளக செயற்படுத்துகை

திரு. எம்.பீ. குணசிங்க
- உதவிப் பணிப்பாளர்/தனியார் நடமாடும் வானொலி

## வலைப்பின்னல் பிரிவு

திரு. டப்.டீ.தி. அல்விஸ்
- பிரதிப் பணிப்பாளர்/வலைப்பின்னல்கள்

திரு. எல். கணேஷமூர்த்தி
- உதவிப் பணிப்பாளர்/தொழில்நுட்ப நியமங்கள்

திரு. எம்.சீ.எம். பாரூக்
- உதவிப் பணிப்பாளர்/தட்டெழுத்து அங்கீகாரம் மற்றும் தரவு இயக்கம்

திரு. ஜே.ஏ.எஸ் குணநந்தன
- உதவிப் பணிப்பாளர் /கண்காணித்தல்/ தரவு/அமைச்சூர்

## அனுமதிப்பத்திர நிர்வாகப் பிரிவு

திரு. எச்.பீ. கருணாரத்ன
- பிரதிப் பணிப்பாளர்/அனுமதிப்பத்திர நிர்வாகம்

## சட்டப் பிரிவு

திருமதி. ஜீ.சீ.பீ. மொரகொட
- உதவிப் பணிப்பாளர்/சட்டம்

திருமதி. ஆர்.எஸ். குணரத்ன
- உதவிப் பணிப்பாளர்/சட்டம்

## தகவல் மற்றும் ஆவணமாக்கல் பிரிவு

திரு. கபில ஜயவர்தன
- தொழில்நுட்ப உத்தியோகத்தர்/ உதவிப் பணிப்பாளர் -தகவல் மற்றும் ஆவணமாக்கல் (வேலைபார்த்தல்)

திருமதி. பிர்யாணி ஹெட்டியாராச்சி - நூலகர்

திருமதி. தமயந்தி சமரகோண்
- நூலகர்

## நிதிப் பிரிவு

திரு. ஆர்.சி. ரத்னாயக்க
- பிரதிப் பணிப்பாளர் - நிதி

திரு. ஆர்.பீ. அபயதீர
- உதவிப் பணிப்பாளர்/செலவினம்

திரு. ஏ.எஸ். ஹபுஆரச்சி
- உதவிப் பணிப்பாளர்/வருமானம்

## உள்ளக கணக்காய்வுப் பிரிவு

திருமதி. யூ.ஏ. சமரதுங்க
- பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்



# ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

1. திரு. லலித் வீரதுங்க - தலைவர்
2. திரு. அனுஷ பல்பிட்ட - அங்கத்தவர்
3. திரு. எஸ்.எஸ். ஷஹுபந்து - அங்கத்தவர்
4. திரு. பிரசன்ன டி சில்வா - அங்கத்தவர்

# நிறுவன முகாமைத்துவம்





**1.** திரு. லலித் வீரதுங்க - தலைவர் **2.** திரு. அனுச பல்பிட்ட - பணிப்பாளர் நாயகம் **3.** திரு. யு.என். ரொட்றிகோ - நிர்வாகப் பணிப்பாளருக்காக மற்றும் ஆலோசகர் **4.** திரு. எச்.என். ஜயவீர - பணிப்பாளர்/பொருளாதார அலுவல்கள் **5.** திரு. ஏ.பி.ஏ. குணசேகர - ஆலோசகர் **6.** கலா. மனோதா கமகே - ஆலோசகர் **7.** திரு. சனத் சிறிவர்தன - ஆலோசகர் **8.** திரு. சேனக குமார வீரரத்ன - ஆலோசகர் **9.** திருமதி யு.ஏ. சமரதுங்க - பிரதம உள்ளக கணக்காய்வாளர் **10.** திரு. எம்.கே. ஜயசேகர - பிரதிப்பணிப்பாளர் - கொள்கை மற்றும் வெளிநாட்டு உறவுகள் **11.** திரு.டப்.டி.டி அல்விஸ் - பிரதிப் பணிப்பாளர் - வலையமைப்பு **12.** திரு. ஆர்.ஜி.எச்.கே. ரனதுங்க - பிரதிப் பணிப்பாளர் - ஸ்பெக்ட்றம் முகாமைத்துவம் **13.** திரு. எச்.டப்.கே. இந்திரஜித் - பிரதிப் பணிப்பாளருக்காக - போட்டி **14.** திரு. ஏ.எஸ். ஹப்புஆராச்சி - பிரதிப் பணிப்பாளருக்காக - நிதி **15.** திருமதி ஆர்.எஸ். குணரத்ன - உதவிப் பணிப்பாளர், சட்டம் மற்றும் ஆணைக்குழு செயலாளருக்காக **16.** திருமதி ஆர்.எம்.ரி.கே.பி. லிவேரா - உதவிப் பணிப்பாளர் - ஸ்பெக்ட்றம் முகாமைத்துவம் **17.** திரு. ஈ.என்.பி.கே. ரத்னபால - உதவிப் பணிப்பாளர் - ஸ்பெக்ட்றம் முகாமைத்துவம் **18.** திரு. எம்.சி.எம். பாருக் - உதவிப் பணிப்பாளர் - வலையமைப்பு **19.** திரு. ஆர்.எம்.ஜே.கே.பி. ரத்நாயக்க - உதவிப் பணிப்பாளர் கொள்கை மற்றும் வெளிநாட்டு உறவுகள் **20.** திருமதி எச்.பி.எச்.எம். பதிரன - உதவிப் பணிப்பாளர் - பொருளாதார அலுவல்கள் **21.** திரு. எல். கணேஷமூர்த்தி - உதவிப் பணிப்பாளர் - வலையமைப்பு **22.** திரு. ஆர்.பி. அபயதீர - உதவிப் பணிப்பாளர் - செலவுகள் **23.** திருமதி ஜி.சி.பி. மொரகொட - உதவிப் பணிப்பாளர் - சட்டம் **24.** திருதி சிறியானி மாவலகே - உதவிப்பணிப்பாளர் - பொருளாதார அலுவல்கள் **25.** திரு. ஐ.எம். ஜவுசி - உதவிப்பணிப்பாளர் - கொள்கை மற்றும் வெளிநாட்டு உறவுகள் **26.** திரு. சி.என். பாலிஹவதன - உதவிப் பணிப்பாளர் - பொருளாதார அலுவல்கள் **27.** திருமதி எஸ்.ஏ.ஆர். கமலநயனா - உதவிப்பணிப்பாளர் - ஸ்பெக்ட்றம் முகாமைத்துவம் **28.** திரு. எஸ்.ஈ. வகிஸ்டா - உதவிப் பணிப்பாளர் - வலையமைப்பு **29.** திரு. எம்.பி. குனசிங்க - உதவிப் பணிப்பாளர் - ஸ்பெக்ட்றம் முகாமைத்துவம் **30.** திரு. ஜே.ஏ.எஸ். குணாநந்தன - உதவிப் பணிப்பாளர் - ஸ்பெக்ட்றம் முகாமைத்துவம் - **31.** திரு. கபில ஜயவர்தன - உதவிப்பணிப்பாளர் - தகவல் மற்றும் ஆவணமாக்கல் **32.** திரு. டப்.எல்.ஏ.கே.ஏ. குணதிலக்க - நிர்வாக உதவிப் பணிப்பாளருக்காக

## உள்ளடக்கம்

18 அத்தியாயம் 1
தொலைத்தொடர்புகள் துறை மீதான கண்ணோட்டம்

25 அத்தியாயம் 2
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (ரீஆர்சீஎஸ்எல்) ஆரம்பம், தூரநோக்கு, உயர்பணிநோக்கு, நோக்கங்கள், பொறுப்புக்கள் மற்றும் தொழிற்பாடுகள்

31 அத்தியாயம் 3
கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவு

39 அத்தியாயம் 4
பொருளாதார அலுவல்கள் பிரிவு

47 அத்தியாயம் 5
புரோட்பேன் கண்காணிப்புப் பிரிவு

51 அத்தியாயம் 6
ஸ்பெக்ட்றம் முகாமைத்துவ பிரிவு

62 அத்தியாயம் 7
வலையமைப்புப் பிரிவு

## அட்டவணை

19 அட்டவணை 1.1
தொலைத்தொடர்பு முறைமை அனுமதி பெற்ற இயக்குனர்கள்

19 அட்டவணை 1.2
திரட்டிய சந்தாதாரர்கள் எண்ணிக்கை வருடாந்த வளர்ச்சி வீதங்கள்

20 அட்டவணை 1.3
தொலைப் பரம்பலில் மாற்றம் 2000-2011

21 அட்டவணை 1.4
கணனி அறிதிறனும் கணனி அறிவும் 2004- 2009

23 அட்டவணை 1.5
முதலீட்டுச் சபை சட்டத்தின் 17ம் பிரிவின் கீழ் முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொலைத்தொடர்புச் செயற்றிட்டங்களிற்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள்

36 அட்டவணை 3.1
சந்தா பணச் செலுத்தல்கள்

40 அட்டவணை 4.1
வாய்மூல அழைப்புகள் மற்றும் குறுஞ் செய்திச் சேவை போன்றவற்றுக்கான சீரான வீதங்கள் 2010 - 2011

42 அட்டவணை 4.2
தொலைபேசி செயற்படுத்துனர்களின் முதலீடுகள், 2010 - 2011

68 அத்தியாயம் 8
அனுமதிப்பத்திர நிர்வாகப் பிரிவு

75 அத்தியாயம் 9
நிர்வாக மற்றும் மனித வளங்கள் பிரிவு

88 அத்தியாயம் 10
சட்டப் பிரிவு

91 அத்தியாயம் 11
தகவல் மற்றும் ஆவணப்படுத்தல் பிரிவு

95 அத்தியாயம் 12
ஊடகப் பிரிவு

97 அத்தியாயம் 13
உள்ளக கணக்காய்வுப் பிரிவு

100 அத்தியாயம் 14
நிதிப் பிரிவு

104 நிதிக் கூற்றுக்கள்

126 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

42 அட்டவணை 4.3
நிலையான மற்றும் கையடக்க செயற்படுத்துனர்களின் வருமானம் 2010 - 2011

43 அட்டவணை 4.4
நிலையான மற்றும் செல்லிடத் துறைகளின் தேறிய இலாபம் / நட்டம், 2009 - 2010

44 அட்டவணை 4.5
2010 இல் கையாளப்பட்ட உடன்பாட்டுப் பிரச்சனைகள்

45 அட்டவணை 4.6
நுகர்வோர் உறவுகள் அலகால் பெறப்பட்ட முறைப்பாடுகள் - 2011

45 அட்டவணை 4.7
தொலைந்த கையடக்கத் தொலைபேசிகள் மீதான முறைப்பாடுகள்

48 அட்டவணை 5.1
புறோட்பேண்ட் செயற்படுத்துனர்கள், தொழில்நுட்பம் மற்றும் வேகம்

53 அட்டவணை 6.1
ஒதுக்கப்பட்ட அலைவரிசைகளின எண்ணிக்கை, 2010 - 2011

53 அட்டவணை 6.2
ஸ்பெக்ட்றம் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 2010 - 2011

54 அட்டவணை 6.3
பெறப்பட்ட முறைப்பாடுகளும், பொறுப்பெடுக்கப்பட்ட நுண்ணாய்வுகளும்

54 அட்டவணை 6.4
அடையாளம் காணப்பட்ட சட்டரீதியற்ற பாவனையாளர்களும், எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளும்

55 அட்டவணை 6.5
வழங்கப்பட்ட அனுமதி அறிக்கைகளின் எண்ணிக்கை, 2010 - 2011

57 அட்டவணை 6.6
DSO நோக்கங்களின் பொழிப்பு

61 அட்டவணை 6.7
இலங்கை DTTB வேலைத் திட்டத்தின் பிரதான இலக்குகளும், நடைமுறையாக்கல் அட்டவணையும் 24.08.2011 இல் நடைபெற்ற NRT இன் முதல் கூட்டத்தின்படியானது

63 அட்டவணை 7.1
வலையமைப்புப் பிரிவு தொடர்பான புள்ளி விபரம், 2010 - 2011

76 அட்டவணை 9.1
TRCSL இன் ஆளணி மாற்றங்கள் 1997 - 2006

79 அட்டவணை 9.2
பயிற்சி நெறிகள், ஒன்று கூடல்கள், கருத்தரங்குகளில் TRCSL ஊழியர்களின் பங்குபற்றல், 2011

92 அட்டவணை 11.1
IT பிரிவால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் - 2011

96 அட்டவணை 12.1
2011 இல் கவனிக்கப்பட்ட நிகழ்வுகள்

98 அட்டவணை 13.1
உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளில் நோக்கப்பட்ட விடயங்கள், 2011

102 அட்டவணை 14.1
ஆணைக்குழுவின் வருமானம், 2010 - 2011

102 அட்டவணை 14.2
சர்வதேச தொலைத்தொடர்பாடல் செயற்படுத்துனர்கள் வரி 2010 - 2011

103 அட்டவணை 14.3
ஆணைக்குழுவின் மொத்த வருமானம் 2009 - 2011

## வரைபுகள்

20 வரைபு 1.1
பாவனையாளர்களின் வளர்ச்சி

22 வரைபு 1.2
மாகாண ரீதியாக கணனி அறிவு, 2009

41 வரைபு 4.1
கையடக்கத் தொலைபேசி வரிகளின் போக்கு

43 வரைபு 4.2
மொத்த வருமானத்தில் பங்களிப்பு நூற்றுவீதம்

49 வரைபு 5.1
கடந்த ஆண்டுகளின்போது புறோட்பேண்ட் பாவனையாளர்களின் வளர்ச்சி வரைபு 5.1 இல் காட்டப்பட்டுள்ளது

50 வரைபு 5.2
தரவிறக்க வேகம் ஆகஸ்ட் 2010

50 வரைபு 5.3
தரவிறக்க வேகம் ஆகஸ்ட் 2011

# சுறுக்கெழுத்துக்களுக்கான விளக்கம்

| | |
|---|---|
| 3G | மூன்றாம் தலைமுறை |
| ADS | மேலதிக டோமியன் சேர்வர் |
| ADSL | எசிமெட்ரிக் டிஜிடல் சேவைபெறுனர் வழி |
| APT | ஆசிய பசிபிக் தொலைத்தொடர்புச் சமூகம் |
| ARO | அமைச்சூர் வானொலி செயற்படுத்துனர் |
| ASO | அனலொக் அணைத்தல் |
| BMU | புரோட்பேன்ட் மொனிடரிங் பிரிவு |
| BOI | முதலீட்டுச் சபை |
| CDMA | குறியீட்டுப் பிரிவு பல்லின நுழைவுகள் |
| CID | குற்றப் புலனாய்வு திணைக்களம் |
| CLS | கணனி இலக்கிய ஆய்வு |
| CPE | சுங்க வளவு உபகரணங்கள் |
| CTO | பொதுநலவாய தொலைத்தொடர்புகள் நிறுவனம் |
| DBNO | டிஜிடல் ஒலிபரப்பு வலைப்பின்னல் செயற்படுத்துனர் |
| DPM | தரவுப் பாதுகாப்பு முகாமையாளர் |
| DR | அனர்த்த மீட்பு |
| DSO | டிஜிடல் அணைப்பான் முடிவு |
| DTT | டிஜிடல் ரெரஸ்ரியல் தொலைக்காட்சி |
| DTTB | டிஜிடல் ரெரஸ்ரியல் தொலைக்காட்சி ஒளிபரப்பு |
| ECL | சுற்றாடல் பாதுகாப்பு வரி |
| EPF | ஊழியர் சேமலாப நிதியம் |
| EPG | இலத்திரனியல் நிகழ்ச்சித்திட்ட வழிகாட்டி |
| ETF | ஊழியர் சேமலாப நிதியம் |
| FDI | வெளிநாட்டு நேரடி முதலீடுகள் |
| FM | அலைவரிசை முறைகள் |
| FMMS | அலைவரிசை முகாமைத்துவம் மற்றும் கண்காணித்தல் முறைகள் |
| FTA | காற்றில் இலவசமாக |
| GA | பொதுச் சபை |
| GB | ஜிகா பைட் |
| GDP | மொத்த உள்நாட்டு உற்பத்தி |
| GILF | உலகளாவீய கைத்தொழிலார் தலைவர்களின் அமைப்பு |
| GPRS | பொதுப் பக்கட் வானொலிச் சேவை |
| GSM | கையடக்கத் தொலைபேசிக்கான உலகளாவீய சேவை |
| GSR | ஒழுங்குபடுத்தலிற்கான சர்வதேச அமர்வு |
| HDTV | உயர் வரைவிலக்கண தொலைக்காட்சி |
| HSPA | உயர் விரைவு பொக்கட் நுழைவு |
| ICT | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| IDF | நிறுவக அபிவிருத்தி நிதியம் |
| IP | இணைய கூட்டுஒப்பந்தம் |
| IPTV | இணைய கூட்டுஒப்பந்த தொலைக்காட்சி |
| ISP | இணைய சேவை வழங்குனர் |
| IT | தகவல் தொழில்நுட்பம் |
| LTE | நீண்ட கால மதிப்பாய்வு |
| MCR | பிரதான கட்டுப்பாட்டு அறை |
| MMMI | பொதுசன ஊடக தகவல் அமைச்சு |
| MSL | நடமாடும் மற்றும் நிரந்தர சந்தாதாரர் வரி |
| MTV | நடமாடும் தொலைக்காட்சி |
| NBCC | தேசிய புரோட்பேண்ட் ஆலோசனைக் குழு |
| NBT | தேசத்தை கட்டியெழுப்பல் வரி |
| NGAN | அடுத்த தலைமுறை நுழைவு வலைப்பின்னல் |
| NGN | அடுத்த தலைமுறை வலைப்பின்னல் |
| NRT | தேசிய வீதிவரைபட அணி |
| OPAC | இணையத்தள பொது நுழைவுக் கையேடு |
| PABX | தனியார் தன்னியக்க கிளை பரிமாற்றம் |
| PC | கொள்வனவு சபை |
| PPDR | பொதுப் பாகாப்பு அனர்த்த நிவாரணம் |
| PSTN | பொதுப் பயன்பாட்டு தொலைபேசி வலைப்பின்னல் |
| QoS | சேவைத் தரம் |
| RAM | எழுமாற்று நுழைவு ஞாபனம் |
| SAARC | பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய சங்கம் |
| SATRC | தெற்காசி தொலைத்தொடர்பாடல், ஒழுங்கமைப்பாளர் மன்றம் |
| SCCM | முறைமை நிலைய உறுதிப்படுத்தல் முகாமையாளர் |
| SIM | சந்தாதாரர் இனங்காணல் முறை |
| SLI | மிளிரும் மொழி வியாக்கியானம் |
| SMS | குறுஞ் செய்திச் சேவை |
| TEC | தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபை |
| TRCSL | இலங்கை தொலைத்தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு |
| TV | தொலைக்காட்சி |
| USA | ஐக்கிய அமெரிக்க இராச்சியம் |
| UHF | அல்ட்ரா உயர் அலைவரிசை |
| VAT | பெறுமதிசேர் வரி |
| WG | வேலைக் குழு |
| Wi-Fi | வயரற்ற தொடர்புகள் |
| WIMAX | நுண்பாக நுழைவிற்கான உலகளாவீய கூட்டு |
| WSIS | தகவல் சங்கம் தொடர்பான உலக மாநாடு |
| WTISD | சர்வதேச தொலைத்தொடர்பாடல் மற்றும் தகவல் சங்க தினம் |
| WTSA | சர்வதேசத் தொலைத்தொடர்பாடல் நியமச் சபை |

# தொலைத்தொடர்புகள் துறை மீதான கண்ணோட்டம்

அத்தியாயம் 1

இலங்கையின் தொலைத்தொடர்புத் துறையானது 1858இல் கொழும்புக்கும், காலிக்குமிடையிலான முதலாவது தந்திச் சுற்றுவட்டத்தை நிறுவுதலோடு ஆரம்பித்த 150 வருட வரலாற்றைக் கொண்டது. முதலாவது தொலைபேசித் தொடர்பு 1880இல் நிறுவப்பட்டது. 1896 இலிருந்து 1991இன் ஆரம்பம் வரை தொலைத்தொடர்பானது அரச தனியுரிமையாயிருந்தது. இதிலிருந்து இலங்கை தொலைத்தொடர்புத் துறையினைக் கட்டுப்படுத்தாமை மற்றும் சுதந்திரமளித்தல் எனும் கொள்கையை மேற்கொண்டது. இன்று தொலைத்தொடர்புத் துறையானது 1996இன் 27 ஆம் இலக்கத்தாற் திருத்தப்பட்டவாறான 1991இன் 25ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் அதிகாரச் சட்டம், இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நிறுவகமான இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (ரிஆர்சிஎஸ்எல்) என்பவற்றால் ஆளப்படுகின்றது.

அட்டவணை 1.1 இல் காட்டியபடி, 2011இன் இறுதியில் உள்ளவாறு 63 அனுமதிப் பத்திரம் பெற்ற தொலைத்தொடர்பு முறைமை இயக்குநர்கள் இருந்தனர்.

### தொலைத்தொடர்பு முறைமை அனுமதிபெற்ற இயக்குனர்கள் - 2011
(அட்டவணை 1.1)

| சேவையின் வகை | எண்ணிக்கை |
|---|---|
| நிலையான தொடர்பு தொலைபேசிச் சேவை | 4 |
| செல்லிடத் தொலைபேசிகள் | 5 |
| தரவுத் தொடர்பாடல்கள் (வசதி அடிப்படையிலான) | 6 |
| தரவுத் தொடர்பாடல்கள் (வசதி அடிப்படையற்ற) மற்றும் | |
| இணையச் சேவை வழங்குநர்கள் *(ISPs)* | 8 |
| ட்றன்க் செல்லிட வானொலி *(Trunk Mobile Radio)* | 1 |
| குத்தகை சேக்யுட் வழங்குனர்கள் *(Leased Circuit Providers)* | 1 |
| அனுமதி பெற்ற கொடுப்பனவுத் தொலைபேசி சேவை வழங்குனர்கள் | 1 |
| வெளியக கேற்வே இயக்குனர்கள் *(External Gateway Operators)* | 33 |
| வீட்டுக்கு நேரடி செய்மதி ஒலிபரப்புச் சேவை *Directct-to-Home Satellite Broadcasting Service* | 02 |
| கம்பிவட தொலைக்காட்சி விநியோக வலையமைப்பு *(Cable TV Distribution Network)* | 02 |
| மொத்தம் | 63 |

குறிப்பு: இலங்கை ரெலிக்கொம் பி.எல்.சி (எஸ்எல்ரி) வரையறுக்கப்பட்ட சன்ரெல், வரையறுக்கப்பட்ட லங்காபெல் (தனியார்), வரையறுக்கப்பட்ட டயலொக் புறோட்பேண்ட் நெற்வேர்க் (தனியார்) என்னும் நான்கு இயக்குநர்கள் அவர்களது அனுமதிப்பத்திரங்களுக்கேற்றவாறு கொடுப்பனவுத் தொலைபேசி மற்றும் தரவுச் சேவைகள் என்பவற்றை வழங்க உரிமை பெற்றனர்.

2011இன் இறுதியில், அண்ணளவாக 3.6 மில்லியன் நிலையான தொடர்பு வாடிக்கையாளர்களும், 18.3 மில்லியன் செல்லிட வாடிக்கையாளர்களும், 0.359 மில்லியன் இணைய, மின்னஞ்சல் வாடிக்கையாளர்களும் (நிலையான), 0.485 மில்லியன் இணைய, மின்னஞ்சல் வாடிக்கையாளர்களும் (செல்லிட) இருந்தனர். தொலைத்தொடர்பு வாடிக்கையாளர்களின் திரள் எண்ணிக்கையில் மாற்றங்களும், தொடர்பான வருடாந்த வளர்ச்சி வீதமும் அட்டவணை 1.2 இல் காட்டப்படுகின்றன.

### பாவனையாளர்களின் திரள் எண்ணிக்கை மற்றும் பாவனையாளர்களின் வருடாந்த வளர்ச்சி வீதம் 2000, 2005-2011 (அட்டவணை 1.2)

| ஆண்டு | பாவனையாளர் வகை | | | வருடாந்த வளர்ச்சி வீதம் (%) | | |
|---|---|---|---|---|---|---|
| | நிலையான | செல்லிட | நிலையான மற்றும் செல்லிட | நிலையான | செல்லிட | நிலையான மற்றும் செல்லிட |
| 2000 | 767411 | 430202 | 1197613 | 14.7 | 67.6 | 29.4 |
| 2005 | 1243994 | 3361775 | 4605769 | 25.5 | 52.0 | 43.8 |
| 2006 | 1884076 | 5412496 | 7296572 | 51.5 | 61.0 | 58.4 |
| 2007 | 2742059 | 7983489 | 10725548 | 45.5 | 47.5 | 47.0 |
| 2008 | 3446411 | 11082454 | 14528865 | 25.7 | 38.8 | 35.5 |
| 2009 | 3435958 | 14264442 | 17700400 | -0.3 | 28.7 | 21.8 |
| 2010 | 3534575 | 17267407 | 20801982 | 2.9 | 21.1 | 17.5 |
| 2011 | 3608932 | 18319447 | 21927839 | 2.1 | 6.1 | 5.4 |

2002இன் மத்தியில் செல்லிடத் தொலைபேசி நிலையான தொலைபேசியின் எண்ணிக்கையைக் குறைத்தது. இதனால் ஒவ்வொரு வருடத்திலும் நிலையான தொலைபேசியை விட செல்லிட தொலைபேசித் துறையின் வருடாந்த வளர்ச்சி வீதம் அதிகமாக இருந்ததை அட்டவணை 1.2 இல் காணலாம். உண்மையில், 2000களின் மத்தியில் செல்லிடத் தொலைபேசித்துறை ஒரு விரிவான வளர்ச்சியைக் காட்டியிருந்தது. 2005 - 2011 காலப்பகுதியின் போது நிலையான தொலைபேசி (51.5%) செல்லிடத் தொலைபேசி (61%) இரண்டிலும் உச்சவளர்ச்சி வீதம் 2006 இல் அவதானிக்கப்பட்டது. மொத்தப் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தாலும் 2006 தொடக்கம் 2011 காலப்பகுதியில் நிலையான

தொலைப் பரம்பலில் (Teledensity) மாற்றம்- 2000-2011 (அட்டவணை 1.3)

| ஆண்டு | தொலைப் பரம்பல் (%) | | |
|---|---|---|---|
| | நிலையான | செல்லிட | கூட்டு தொலைப் பரம்பல் |
| 2000 | 4.0 | 2.3 | 6.3 |
| 2001 | 4.4 | 3.6 | 8.0 |
| 2002 | 4.7 | 4.9 | 9.6 |
| 2003 | 4.9 | 7.2 | 12.1 |
| 2004 | 5.1 | 11.4 | 16.5 |
| 2005 | 6.3 | 17.1 | 23.4 |
| 2006 | 9.5 | 27.3 | 36.8 |
| 2007 | 13.7 | 39.8 | 53.5 |
| 2008 | 17.1 | 54.8 | 71.9 |
| 2009 | 16.8 | 69.8 | 86.6 |
| 2010 | 17.1 | 83.6 | 100.7 |
| 2011 | 17.3 | 87.8 | 105.1 |

குறிப்பு: குடித்தொகைப் புள்ளி விபரம் பல்வேறு வருடங்களுக்கான மத்திய வங்கி அறிக்கையிலிருந்து பெறப்பட்டது.

**பாவனையாளர்களின் வளர்ச்சி** (வரைபு 1.1)




மற்றும் செல்லிடத் தொலைபேசிகளின் வளர்ச்சி வீதம் குறைவடைந்திருந்ததை அட்டவணை 1.2 இலிருந்து காணலாம். 2000 தொடக்கம் 2011 காலப்பகுதியின் போது மொத்தப் பாவனையாளர்களின் வளர்ச்சித் தன்மை வரைபு 1.1இல் பட வடிவில் விளக்கப்படுகின்றது.

2000இன் போது 2.3% ஆக இருந்த செல்லிட நுழைவு வீதம் (ஒவ்வொரு 100 பேருக்கும் செல்லிடத் தொலைபேசிகளின் எண்ணிக்கை) 2011 இல் 87.8% இற்கு விரைந்தது. 100 பேருக்குச் சொந்தமான தொலைபேசிகளின் எண்ணிக்கையை நுழைவு குறிக்கின்றது. எவ்வாறாயினும், இந்த எண்ணிக்கை தவறானதாகும்.

ஏனெனில், குறிப்பிடத்தக்க அளவான செயலாக்கப்பட்ட பாவனையாளர் அடையாள ஒழுங்காக்கி (Sim) அட்டைகள் ஒரே ஆளால் பயன்படுத்தப்படுவதால் உண்மையான செல்லிட தொலைத்தொடர்பு நுழைவு அட்டவணை 1.3 இல் குறிப்பிட்ட பெறுமானத்தை விட ஒரு வகையில் குறைவானதாகும். 2010 இலிருந்து நாட்டிலுள்ள சராசரி ஒரு நபர் ஒரு தொலைபேசியையாவது கொண்டுள்ளமையைக் காட்டும் வகையில் 2010இல் கூட்டு நுழைவு 100% இற்கு மேற்பட்டிருந்ததுடன் 2011 இல் 105% வரை உயர்ந்தது.

செல்லிடத் தொலைபேசி இயக்குநர்களால் வழங்கப்பட்ட மலிவான விலைகள், ஒப்பீட்டளவில் செல்லிடத் தொலைபேசிகளின் குறைந்த விலைகள், கொள்வனவுச் சக்தியில் அதிகரிப்பு, பொது மக்களின் அறிதிறன், வேறுபட்ட செலவு பொறுக்கத் தக்க மட்டத்தைக் கொண்ட பல்வேறுபட்ட வருமானக் குழுக்களிலுள்ள நுகர்வாளர்களைக் கவர்தலை இலக்காகக் கொண்ட முற் செலுத்துதல், பின் செலுத்துதல் போன்ற வெவ்வேறு கொடுப்பனவுத் தேர்வுகளின் அறிமுகம் போன்ற காரணங்களால் நுகர்வாளர்கள் செல்லிடப் பாவனைகளுக்கு மாறியமை செல்லிடத் துறையின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்குத் தொடர்புபடுத்தப்படலாம். மூன்று தசாப்த காலப் போரின் முடிவுகூட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொலைத்தொடர்புச் சேவைகளுக்கான கேள்வியின் அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்திருந்தது. இயக்குநர்களால் உருவாக்கப்பட்ட சந்தைத் தந்திரோபாயங்கள் 2009 மற்றும் 2010 இல் அவர்களிடையே ஒரு விலை யுத்தத்தை உருவாக்கியதுடன் இது சந்தையில் நிலையற்ற ஒரு தன்மையாகவும், தொலைத்தொடர்புத் துறையின் நிலைத்த தன்மைக்கு ஓர் அச்சுறுத்தலாகவும் விளைந்தது.

இது உயர் போட்டித்தன்மை மிக்க வரிப் பொதிகளாலும், பிரதானமாக செல்லிடத் துறையில் இயக்குனர்கள் அனுபவிக்கத் தொடங்கிய பாரிய நிதி நட்டங்களாலுமாக இருக்கலாம். 2009 இல் செல்லிடத் துறையின் மொத்த நட்டம் அண்ணளவாக ரூ..17.4 பில்லியனாகும். தொழிற்துறையின் சீர் குலைவைத் தடுக்குமுகமாக 2009இல் ஆணைக்குழு (TRCSL) தொலைத்தொடர்புத் துறைக்கு அடிமட்ட விலைகளையும் இடை இணைப்பு வீதங்களையும் அறிமுகப்படுத்தியதுடன் இதன் விளைவாக இயக்குநர்களிடையேயான விலைப்போரை மிக்க குறைந்த மட்டத்திற்குக் கொண்டு வர முடிந்தது.

நிலையான மற்றும் செல்லிடத் தொலைபேசிகளுக்கு மேலதிகமாக நாடு பூராவும் பொது மக்களது நலனுக்காக சில கொடுப்பனவுத் தொலைபேசி நிலையங்களும் (Booths) நிறுவப்பட்டன. நாடு பூராவும் 2011 இல் 6458 கொடுப்பனவுத் தொலைபேசி நிலையங்கள் பரந்திருந்தன.

2010இல் புறோட்பேண்ட் பாவனையாளர்களின் மொத்த எண்ணிக்கை 443,487 ஆக இருந்ததுடன் இதில் 209,946 செல்லிட புறோட்பேண்ட் பாவனையாளர்களாகவும் மீதி 233,541 நிலையான புறோட்பேண்ட் பாவனையாளர்களாகவுமிருந்தனர். 2011இல், தொடர்பான எண்கள் முறையே 782,956,485,165 மற்றும் 297,791 ஆக இருந்தன. இதன்படி, நாட்டின் மொத்தச் சனத்தொகையில் புறோட்பேண்ட் பாவனையாளர்களின் வீதம் 2010 இலும் 2011 இலும் முறையே 2.1%

**கணினி அறிதிறனும் கணினி அறிவும் 2004-2009**
(அட்டவணை 1.4)

| ஆண்டு | கணினி அறிதிறன் Awareness(%) | கணினி அறிவு(%) |
|---|---|---|
| 2004 | 18 | 10 |
| 2006/07 | 37 | 16 |
| 2009 | 44 | 20 |

மூலம்: குடிசனமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம்

ஆகவும் 3.8%ஆகவுமிருந்தன. நாட்டில் புறோட்பேண்ட் பாவனையாளர்களின் வீதத்தில் சிறிய அளவு அதிகரிப்பு இருந்தபோதிலும், இதனை மக்கள் மயப்படுத்த மேலும் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். இணைய வசதிகள் கொடுக்கப்பட்ட சில இடங்களில் (உதாரணமாக, இணையச்சாலைகள், அரசாங்க அலுவலகங்கள், கல்வி நிறுவகங்கள், தனியார் துறை நிறுவகங்கள் போன்றவை) இவ்வசதிகளைப்

**மாகாண ரீதியாக கணனி அறிவு 2009**
(வரைபு 1.2)




மூலம்: குடிசனமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம்

பெறுபவர்களால் மட்டுமின்றி, இணையத்தையும், மின்னஞ்சலையும் உபயோகிக்கும் திறனுள்ள ஏனையவர்களாலும் பாவிக்கப்படுவதால் உண்மையாக இணையத்தையும் மின்னஞ்சலையும் பாவிக்கும் ஆட்களின் எண்ணிக்கை ஒரு வகையில் மேற் கூறிய எண்களைவிடக் கூடியதாக இருக்கும் என்பது கவனிக்கப்பட வேண்டும்.

இணையமானது அறிவுக்கும் தகவலுக்குமான ஒரு சக்திமிக்க மூலமாக இருந்தபோதிலும் இதனோடு தொடர்பாக, ஆபாசமான விடயங்கள், வன்முறை ஆகியவற்றைக் கொண்ட பகுதிகளை அணுகுவதற்கான தன்மை, கடனட்டைகளுடனான மோசடிகள், திரிபுபட்ட/தவறான தகவல்களைப் பரப்புதல், கணனிகளின் இயக்கத்தைப் பாதிக்கும் வைரசுகளின் வருகை போன்ற பிரதிகூலங்களும் உள்ளன. தொலைத்தொடர்பின் வளர்ச்சியினைப் பின் தொடர்ந்து நகருவது மிகுந்த திருப்திக்கான காரணத்தைத் தரும் தகவல் தொழில்நுட்பத்திலான (ஐரி) வளர்ச்சியாகும். சனத்தொகை, புள்ளிவிபர திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட கணனி அறிவு அளவீடுகளின் படி (சிஎல்எஸ்) கடந்த ஆண்டுகளில் 5-69 வயதிற்கிடைப்பட்ட சனத்தொகையில் கணிபற்றிய அறிதிறன், கணனி அறிவு என்பன அதிகரித்திருந்தன. (அட்டவணை 1.4 ஐப் பார்க்க) இந்த அளவீடுகளில், ஒருவர் கணனியைப் பாவித்து ஒரு கடமையைச் செய்யக் கூடியவராயிருந்தால் அவர்/ அவள் கணனி அறிவுடையவர் என அடையாளம் காணப்பட்டிருந்தார். ஒருவர் கணனியின் உபயோகங்களில் ஒன்றைப் பற்றியாவது கேள்விப்பட்டிருப்பாராயின் அவர் கணனி அறிதிறன் உடையவராகக் கருதப்பட்டிருந்தார்.

மாகாணங்களிடையே, மேல் மாகாணத்தில் உயர்ந்த கணனி அறிவு காணப்பட்டது 2009இல் மாகாணங்களின் கணனி அறிவு வீதங்கள் (வடமாகாணம் தவிர) வரைபு 1.2 இல் விளக்கப்படுகின்றது.

வலைப்பின்னல் தயார் நிலைச் சுட்டி நிரல்படுத்தலில் (Network Readiness Index Ranking) இலங்கை 2010இல் 3.65 இலிருந்து 2011 இல் 3.81இற்கு அதிகரித்திருந்தது. எனினும், நிரல்படுத்தல் (Ranking) மாற்றமின்றி 66 இல் இருந்தது.

தொலைத்தொடர்புகள் தொழிற்துறை இலங்கையின் பொருளாதார சமூக அபிவிருத்தியில் முக்கிய பங்கை ஆற்றியிருந்தது.
கடந்த சில தசாப்தங்களின்

போது இலங்கையின் சேவைத் தொழிற்துறையின் வளர்ச்சியில் பாரிய பகுதி தொலைத்தொடர்புகள் தொழிற்துறையின் அபிவிருத்தியுடன் பில்லியன்களாகும். ஆணைக்குழு கொழும்பு நகரில் 4ஆம் தலைமுறை எல்.ரி.ஈ (நீண்ட காலப் பரிணாமம் - Long Term Evolution)

**முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் முதலீட்டுச் சபையால் (BOI) அங்கீகரிக்கப்பட்ட தொலைத் தொடர்புச் செயற்திட்டங்களுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடு**

(அட்டவணை 1.5) *(மில்லியன் அ.டொலர்களில் FDI)*

| விடயம் | ஆண்டு | | | |
|---|---|---|---|---|
| | 2007 | 2008 | 2009 | 2010 |
| தொலைபேசி மற்றும் தொலைத்தொடர்புக்கான FDI | 403,632 | 553,097 | 296,064 | 205,164 |
| உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய சேவைகளுக்குமான FDI | 559929 | 697,100 | 434,341 | 350,195 |
| உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய சேவைகளுக்குமாக பெறப்பட்ட FDI யின் நூற்றுவீதமாக தொலைத்தொடர்புத் துறைக்கு FDI | 72.1% | 79.3% | 69.2% | 58.6% |
| மொத்தமாகப் பெறப்பட்ட வருடாந்த FDI | 734,362 | 888,935 | 601,250 | 516,296 |
| மொத்தமாகப் பெறப்படட வருடாந்த FDIயின் நூற்றுவீதமாக தொலைத்தொடர்புத் துறைக்கான FDI | 55% | 62.2% | 49.2% | 39.7% |

மூலம்: முதலீட்டுச் சபை

தொடர்புபடுத்தப்பட முடியும். நாட்டிற்குள்ளும், வெளியேயும் தொலைத்தொடர்பில் மேம்பாடு, தகவல்கள் பாரிய அளவில் அடையத்தக்க தன்மை என்பன குடிசனத்தின் அநேகமாக எல்லாப் பிரிவினதும் வாழ்வாதாரம், வாழ்க்கை முறை, வாழ்க்கைத் தரம் என்பனவற்றை மேம்படுத்தியிருந்தன. இலங்கையின் தொலைத்தொடர்புத் தொழிற்துறையானது மூன்று தசாப்தகால ஆயுத முரண்பாடுகளின் பின்னர் அமைதி நிலைநாட்டப்பட்டதையடுத்து சமீப காலங்களில் மிகத் துரிதமாக வளர்ச்சியடைந்திருந்தது. 2009 மே மாதத்தில் இன முரண்பாடு முடிவுற்றதிலிருந்து தொலைத்தொடர்புக் கம்பனிகள் தமது வலைப்பின்னல்களை உபயோகித்தும், மேம்படுத்தியும் கொண்டிருக்கின்றன. 2011 இல் தொலைத்தொடர்பு இயக்குநர்களால் தொழிற்துறைக்குச் செய்யப்பட்ட மொத்த முதலீடு ரூ. 50.7

தொழில்நுட்பத்தை உபயோகித்து ஒரு முன்னோடி வலைப்பின்னல் செயற்திட்டத்தை நடாத்த ஓர் இயக்குநரை அனுமதித்தது. அரசாங்கம் மே மாதம் 2011 இல் கொக்காவிலில் பாரிய பன்முகச் செயற்பாட்டுத் தொலைத்தொடர்புக் கோபுரத்தை அதன் மீள்நிர்மாணப்பணிகள் பூர்த்தியடைந்ததும் திறந்து வைத்ததுடன், இது வடமாகாணத்திலுள்ள மக்களது தொலைத்தொடர்புத் தேவைகளுக்கும் உதவி செய்யும். நாடுபூராவும் 2011 இல் மொத்தமாக 5083 தொலைத்தொடர்புக் கோபுரங்கள் பரவியிருந்தன. மற்றுமொரு பன்முகச் செயற்பாட்டு தொலைத்தொடர்புக் கோபுரத்தைக் கொழும்பு நகரில் அமைப்பதற்குத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
சமீப காலத்தில் தொலைத்தொடர்புத் துறை கணிசமான அளவு வெளிநாட்டு நேரடி முதலீட்டினைப் (FDI) பெற்றிருந்தது. 2007 தொடக்கம் 2010

ஜூன் வரையான காலப்பகுதிக்குள் வெளிநாட்டு நேரடி முதலீடு பெரும்பாலும் தொலைத்தொடர்புத் துறையால் உள்ளெடுக்கப்பட்டிருந்ததை அட்டவணை 1.5 இலிருந்து காணலாம். உட்கட்டுமானம் மற்றும் பிற சேவைகளுக்காக இத்துறையால் பெறப்பட்டிருந்த வெளிநாட்டு நேரடி முதலீடு 2007 இலிருந்து 2009 வரையான மூன்று வருட காலப் பகுதியுள் 60% இற்கும் அதிகமாகவிருந்தது. 2010ஆம் ஆண்டின் போது, உட் கட்டுமானத்திற்கும், பிறசேவைகளுக்கும் பெறப்பட்ட வெ.நே.மு இல் ஏறத்தாழ 59% தொலைத்தொடர்புத் துறையால் உள்ளெடுக்கப்பட்டிருந்தது. இத்துறை 2007,2008 மற்றும் 2009 ஆகிய வருடங்களில் மொத்த வெ.நா.மு இல் 50%ஐப் பெற்றிருந்தது. இத்துறையால் 2010இல் பெறப்பட்ட வெ.நே.மு.இன் நூற்றுவீதம் 40% வரை சிறிதளவு குறைந்திருந்தது.

இலங்கையின் தொலைத்தொடர்புகள் தொழிற்துறை, விசேடமாக செல்லிடத் துறை மிக உயர்ந்த புரள்வைப் பதிவு செய்கின்றது. தொலைத்தொடர்புத் தொழிற்துறையானது தேசிய வெளியீட்டிற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பைச் செய்திருந்தது. 2010 இல் இத் தொழிற் துறையிலிருந்து அரசாங்கத்தின் திரட்டு நிதிக்கு ரூ. 27 பில்லியன்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2011 இல் இது 8% ஆல் உயர்த்தப்பட்டு 29.15 பில்லியன்களாக இருந்தது.

தொலைத்தொடர்புத் தொழிற்துறையானது பொருளாதாரத்தில் நேரடியான அதே போன்று மறைமுகமான வேலை வாய்ப்புக்களையும் உருவாக்கியிருந்தது. 2011 இல் நேரடி வேலைவாய்ப்பு அண்ணளவாக 13,000 ஆகும்.

தெற்காசியாவிலுள்ள நாடுகளுடனும் ஏனைய ஒத்த நாடுகளுடனும் ஒப்பிடுகையில் தொலைத்தொடர்புத் துறையில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை ஏற்படுத்தி சாதனைமிக்க வளர்ச்சியை அடைந்த ஒரு நாடாக இலங்கை அடையாளம் காணப்படலாம். அதனுடைய நுட்பமான தொலைத்தொடர்புகள் தொழிற்துறை குறித்து அது பெருமைப்படலாம் என்பதுடன், அது பெரும்பாலும் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு இணையாகவும் உள்ளது. GSM (செல்லிடத் தொடர்புக்கான பூகோள முறைமை), CDMA (Code Division Multiple Access), ADSL (Asymmetric Digital Subscriber Line), GPRS (General Packet Radio Service), செல்லிடத் தொலைபேசிக்கான இணைய அடைவு, Wimax (Worldwide Interoperability For Micro Wave Access) புறோட்பேண்ட் சேவைகள் 3G (மூன்றாம் தலைமுறை) மற்றும் 3.5G தொடர்புகள் மற்றும் HSPA (High Speed Packet Access) செல்லிட புறோட்பேண்ட் இணையச் சேவைகள் போன்ற அண்மைய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதில் இலங்கை தெற்காசிய வலயத்தில் ஒரு முன்னோடியாக இருந்தது.

வடக்கிலும், கிழக்கிலுமிருந்த இன முரண்பாட்டின் முடிவு இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்களை விளைவித்திருந்தது. இலங்கையை “எழுந்திடும் ஆசியாவின் அதிசயமாக” மாற்றுவதை இலக்காகக் கொண்டு அரசாங்கம் நாட்டின் பல பகுதிகளில் பாரிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்திருந்தது. அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டத்தின் படி இலங்கையை வலயத்தினுள் கடல்சார், கடற்படைசார், ஆகாய, வணிக, வலு மற்றும் அறிவு எனும் ஐந்து முக அச்சாணியாக அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. இம்முயற்சியில் தொலைத்தொடர்புத்துறை உறுதியானதொரு பாகத்தை வகிக்க வேண்டியுள்ளது.

# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL)

## ஆரம்பம், தொலைநோக்கு, செயற் பணி, நோக்கங்கள், பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகள் என்பன

அத்தியாயம் 2

### 2.1 ஆரம்பம்

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) 1991 இன் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் அதிகாரச் சட்டம் எனும் முதன்மைச் சட்டத்தைத் திருத்துவதற்காகப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட 1996 இன் 27ஆம் இலக்க இலங்கைத் தொலைத்தொடர்புகள் (திருத்த) அதிகாரச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஓர் அரசாங்க நியதிச்சட்ட சபையாகும். இந்த அறிக்கையில் அதிகாரச் சட்டம் எனும் சொல் 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்த) அதிகாரச் சட்டத்தாற் திருத்தப்பட்ட 1991 இன் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் அதிகாரச் சட்டத்தைக்

குறிப்பதுடன், ஆணைக்குழு எனும் சொல் இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவையும் குறிக்கின்றது.

## 2.2 ஆணைக்குழுவும், ஆணைக்குழுவின் கூட்டங்களும்

(TRCSL) 2005 இலிருந்து அதிமேதகு ஜனாதிபதியின் நேரடி அதிகாரத்திற்குள் வரும் ஒரு நியதிச்சட்ட சபையாகவிருந்தது. 2011இல், ஆணைக்குழுவானது ஜனாதிபதியின் செயலாளர் (பதவி வழித் தலைவர்) (TRCSL) இன் பணிப்பாளர் நாயகம், மற்றும் சட்டம், நிதி ஆகிய துறைகளிற் சிறப்புற்று, அங்கீகரிக்கத்தக்க தகைமைகளைக் கொண்டுள்ளவர்களிடையிலிருந்து அமைச்சரால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் (நியமன உறுப்பினர்கள்) ஆகியோரைக் கொண்டிருந்தது.

ஆணைக்குழு 2011 நிதியாண்டின் போது ஒழுங்கான கூட்டங்களை நடாத்தியது. ஆணைக்குழுவின் ஒவ்வொரு கூட்டத்திலும் முழுமையான சமுகமளிப்பு இருந்தது. ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்ட, அனுமதிக்கப்பட்ட விடயங்கள் ஒழுங்குபடுத்தலுக்கான விடயங்களின் அனுமதிகளையும், ஆணைக்குழுவின் வருடாந்தப் பாதீட்டையும், இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவின் உள்ளக நிருவாக விடயங்கள் மற்றும் செயற்திட்டங்கள் என்பவற்றையும் உள்ளடக்கின.

## 2.3 தொலை நோக்கு

முன்னேற்றமடையும் தொலைத்தொடர்புத் தொழிற்துறையில் விஞ்ஞான ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் ரீதியான உயர்சிறப்பினூடாக உலகத் தலைவராக மதிக்கப்படல்

## 2.4 செயற் பணி

ஒரு போட்டித்தன்மை மிக்க சந்தையில் நேர்மையையும் நீதியையும் சமப்படுத்துவதால் திறன் வாய்ந்த பண்பான வேலைப்படையின் மூலம், ஏற்கத்தக்க தரத்திலும், பொறுக்கத்தக்க விலையிலும் நாடளாவிய ரீதியில் உரிய நேரத்திலான சேவை வழங்கலை உறுதிப்படுத்துதல்.

### 2.4.1. பணிக்கூற்றின் பொருள்கோடல்

நியாயம், போட்டித்தன்மை மற்றும் முதலீடுகளை ஊக்குவிக்கும் ஓர் ஒழுங்குபடுத்தல் சூழலை உருவாக்குவதற்காக சுதந்திரமான, திறந்த, வெளிப்படைத்தன்மையான முறையில் எல்லா அக்கறையுடையோருடனும் செயற்படுவதன் மூலம் எல்லாப் பாவனையாளர்களுக்கும் நீதியான, நியாயமான, பொறுக்கத்தக்க விலையில் முன்னேற்றமான, உயர் தரத்திலான தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை கிடைக்கப் பெறுதலை உறுதி செய்வதால் இலங்கையின் நீண்டகால தொடர்பாடல் தேவைகள் நிறைவு செய்யப்படுவதை உறுதிப்படுத்தல்.

## 2.5 நோக்கங்கள்

தொலைத்தொடர்புகள் அதிகாரச் சட்டத்தின்படி தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவால் அடையப்பட வேண்டிய பொதுவான நோக்கங்கள் பின்வருமாறு:-

2.5.1. தேசிய நலனுக்கு அவசியமெனக் கருதத்தக்க அவசரசேவைகள், பொது அழைப்புப் பெட்டிச்சேவைகள், விபரக்கொத்து தகவல் சேவைகள், கடல்வழி சேவைகள், கிராமிய சேவைகள் போன்றன உள்ளடங்கிய சேவைக்கான சகல நியாயமான கேள்விகளையும் திருப்தி செய்யுமாறு இலங்கையில் நம்பகமான, வினைத்திறன் மிக்க உள்நாட்டு மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை வழங்கலை உறுதிப்படுத்தல்.

2.5.2. அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைத்த சேவைகளின் வழங்கலை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு இயக்குநரும் தேவையான தொழில்நுட்ப, நிதிசார், முகாமைத்துவ

வளங்களைப் பெற்று பயன்படுத்துவதை உத்தரவாதப்படுத்துதல்.

2.5.3. வழங்கப்படும் தொலைத்தொடர்புச் சேவைகளுக்கான கட்டணங்கள் தரம், மற்றும் வகை என்பன தொடர்பிலும், வழங்கப்படும் தொலைத்தொடர்பு உபகரணங்கள் தொடர்பிலும் பொது மக்களது அக்கறை, நுகர்வோர், கொள்வனவாளர்கள் மற்றும் ஏனைய பாவனையாளர்கள் ஆகியோரது விருப்பங்கள் என்பவற்றைப் பாதுகாத்தலும் முன்னேற்றுதலும்.

2.5.4. தொலைத்தொடர்புடன் தொடர்புடைய வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆட்களிடையே போட்டித்தன்மையைப் பேணுதலும், பாதுகாத்தலும் அத்துடன் அத்தகைய ஆட்களைப் பொறுத்த வினைத்திறன், சிக்கனம் என்பவற்றை உயர்த்துதலும்.

2.5.5. உள்நாட்டு மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு வசதிகளின் துரித, நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை உயர்த்துதல்.

2.5.6. காரணமற்ற தாமதம், தடை, இடையூறு இன்றிய நம்பகமான, வினைத்திறன்மிக்க சேவையை வழங்குவதற்கான தமது கடப்பாட்டினை இயக்குநர்கள் மேற்கொள்வதை உறுதிப்படுத்துதல்.

2.5.7. தொலைத்தொடர்புகளிலும், தொடர்பான துறைகளிலும் புதிய தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்தல், உபயோகித்தல் என்பவற்றிலான ஆய்வினை ஊக்குவித்தல்.

2.5.8. இலங்கைக்கு வெளியே வியாபார இடங்கள் அமைந்துள்ள பிரதான தொலைத்தொடர்புச் சேவைப் பாவனையாளர்களை இலங்கையினுள் வியாபார இடங்களை நிறுவ ஊக்குவித்தல்.

2.5.9. இலங்கையின் சர்வதேச இடைவழி சேவைகளை உபயோகித்தலை ஊக்குவித்தல்.

## 2.6. ஆணைக்குழுவின் பொறுப்புக்கள்

முன்னணி அரச நிறுவகம் எனும் வகையில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவே இலங்கையில் தொலைத்தொடர்புகளுக்கான தேசிய ஒழுங்குபடுத்தல் முகவர் என்பதுடன், ஒழுங்குபடுத்தற் செயன் முறையை உருவமைத்தல், பொதுநலனைப் பாதுகாத்தல், அதிகரித்துவரும் போட்டித் தன்மை மிக்க சந்தையிலுள்ள சவால்களுக்கு முகம் கொடுத்தல் என்பன மூலம் தொழிற்துறையின் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை உயர்த்துதல் அதன் பிரதான பொறுப்புமாகும். ஆணைக்குழு தொலைத்தொடர்புச் சேவைகளை வழங்குவதில்லை. ஆனால், இயக்குநர்களால் வினைத்திறனுடன் ஒழுங்கு முறையாக சேவைகள் வழங்கப்படுதலை ஊக்குவிப்பதுடன் நாட்டில் உலகத்தரம் வாய்ந்த தொலைத்தொடர்பு வலைப்பின்னல் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கையிலுள்ள எல்லா இயக்குநர்களுக்கும் உதவி செய்வதற்கும் பொறுப்பேற்கின்றது. பிரதான பொறுப்புக்கள் கீழே சுட்டிக் காட்டப்படுகின்றன.

2.6.1. அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளையும், அனுமதிபெற்ற இயக்குநர்களால் பெறப்பட்ட அனுமதிப்பத்திரங்களிலுள்ள நிபந்தனைகளையும் அமுலாக்கல்.

2.6.2. அனுமதிபெற்ற இயக்குநர்களிடையே நியாயமான, நிலைத்து நிற்கத்தக்க போட்டியை ஆதரித்தல்.

(i) இயக்குநர்கள் பொது நலன்களையும் நோக்கங்களையும் எதிர் கொள்கின்றார்களா என்பதை நிச்சயிக்க போட்டியைக் கண்காணித்தல்.

(ii) வலைப்பின்னல்களுக்கும் சேவைகளுக்குமிடையே தடையற்ற உள்ளிணைப்பை உறுதிப்படுத்துதல்.

(iii) தடையற்ற நுழைவுள்ள சுமையற்ற, வெளிப்படையான அனுமதிக்கான பொதுச் சட்டகமொன்றை நிறுவுதல்.

### 2.6.3. விலையிடல்

பொறுத்துக்கொள்ளத்தக்க தன்மை போன்றவற்றைக் கருத்திற் கொண்டு தொலைத்தொடர்புச் சேவைகள் நியாயமாக விலையிடப்படுதலை உறுதிப்படுத்துதல்.

### 2.6.4. நுகர்வோர் பாதுகாப்பு

நுகர்வோர் பாதுகாப்புகளை நிலவச் செய்வதுடன் நுகர்வோர்களாலும் பொது மக்களாலும் செய்யப்பட்ட முறைப்பாடுகள் மட்டில் விசாரணைகளை மேற்கொள்வதன் மூலம் பொதுமக்களின் பங்குபற்றுதலையும் திறந்த உரையாடலையும் ஊக்குவித்தல்.

2.6.5. சமூக ஒழுங்காக்கல்

i) யாவற்றிற்குமான அடைவு / சேவைகள்
ii) கிராமிய சமூகத்தினர், முதியோர், மாற்றுவலுவுடையோர் ஆகியோருக்கு யாவற்றிற்குமான அடைவு/ சேவைகளின் வழங்கலை உறுதிப்படுத்துதல்.
iii) அவசரத்தின்போதான தயார் நிலை
iv) வலதுகுறைந்தோருக்கு தொலைத்தொடர்புச் சேவைகளைக் கிடைக்கச் செய்தல்.

### 2.6.6. தடைகளுள்ள வசதிகளையும், அருமைத்தன்மையான வளங்களையும் ஒழுங்காக்கல்

i) ஸ்பெக்ட்றம் (Spectrum) முகாமைத்துவம்
ii) இலக்கமிடல்
iii) வழி உரிமைகள்
iv) இடப் பிரிப்பு
v) இடை இணைப்புக்கள்
vi) சர்வதேச தரிப்புநிலையங்களுக்கான அடைவு
vii) முக்கிய நிலை அடைவு

### 2.6.7. உயர்தர தொலைத்தொடர்பு சேவைகள்

நீதியான, நிலையான, பொறுக்கத்தக்க நுகர்வோரின் தேவைகளை திருப்திசெய்யும் தொலைத்தொடர்புச் சேவைகளை உறுதி செய்தல்.

### 2.6.8. நல் ஆளுகையை ஊக்குவித்தல்

பொதுமக்கள் பங்கேற்பை ஊக்குவித்தல் மூலமும், இயற்கை நீதிக் கொள்கைகளைப் பின்பற்றி உரியகாலத்தில் முடிவுகளை வழங்குவதன் மூலமும் ஒரு வெளிப்படையான தீர்மானமெடுத்தற் செயன்முறையை உறுதிசெய்தல்.

2.6.9. தீர்மானங்கள் நியாயமானவையாகவும் பக்கச்சார்பற்றவையாகவும் இருப்பதை உறுதி செய்தல்.

2.6.10. இந்த நவீன தகவல் மற்றும் தொடர்பாடல் காலத்தில் ஒரு தகவல் பெறும் சமூகமாக சிவில் சமூகத்தைக் கட்டியெழுப்ப உதவுதல்.

2.6.11 உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத் தரங்கள் தொடர்பாக சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) மற்றும் உரிய சர்வதேச நிறுவனங்களால் விதிக்கப்படும் தேவைப்பாடுகளுக்கு எந்த இயக்குநரும் அமைந்து நடத்தலை உறுதிசெய்தல்.

### 2.7. ஆணைக்குழுவின் செயற்பாடுகள்

மேற்கண்ட நோக்கங்களை அடைவதற்காக ஆணைக்குழு பின்வரும் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளை ஆற்றுகின்றது.

2.7.1. விண்ணப்பங்களை செயன்முறைப்படுத்துதலும், அனுமதிப்பத்திரங்களை வழங்குதலும்.

2.7.1.1.அதிகாரச்சட்டத்தின் 17ஆம் பிரிவின்படி, ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் அமைச்சரால் வழங்கப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழன்றி எந்த ஆளும் இலங்கையில் ஒரு தொலைத்தொடர்பு முறைமையினை இயக்கலாகாது. எவ்வாறெனினும், அனுமதியளித்தலில் சில விலக்குகள் உள்ளன. இவ்விலக்குகள் அதிகாரச் சட்டத்தின் 20 ஆம் பிரிவில் தரப்படுகின்றன.

2.7.1.2. அதிகாரச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின்படி வானொலி அலைவரிசையையும், வானொலி அலைவரிசையை வெளியிடும் கருவியையும் உபயோகிப்பதற்கான அனுமதிப்பத்திரங்கள்

தொலைத்தொடர்புகள் அதிகாரச் சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின்படி, ஆணைக்குழுவால்

வழங்கப்பட்ட அத்தகைய நோக்கத்திற்கான அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழன்றி, எந்த ஒரு நபரும் இலங்கையிலோ இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளின் எப்பகுதியிலேயோ அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட எந்தக் கப்பலிலோ எந்த வானொலி அலைவரிசையையும் அல்லது எந்த வானொலி அலைவரிசையை வெளியிடும் கருவியையும் உபயோகித்தலாகாது.

### 2.7.1.3. அதிகாரச் சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ் விற்பனையாளர் அனுமதிப்பத்திரங்கள்

அதிகாரச் சட்டத்தின் 21(1) ஆம் பிரிவின்படி ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழன்றி எந்த ஒரு நபரும் எந்த தொலைத்தொடர்புக் கருவியையும், வியாபார ரீதியாக உற்பத்தி செய்தல் இறக்குமதி செய்தல், விற்றல், விற்பனைக்கு முனைவைச் செய்தல், சம்பந்தப்படல், மாற்றல், வாடகைக்குக் கொடுத்தல், குத்தகைக்குக் கொடுத்தல், செய்து காட்டல், பராமரித்தல் அல்லது திருத்துதலாகாது.

## 2.7.2. கட்டண ஒழுங்குபடுத்தல்

2.7.2.1. அதிகாரச்சட்டத்தின் 5(கே) ஆம் பிரிவில் குறித்துரைத்தபடி அமைச்சருடனான கலந்தாலோசனையின்படி கட்டணங்களைத் தீர்மானித்தல். இயக்குநர்களால் வழங்கப்படும் தொலைத்தொடர்புச் சேவைகள் தொடர்பாக அரசாங்கத்தின் கொள்கையையும், இயக்குநர்களின் தேவைகளையும் கருத்திற் கொண்டு கட்டணங்களை அல்லது அத்தகைய கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கான முறைகளை அமைச்சருடனான கலந்தாலோசனையின்படி நிர்ணயிப்பதற்கு இப்பிரிவின்படி அதிகாரங்கள் உண்டு.

2.7.2.2. அதிகாரச்சட்டத்தின் 5.5 (பி) பிரிவின்படி இடை இணைப்புக் கட்டணங்களை அனுமதித்தல்/ நிர்ணயித்தல்

2.7.3. அனுமதிப்பத்திரம் பெற்ற இயக்குநர்கள் அதிகாரச்சட்டத்திற்கும் (அதன் கீழ் ஆக்கப்பட்ட விதிகள், ஒழுங்கு விதிகள் உட்பட) அனுமதிப்பத்திரங்களுக்கும் அமைந்து நடத்தலைக் கண்காணித்தலும், உறுதி செய்தலும்.

2.7.4. இலங்கையில் வானொலி அலைவரிசை ஸ்பெக்ட்றமின் முறையான பயன்பாட்டையும் வானொலி அலைவரிசை ஸ்பெக்ட்றமின் முகாமைத்துவத்தையும் கண்காணித்தலும் உறுதி செய்தலும்.

2.7.5. நுகர்வோர் முறைப்பாடுகளுக்குப் பதிலளித்தலும் விசாரணைகள் / நுண்ணாய்வுகளை நடாத்துதலும்.

அதிகாரச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்படி, ஒரு இயக்குநரால் வழங்கப்படும் தொலைத்தொடர்பு சேவை தொடர்பில் ஒரு வாடிக்கையாளர் அல்லது பொதுமகனொருவர் ஆணைக்குழுவுக்கு ஒரு முறைப்பாட்டைச் செய்யும் போது, ஆணைக்குழுவானது அது அவசியமெனக் கருதும் அத்தகைய நுண்ணாய்வுகளை மேற்கொள்ளலாம் என்பதுடன் விடயத்தின் சந்தர்ப்பங்கள் தேவைப்படுத்தும் அத்தகைய நிவாரண வழிகள் மேற்கொள்ளச் செய்யவும் வேண்டும்.

9(1) ஆம் பிரிவின் கீழான எந்தவொரு நுண்ணாய்வின் போதும் ஆணைக்குழுவானது முறைப்பாடு ஏற்படுவதற்கான எந்தக் காரணத்தையும் அல்லது விடயத்தையும் சீர்செய்வதற்குத் தான் அவசியமெனக் கருதும் அத்தகைய நடவடிக்கைகளை எடுக்குமாறு அத்தகைய இயக்குநரைப் பணிக்கலாம் என்பதுடன், பொருத்தமான விடத்து நிதிநிவாரணத்தை வழங்கவும் பணிக்கலாம்.

2.7.6. தொலைத்தொடர்புச் சேவைகளின் தரத்தையும் வகையையும் உறுதி செய்தலுக்கு சேவை நியமங்களின் தரத்தை ஏற்படுத்துதல்.

2.7.7. தொலைத்தொடர்புகளுடன் தொடர்புடைய சர்வதேச மாநாடுகள் / சர்வதேச மற்றும் வெளிநாட்டுச் சபைகளில் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தல்.

2.7.8. ஆணைக்குழுவால் கட்டளைகள், பணிப்புரைகள், தீர்மானங்கள் என்பவற்றை வழங்கல். ஆணைக்குழு கட்டளைகள், பணிப்புரைகள் அல்லது தீர்மானங்களை வழங்குதலில் ஒரு வெளிப்படையான நடைமுறையைப் பின்பற்றியிருந்தது பொது விசாரணைகளிலும், ஏனைய கூட்டங்களிலும் பங்கேற்பதற்கு தொழிற்துறைப் பங்கேற்பாளர்கள் நுகர்வோர் மற்றும் ஏனைய அக்கறையுடைய தரப்பாருக்கு பெரிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

2.7.9. தொலைத்தொடர்புக் கருவிகளுக்கும், வகை அனுமதிக்கும் தொழில்நுட்பத் தரங்களைக் குறித்துரைத்தல்.

ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சில பிரிவுகள்/அலகுகள் இருந்தன. 2011 ஆம் ஆண்டின் போது, தொடர்பான பிரிவுகள்/அலகுகளின் பிரதான செயற்பாடுகள் / செயலாற்றல் என்பன பின்வரும் பகுதிகளில் விளக்கப்படுகின்றன. சில நடவடிக்கைகள் ஒரு குறிப்பிட்ட பிரிவு/அலகின் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அத்தகைய நடவடிக்கைகள் ஏனைய பிரிவுகள்/அலகுகளின் துணையுடன் அக் குறிப்பிட்ட பிரிவு/அலகால் மேற் கொள்ளப்பட்டன என்பது விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டும்.

# கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவு

அத்தியாயம் 3

கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவானது கொள்கை அலகு, சர்வதேச உறவுகள் அலகு என இரு அலகுகளைக் கொண்டுள்ளது. இவ்விரு அலகுகளினதும் தொழிற்பாடுகள் பின்வருமாறு:-

### 3.1. தொழிற்பாடுகள்

### 3.1.1. கொள்கை அலகு

- பகுதி தொடர்பான விடயங்களில் கொள்கை ஆலோசனைகளை வழங்குதல்
- பல்கலைக்கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள் என்பவற்றின் உதவியுடன் ஆய்வுக் கற்கைகளை மேற்கொள்ளல்
- செயற்திட்டங்கள்

### 3.1.2. சர்வதேச உறவுகள் அலகு

- பல்வேறு சர்வதேச நிறுவனங்களில் (உ-ம்: சர்வதேச தொலைத்தொடர்புகள் ஒன்றியம் (ITU), ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புச் சமூகம் (APT), பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய நிறுவனம் - SAARC) ஆணைக்குழுவின் பங்குபற்றுதலை ஒருங்கிணைத்தல்.
- சர்வதேச நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெறும் தகவல்களை ஆணைக்குழுவினுள் தெரிவித்தல்
- இலங்கை ஓர் உறுப்பினராகவுள்ள சர்வதேச நிறுவனங்களால் வேண்டப்படுமாறு ஆணைக்குழுவினுள்ளும், நாட்டிலும் தகவல் சேகரிப்பை ஒருங்கிணைத்தல்.
- தேவையான தகவல்களை சர்வதேச நிறுவனங்களுக்கு வழங்குதல்.

### 3.2. செயலாற்றல் தொலைத்தொடர்புகள் பகுதியின் துறையில் ஆய்வு, அபிவிருத்தி என்பவற்றை நடாத்துதல்.

திருத்தப்பட்டவாறான 1991 இன் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் அதிகாரச் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவின் (TRCSL) கடமைகளில் ஒன்று "இலங்கையில் பல்கலைக்கழகங்களிலும், ஆய்வு நிறுவனங்களிலும் இயக்குநர்களின் ஒத்துழைப்புடன் அல்லது வேறு வழிகளில் தொலைத்தொடர்பில் ஆய்வு அபிவிருத்தி என்பவற்றை ஊக்குவித்தல்" என்பதாகும்.(அதிகாரச் சட்டத்தின் 5(5) ஆம் பிரிவு)

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்களாவன:

- தொலைத்தொடர்புகள் பகுதியில் ஆய்வுக் கற்கைகளை மேம்படுத்துதல்.
- தொலைத்தொடர்புத் துறையில் ஆய்வு நடாத்துவதற்கு பல்கலைக்கழக ஊழியர்களையும், மாணவர்களையும் ஊக்குவித்தல்.
- பகுதியில் மேம்பாட்டினை ஏற்படுத்துமாறு ஆய்வின் காண்புகளை உபயோகித்தல்.

பல்கலைக்கழகங்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு முன்மொழிவுகளை கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவு ஆராய்ந்தது. 2011/12 இற்கு மூன்று ஆய்வுக் கற்கைகள் தெரிவு செய்யப்பட்டன. ஆய்வுத் தலைப்புகள் பின்வருமாறு:

1. 8GHZ வரையிலான நுண்ணலை அளவீடுகளுக்கான குறைந்த கிரய அளவீட்டு முறையை அபிவிருத்தி செய்தல் - கலாநிதி A.U.A.W குணவர்தன – பேராதனை பல்கலைக்கழகம்.
2. சைகை மொழி பெயர்ப்பாளர் (SLI) – கலாநிதி N.D.ஜயசுந்தர – றுகுண பல்கலைக்கழகம்.
3. நுண்ணளவு RF பெறுகை அலகின் வடிவமைப்பு - கலாநிதி மு.பிரபாகரன் - றுகுண பல்கலைக்கழகம்



பணிப்பாளர் நாயகம் நிகழ்ச்சியை ஆரம்பித்து வைக்கின்றார்



ஆரம்ப முன்மொழிவு சமர்ப்பிப்புகள் 2011 செப்ரம்பர் 28ம் திகதி செய்யப்பட்டன. ஆய்வாளர்கள் ஆய்வு முறைமை, பகுப்பாய்வு முறைகள், கால ஒழுங்கு, கிரயம் போன்றவற்றின் விபரங்களை உள்ளடக்கி தமது ஆய்வுத் தலைப்புகளில் சமர்ப்பிப்புகளைச் செய்தனர்.

### 3.2.2 வலுவற்ற / ஒதுக்கப்பட்ட சமூகத்தினருக்கான தகவல் மற்றும் தொலைத்தொடர்பு – TRCSL e– NABLE செயற்திட்டம் 2010/2011.

விசேட தேவையுடையோருக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) நிகழ்ச்சித் திட்டத்தை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) அமுல்படுத்தியது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2010/2011 ஆம் ஆண்டுக்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு 2011 ஜுலை 09 ஆம் திகதி நடாத்தப்பட்டது. மொத்தமாக ரூ. 4.5 மில்லியன் பெறுமதியுடைய உபகரணங்களுடனான பல கணனித் தொகுதிகள், பிரிண்டர்கள், CD பிரதி செய்யும் இயந்திரம், பிரெயில் காகிதங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய உபகரணங்கள் ஒரு பல்கலைக்கழகம், 39 பாடசாலைகள், 04 தொழிற் பயிற்சி நிலையங்கள், 21 ரணவிரு கிராமங்கள் மற்றும் ரணவிரு சன்சத (Fora) என்பன போன்ற 69 நிலையங்களுக்கு நிகழ்வின் போது கையளிக்கப்பட்டன.

### 3.3.3. ஒரு பாடசாலையை இணைக்குக ஒரு சமூகத்தை இணைக்குக செயற்திட்டம்

சர்வதேச தொலைத்தொடர்புகள் ஒன்றியமும், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவும் (TRCSL) இலங்கையின் தென் மாகாணத்திலுள்ள அக்குறஸ்ஸவில் 25 பாடசாலைகளை இணைக்கும் செயற்திட்டத்தை 2011 மே 03 ஆம் திகதி ஆரம்பித்தன. இந்தப் பாடசாலைகளை இணைக்கப்பட்ட சமூக நிலையங்களாக மாற்றும்



பேராதனை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வீரக்கோடிக்கு ஒரு பாராட்டு



ஒரு விசேட தேவைகளுள்ள பிள்ளை தனது நோக்கை எடுத்துரைக்கின்றார்

நோக்குடன் "ஒரு பாடசாலையை இணைக்குக – ஒரு சமூகத்தை இணைக்குக" செயற்திட்டத்தின் கீழ் கணனிகள், பிரிண்டர்கள், இணைய இணைப்புகள் போன்ற தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) கருவிகள் வழங்கப்பட்டன. கிராமப் புறங்களுக்கும் தொலைவிலுள்ள இடங்களுக்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை வழங்குவதில் இச் செயற்திட்டம் நோக்காகக் கொண்டுள்ளது. இது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மட்டுமல்லாது நாட்டிலுள்ள ஒடுக்கப்பட்ட மற்றும் வசதி குறைந்த சமூகத்தினருக்கும் நன்மை பயக்கும். பொது மக்கள் - தனியார் - மக்களது பங்கேற்பு (4P) அமைப்பினுள் இச் செயற்திட்டத்தில் மாதிரி தொலைத்தொடர்புகள் இயக்குநர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் (NGOs) கூட பங்காளர்களாக இணைந்து கொண்டனர்.

ஆசிரியர்களுக்கு அவர்கள் மேலும் பயனுள்ள கற்பிப்போராக வருவதற்காக "இன்ரெல்" (Intel) ஒரு பயிற்சித் திட்டத்தை நடாத்தியது. இந் நிகழ்ச்சித் திட்டம் ஆசிரியர்களை தமது பாடங்களில் தொழில்நுட்பத்தினை ஒன்றிணைக்கவும். பிரச்சினைகளைத் தீர்த்தல், ஆய்வு ரீதியான சிந்தனை, இணைந்து செயற்படும் திறன்களைத் தமது மாணவர்களிடையே வளர்க்கவும் பயிற்றுவிக்கும். வரையறுக்கப்பட்ட மொபிட்டல் (தனியார்), டயலொக்





ஒரு பாடசாலையை இணைக்குக "ஒரு சமூகத்தை இணைக்குக" செயற்திட்டத்திற்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

அஸியாற்றா (Dialog Aziata) ஆகிய இரு அனுமதி பெற்ற இயக்குநர்கள் பாடசாலைகளுக்கு சலுகை விலையில் இணைய வசதிகளை வழங்கப் பொறுப்பேற்றனர். இரண்டு உள்ளூர் நிறுவனங்களால் கணனிக் கதிரைகளும், மேசைகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. முன்னைய ஆண்டுகளில் இச் செயற்திட்டத்தை திருப்திகரமாக நிறைவு செய்ததன் காரணமாக சர்வதேச தொலைத்தொடர்புகள் ஒன்றியம் 2012ஆம் ஆண்டுக்காக பாடசாலை இணைப்பு செயற்திட்டத்திற்கான ஒரு நலன்பெறும் நாடாக இலங்கையைத் தெரிவு செய்திருந்தது.

### 3.3.4. சர்வதேச நிகழ்வுகள்

### 3.3.4.1. உலகத் தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் சமூக தினம் (WTISD) - 2011

இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழு உலகத் தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் சமூகத் தினத்தைக் கொண்டாடுவதற்கு 2011 மே 17 ஆம் திகதியில் ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்தது. தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் சமூக தினத்தின் தொனிப் பொருள் "கிராமிய சமூகத்தில் நல்ல வாழ்வு" என்பதாகும்.

இணைய மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களை (ICT) உபயோகித்தலால் சமூகத்திற்கும் பொருளாதாரத்திற்கும் பெறக்கூடிய வாய்ப்புக்களையும் அதேபோன்று கிராமிய மற்றும் ஒதுக்கப்பட்ட சமூகத்தினருக்கும் Digital நுட்பத்திற்குமிடையே உள்ள இடைவெளியை நிரப்புதலும் பற்றிய அறிதிறனை மேம்படுத்த உதவுதலே WTISD -2011 ஐக் கொண்டாடும் நிகழ்வு ஆணைக்குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டமையின் நோக்கமாகும்.

உலக தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் சமூகத்தின் நிகழ்வுக்காக அதிமேதகு ஜனாதிபதியவர்கள் விடுத்த செய்தியில், கிராமிய சமூகத்தினரை தகவல் தொழில்நுட்பத்திற்கான (IT) மேலதிக வாய்ப்புகளுக்காகப் பலப்படுத்தும் அரசின் கொள்கைகளுடன் இணங்கத்தக்கதாக 2011 ஆம் ஆண்டிற்கான தொனிப்பொருள் மிகவும் பொருத்தமானதெனத் தெரிவித்தார். கிராமிய சமூத்தினரிடையே வறுமை ஒழிப்பு, அதிகரித்த உழைப்புத் திறன், கூடிய கல்வி மற்றும் சுகாதாரம், உணவுப் பாதுகாப்பிற்கான உத்தரவாதம்

என்பவற்றை நோக்கியதான அர்த்தமுள்ள நடவடிக்கைகளுக்கு தகவல் தொழில்நுட்பத்தில் பாரிய வாய்ப்புக்கள் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### 3.3.4.2. பொதுநலவாய தொலைத்தொடர்பு நிறுவனத்தின் (CTO) தலைமைப் பதவிக்கு இலங்கை மீளத் தெரிவு செய்யப்படல்.

CTO ஆனது பொதுநலவாய நாடுகளுள் தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பம், ஒலிபரப்பு, இணையம் என்பவற்றின் குறித்த பரப்புகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை (ICT) உபயோகித்தல் குறித்து சிறப்பு அறிவுப் பகிர்வு நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குதலிலும், தொலைத்தொடர்புகளிலும் ஈடுபட்டுள்ள உத்தியோகபூர்வ அமைப்பாகும். கலந்தாலோசனை, மதியுரைச் சேவைகளை வழங்குவதன் மூலம் மாற்றங்களுடன் பொருந்திக் கொள்ளவும், வாழவும் ICT யின் பங்காளர்களுக்கு CTO உதவுகின்றது. CTO லண்டனில் தலைமை அலுவலகத்தைக் கொண்டிருப்பதுடன் 50 பூரண மற்றும் இணை அங்கத்துவத்துடனான பொதுநலவாய நாடுகளையும் கொண்டுள்ளது.

2010இல் கொழும்பில் நடைபெற்ற 50ஆவது கவுன்சில் கூட்டத்தில் அதிமேதகு ஜனாதிபதியின் செயலாளரும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவருமான திரு. லலித் வீரதுங்க அவர்கள் CTO இன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதுடன், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமான திரு. அனுச பல்பிட்ட பொதுநலவாய தொலைத்தொடர்புகள் நிறுவனத்தின் (CTO) தலைவராக 2011 செப்ரம்பர் 15-16 ஆம் திகதிகளில் ஸ்பெயின், ட்றினிடாட், ரொபாகோவில் நடை பெற்ற 51ஆவது சபைக் கூட்டத்தில் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை மீது தமது நம்பிக்கையை வைத்திருப்பதற்காகவும், இலங்கையை



பேராசிரியர் ரிம் அன்வின்னுடன் (CEO,CTO) TRCSL பணிப்பாளர் நாயகம் திரு. அனுச பல்பிட்ட

சபையின் தலைவராக இன்னுமொரு வருடத்திற்கு மீளத் தெரிவு செய்தமைக்கும் திரு. அனுச பல்பிட்ட உறுப்பினர்களுக்குத் தமது நன்றியைத் தெரிவித்தார். CTO அபிவிருத்தி செய்வதற்கும் பலப்படுத்துவதற்கும் இன்னும் கூடிய உயர்வினை அடைவதற்கு வழி நடத்துதலிற்கும் தம்மாலியன்றவற்றைச் செய்யுமாறு அவர் உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். CTO வின் முன்னேற்றத்திற்காக புதிதாக நியமிக்கப்பட்ட பிரதம நிறைவேற்று அலுவலர் (CEO) பேராசிரியர் ரிம் அன்வின்னுடன் மிக நெருக்கமாகப் பணியாற்றவும் உறுதியளித்தார். CTO ஓர் உலக ICT செயற்பாட்டாளராக வருவதற்கு வெற்றிகரமாக வழிநடத்திய அளவற்ற முயற்சிகளுக்காக முன்னைநாள் பிரதம நிறைவேற்று அலுவலர் கலாநிதி Ekwow Spoio Garurah அவர்களுக்குத் தமது நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

### 3.3.4.3. உதவு தொகைகள்

TRCSL சர்வதேசத் தொலைத்தொடர்புகள் ஒன்றியம் (ITU) ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புகள் சமூகம் (APT), பொதுநலவாய தொலைத்தொடர்புகள் நிறுவனம் (CTO) போன்ற பல நிறுவனங்களில் இலங்கை அரசாங்கத்தைப்

**சந்தாப்பணச் செலுத்தல்கள்** (அட்டவணை 3.1)

| நிறுவனம் | உதவுதொகை ரூ. |
|---|---|
| சர்வதேசத் தொலைத்தொடர்புகள் ஒன்றியம் | 19,671,086 |
| ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புகள் சமூகம் (APT) | 1,398,844 |
| பொதுநலவாய தொலைத்தொடர்புகள் நிறுவனம் (CTO) | |
| உதவுத்தொகை | 3,613,539 |
| விசேட நன்கொடை | 4,516,021 |
| பிரதம நிறைவேற்று அலுவலரை *CEO* ஆட்சேர்த்தல் | 545,098 |
| மொத்தம் | 29,744,588 |

பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. உறுப்புரிமையைப் பேணுவதற்காக வருடாந்த அடிப்படையில் உதவுதொகைகள் செலுத்தப்படுகின்றன. மீளாய்வாண்டின்போது, அட்டவணை 3.1 இல் காட்டப்படும் நிறுவனங்களுக்கு உதவுதொகைகளாக ரூ.29.7 மில்லியன் செலுத்தப்பட்டதுடன், அத்தகைய நிறுவனங்களின் உறுப்பினர் என்ற வகையில் தொடர்புடைய நடவடிக்கைகளில் TRCSL திறமையுடன் பங்குபற்றியது.
அட்டவணை 3.1
உதவுதொகைகள் கொடுப்பனவு

### 3.3.4.4. இலங்கையில் கொரிய தகவல் தொழில்நுட்ப தன்னார்வ நிகழ்ச்சித் திட்டம்

சில தெரிவு செய்யப்பட்ட குழுக்களுக்கு (TRCSL இன் அலுவலர்கள், விசேட பாடசாலைகளின் அலுவலர்கள், தெரிவு செய்யப்பட்ட நிலையங்களின் தகவல் தொழில்நுட்ப போதனாசிரியர்கள், தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்கள்) உயர் தகவல் தொழில்நுட்பத்தில் அறிவைப் பகிர்ந்து கொள்ளும் நோக்குடன் ஜுலை 18ஆம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் 12ஆம் திகதி வரை TRCSL இல் நடத்தப்பட்ட ஒரு பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு தகவல் தொழில்நுட்பத் திறன் வாய்ந்த கொரியன் தன்னார்வ உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு வருகை தந்தது. மொத்தமாக 50 பேர் இப் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டனர். உயர் தகவல் தொழில்நுட்பத்தை வழங்குவதற்காக வளர்முக நாடுகளுக்கு வருடாந்தம் கோடைகாலத்தின் போது தென்கொரிய அரசினால் அனுப்பி வைக்கப்படும் 150 பேர் கொண்ட ஒரு பெரிய குழுவின் ஒரு பகுதியினர் இவர்களாவர். கொரிய IT தன்னார்வ உறுப்பினர் (KIV) நிகழ்ச்சித் திட்டம் பொது நிருவாக அமைச்சினாலும், கொரியாவினாலும் அனுசரணை வழங்கப்படுவதுடன், இது 2001 ஆம் ஆண்டிலிருந்து கொரிய தேசிய தகவல் சபை முகவரால் முகாமை செய்யப்பட்டு வருகின்றது. தென் கொரியாவில் Arirang குழு என அறியப்படும் இந்த KIV (கொரிய IT தன்னார்வத்தினர்) குழுவின் உறுப்பினர்கள் பேராசிரியர் Shim won Bo, மாணவர்கள் Choi Seok Hwan, Kim Hyang won (சன்சியோங் பல்கலைக்கழகம்), Kwak Woo Junk (வெளிநாட்டுக் கற்கைகளுக்கான Hankuk பல்கலைக்கழகத்திலிருந்து) ஆகியோரைக் கொண்டிருந்தனர். அவர்களது பாடத் திட்டம் Photo Shop, Visual Basic, C.Language மற்றும் PHP, அத்துடன் கொரிய கலாசாரத்தின் பல்வேறு அம்சங்களுக்கான அறிமுகம்


TRCSL பணிப்பாளர் நாயகம் கொரியன் தன்னார்வ குழுவினருடன் உரையாடுகின்றார்



பயிற்சி நிகழ்வின் ஆரம்பம்

ஆகியவற்றை உள்ளடக்கியது. பல்வேறு நாடுகளிடையே உள்ள தகவல் தொழில்நுட்பத்தின் இடைவெளியை குறைக்க தாம் விரும்புவதாக குழுவின் தலைவரான பேராசிரியர் Shim Won Bo கூறினார். தாம் தென்கொரியாவில் உயர் தகவல் தொழில்நுட்பத்தில் பெற்ற அறிவினதும், அடைந்த அனுபவங்களினதும் நலன்களை இலங்கை உட்பட ஏனைய உலக நாடுகளில் இலத்திரனியல் அரசை அபிவிருத்தி செய்வதற்குக் கொடுப்பதே அவர்களது இலக்காகும். இந்த IT தன்னார்வ நடவடிக்கைகள் மூலம் அவர்கள் கொரிய பண்பாட்டையும் அறிமுகப்படுத்துவார்கள். மேலும், வகுப்பிலுள்ள பங்கேற்பாளர்களுடன் கலந்து பழகுவதாலும், புகழ்பெற்ற வரலாற்று பிரதேசங்களுக்கும், சுற்றுலாப் பகுதிகளுக்கும் செல்வதாலும் இலங்கையின் பண்பாடு பற்றியும் விளங்க முயல்வார்கள்.

### 3.3.4.5. தெற்காசிய தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துவோர் சபை (SATRC) பணிக் குழுவினர்

இரண்டாவது தெற்காசிய தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துவோர் சபை பணிக் குழுவினரின் ஸ்பெக்ட்றம் மீதான கூட்டம் SATRC நாடுகளின் பங்குபற்றுதலுடன் 2011 டிசம்பர் 12 ஆம், 13ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது. கூட்டத்தில் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, ஈரானிய இஸ்லாமியக் குடியரசு, மாலைதீவுகள், நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து அலுவலர்கள் கலந்து கொண்டனர். பிராந்தியத்தில் ஸ்பெக்ட்றம் விவகாரங்களுடன் தொடர்புடைய பிரச்சினைகளைக் கையாள வேலைத்திட்டத்தின் III ஆம் கட்டத்தை 2010 - 2011 காலப் பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்காக, இலங்கையில், கொழும்பில் 2009 நவம்பர் 24 - 26 ஆம் திகதிகளில் நடை பெற்ற 11 ஆவது SATRC கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி ஸ்பெக்ட்றம் மீதான பணிக்குழு அமைக்கப்பட்டது. இரண்டாவது பணிக்குழுக் கூட்டத்தில் நீண்ட காலப் பரிணாமம் (LTE), அவசர தொலைத்தொடர்பு Tampare இணக்கத்தின் படி பொது மக்கள் பாதுகாப்பு அனர்த்த



பணிக்குழுவினருடன் பங்கேற்பாளர்கள்

நிவாரணத்திற்கான Harmonised Frequency அலைவரிசைகளை அடையாளம் காணல், அவசர தொலைத்தொடர்பு, Cognitive Radio, ஸ்பெக்ட்றம் பகிர்தல் மற்றும் வியாபாரம், ஸ்பெக்ட்றம் விலையிடல், எதிர்கால வேலை மட்டிலான முன் மொழிவு என்பவற்றை உபயோகித்து துடிப்பான ஸ்பெக்ட்றம் முகாமைத்துவம் என்பன தொடர்பாக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 3.3.5. வெளிநாட்டுப் பிரதிநிதிகளது வருகைகளை ஒருங்கிணைத்தல்

கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவு TRCSL இன் ஏனைய பிரிவுகளின் ஒத்துழைப்புடன் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், செயலமர்வுகள் போன்ற தொலைத்தொடர்பு நடவடிக்கைகளுக்காக

இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் வருகைகளை ஒருங்கிணைத்தது.

### 3.4. அலுவலர்கள்

2011 இன் போது கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவானது ஒரு (1) பிரதிப் பணிப்பாளர், இரு (2) உதவிப் பணிப்பாளர்கள், மூன்று (3) முகாமைத்துவ உதவியாளர் மட்ட அலுவலர்கள், ஒரு (1) ஆரம்பமட்ட அலுவலர் ஆகியோரடங்கிய ஏழு (7) அலுவலர்களுடன் தனக்குக் கொடுக்கப்பட்ட பணிகளை மேற்கொண்டது.

# பொருளாதார அலுவல்கள் பிரிவு

அத்தியாயம் 4

பொருளாதார அலுவல்கள் பிரிவானது போட்டி உப பிரிவு, அமைவு (Compliance) உப பிரிவு என இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்த இரு உப பிரிவுகளாலும் 2011 இல் மேற்கொள்ளப்பட்ட தொழிற்பாடுகளும், நடவடிக்கைகளும் கீழே தரப்படுகின்றன.

## 4.1. போட்டி உபபிரிவின் தொழிற்பாடுகள்

- கிரய அடிப்படையிலான விலை ஒழுங்குபடுத்தலை உருவாக்குவதற்காக கிரயக் கற்கைகள் உள்ளிட்ட விலைப் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல்.
- அனுமதிப்பத்திரம் பெற்ற இயக்குநர்களின் நிதிசார் மற்றும் செயற்பாட்டு செயலாற்றலின் பகுப்பாய்வு மூலம் போக்குகளைக் கண்காணித்தல்.
- துறையின் (Sector) பொருளாதாரப் பகுப்பாய்வை மேற்கொள்ளல்.
- வர்த்தக ரீதியிலான இடை இணைப்பு, இயக்குநர்களிடையிலான இடையிணைப்பு ஏற்பாடுகளை அனுமதிக்காக செயன்முறைப்படுத்தல்.
- இயக்குநர்களிடமிருந்து கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் உரிய காலத்தில் கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்துதல்.
- கிராமப் பகுதிகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்களை ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தல்.
- தொழிற்துறையின் புள்ளிவிபரத் தகவல்களைச் சேகரித்தலும், பகுத்தாய்தலும்.

- கிராமப் பகுதிகளை வெளிக் கொணர்வதனை துரிதப்படுத்துவதற்கான பொருளாதார ஊக்குவிப்புகளை உபயோகிப்பதற்கு முன்மொழிவுகளைச் செய்தல்.
- துறைசார் பகுப்பாய்வுகளை மேற்கொள்வதன் மூலம் துறைசார் செயலாற்றலைக் கண்காணித்தல்.
- தொழிற்துறையிடமிருந்து அரசாங்க வரிகளை (தொலைத்தொடர்பு வரி, சர்வதேச தொலைத்தொடர்புகள் இயக்குநர் வரி) சேகரித்தலைக் கண்காணித்தல்.

## 4.2.செயலாற்றல்

### 4.2.1. விலை ஒழுங்குபடுத்தல்

சட்டத்தின் 5 (c) ஆம் பிரிவின்படி, பொதுமக்கள் தொலைத்தொடர்புச் சேவைகளை வழங்குவதற்குத் தேவையான, விலைக் கொள்கைகள், விலையிடல், மானியங்கள் மற்றும் சட்டரீதியான வழிவகைகள் உள்ளிட்ட தொலைத்தொடர்பாடலுடன் தொடர்புபட்ட விடயங்களில் அரசாங்கத்திற்கு மதியுரைகளை வழங்குதல் ஆணைக்குழுவின் கடமையாகும்.

#### 4.2.1.1. அடிமட்ட வீதங்களை மீளாய்தல்

இயக்குநர்கள் தமது சேவைகளுக்கு அறவிடக் கூடிய கட்டணத்தின் ஆகக் குறைந்த வீதத்தை அடிமட்ட வீதம் (Floor Rates) குறிக்கும். அத்துடன், இணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்ட அடிமட்ட வீதங்களுக்குக் குறைவான வீதங்களை இயக்குநர்கள் உபயோகித்தலாகாது. வலைப்பின்னலூடான மற்றும் வலையமைப்பிற்கு வெளியேயான வாய்மூல அழைப்புகள், குறுஞ் செய்திச் சேவை (SMS) என்பனவற்றுக்கான அடிப்படை வீதங்கள் வேறுவேறாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

வலைப்பின்னலூடான (On-Net) என்பது ஒரே வலையமைப்பினுள் உருவாக்கப்பட்டு முடிவுறுத்தப்படும் அழைப்புக்களும், செய்திகளும் வலையமைப்பிற்கு வெளியேயான (Offnet) என்பது ஒரு வலையமைப்பினுள் ஆரம்பித்து வேறு ஒரு வலையமைப்பினுள் முடிவு பெறும் அழைப்புகளையும், செய்திகளையும் கருதும்.

வலையமைப்பிற்கு வெளியேயான வாய்மூல அழைப்புகள் தொடர்பான அடிமட்ட வீதத்தினை 2011 ஜூலை 15ஆம் திகதி தொடக்கம் 50 சதத்தால் மீளமைத்தது. வலையமைப்பிற்குள்ளான வாய்மூல அழைப்புகளுக்கான அடிமட்ட வீதம் மாற்றமின்றியிருந்தது. வலையமைப்பிற்குள்ளான, வலையமைப்பிற்கு வெளியேயான குறுஞ் செய்திச் சேவையின் அடிமட்ட விலைகள் மீளமைக்கப்படவில்லை. மீளமைக்கப்பட்ட அடிமட்ட விலைகள் தொடர்பாக இயக்குநர்கள் விலை முன்மொழிவுகளை மேற்கொள்ளும்போது, ஒரு வெளிக்கணக்காய்வாளரால், உறுதிசெய்யப்பட்ட கிரய நியாயப்படுத்தலுடன் அம்முன்மொழிவுகளை ஆதாரப்படுத்துதல் அவசியமானதாகும். எவ்வாறாயினும், 2011ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் இயக்குநர்கள் எவரும் மீளமைக்கப்பட்ட அடிமட்ட வீதங்களின்படியான விலைகளை முன்மொழியவில்லை.

**வாய்மூல அழைப்பு, குறுஞ்செய்திச் சேவை என்பவற்றுக்கான**
அடிமட்ட வீதங்கள் 2010-2011 (அட்டவணை 4.1)

| விடயம் | வலையமைப்பிற்கு வெளியே | | வலையமைப் பிற்குள் | |
|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2010 | 2011 |
| ஒரு நிமிட அடிப்படையிலான வாய்மூல அழைப்புகள் (ஒரு நிமிடத்திற்கு - ரூ.) | 2.00 | 1.50 | 1.00 | 1.00 |
| ஒரு செக்கன் அடிப்படையிலான அழைப்புகள் (ஒரு நிமிடத்திற்கு - ரூ.) | 2.50 | 2.00 | 1.25 | 1.25 |
| குறுஞ் செய்திச் சேவை (ஒரு செய்திக்கு ரூ.) | 0.25 | 0.25 | 0.10 | 0.10 |

**செல்லிடக் கட்டணப் போக்குகள்** (வரைபு 4.1)




குறிப்பு: ஆதனம், பொறி, உபகரணங்கள் என்பவற்றை முதலீடு உள்ளடக்குகின்றது

2010 மற்றும் 2011 இன் முடிவிலுள்ளவாறு வாய்மூல அழைப்புகள் மற்றும் குறுஞ் செய்திச்சேவை என்பவற்றின் அடிமட்ட வீதங்கள் அட்டவணை 4.1.இல் தரப்படுகின்றன.

### 4.2.1.2. செல்லிட (Mobile) கட்டணத்தின் போக்குகள்

2004ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியின் போது ஒரு நிமிட அடிப்படை வாய்மூல அழைப்புகளின் வலையமைப்பிற்குள்ளும், வலையமைப்பிற்கு வெளியேயுமான கட்டணப் போக்குகள் வரைபு 4.1 இல் காட்டப்படுகின்றன. அட்டவணை 4.1 இல் உள்ள எண்கள் வரைபு 4.1 இல் உள்ள எண்களுடன் ஒப்பிடப்படுகையில், 2011 இல் சந்தையில் ஒரு நிமிட அடிப்படையிலான செல்லிட வலையமைப்பிற்கு வெளியேயான வாய்மூல அழைப்புக்களின் வீதம் அதற்கொத்த அடிமட்ட வீதத்திலும் 50 சதம் உயர்வாக இருப்பதைக் காணலாம்.

## 4.2.2. அனுமதிப்பத்திரம் பெற்ற இயக்குநர்களின் செயற்பாட்டு, நிதிசார் செயலாற்றல்

### 4.2.2.1. செயற்பாட்டுச் செயலாற்றல்

2011ஆம் ஆண்டின் இறுதியில் பாவனையாளர்களின் (நிலையான மற்றும் செல்லிட) எண்ணிக்கை 21.9 மில்லியனாக இருந்ததுடன் 2010ஆம் ஆண்டைவிட 5.4% அதிகரிப்பாகவும் இருந்தது. 2010 இலும் 2011 இலும் நிலையான தொலைபேசிப் பாவனையாளர்களின் எண்ணிக்கை இக்காலப் பகுதியின் போது 2.1% அதிகரிப்பைக் காட்டத்தக்கவாறு முறையே 3,534,575 ஆகவும் 3,608,392 ஆகவும் இருந்தது. இதற்கு மாறாக, செல்லிடப் பாவனையாளர்களின் எண்ணிக்கை இதே காலப்பகுதியில் 2010 இல் 17,267,407 இல் இருந்து 2011 இல் 18,319,447 ஆகி 6.1% அதிகரிப்பைக் காட்டியது. 2010இல் புறோட்பேண்ட் பாவனையாளர்களின் எண்ணிக்கை 443,487 ஆகவும் இதில் 209,946 செல்லிட புறோட்பேண்ட் பாவனையாளர்களாகவும், 233,541 நிலையான புறோட்பேண்ட் பாவனையாளர்களாகவும் இருந்தனர். 2011இல் இதற்கொத்த எண்ணிக்கை முறையே 782,956 ஆகவும் 485,165 ஆகவும் 297,791 ஆகவும் இருந்தது. இதன்படி 2010இலும் 2011இலும்

நாட்டின் மொத்த சனத்தொகையில் புறோட்பேண்ட் பாவனையாளர்களின் நூற்றுவீதம் 2010இன் 2.1% இலிருந்து 2011இல் 3.8% ஆக உயர்ந்தது.

### 4.2.2.2. நிதிசார் செயலாற்றல்

**A.** முதலீடு

2010 இலும் 2011 இலும் செல்லிடத் துறையில் முதலீடு நிலையான துறையிலும் பாரியதாக இருப்பது அட்டவணை 4.2 இலிருந்து தெளிவாகின்றது. மொத்த முதலீட்டில் செல்லிடத்துறை முதலீடு 2010 இன் 52.9% இலிருந்து 2011இல் 55.8% ஆக அதிகரித்தது.

சேவைபெறாத, குறைவான சேவை பெறும் பகுதிகளில் அவர்களது தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கேற்ப செலவிடப்பட்டது. ஆணைக்குழுவால் சேவை பெறாத, குறைவாகச் சேவை பெறும் பகுதி என வரையறுக்கப்பட்ட பகுதிகளில் அவர்கள் செய்த முதலீட்டுக்கு எதிராக மூன்று வருட காலப்பகுதிக்குள் அவர்களது பெயர்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணத்தின் 2/3 ஐக் கோரிப் பெற இயக்குநர்கள் அதிகாரமளிக்கப்பட்டனர்.

**தொலைபேசி செயற்படுத்துனர்களின் முதலீடு 2010-2011** (அட்டவணை 4.2)

| ஆண்டு | முதலீட்டு (மில்லியன் ரூ.) நிலையான இயக்குனர்கள் | செல்லிட இயக்குனர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 2010 | 15,989 | 17,946 | 33,935 |
| 2011 | 22,413 | 28,281 | 50,694 |

குறிப்பு: ஆதனம், பொறி, உபகரணங்கள் என்பவற்றை மதலீடு உள்ளடக்குகின்றது

**B. சேவை பெறாத மற்றும் குறைவான சேவை பெறும் பகுதிகளுக்கு** வலையமைப்பை விஸ்தரித்தலுக்காக நிதிகளைச் செலவிடல்

சர்வதேச தொலைத்தொடர்புகள் சேவைப் பகுதியை சுதந்திரமாக்கியதிலிருந்து, Public Switched Telephone Network (PSTN) இயக்குநர்களுக்கு அவர்களது வலையமைப்பையும் சேவைகளையும் சேவை பெறாத மற்றும் குறைவான சேவை பெறும் பகுதிகளுக்கு விஸ்தரிப்பதற்கு ஒரு விசேட திட்டத்தை அரசாங்கம் அறிமுகம் செய்தது. PSTN இயக்குநர்களின் பெயர்களின் கீழ் சேகரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட சர்வதேச உள்வரும் அழைப்புக்கள் மேல் விதிக்கப்பட்ட சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் வரியின் ஒரு பகுதி (தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணத்தில் 2/3), PSTN இயக்குநர்களுக்கு இதன்படி 2003 - 2008 காலப்பகுதியின் போது, PSTN இயக்குநர்களின் செல்லிட சேவைகளுக்கும் நிலையான அடைகை (கம்பியில்லா) சேவைகளுக்கும் 909 கோபுரங்கள் நிர்மாணிப்பதற்கு 3457 மில்லியன் ரூ. செலவிடப்பட்டதுடன் நிலையான கம்பித் தொடர்பு இயக்குநரின் 102.532 புதிய கம்பிவழி இணைப்புகளுக்கு 2,563 மில்லியன் ரூ. செலவிடப்பட்டது. 2008/2009 காலப்பகுதிக்கான செலவீடுகளை முடிவு செய்யும் செயன்முறையில் உள்ளதுடன், மொத்தமான தொகை PSTN இயக்குநர்களின் செல்லிட சேவைகளுக்கும் நிலையான (கம்பியில்லா) சேவைகளுக்கும் ரூ. 2.326 மில்லியனாகவும், நிலையான கம்பிவழி இயக்குநரின் 7,118 புதிய கம்பி வழி இணைப்புக்காக ரூ. 177 மில்லியனும் செலவிடப்பட்டன. 2011 ஆம் ஆண்டுக்கான மொத்தச் செலவீடு ரூ.3218 மில்லியனாகவும்

**நிலையான மற்றும் செல்லிட இயக்குநர்களின் வருமானம், 2010-2011** (அட்டவணை 4.3)

| ஆண்டு | வருமானம் (மில்லியன் ரூ.) நிலையான இயக்குநர்கள் | செல்லிட இயக்குநர்கள் | மொத்தம் (மி.ரூ.) |
|---|---|---|---|
| 2010 | 45,299 | 72,159 | 117,458 |
| 2011 | 44,108 | 83,529 | 127,637 |

இதில் ரூ.2114 மில்லியன் செல்லிட இயக்குநர்களுக்கு வழங்கப்பட்டும், மீதி ரூ.1104 மில்லியன் நிலையான இயக்குனர்களுக்குமாக இருந்தது.

மேற்கண்ட செலவீட்டுத் திட்டம் 2010 ஜுலை மாதத்தில் மாற்றப்பட்ட போதும், இயக்குநர்கள் தமது கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க மூன்று வருடங்கள் உள்ளமையால் நிதிகளின் செலவீடு 2013 வரை தொடரப்பட வேண்டியுள்ளது.

### C. வருமானம்

2010ஆம் ஆண்டு 2011ஆம் ஆண்டுகளுக்கு நிலையான இயக்குனர்களதும், செல்லிட இயக்குனர்களதும் வருமானம் அட்டவணை 4.3 இல் தரப்படுகின்றது.

நிலையான தொலைபேசித்துறையின் வருமானம் 2010 இலிருந்து 2011இல் 2.6% ஆல் குறைவடைந்திருந்த அதே போதில் செல்லிடத் தொலைபேசித் தொடர்பு அதே காலப் பகுதியில் 15.8% ஆல் அதிகரித்திருந்தது. இக் காலப்பகுதியில் இவ்விரு துறைகளுக்குமான முழு வருமானம் 8.7% ஆல் அதிகரித்திருந்தது. 2010இல் மொத்த வருமானத்திற்கு நிலையான தொலைபேசித் தொடர்பினதும்

**மொத்த வருமானத்தில் பங்களிப்பு நூற்றுவீதம்**
(வரைபு 4.2)




செல்லிடத் தொலைபேசித் தொடர்பினதும் பங்களிப்பு முறையே 39% உம், 61% உம் ஆகும். 2011 இற்கு தொடர்பான எண்கள் முறையே 35% உம், 65% உம் ஆகும். (வரைபு 4.2). எனவே, இந்த இரு வருடங்களிலும் மொத்த வருமானத்தில் 60% பங்களிப்பை செய்ததன் மூலம் செல்லிடத் தொலைபேசித்துறை ஆதிக்கம் செலுத்தியது.

### D. தொழிற்துறையில் தேறிய இலாபம் / நட்டம்

2010 இல் நிலையான தொலைபேசி இயக்குநர்களின் தேறிய இலாபம் ரூ.181 மில்லியனாக இருந்ததுடன் இது 2011 இல் ரூ.1298 மில்லியனாக அதிகரித்தது. இதன்படி, நிலையான தொலைபேசித் தொடர்பிலான இலாபம் 2011 இல் ஒரு தீவிர அதிகரிப்பைக் காட்டியது. செல்லிடத் தொலைபேசித் தொடர்பு விடயத்தில், இயக்குனர்கள் 2010 இலும் 2011 இலும் நட்டங்களை எதிர் கொண்டனர். இது தொடர்பான எண்கள் முறையே ரூ. 3,652 மில்லியனாகவும் ரூ.1,016 மில்லியனாகவுமிருந்து செல்லிடத்துறையின் நட்டம் 2010 இலிருந்து 2011 இற்கு 72% ஆல் குறைவடைந்ததைக் காட்டியது. இரு துறைகளிலும் 2010இல் மொத்த நட்டம் ரூ. 3.5 பில்லியன்களாக இருந்ததுடன் 2011 இல் இது ரூ. 282 மில்லியன் தேறிய இலாபமாக மாற்றமடைந்தது. (அட்டவணை 4.4)

## 4.3. அமைவு (Compliance) உப பிரிவின் தொழிற்பாடுகள்

- இயக்குநர்கள் விடயத்தில் நியதிச் சட்டங்கள், அனுமதிப்பத்திரங்கள் என்பவற்றுடனான அமைவைக் கண்காணித்தல்.
- இயக்குநர்களுக்கு வழங்கப்பட்ட TRC இன் பணிப்புரைகள், கட்டளைகள், முடிவுகள் என்பவற்றைக் கண்காணித்தல்.

**நிலையான மற்றும் செல்லிடத் துறைகளில் தேறிய இலாபம் / நட்டம் 2009-2010** (அட்டவணை 4.4)

| ஆண்டு | (தேறிய இலாபம் / நட்டம் (மில்லியன் ரூ.) நிலையான | செல்லிட | மொத்தம் (மி.ரூ.) |
|---|---|---|---|
| 2010 | 181 | -3,652 | -3,471 |
| 2011 | 1298 | -1,016 | 282 |

- சேவையின் தரத்தினைக் கண்காணித்தலுடன் பொருளாதார ஊக்குவிப்புகளை முன்மொழிதல்.
- நுகர்வோர் உறவுகளை முகாமை செய்வதுடன் நுகர்வோர் பாதுகாப்பை உறுதி செய்தல்.

பிரிவின்படி ஓர் இயக்குநரினால் வழங்கப்படும் தொலைத்தொடர்பு சேவைகள் தொடர்பாக ஒரு பாவனையாளர் அல்லது ஒரு பொதுமகன் ஆணைக்குழுவிற்கு ஒரு முறைப்பாட்டைச் செய்யலாம்.

**2010 இல் அமைவு தொடர்பான பிரச்சினைகளைக் கையாளல்** (அட்டவணை 4.5)

| பிரச்சினை | மீறல்/விலகல் | எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|
| கட்டணம் மீதான அமைவுப் பிரச்சினைகள் (37) | தொடர்பான இயக்குநர்களின் அடிமட்ட வீதத்தை தீர்மானித்தலும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளும் | அங்கீகரிக்கப்படாத கட்டணத்தை வழங்குதலை தடை செய்யும் கடிதங்களை வழங்கியதுடன் அங்கீகரிக்கப்படாத கட்டணத் திட்டங்களுக்கு பணம் செலுத்த வேண்டாமென பத்திரிகை அறிவித்தல் மூலம் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டார்கள் |
| அங்கீகரிக்கப்படாத Private Automated Branch Exchange (PABX) | தொலைத்தொடர்புகள் அதிகாரச் சட்டத்தின் 21(1) ஆம் பிரிவு | அங்கீகரிக்கப்படாத PABXஐ கொள்வனவு செய்ய வேண்டாமென பொதுமக்களுக்கு அறிவுறுத்தி தேசிய செய்திப் பத்திரிகைகளில் அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டன. |

- தொழிற்துறையுடன் தொடர்புடைய வேலைகளை கடுமையாக மேற்பார்வை செய்தல்.

## 4.3.1. செயலாற்றல்

### 4.3.1.1. அமைவு தொடர்பான பிரச்சினைகளைக் கையாளல்

இயக்குநர்களின் நடவடிக்கைகள் தொடர்பாக அமைவு உபபிரிவின் விழிப்புணர்வு இயக்குநர்களால் நியதிச்சட்டங்களிலும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளிலும் ஏற்படுத்தப்படும் மீறல்/விலகலை மிகக் குறைக்க உதவியது. 2011 ஆம் ஆண்டின் போது அமைவு உப பிரிவானது கட்டணம், பாவனையாளர் வரி, செஸ் கட்டணம், விற்பனையாளர் அனுமதிப்பத்திரங்கள் என்பவற்றுடன் தொடர்புடைய முறைப்பாடுகளைக் கையாண்டது.

### 4.3.1.2. நுகர்வாளர் முறைப்பாடுகளைக் கையாளல்

இயக்குநர்களால் வழங்கப்படும் தொலைத்தொடர்பு சேவைகள் தொடர்பாக நுகர்வாளர்களது நலனுக்காக TRCSL இன் நுகர்வோர் தொடர்புகள் பிரிவு நிறுவப்பட்டது. திருத்தப்பட்ட 1991 இன் 25ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் அதிகாரச் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின்படி ஆணைக்குழு அவசியமெனக் கருதும் அத்தகைய நுண்ணாய்வுகளை மேற்கொள்ளலாம். அத்துடன் விடயத்தின் சூழ்நிலையின் தேவைக்கேற்ப தீர்வு நடவடிக்கைகளை எடுக்கச் செய்யவும் வேண்டும். 9(1) ஆம் பிரிவின் கீழான ஏதாவது நுண்ணாய்வின் போது ஆணைக்குழு தனக்குத் தோன்றுவதன்படி முறைப்பாடு எழுந்ததற்குரிய காரணத்தை அல்லது விடயத்தை சீர்ப்படுத்துவதற்கு தேவையான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கும்படி அத்தகைய இயக்குநரைப் பணிக்கலாம் என்பதுடன் பொருத்தமானவிடத்து நிதிசார் நிவாரணத்தையும் வழங்குமாறு பணிக்கலாம் என அதிகாரச் சட்டத்தின் 9 (2) ஆம் பிரிவு கூறுகின்றது.

நுகர்வோர் உறவுகள் அலகு TRCSL இன் பொருளாதார அலகுகள் பிரிவின் கீழ் வருகின்றது. இது பட்டியலிடல் பிணக்குகள், தாமதித்த தவணைக் கட்டணங்கள், பிழைகளைத் திருத்துதல், இணைப்பில் பிழைகள், தொல்லைதரும் அழைப்புகள், செல்லிடத் தொலைபேசிகளின் இழப்பு (*ADSL*, இணைய மற்றும் புறோட்பேண்ட் சேவைகள்) போன்ற பல்வேறு துறை முறைப்பாடுகளை பெறுகின்றது.

இந்த அலகானது நுகர்வோரினதும், சேவை வழங்குநரினதும் பாதுகாப்பையும் திருப்தியையும் உறுதிப்படுத்துவதற்காக பற்றிய தகவல் அட்டவணை 4.6 இல் தரப்படுகின்றது. முறைப்பாடுகளில் நான்கில் மூன்று பங்கானவை தொலைந்த செல்லிடத்

**நுகர்வோர் உறவுகள் அலகால் பெறப்பட்ட முறைப்பாடுகள் - 2011** (அட்டவணை 4.6)

| முறைப்பாட்டின் தன்மை | முறைப்பாடுகளின் எண்ணிக்கை * | % |
|---|---|---|
| தொலைபேசிச் சிட்டைகள் (நிலையான மற்றும் செல்லிட) | 480 | 3.2 |
| நிலையான தொலைபேசி இணைப்புகள் | 720 | 4.8 |
| தொல்லைதரும் அழைப்புகள் | 240 | 1.6 |
| இணைய வசதிகள் | 470 | 3.2 |
| செல்லிடத் தொலைபேசி இணைப்புகள் | 490 | 3.3 |
| ஏனைய | 310 | 2.1 |
| பல்வேறு வகையான குற்றங்கள் மட்டில் பொலிஸ் நுண்ணாய்வுகளுக்காக சேவை வழங்குநர்களிடமிருந்து தகவல்களைப் பெறும் பொருட்டு தலையீட்டை வேண்டும் முறைப்பாடுகள் | 384 | 2.6 |
| செல்லிடத் தொலைபேசிகளின் இழப்புகள் | 11775 | 79.2 |
| மொத்தம் | **14869** | **100** |

*தற்காலிகமானவை

முறைப்பாட்டாளர்களுக்கு விரைவான, வினைத்திறனுள்ள நிவாரணத்தை வழங்கும் பொருட்டு தொடர்புபட்ட சேவை வழங்குநர்கள், சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் மற்றும் ஏனைய தொடர்புபட்ட நிறுவகங்கள் என்பவற்றுடன் இணைப்பை ஏற்படுத்துகின்றது. நுகர்வோர் உறவுகள் அல்லது நீதிமன்றக் கட்டளைகளின்படி தகவல்களையும் வழங்குகின்றது. நுகர்வோர் உறவுகள் அலகால் 2011 இல் பெறப்பட்ட முறைப்பாடுகள் தொலைபேசிகள் பற்றியவை என்பதை அட்டவணை 4.6 இலிருந்து காணலாம். 5% அளவான முறைப்பாடுகள் நிலையான தொலைபேசி இணைப்புகள் சம்பந்தமானவையாகும்.

நுகர்வோர் உறவுகள் அலகால் 2011இன் போது செயன்முறைப்படுத்தப்பட்ட தொலைந்த செல்லிடத் தொலைபேசிகள் மீதான முறைப்பாடுகளின் வகைப்படுத்தல் அட்டவணை 4.7 இல் தரப்படுகின்றது.

தொலைந்த செல்லிடத் தொலைபேசிகள் மீதான முறைப்பாடுகள் - 2011 (அட்டவணை 4.7)

| வகை | எண்ணிக்கை |
|---|---|
| தொலைந்த செல்லிடத் தொலைபேசிகளின் தற்போதைய பாவனையாளர்களது தகவல்களைக் கண்டு பிடிக்கக் கூடிய முறைப்பாடுகள் | 1922 |
| தொலைந்த செல்லிடத் தொலைபேசிகளின் தகவல் கண்டு பிடிக்கப்பட முடியாத முறைப்பாடுகள் | 6082 |
| ஒழுங்கின்மை, தெளிவின்மை போன்ற காரணங்களினால் தொடர முடியாத முறைப்பாடுகள் | 876 |
| இயக்குநர்களுக்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகள் (தகவல் நிலுவையிலுள்ளவை) | 2895 |
| **மொத்தம்** | **11775** |

TRCSL இற்குச் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கையில் தொலைந்த செல்லிடத் தொலைபேசிகளின் ஆறிலொரு பகுதி தொடர்பான தகவல் கண்டறியப்பட்டது. தொலைந்த தொலைபேசிகள் பற்றிய தகவல்கள் அத்தொலைபேசிகள் தொலைத்தொடர்புகள் முறைமைகள் ஏதாவதில் பயன்படுத்தப்படுகையிலேயே இலகுவாகப் பெறப்பட முடியும். தொலைந்த தொலைபேசிகள் கழற்றிப் பிரிக்கப்பட்டால் அல்லது வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டால் அவற்றின் இருப்பிடத்தை அறிதல் சிரமமானது என்பதுடன் தொலைந்த செல்லிடத் தொலைபேசிகளைத் தேடியறிவதில் இது பாரிய பிரச்சினையுமாகும்.

நுகர்வோர் உறவுகள் அலகின் தலையீட்டின் காரணமாக சேவை வழங்குநர்கள் தமது பிழைகளைத் திருத்திக் கொள்ள உடன் நடவடிக்கை எடுத்ததுடன் இத்தலையீட்டினால் நுகர்வோரும் நன்மையடைந்தனர். நுகர்வோர் உரிமைகள் குறித்தும் தொழிற்துறையின் தகைமை குறித்தும் நுகர்வோர் முன்னரை விட அறிவு பெற்றோராக இருப்பதும் கண்கூடு.

## 4.4. அலுவலர்கள்

2011 ஆம் ஆண்டின் போது பொருளாதார அலுவல்கள் பிரிவு தனக்குக் கொடுக்கப்பட்ட பணியை ஒரு (01) பணிப்பாளர், ஒரு (01) பதில் பிரதிப் பணிப்பாளர், மூன்று (03) உதவிப் பணிப்பாளர்கள், இருபத்து நான்கு (24) முகாமைத்துவ உதவியாளர் நிலை அலுவலர்கள், மூன்று (03) முதனிலை மட்ட அலுவலர்கள் ஆகியோரைக் கொண்ட முப்பத்திரண்டு (32) உறுப்பினர்களுடனான பதவியணியினருடன் நிறைவேற்றியது.

# புறோட்பேண்ட் கண்காணிப்புப் பிரிவு

அத்தியாயம் 5

### 5.1. பொது நோக்கு

புறோட்பேண்டின் கண்டுபிடிப்பானது நாம் தொடர்பு கொள்ளும் முறை, தகவலைப் பெறுதல், அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ளல், வியாபாரம் செய்தல், ஒருவர் மற்றவருடன் நடந்து கொள்ளும் முறை என்பவற்றைக் குறிப்பிடத்தக்க அளவு மாற்றியுள்ளது. பொருளாதாரத்தில் புறோட்பேண்ட்டின் தாக்கம் அதிகரித்த முறையில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. புறோட்பேண்ட் உலகால் வழங்கப்படும் புதிய செயன்முறைகள். சேவைகள், தொழில் வாய்ப்புக்கள் என்பவற்றிலிருந்து எல்லா மக்களும் நன்மையடைவதை உறுதி செய்வதற்காக தற்போது பலம்வாய்ந்த புறோட்பேண்ட் தந்திரோபாயங்களும், திட்டங்களும் அவசியப்படுகின்றன. புறோட்பேண்ட் சேவை வழங்குவதில் வேகமே பிரதான

காரணியாக இருக்கின்றது. வேகத்தை உயர்மட்டத்தில் பேணும் வரை இச் சேவையின் உண்மையான கொள்ளளவை விளங்கிக் கொள்ள முடியாது. குறைந்த வேக புறோட்பேண்ட் சேவை நாட்டின் புறோட்பேண்ட் வளர்ச்சியில் எதிர் மறையான தாக்கத்தை விளைவிப்பதுடன் அதன் விளைவாக நாட்டின் சமூக – பொருளாதார அபிவிருத்தியில் அதன் பங்களிப்பையும் பின்வாங்கச் செய்கின்றது.

## 5.2. இலங்கையில் "புறோட்பேண்ட்" இன் வரலாற்று ரீதியான அபிவிருத்தி

இலங்கையில் புறோட்பேண்ட் இணையசேவை முதன் முதலில் 2003 இல் சேவைக்குப் பொறுப்பான 'வரையறுத்த இலங்கை டெலிகொம்' இனால் (SLTL) கொழும்பு நகர் பிரதேசத்தை அடக்கிய பகுதியில் முதல் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. முதலாம் கட்டத்தில் ADSL (Asymmetric Digital Subscriber Line) தொழில்நுட்பத்தை உபயோகித்து பாவனையாளர்களை தொடர்புபடுத்துவதற்காக வெறும் செப்புக்கம்பிகள் உபயோகிக்கப்பட்டன. 2003 இல் வர்த்தக ரீதியான சேவைகளைத் தொடங்க முன்னர், பாரிய கொழும்புப் பிரதேசத்தில் SLTL ஒரு முன்னோடிச் செயற்திட்டமாக ஒரு ADSL பரீட்சார்த்த செயற்திட்டத்தை மேற்கொண்டது. 2003 இல் சேவைக்குப் பொறுப்பான SLT ஆனது SEA-ME-WE3 (தென் கிழக்கு ஆசியா, மத்திய கிழக்கு, மேற்கு ஐரோப்பா) கடலடி கம்பி வடத்தூடாக சர்வதேச மிக முக்கிய துறையிலுள்ள இரண்டு DS-3 சேக்கியூட்களில் (ஒவ்வொன்றும் 45 Mbps.NTT/Verioஜப்பான் மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் UUNET) இல் பிரதானமாகத் தங்கியிருந்ததுடன் தரவுப்போக்குவரத்திற்காக இந்த இயலளவைப் பயன்படுத்தியது. இதனைத் தொடர்ந்து இந்த இயலளவு உலகளாவிய இணையத்திற்கு SEA-ME-WE3 மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட SEA-ME-WE4 வடங்களை உபயோகித்து உயர்ந்த இயலளவிற்கு மேலும் அதிகரிக்கப்பட்டது. இன்று இது STM-1, STM-4,STM-64 மற்றும் GE சேக்கியூட்களைக் கொண்டுள்ளது. இது சர்வதேசத் துறையில் 15.6 Gbps பயன்படுத்திய இயலளவைச் சேர்க்கின்றது.

தற்போது இலங்கையின் புறோட்பேண்ட் சந்தை பயனாளிகளைத் தொடர்புபடுத்துவதற்காக செப்பு வலையமைப்பைப் பயன்படுத்தும் ஒரு கம்பி மூலமான இயக்குநரையும் ஒன்பது கம்பியில்லா இயக்குநர்களையும் உள்ளடக்கிய பத்து இயக்குநர்களைக் கொண்டமைந்துள்ளது. புறோட்பேண்ட் இயக்குநர்கள், தொழில்நுட்பம் மற்றும் வேகங்கள் என்பன பற்றிய தகவல் அட்டவணை 5.1 இல் தரப்படுகின்றது. அமைக்கப்பட்ட நாரிழை வலையமைப்புகளிற் பெரும்பாலானவை Back hole traffic ஐ போக்குவரத்து செய்யும் நோக்கத்திற்காகவே பிரதானமாக உபயோகிக்கப்படுகின்றன. தனிப்பட்ட நுகர்வாளர்களுக்கு சேவை

**புறோட்பேண்ட் இயக்குநர்கள், தொழில்நுட்பம், வேகம்** (அட்டவணை 5.1)

| இயக்குநர் | தொழில்நுட்பம் | | விளம்பரப்படுத்தப்பட்ட ஆகக்கூடிய BANDWIDTH |
|---|---|---|---|
| எஸ்எல்ரி | ADSL 2+ | கம்பிமூலம் | 16Mbps |
| டயலொக் புறோட்பேண்ட் | WiMAX | கம்பியற்ற | 4Mbps |
| டயலொக் செல்லிட | HSDPA | கம்பியற்ற | 3.6Mbps |
| லங்காபெல் | WiMAX | கம்பியற்ற | 4Mbps |
| எடிசலாட் | HSPA+ | கம்பியற்ற | 7.2Mbps |
| மொபிரெல் | HSDPA | கம்பியற்ற | 3.6Mbps |
| எயார்ரெல் | HSDPA | கம்பியற்ற | 3.6Mbps |
| சன்ரெல் | WiMAX | கம்பியற்ற | 4Mbps |
| ஸ்கை நெற்வேர்க்ஸ் | WiMAX | கம்பியற்ற | 4Mbps |
| ஹட்ச் | HSPA | கம்பியற்ற | 3.6Mbps |

**கடந்த ஆண்டுகளின்போது புறோட்பேண்ட் பாவனையாளர்களின் வளர்ச்சி வரைபு 5.1ல் காட்டப்படுகின்றது.** (அட்டவணை 5.1)




**புறோட்பேண்ட் வளர்ச்சி**

வழங்குவதற்காக நாட்டில் இதுவரை 'வீட்டிற்கான நாரிழை' (Fibre To The Home- FTTH) கிடைக்கத்தக்கதாக இல்லை. மெட்ரோ ஈதர்நெற் சேவைகளும் கூட்டிணைவுத் துறையில் (Corporate Sector) இருப்பதுடன் நாரிழை கிடைக்கத் தக்க பகுதிகளில் கட்டிடத்திற்கான நாரிழையை (Fibre To The Building – FTTB) காணக் கூடியதாகவுள்ளது.

## 5.2. புறோட்பேண்ட் கண்காணிப்பு அலகின் *(BMU)* ஆரம்பம்

2010 இல் பொதுமக்களுக்கு இயக்குநர்களால் வழங்கப்படும் புறோட்பேண்ட் இணையச் சேவைகளுடன் தொடர்புபட்ட சேவையின் தரத்தை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) கண்காணிக்கத் தொடங்கியது. இந் நோக்கத்திற்காக TRCSL வளவினுள் ஒரு புறோட்பேண்ட் கண்காணிப்பு அலகு (BMU) நிறுவப்பட்டது. இந்த அலகானது TRCSL பணிப்பாளர் நாயகத்தின் நெறிப்படுத்துதலின் கீழும் தேசிய புறோட்பேண்ட் ஆலோசனைக் குழுவின் (NBCC) தொழில்நுட்பத்தின் கீழும் அமைக்கப்பட்டது. இந்த அலகு ஓர் ஆலோசகரால் தலைமை தாங்கப்படுவதுடன் ADSL, WMAX மற்றும் HSPA உள்ளிட்ட பரந்தளவிலான புறோட்பேண்ட் சேவைகளைக் கவனிக்கத்தக்கதான கருவிகளையும் கொண்டுள்ளது.



புறோட்பேண்ட் கண்காணிப்பு அலகு

## 5.3. BMU இன் தொழிற்பாடுகள்

நாட்டிலுள்ள பாவனையாளர்கள் எதிர்நோக்கும் புறோட்பேண்ட் சேவைகளின் தரத்தை விழிப்புடன் கண்காணித்தலே ' இந்த அலகின் பிரதான இலக்காகும். முழு மொத்தமான புறோட்பேண்ட் சேவைத்தரத்தின் சரியான தோற்றத்தைக் காண, புறோட்பேண்ட் கிடைக்கத்தக்கதாக உள்ள நாட்டின் எல்லாப்பகுதிகளிலும் பொருத்தமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கிடைக்கத்தக்க வேகங்களை அளவிட உள்ளூர் மற்றும் சர்வதேச பிரிவுகள் வெவ்வேறாகக் கண்காணிக்கப்படுகின்றன. TRCSL ஆல் செய்யப்பட்ட வேண்டுகோளின் பயனாக இந்தப் பரிசோனைகள் துல்லியமாக நடத்தப்படுவதை இயலச் செய்வதற்கு புறோட்பேண்ட் சேவை வழங்குநர்கள் தமது வலையமைப்பினுள் பொறிமுறைகளை அமைத்துள்ளனர். இந்தப் பொறிமுறையானது ஓர் இயக்குநரது வலையமைப்பை அடைவதற்கும் சேவையின் தரத்தைக் கண்காணிப்பதற்குத்

தரவிறக்க வேகம் ஆகஸ்ட் 2010 (வரைபு 5.2)




தரவிறக்க வேகம் ஆகஸ்ட் 2011 (வரைபு 5.3)




தேவையான தரவுகளைப் பெறுவதற்கும் TRCSL ஐ அனுமதித்தது.

## 5.4. வேகப் பரிசோதனை பெறுபேறுகள்

வேகப் பரிசோதனைகளின் பெறுபேறுகள் பாவனையாளர்களின் தகவலுக்காகவும் தொடர்புகளுக்காகவும் கால அடிப்படையில் பிரசுரிக்கப்படுகின்றன. முறையே 2010 ஆகஸ்ட்டிலும் 2011 ஆகஸ்ட்டிலும் நிலையான சேவை வழங்குநர்களின் தரவிறக்க வேகங்களை வரைபுகள் 5.2 உம், 5.3 உம் காட்டுகின்றன.

TRCSL இன் வேகக் கண்காணிப்பு நடவடிக்கையைத் தொடர்ந்து இயக்குநர்கள் நிலையான புறோட்பேண்ட் சேவைகளில் வேகங்களைக் குறிப்பிடத்தக்களவு மேம்படுத்த நடவடிக்கைகளை எடுத்திருந்தனர். வரைபுகள் 5.2 ஐயும் 5.3 ஐயும் நாம் ஒப்பிடும் போது ஒரு வருட காலப் பகுதியினுள் மூன்று சேவை வழங்குநர்களின் தரவிறக்க வேகங்கள் மேம்பட்டிருப்பதனைக் காணமுடியும்.

சேவைத் தர மேம்படுத்தல்களுக்குப் புறம்பாக நாட்டில் புறோட்பேண்ட் சேவைகளை அடையும் கட்டணங்களை இயக்குநர்களிடையே போட்டிநிலையை உருவாக்குவதன் மூலம் குறைக்க முடியும்.

பொதுமக்களது அறிதலுக்காக புறோட்பேண்ட் வேகப்பரிசோதனைப் பெறுபேறுகளைப் பிரசுரித்தலுக்கு மேலதிகமாக பாவனையாளர்கள் தமது புறோட்பேண்ட் தரவிறக்க வேகங்களைச் சரியாகப் பரிசோதிப்பதற்குரிய வசதியை வழங்கும் ஒரு கருவியை TRCSL உருவாக்கியிருந்தது. இந்த முறைமை ஐரோப்பாவிலும், ஐக்கிய அமெரிக்காவிலும் அமைந்துள்ள இரண்டு பயன்மிக்க வழங்குநர்களுடன் செயற்படுகின்றதுடன் பாவனையாளர்கள் அவற்றிற்கிடையே உள்ள மற்றும் தனியே அமைந்துள்ள வழங்கியிலுள்ள வேகங்களைச் சரிபார்க்க வசதியை வழங்குகின்றது.

உலகிலுள்ள பிற ஒழுங்குபடுத்துநர்களுக்கு நிபுணத்துவத்தினை வழங்கும் நோக்குடன் தனது நோக்கெல்லையையும் பரீட்சார்த்த நடவடிக்கையையும் விரிவாக்குவதற்காக TRCSL ஆனது BMU ஐயும் அதன் வசதிகளையும் விரிவாக்கத் திட்டமிடும்.

# ஸ்பெக்ட்றம் முகாமைத்துவப் பிரிவு

அத்தியாயம் 6

## 6.1. பொதுநோக்கு

வானொலி அலைவரிசை ஸ்பெக்ட்றமானது ஒரு தேசிய வளம். இதனால் அது ஒரு முழுமையான அரச சொத்துமாகும். இந்த அருமைத் தன்மை வாய்ந்த பெறுமதிமிக்க வளத்தை முகாமை செய்யும் பொறுப்பு ஸ்பெக்ட்றம் முகாமைத்துவப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. உபயோகிக்கத்தக்க வானொலி அலைவரிசை ஸ்பெக்ட்றத்தின் நலனை உச்சப்படுத்தலும் வானொலி அலைவரிசைக் குறுக்கீடுகளை குறைத்தலும் ஸ்பெக்ட்றம் முகாமைத்துவத்தின் நோக்கமாகும்.

வானொலி அலைவரிசை ஸ்பெக்ட்றத்தின் பாவனையை நியாய விளக்கமளித்தலும் உச்சப்படுத்தலும், குறுக்கீட்டுப் பிரச்சினைகளைத் தவிர்த்தலும், குறைத்தலும் புதிய கம்பியில்லாத் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதலை ஊக்குவித்தலும், ஸ்பெக்ட்றத்தின் உச்ச பொருளாதாரப் பெறுமதியை அடைந்து கொள்வதற்காக ஸ்பெக்ட்றம் அனுமதிப்பத்திரக் கட்டண கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்தலும், ஸ்பெக்ட்றம் விடயங்கள் தொடர்பாக அயல்நாடுகளுடனும் பிற நிருவாகங்களுடனும் ஒத்துழைத்தலும் என்பனவற்றை ஸ்பெக்ட்றம் முகாமைத்துவத்தின் இலக்குகள் உள்ளடக்குகின்றன. இந்த இலக்குகள் ஒரு நிருவாக மற்றும் தொழில்நுட்ப நடைமுறைகளின்

தொகுதி மூலம் அடையப்படுகின்றன. தொலைத்தொடர்புகள் அதிகாரச் சட்டத்தின்படியான கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக ஸ்பெக்ட்றம் முகாமைத்துவப் பிரிவு 2011 இல் பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொண்டது.

## 6.2. தொழிற்பாடுகள்

- சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் வானொலி ஒழுங்கு விதிகள், அதனோடிணைந்த விதந்துரைகள் என்பவற்றிற்கேற்ப வானொலி அலைவரிசை ஸ்பெக்ட்றத்தைத் திட்டமிடல்.
- புதிய தொழில்நுட்பங்களின் அறிமுகப்படுத்தலுக்காக ஸ்பெக்ட்றத்தை கிடைக்கச் செய்தல்.
- வானொலி அலைவரிசைகளை பொருத்தமான Band களில் அடையாளம் காணுதலும் ஒதுக்குதலும்.
- வானொலி அலைவரிசை ஸ்பெக்ட்றத்துடன் தொடர்புடைய வழிகாட்டல்கள், விதிகள், கட்டணக் கட்டமைப்புக்கள் என்பவற்றை உருவாக்குதல்
- அலைவரிசையினதும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களினதும் பாவனைக்கான சிட்டையிடலும் அனுமதிப் பத்திரமளித்தலும்.
- அலைவரிசை ஒதுக்கீடுகள், ஒலிபரப்பி அமைவிடங்கள், ஒலிபரப்பிகளின் தொழில்நுட்பத் தரவுகள், சிட்டையிடல் மற்றும் அனுமதிப் பத்திரமளித்தல் தரவுகள் என்பவற்றைக் கொண்ட சகல பயன்பாட்டாளர்களினதும் ஒரு தரவுத் தளத்தை நிர்வகித்தல்.
- குறித்த சில வானொலி உபகரணங்களிற்கான வகை அனுமதி ஆவணங்களை வழங்குதல்.
- முதலீட்டுச் சபை (BOI), இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், சுங்கத் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்களுக்கு உபகரணங்களுக்கான அனுமதிகளுக்கு விதந்துரைகளையும், அங்கீகாரத்தையும் வழங்குதல்.
- வானொலி அலைவரிசை ஸ்பெக்ட்றத்தைக் கண்காணித்தல்
- வானொலி அலைவரிசை இடையூறுகள் குறித்த முறைப்பாடுகளை ஆய்வு செய்தலும் வானொலி அலைவரிசை இடையூறுகளைக் குறைத்தலும்.
- கல்வி நிலையங்களின் மாணவர்களது ஆய்வு நடவடிக்கைகளுக்கு தேவையான தகவல்களையும் வழிகாட்டல்களையும் வழங்குதல்.
- வானொலி அலைவரிசை மற்றும் மற்றும் உபகரணப் பயன்பாடு பற்றிய அறிதிறன் நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- வானொலி அலைவரிசை ஸ்பெக்ட்றத்துடன் தொடர்பான விடயங்களில் ITU, APT, IMO போன்ற சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளல்.

தொலைத்தொடர்புகள் அதிகாரச் சட்டத்தின் 22ஆம் பிரிவின்படி (2.7.1.2ஐப் பார்க்குக) வானொலி அலைவரிசையை வெளியிடும் கருவியை பாவிக்கும் எவரும் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட வலிவுடைய ஓர் அனுமதிப் பத்திரத்தைக் கொண்டிருக்க வேண்டும். வேறு வகையாகக் குறிப்பிட்டாலன்றி, இதற்கென ஆக்கப்பட்ட விதிகளாற் குறித்துரைக்கப்படும் ஒரு கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் இந்த அனுமதிப் பத்திரம் வழங்கப் படுகின்றது. அனுமதிப் பத்திரத்தின் நிபந்தனைகள் குறித்துரைக்கப் பட்டு அனுமதிப் பத்திரத்துடன் வழங்கப்படுகின்றன. நிபந்தனைகள் சேவைக்குச் சேவை மாறுபடலாம். அத்தகைய நிபந்தனைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் அந்த உபகரணத்தை முத்திரையிடவும், அனுமதிப் பத்திரத்தை மீளப் பெறவும் TRCSLஇற்கு அதிகாரமுண்டு.

வானொலி அலைவரிசை ஸ்பெக்ட்றமானது சேவையின் வகைகளைப் பொறுத்து பல்வேறு Bandகளுக்கு ஒதுக்கப்படுகின்றது. வானொலி அலைவரிசைகள், உபகரணங்களினதும் பிரயோகங்களினதும் தொழில்நுட்ப வரையறைகள் என்பவற்றின் தன்மையைப் பொறுத்து சேவையின் தன்மை ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடுகின்றது. எனவே, இப் பிரிவின் பணியும் பல்வேறு சேவை வகைகளாகப் பிரிக்கப்படுகின்றது.

எந்த வானொலி அலைவரிசைக் கருவிகளையும் இறக்குமதி செய்தலுக்கு TRCSLஇன் அனுமதி தேவையாகவுள்ளது. அத்தகைய அனுமதிக் கடிதத்தை வழங்குவதற்கு முன்னர் அந்த உபகரணம் தேவையான தரத்திற்கு அமைவாக இருத்தலையும், TRCSLஆல் அனுமதிக்கப்பட்ட அலைவரிசையைக் கொண்டிருத்தலையும் ஸ்பெக்ட்றம் முகாமைத்துவப் பிரிவு உறுதிப்படுத்திக் கொள்கின்றது. இந்த நடவடிக்கையானது அலைவரிசைகளின் சட்டத்திற்கு முரணான பாவனையையும், அனுமதிபெற்ற ஸ்பெக்ட்றம் பாவனையாளர்களுக்கு ஏற்படும் வானொலி இடையூறுகளையும் குறையச் செய்கின்றது.

எவ்வாறாயினும், பாவனையாளர்கள் தமது ஒலிபரப்புகளில் இடையூறுகளை அனுபவிக்கும்போது அவர்களிடமிருந்து ஸ்பெக்ட்றம் முகாமைத்துவப் பிரிவு முறைப்பாடுகளைப் பெறுகின்றது. இடையூறுகளின் மூலங்களைக் கண்டறியவும், அவற்றை ஒழித்தலுக்கான உரிய நடவடிக்கைகளை எடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

## 6.3 செயலாற்றல்

2011 இன் போது வழங்கப்பட்ட அலைவரிசைகள் மற்றும் அனுமதிப்பத்திரங்களினதும் எண்ணிக்கை தொடர்பான புள்ளி விபரங்களும் அதே வேளை ஸ்பெக்ட்றம் முகாமைத்துவப் பிரிவினால் அடையாளம் காணப்பட்ட அதிகாரமளிக்கப்படாத பாவனையாளர்கள் மற்றும் இடையூறுகள் தொடர்பான முறைப்பாடுகள் என்பவற்றின் விபரமும் பின்வருமாறு காட்டப்படுகின்றன.

### 6.3.1 அலைவரிசைகளின் ஒதுக்கீடு

**ஒதுக்கப்பட்ட அலைவரிசைகளின் எண்ணிக்கை 2010-2011** (அட்டவணை 6.1)

| சேவையின் வகை | அலைவரிசைகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | 2010 | 2011 |
| அலைவரிசைகளின் எண்ணிக்கை | 4724 | 4810 |
| ஒலிபரப்புச் சேவை | 66 | 28 |
| செலூலர் நடமாடும் சேவை | 02 slots | 01 slot |
| தகவல் மற்றும் வானொலியலை தொலைவு கணிப்பியல் | 28 | 33 |
| வான் மற்றும் கடல் வழி சேவை | | |
| 1. கடல் வழி நடமாடும் சேவை | 08 | 04 |
| 2. வான் வழி நடமாடும் சேவை | 11 | 06 |
| தனியார் நடமாடும் வானொலிச் சேவை | 13 | 13 |

### 6.3.2 அலைவரிசை அனுமதிப் பத்திரம் வழங்கப்படுதல்

ஸ்பெக்ட்றம் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 2010-2011 (அட்டவணை 6.2)

| சேவையின் வகை | அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | 2010 | 2011 |
| நிலையான சேவை | 38 | 59 |
| ஒலிபரப்புச் சேவை (வானொலி,தொலைக்காட்சி) | 25 | 28 |
| செலூலர் நடமாடும் சேவை | 5 | 5 |
| Trunking/Paging/Citizen Band | 8 | 9 |
| தகவல் மற்றும் வானொலியலை தொலைவு கணிப்பியல் சேவை | 24 | 38 |
| வான் மற்றும் கடல் வழி சேவை | | |
| 1. விமான நிலையங்கள் | 34 | 34 |
| 2. கப்பல் தளங்கள் | 65 | 65 |
| 3. கடல்வழி நடமாடும் சேவை | 78 | 78 |
| 4. வான்வழி நடமாடும் சேவை | 5 | 5 |
| தனியார் நடமாடும் வானொலிச் சேவை | 185 | 185 |

பெறப்பட்ட முறைப்பாடுகளும் பொறுப்பெடுக்கப்பட்ட நுண்ணாய்வுகளும் 2010-2011 (அட்டவணை 6.3)

| சேவைகள் | பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | பொறுப்பெடுக்கப்பட்ட நுண்ணாய்வுகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2010 | 2011 |
| தொலைக்காட்சியும் ஒலிபரப்பும் | 13 | 17 | 8 | 17 |
| வேறு சேவைகள் | 53 | 68 | 53 | 68 |

### 6.3.3 பெறப்பட்ட முறைப்பாடுகளும் பொறுப்பெடுக்கப்பட்ட நுண்ணாய்வுகளும் 2010-2011.

2011 இல் ஸ்பெக்ட்றம் பாவனையாளர்களிடம் இருந்து பெறப்பட்ட இடையூறுகள் தொடர்பான அனைத்து முறைப்பாடுகளுக்கும் ஸ்பெக்ட்றம் முகாமைத்துவ நிறுவனத்தால் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளமையை அட்டவணை 6.3ன் மூலம் காண முடிகின்றது.

### 6.3.4 ஸ்பெக்ட்றம் அலைவரிசையின் சட்டத்திற்கு முரணான பாவனையாளர்களை அடையாளங் காணல்

சட்டரீதியற்ற வானொலி ஸ்பெக்ட்றம் பாவனையாளர்களை கண்டுபிடிப்பதற்காக விசேட அலைவரிசைக் கண்காணிப்புக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இக்கருவிகள் குறித்த நோக்கத்திற்காக விசேட வாகனங்களில் பொருத்தப்பட்டன. சட்டரீதியற்ற அலைவரிசை ஸ்பெக்ட்றம் பாவனையாளர்கள் 2011 இல் குறைவடைந்துள்ளதை அட்டவணை 6.4 வெளிப்படுத்துகின்றது.

அடையாளங் காணப்பட்ட சட்டரீதியற்ற பாவனையாளர்களும், எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளும் (அட்டவணை 6.4)

| சேவைகள் | இனங்காணப்பட்ட சட்டரீதியற்ற பாவனையாளர் எண்ணிக்கை | | எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| | 2010 | 2011 | |
| ஒலிபரப்புச் சேவை (தொலைக்காட்சி, வானொலி) | 05 | 02 | வானொலி அலைவரிசை ஸ்பெக்ட்றத்தை சட்டரீதியற்ற முறையில் பயன்படுத்துவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. |
| வேறு சேவைகள் | 03 | 02 | |

### 6.3.5. கம்பியற்ற தொலைத்தொடர்பாடல் உபகரணங்கள் இறக்குமதிக்காக வழங்கப்பட்ட அனுமதி அறிக்கைகளின் (Clearance Report) எண்ணிக்கை.

வழங்கப்பட்ட அனுமதி அறிக்கைகளின் எண்ணிக்கை. (அட்டவணை 6.5)

| சேவையின் வகை | அனுமதி அறிக்கைகளின் | எண்ணிக்கை |
|---|---|---|
| | 2010 | 2011 |
| நிலையான சேவை | 720 | 845 |
| ஒலிபரப்புச் சேவை (தொலைக்காட்சி, வானொலி) | 105 | 245 |
| செலூலர் செல்லிட சேவை | | |
| *(i)* வர்த்தகர் *(Dealer)* அனுமதிப்பத்திரம் | 4058 | 4897 |
| *(ii)*. செல்லிட இயக்குனர்கள் | 927 | 1278 |
| *(iii). Trunking/ Paging/ Citizen Band* | 7 | 6 |
| வான்வழி மற்றும் கடல்வழிச் சேவை | | |
| *(i)* விமான நிலையங்கள் | 6 | 11 |
| *(ii)*. கப்பல் தளம் | 3 | 15 |
| *(iii)*. கடல் வழி நடமாடும் சேவை | 85 | 278 |
| *(iv)*. வான் வழி நடமாடும் சேவை | 2 | 21 |
| *(v)*. வான் வழி போக்குவரத்து | 1 | 4 |
| *(vi)*. நானாவிதமானவை | 29 | 95 |
| தனியார் இடப்பெயர் வானொலிச் சேவை | | |
| *(i)*. பிஎம்ஆர் | 159 | 609 |
| *(ii). CDMA* | 245 | 170 |
| தரவு சேவை | 482 | 368 |
| செய்மதிச் சேவை | 1020 | 904 |
| அமெச்சூர் வானொலி | 11 | 28 |
| குறைவலுக் கருவிகள் | 982 | 1360 |

கம்பியற்ற தொலைத் தொடர்பாடல் உபகரணங்கள் இறக்குமதிக்காக வழங்கப்பட்ட அனுமதி அறிக்கைகளின் எண்ணிக்கையானது 2010 இனை விட 2011ல் மூன்று சேவைகள் தவிர ஏனைய சேவைகள் தொடர்பில் அதிகரிப்பைக் காட்டுகின்றது. (அவையாவன: Trunking/ Paging/ Citizen Band Services தகவல் சேவை மற்றும் செய்மதி சேவை) இவை எண்ணிக்கை ரீதியான குறைவைக் காட்டுகின்றன.

ஸ்பெக்ட்றம் முகாமைப் பிரிவினால் 2011ல் மேற்கொள்ளப்பட்ட ஏனைய முக்கியமான நடவடிக்கைகள் பின்வருமாறு விளக்கப்படுகின்றன.

## 6.4 இலங்கையில் தொலைக்காட்சி அனலொக்கிலிருந்து டிஜிட்டலுக்கான மாற்றம்

ஸ்பெக்ட்றம் முகாமைப் பிரிவினால் எடுக்கப்பட்ட யோசனையுடன் இலங்கையில் அனலொக்கிலிருந்து டிஜிட்டல் புவிசார் தொலைக்காட்சிக்கான மாற்ற வழிமுறைகள் (Road Maps) தயாரிக்கப்பட்டன. இந்நடவடிக்கை சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் (ITU) நிபுணரான பீட்டர் R என்பவரும் தேசிய வழிமுறைக் குழுவும் (National Road Map Team) இணைந்து மேற்கொள்ளப்பட்டது. NRT இன் தவிசாளர் - இலங்கை தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (TRCSL) ஸ்பெக்ட்றம் முகாமைத்துவ பதில் பணிப்பாளர் திரு. ஹெலசிறி ரணதுங்க ஆவார்.

NRT இல் பின்வரும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளடங்குகின்றனர்.

- இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
- பாதுகாப்பு அமைச்சு
- மொறட்டுவ பல்கலைக்கழகம்
- இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் (தேசிய தொலைக்காட்சி வலையமைப்பு)
- வரையறுக்கப்பட்ட சுதந்திர தொலைக்காட்சி வலையமைப்பு (தேசிய தொலைக்காட்சி வலையமைப்பு) வரையறுக்கப்பட்ட E.A.P தனியார் வலையமைப்பு (வர்த்தக ஒலிபரப்பாளர்) வரையறுக்கப்பட்ட MTV சனல் தனியார் வலையமைப்பு (வர்த்தக ஒலிபரப்பாளர்) வரையறுக்கப்பட்ட டயலொக் தனியார் தொலைக்காட்சி (வர்த்தக ஒலிபரப்பாளர்)

அனலொக்கிலிருந்து டிஜிட்டலுக்கான ஒலிபரப்பு மாற்றத்திற்கான செயற்பாடானது ஸ்பெக்ட்றம் வினைத்திறன், உயர்தர ஒலி, ஒளிபரப்புக்கள், புதிய வியாபார சந்தர்ப்பங்கள் போன்ற நன்மைகளை வழங்குகின்றது. மேலும் ஒலிபரப்பு Band இன் ஒரு பகுதியை சர்வதேச நடமாடும் தொலைதொடர்புகள் சேவைகளுக்கும் ஏனைய பிரதேசங்களுக்கும் ஒதுக்குவதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்குகின்றது.

அனைத்து ITU பிராந்தியங்களிலும் அனலொக்கிலிருந்து டிஜிட்டல் ஒலிபரப்புக்கான மாற்றம் தொடங்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான நாடுகளில் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் சில ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் அனலொக் முடிவுறுத்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அனேகமான அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளும் டிஜிட்டல் செயற்பாடுகளை மேற்கொள்கின்றன அல்லது அதற்கான செயன்முறையை ஆரம்பித்துள்ளன. அபிவிருத்தி அடைந்துவரும் உறுப்பு நாடுகள் அனலொக்கிலிருந்து டிஜிட்டலுக்கு மாறும்போது எதிர்நோக்கும் சவால்களை எதிர்கொள்வதற்காக ITU ஆனது புவிசார் தொலைக்காட்சி, நடமாடும் தொலைக்காட்சி மற்றும் ஒலிபரப்பு உள்ளடங்கலாக ஸ்பெக்ட்றம் வினைத்திறனின் அனைத்து நன்மைகளையும் நாடுகள் பெறுவதற்காக ஒரு விசேட நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்துள்ளது.

ITU ஆனது அனலொக்கிலிருந்து டிஜிட்டலுக்கு மாற்றுதல் தொடர்பான ஒழுங்கு விதிகளைத் தயாரித்து வெளியிட்டுள்ளது. இவ்வொழுங்கு விதிகளானது உறுப்பு நாடுகள் இலகுவாக அனலொக்கிலிருந்து டிஜிட்டலுக்கு மாறுவதற்கு உதவுகின்றன. டிஜிட்டல் ஒலிபரப்புக்கு உதவும் ஒரு முயற்சியாக ITU ஆனது டிஜிட்டலுக்கு மாறும் (Digital Switch-Over-DSO) ஒரு தேசிய வழி வகையை தயாரிக்க உதவுவதற்காக சில நாடுகளை தெரிந்தெடுத்துள்ளது. மேலதிக உதவி பெறத்தக்க பயனாளி நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

மதிப்பீட்டளவில் 3.5 மில்லியன் தொலைக்காட்சிக் குடும்பங்களைக் கொண்ட இலங்கைத் தொலைக்காட்சிச் சந்தையானது மிக உயர்ந்த எண்ணிக்கையிலான (23) அனலொக் புவிசார் தொலைக்காட்சி நிகழ்ச்சி சேவைகளைக் கொண்ட இலவச (Free-To-Air-FTA) புவிசார் தொலைக்காட்சி சந்தையாகும். அனலொக் புவிசார் தொலைக்காட்சிக்கு மேலாக டிஜிட்டல் தொலைக்காட்சி, செய்மதி (Satellite) தொலைக்காட்சி, அனலொக் மற்றும் டிஜிட்டல் கம்பி வடத் (Cable) தொலைக்காட்சி, இணைய நெறிமுறை (Internet Protocol) தொலைக்காட்சி (IPTV) போன்ற பரந்தளவிலான தொலைக்காட்சி வழங்கும் பிரிவுகளும் உள்ளன.

2011 இல் இலங்கை தலைக்கான உள்நாட்டு மொத்த உற்பத்தி அமெரிக்க டொலர் 2400 ஆகக் காணப்பட்டது. இந்த ஒப்பீட்டளவில் குறைந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியும் தொலைக்காட்சி சந்தையில் காணப்படும் அதிக போட்டித்தன்மையும் டிஜிட்டலுக்கு

மாறும் (DSO) செயன்முறையில் பெரிய சவாலாகக் காணப்படுகின்றன. அரசாங்கம், ஒலிபரப்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களின் கிரயம் குறைந்த மட்டத்தில் பேணப்படும் போதே டிஜிட்டலுக்கு மாறுதல் வெற்றியளிப்பதாக அமையும். மறுபுறத்தில் டிஜிட்டல் தொலைக்காட்சிக்கு மாறுதல் அதிக நன்மைகளை வழங்கும். பார்வையாளர்கள் அதிக சேவைகள், உயர்தர படங்களைப் பெற முடிவதுடன் ஒலிபரப்பாளர்கள் புதிய சேவைகளை வழங்கி மேலும் வலையமைப்புக் கிரயத்தைக் குறைக்க முடியும். அரசாங்கமானது அலைவரிசை ஸ்பெக்ட்ரத்தின் அதிக வினைத்திறனை அடையும் அதேவேளை, ஒலிபரப்பு Band இன் ஒரு பகுதியை ஏனைய தொடர்பாடல் சேவைகளுக்கு ஒதுக்கவும் முடியும்.

இலங்கைக்கான ITU இன் உதவியானது 04 பிரதான நடவடிக்கைகளைக் கொண்டிருந்தது.

1) தகவல் சேகரிப்பிற்கான தயாரிப்பும் நாட்டிற்கான முதல் பயணமும்
2) வழிவகை (Road Map) அறிக்கையைத் தயாரித்தல்
3) தயாரிக்கப்பட்ட வழிவகை அறிக்கையை வழங்கி கலந்துரையாடுவதற்காக நாட்டிற்கான இரண்டாவது பயணம்.
4) இறுதி வழிவகை அறிக்கையைத் தயாரித்தல்.

டிஜிட்டல் ஒலிபரப்பிற்கான மாற்றம் தொடர்பான வழிமுறைகளைத் தயாரித்த விற்பன்னர்களின் இலங்கைக்கான விஜயம் 15-26 ஆகஸ்ட் 2011, 26 செப்டம்பர் முதல் 04 ஒக்டோபர் 2011 வரை இடம்பெற்றது. முதலாவது வருகையின் போது விற்பன்னர்கள் NRT உடன் இணைந்து தயாரித்தவை:

- தொலைக்காட்சி சந்தை மற்றும் ஒழுங்குபடுத்தல் நிலவரம் தொடர்பான ஒரு பகுப்பாய்வு.
- குறுங்கால மற்றும் நீண்டகால டிஜிட்டல் மாற்ற நோக்கங்கள் மீதான ஒரு பொதுநோக்கு
- பிரதான நோக்கங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்களின் ஒரு தொகுப்பு

### வழிவகையின் (Road Map) நோக்கெல்லை

(அ) இலங்கையின் அனலொக்கிலிருந்து டிஜிட்டல் தொலைக்காட்சி மாற்றத்திற்கான வழிவகையானது குறுங்கால DSO மற்றும் நீண்டகால DSO நோக்கங்களும் மற்றும் NRT இனால் முகாமைப்படுத்தப்படுகின்ற நடவடிக்கைகளும் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

(ஆ) இலங்கை தொலைக்காட்சி சந்தை என்பது, அதிகளவு எண்ணிக்கையான தேசிய, வர்த்தக தொலைக்காட்சி சேவைகள் மற்றும் பரந்த தொலைக்காட்சித் தளங்களையும் இயல்புகளாகக் கொண்டது (அனலொக் மற்றும் டிஜிட்டல் கேபிள், செய்மதி தொலைக்காட்சி, IPTV). இலங்கை தொலைக்காட்சி சந்தையானது பிரதானமாக்

**DSO நோக்கங்களின் பொழிப்பு** (அட்டவணை 6.6)

| இல. | நோக்கம் | குறுங்காலம் (அனலொக் முடிவுறுத்தலின் 1 வருடத்தின் பின்) | நீண்டகாலம் (அனலொக் முடிவுறுத்தலின் 5-6 வருடங்களின் பின்) |
|---|---|---|---|
| 1 | தந்திரோபாய ரீதியானதும் பிராந்திய சேவை அணுகுமுறை மூலமுமான அனலொக்கிலிருந்து டிஜிட்டலுக்கான சுமுகமான மாற்றம். டிஜிட்டல் புவிசார் தொலைக்காட்சி(DTT) சேவையானது 2012 இன் நடுப்பகுதிக்கு முன் மேற்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் கிடைக்கத்தக்கதாக திட்டமிடப்பட்டது. | அனைத்து தற்காலிக அனலொக் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காகவும் அனைத்து அனலொக் சேவைகளும் அகில இலங்கை ரீதியான அதே பரந்த பகுதிகளை உள்ளடக்கத்தக்கதாக டிஜிட்டலுக்கு மாற்றப்பட்டது. | NRT ஆனது வெகுசன மற்றும் தகவல் தொலைத்தொடர்பாடல் அமைச்சின் வழிப்படுத்தலை பின்பற்றும். இலங்கை ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவானது டிஜிட்டல் நன்மைக்கான திட்டமிடலை மேற்கொள்ளும். |

**DSO நோக்கங்களின் பொழிப்பு** (அட்டவணை 6.6)

| | | | |
|---|---|---|---|
| 2 | டிஜிட்டல் ஒலிபரப்பு வலையமைப்பு இயக்குநர்களுக்கு முறைமைப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரம் வழங்குதல் (DBNO) | அனலொக் முடிவுறுத்தலின் பின் நிலவும் அலைவரிசை ஸ்பெக்ட்றத்திற்கேற்ப இரண்டாவது DBNO அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். | இல்லை |
| 3 | DBNO ஆனது இலவச DVB 12 டிஜிட்டல் புவிசார் தொலைக்காட்சி பரிமாற்று வலையமைப்பினை வடிவமைக்க வேண்டும். | இல்லை | இல்லை |
| 4 | பார்வையாளருக்கான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒலிபரப்பாளர்கள் வழங்குவதற்காக DBNO இன் சேவைகளைப் பயன்படுத்த வேண்டும். அனைத்து சனல்களும் சம்பந்தப்பட்ட DBNO களால் ஆரம்பத்திலிருந்தே வடிவமைக்கப்பட்ட டிஜிட்டல் தளங்களிலே கிடைக்கப்பெறல் வேண்டும் என்கின்ற அடிப்படைத் தேவையை இப்போதிருக்கும் அனைத்து ஒலிபரப்பாளர்களுக்கும் அறிவுறுத்தல் வேண்டும். | இல்லை | இல்லை |
| 5 | கொள்கையை செயற்படுத்துகையில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களுக்கான தீர்வுகள், ஒழுங்குபடுத்துநர்கள் சம்பந்தப்பட்ட தீர்வுகளுக்கான பொறுப்பை ஏற்க வேண்டும். | இல்லை | இல்லை |
| 6 | வரிக் கொள்கை | 2012 முதல் 2015 வரையான வரிச் சலுகைகள் நிகழ்கால ஒலிபரப்பாளர்களை ஊக்குவிக்க வழங்கப்படும். | 2012 முதல் 2018 வரை வரிச் சலுகைகள் வாடிக்கையாளர் கட்டட உபகரணங்களுக்காக வழங்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| 7 | DTTB இல் இருந்து அனலொக்கிற்கு மாறுவதற்கான சட்டத்திற்கு துணை செய்வதில் ASO இற்கு முன்னர் அலைவரிசையைத் திட்டமிடல். | அலைவரிசை திட்டமிடலின் வெளியீடுகளானது இரண்டாவது DBNO முறைமைப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரம் மற்றும் ஏனைய சாத்தியமான டிஜிட்டல் ஒலிபரப்பு சேவைகளுக்குப் பயன்படுத்தப்படும். | அதிக DBNO அனுமதிப் பத்திரங்களை உள்வாங்க முடியும். |
| 8 | சிறந்த தரத்திலான படங்கள் | ASO இன் பின்னர் கூடிய நாடளாவிய திரைப்படக் கலவைகள் கிடைக்கப்பெறும் எனும் நிபந்தனையில் உயர்தர தொலைக்காட்சியைச் (HDTV) சந்தைப்படுத்தல் | சந்தையில் முப்பரிமாண (3D) தொலைக்காட்சி |
| 9 | மேலதிக டிஜிட்டல் ஒலிபரப்புச் சேவைகள் | இல்லை | செல்லிடத் தொலைக்காட்சி (MTV) மற்றும்/அல்லது டிஜிட்டல் வானொலி |
| 10 | டிஜிட்டல் நலன்கள் | வரைபு கலந்தாலோசிக்கப்பட வேண்டும் | Ultra High Frequency (UHF) ஸ்பெக்ட்ரத்தை மீளத் தொகுத்தல். |

தற்போது செயற்படுத்தப்படுகின்ற 16 ஒலிபரப்பாளர்களுடன் மொத்தமாக 23 அனுமதி பெற்றுள்ளவர்களைக் கொண்ட இலவச புவிசார் தொலைக்காட்சி சந்தையாகும்.

(இ) வழிவகைகள் (Road Maps)
இலக்கு DSO இன் நோக்கங்களால் குறித்துக்காட்டப்படுகிறது. NRT இன் முதலாவது கூட்ட வெளிப்படுத்தும் செயன்முறையின் போது NRT ஆனது DSO நோக்கங்களை குறுங்கால மற்றும் நீண்டகால ரீதியில் வரையறுத்த பொழிப்பு கீழே அட்டவணை 6.6 இல் காட்டப்படுகின்றது.

(ஈ) அனலொக்கிலிருந்து டிஜிட்டலுக்கான மாற்ற செயன்முறையின் காலப்பகுதியானது NRT இனால் தீர்மானிக்கப்பட்டது. இற்றைப்படுத்தப்பட்ட நோக்குகள் வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் காலத்தை அடிப்படையாகக் கொண்டன.

- 2011 இறுதி முதல் 2012 நடுப்பகுதி வரை:
- வடக்கு மற்றும் மேற்கு மாகாணத்தில் DTTB ஆரம்பக்கட்ட முன்னோடி பரிமாற்று சேவைகளைப் பயன்படுத்தல்.
- 2014 நடுப்பகுதி:
  எட்டு DTT பிரதான நிலையங்களில் இருந்து DTTB சேவைகளைப் பயன்படுத்தல்.
- 2015 இறுதி :
  மேல் மாகாணத்தில் அனலொக் முடிவுறுத்தல்.
- 2017 அனலொக் முடிவுறுத்தலை பூரணப்படுத்தல்.

அனலொக்கிலிருந்து டிஜிட்டலுக்கு மாறுவதற்கு நுகர்வாளர்களுக்கு ஐந்து முதல் ஆறு வருடங்கள் எடுக்கலாம் என மதிப்பிடப்படுகின்றது.

### கடமைகளும் பொறுப்புக்களும்

அறிக்கையானது டிஜிட்டல் பெறுமதி தொடர் (Digital Value Chain) மற்றும் ஒழுங்குபடுத்துனர் / அதிகாரம் பற்றிய கடமைகளையும் பொறுப்புக்களையும் வரையறுக்கின்றது.

### DBNO இன் கடமைகளும் பொறுப்புக்களும்

- அனைத்து நிகழ்கால தொலைக்காட்சி ஒளிபரப்பாளர்களுக்கும் சமமான நியாயமான விலையில் வசதியளித்தல்.
- ஒலிபரப்பாளரின் பிரதான கட்டுப்பாட்டு அறை (MLR) யிலிருந்து உள்ளடக்கங்களை சேகரித்தல்.
- ஒலிபரப்பாளர்களது உள்ளடக்கங்களை

பார்வையாளர்களுக்கு வழங்குதல்.

- தொலைக்காட்சி ஒளிபரப்பாளர்களுக்கு குறிப்பிட்ட சேவை மட்டத்தினை வழங்குதல்
- அனுமதி பெற்ற தொலைக்காட்சி ஒளிபரப்பாளர்களது கோரிக்கைகளுக்கு வசதியளித்தல்.
- செயன்முறை பழுதுகள் (Down time) குறைந்த மட்டத்தில் உள்ளதை உறுதிப்படுத்துவதற்காக பிரதி செய்யப்பட்ட பரிமாற்ற (Backup transmission) வசதியைப் பேணுதல்.
- அகில இலங்கை ரீதியான உள்ளடக்கல் மற்றும் தேவையான நம்பகத்தன்மை, தொழிநுட்ப தரத்துடன் பரிமாற்று வலையமைப்பை ஒருங்கிணைத்து செயற்படுத்தல்.
- அனைத்து நிகழ்ச்சிகளுக்குமான 'இலத்திரனியல் நிகழ்ச்சி வழிகாட்டி' (Electronic Programme Guide-EPG) ஒன்றை பார்வையாளர்களுக்கு வழங்குதல்.
- பார்வையாளர் மற்றும் ஒலிபரப்பாளர்களுக்கான 24x7 உதவு தளம் ஒன்றை பேணுதல்.

### தொலைக்காட்சி ஒலிபரப்பாளர்களது கடமைகளும் பொறுப்புக்களும்

- உள்ளடக்கங்கள் MLR வரை டிஜிட்டல் வடிவில் கையளிக்கப்படல் வேண்டும்.
- EPG மற்றும் DBNO இற்கு தேவையான meta data வழங்குதல்.

### ஊடக அமைச்சு/அதிகார சபையின் கடமைகளும் பொறுப்புக்களும்

- தனிப்பட்ட சொந்த பரிமாற்றுத் தளங்களுக்கான தொலைக்காட்சி ஒளிபரப்பாளர் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதை நிறுத்துதல்.
- DBNO ஐ உருவாக்குதல்.
- செய்மதி மற்றும் கேபிள் வழங்குனர்களை டிஜிட்டல் மயப்படுத்தல் திட்டத்துடன் இணைந்ததாக செயற்படச் செய்தல்
- DBNO சேவைகளுக்கான செயன்முறை மற்றும் கட்டண ஒழுங்கமைத்தல்.
- தொலைக்காட்சி ஒளிபரப்பு நோக்கத்திற்காக ஒளிபரப்பு தர டிஜிட்டல் வீடியோ தயாரிப்பு உபகரணத்திற்கான ஒரு சீர் அனுமதி.

### TRCSL இன் கடமைகளும் பொறுப்புக்களும்

- ஆரம்ப கட்டமாக ஒவ்வொரு DBNO இற்கும் 03 அலைவரிசை சனல்களை ஒதுக்குதல்.
- தொலைத்தொடர்பாடல் சட்டத்தின் கீழ் DBNO இற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.
- பரிமாற்றம் சம்பந்தப்பட்ட உபகரணங்களுக்கான ஒருசீர் அனுமதி
- குறிப்பிட்ட திகதியிலோ அல்லது அதற்கு முன்போ தற்கால அனலொக் பரிமாற்றங்களின் புதிய விரிவாக்கங்களுக்கான அனுமதிகளை நிறுத்துதல்.
- டிஜிட்டல் மற்றும் கேபிள் வழங்குனர்களை டிஜிட்டல் மயப்படுத்தல் திட்டத்துடன் இணைந்ததாக செயற்படுத்தல்.
- அனர்த்த மீளல் (Disaster Recovery) வசதிகளை வழங்கும் போது DBNO களானது குறிப்பிடத்தக்க அளவு அடைவு மட்டங்களைப் பேணுகின்றன என்பதை உறுதிப்படுத்தல்.

## 6.5 ஊழியர்கள்

2011ம் ஆண்டில் ஸ்பெக்ட்றம் முகாமைத்துவ பிரிவானது தனக்குக் கையளிக்கப்பட்ட தொழிற்பாடுகளை தனக்கான 35 ஊழியர்களுடன் நிறைவேற்றியது. இவ்வூழியர் எண்ணிக்கையானது ஒரு பதில் பணிப்பாளர் (01), ஏழு (07) உதவிப்பணிப்பாளர்கள், இருபத்திரெண்டு (22) முகாமைத்துவ உதவியாளர் தர அலுவலர்கள் மற்றும் ஐந்து (05) ஆரம்ப மட்ட அலுவலர்களை உள்ளடக்கியது.

இலங்கை **DTTB** வேலைத் திட்டத்தின் பிரதான இலக்குகளும், நடைமுறையாக்கல் அட்டவணையும் - 24.08.2011 இல் நடைபெற்ற NRT இன் முதல் கூட்டத்தின்படியானது (அட்டவணை 6.7)

| அடையாளம் | செயற்பாடுகள் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|
| உத்தேசிக் கப்பட்ட மைல்கல் | முன்மொழியப்பட்ட இலக்குகள் 2011 இறுதி: வட மற்றும் மேல் மாகாணங்களில் DTTB ஆரம்பித்தல். (முதலாவது- வடமாகாணம் இரண்டாவது- மேல் மாகாணம்) | | | | | | | |
| | 2014 நடுப்பகுதி: அனைத்து இடங்களிலிருந்தும் DTTB | | | | | | | |
| | 2015 முடிவில்: மேல் மாகாணத்தில் அனலொக் முடிவுறுத்தல் | | | | | | | |
| | 2017 முடிவுறுத்தல் அனலொக் முடிவுறுத்தலைப் பூரணமாக்குதல் | | | | | | | |
| 1 | நிகழ்கால வலையமைப்பு செயற்பாட்டாளர்களிடமிருந்து Ch41, Ch43 என்பவற்றை வெளியேற்றல் | | ஆரம்பம்: 2011- 2ம் காலாண்டு முடிவு 2012- 2ம் காலாண்டு | | | | | |
| 2 | TRCஇனால் நடாத்தப்பட்ட DTTவலையமைப்பிற்கான அலைவரிசை திட்டமிடல் | | ஆரம்பம் 2011- 2ம் காலாண்டு முடிவு 2012- 2ம் காலாண்டு | | | | | |
| 3 | அதி முன்னுரிமை உள்ள 08 DTT பகுதிகளுக்கு (Sites) உட்கட்டுமான சாத்தியப்பாட்டுக் கற்கை ஆரம்பம் 2011- 2ம் காலாண்டு | | முடிவு : 2012- 1ம் காலாண்டு (TRC: வெகுசன மற்றும் தகவல் அமைச்சு) | | | | | |
| 4 | முன்மொழியப்பட்ட DBNO முறைமை அனுமதிப்பத்திரத்துடன் முன்னோக்கிச் செல்லல். | | வெகுசன, தகவல் அமைச்சின் அறிவுறுத்தலுக்காக எதிர்பார்த்திருக்கிறது. | | | | | |
| 5 | முதலாவது DBNO இற்கான முறைமைப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரம் வழங்கல். | | ஆரம்பம்: 2012- 1ம் காலாண்டு முடிவு : 2012- 2ம் காலாண்டு | | | | | |
| 6 | முறைமையாக்கல் உட்பட எட்டு DTT பகுதி (Sites) வடிவமைப்பு உபகரணங்கள் பொருத்துதல் முதலியவற்றை DBNO மேற்கொள்ளல். | | | | பூர்த்தியாவதற்கு 24 மாதங்கள் தேவைப்படுவதுடன் 2014 நடுப்பகுதி வரை எதிர்பாக்கப்படுகிறது. | | | |

# வலையமைப்புப் பிரிவு

அத்தியாயம் 7

வலையமைப்புப் பிரிவானது தொலைத்தொடர்பாடல் சட்டத்தின் படி ஆணைக்குழுவின் பொறுப்புக்களைப் பூர்த்தி செய்யும் வகையில் 2011 இல் பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொண்டது.

## 7.1 தொழிற்பாடுகள்

- தேசிய இலக்கமிடல் திட்டத்தை முகாமை செய்தல்.
- தொலைத்தொடர்பாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பாக தனிப்பட்டவர்களால் / நிறுவனங்களால் ஒப்படைக்கப்பட்ட செயற்றிட்ட முன்மொழிவுகளை அறிதலும் விதப்புரைகனை வழங்கி அறிக்கை சமர்ப்பித்தலும்.
- இலங்கை தொலைத்தொடர்பாடல் துறையின் தொழிநுட்பத் தரங்களை நிர்வகித்தலும், ITU தரப்படுத்தல் துறையின் தொழிநுட்பத் தரங்களை நிர்வகித்தலும், ITU தரப்படுத்தல் துறையின் வேலைகளை நடத்துதலும் (ITU – T மற்றும் WTSA)
- அரச மற்றும் பொதுக்கூட்டுத்தாபனங்களின் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுக்களில் (TEC) பங்கு பற்றலும், தொலைத்தொடர்பாடல் தொடர்பான தொழிநுட்ப உள்ளீடுகளை வழங்குதலும்

- வலையமைப்பிற்கு இணைப்பதற்கான வலையமைப்பு உபகரணங்கள், (Terminals) ஆகியவற்றிற்கு அனுமதி வழங்கல் நடவடிக்கையை மேற்கொள்ளலும், சுங்கத்தீர்வை நோக்கங்களுக்காக விதப்புரைகளை வழங்கலும்
- இயக்குநர்களுக்கான (Operators) சமிக்ஞைக்கமைய ஒழுங்குகளைத் திட்டமிடலும் நிர்வகித்தலும்
- விற்பனையாளர் அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பங்களை செயன்முறைப்படுத்தலும், (2.7.1.3 ஐப் பார்க்க) விற்பனையாளர் அனுமதி முறைமையை முகாமை செய்தலும்
- அனுமதி பெற்ற செயற்பாட்டாளர்களது உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களின் நடைமுறையாக்கத்திற்கு வசதியளித்தல்
- பொதுமக்கள் சட்டப்பாதுகாப்பு தொடர்பான குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளுக்கு உதவுதல்.
- அமைந்தொழுகல் (Compliance) தொடர்பான உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் குறித்து அனுமதி பெற்ற இயக்குநர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.
- அமெச்சூர் வானொலி இயக்குநர் (ARO) பரீட்சையை பரீட்சைகள் திணைக்களத்துடன் இணைந்து நடாத்துதல்.

## 7.2 செயலாற்றல்

2011ம் வருடத்தின் போது, வலையமைப்புப் பிரிவானது கையளிக்கப்பட்ட ஒழுங்குபடுத்தற் தொழிற்பாடுகளையும் (விற்பனையாளர் அனுமதிப்பத்திரம் வழங்குதல், தொலைத்தொடர்பாடல் அனுமதிப்பத்திரம் தொடர்பான கொள்கைகள் மற்றும் ஒழுங்கு விதிகளை உருவாக்கல் மற்றும் பிற), இவற்றோடு கோபுரங்களை அமைத்தல், பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகள், கண்காட்சிகள் என்பனவற்றையும். தொடர்ந்தும் மேற்கொண்டது

வலையமைப்புப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான புள்ளி விபரம் அட்டணை 7.1 இல் தரப்படுகிறது.

### 7.2.1 விற்பனையாளர் அனுமதிப்பத்திரம் வழங்கல்

தொலைத்தொடர்பு உபகரணங்களின் விற்பனைக்கான விற்பனையாளர்

**வலையமைப்புப் பிரிவு தொடர்பான புள்ளி விபரம் 2010-2011** (அட்டவணை 7.1)

| விபரம் | 2010 | 2011 |
|---|---|---|
| வழங்கப்பட்ட மொத்த விற்பனையாளர் அனுமதிப்பத்திரங்கள் | 487 | 875 |
| அமைக்கப்பட்ட கோபுரங்களின் கூட்டுமொத்த எண்ணிக்கை | 4067 | 5083 |
| கோபுரங்கள் தொடர்பாக பெறப்பட்ட முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை | 149 | 203 |
| நடாத்தப்பட்ட விசாரணைகளின் மொத்த எண்ணிக்கை (கோபுரம் தொடர்பானது) | 78 | 69 |
| கோபுரங்கள் தொடர்பான நீதிமன்ற வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | 17 | 3 |
| கோபுரங்கள் தொடர்பாக தீர்க்கப்பட்ட பொதுமக்கள் முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை | 10 | 147 |
| நடாத்தப்பட்ட பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் மொத்த எண்ணிக்கை | 17 | 16 |
| வழங்கப்பட்ட புதிய வகை அனுமதிகளின் மொத்த எண்ணிக்கை | 28 | 66 |
| வழங்கப்பட்ட இறக்குமதி அனுமதிகளின் மொத்த எண்ணிக்கை | 3217 | 3654 |
| தனிப்பட்ட அனுமதிகளின் மொத்த எண்ணிக்கை | 88 | 201 |
| ARO பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளின் மொத்த எண்ணிக்கை | 50 | 20 |
| புதிதாக வழங்கப்பட்ட Short code களின் கூட்டு மொத்த எண்ணிக்கை | 22 | 26 |
| இடம்பெற்ற ஏனைய கண்காட்சிகள் | 04 | 03 |

அனுமதிப்பத்திரமானது தொலைத்தொடர்பு சட்டப் பிரிவு 21(1) இன் கீழ் வழங்கப்பட்டது (2.7.1.3 ஐப் பார்க்க). அத்தோடு பொது மக்களுக்கும் இது தொடர்பில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. இதனால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 80% ஆல் அதிகரித்து 2011 இல் 875 ஆகக் காணப்பட்டது.

### 7.2.2 தொலைத்தொடர்புக் கோபுரங்களை அமைத்தல்

அமைக்கப்பட்ட தொலைத்தொடர்பு கோபுரங்களின் எண்ணிக்கையானது 2011 இல் 5083 ஆக அதிகரித்ததுடன் இது 2010 இல் காணப்பட்ட கோபுரங்களின் எண்ணிக்கையை விட 25% அதிகரிப்பைக் காட்டியது. இது பிராந்திய உள்ளடக்கலை அதிகரித்ததுடன் சேவையின் சிறந்த தரத்தையும் அதிகரித்துள்ளது. கோபுரங்களைப் பகிர்தல் என்கிற கொள்கையின் கீழ் TRCSL ஆனது புதிய கோபுரங்கள் அமைப்பதைக் குறைத்தலில் சிரத்தை எடுத்துள்ளது. கோபுரங்களை அமைப்பது தொடர்பில் 2011 இல் இரண்டு முக்கியமான நிகழ்வுகள் இடம்பெற்றன. அவையாவன: கொக்காவில் பன்முகத் தொழிற்பாட்டு (Multi Functional) கோபுரம் மற்றும், ஒலிபரப்பு நிலைய திறப்பு நிகழ்வு, கொழும்பில் இன்னுமொரு பன்முகத் தொழிற்பாட்டு தொலைத்தொடர்பு கோபுரம், பொழுதுபோக்கு மையம் ஆகியன அமைப்பதற்கான அமைச்சரவையின் அனுமதி.

#### 7.2.2.1 கொக்காவில் பன்முகத் தொழிற்பாடு கோபுரமும் ஒலிபரப்பு நிலையமும்

கொக்காவில் பன்முகத் தொழிற்பாட்டு தொடர்பாடல் ஒலிபரப்பு நிலையமானது 06 ஜுன் 2011 இல் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கொக்காவில் கோபுரமானது 174 மீற்றர் உயரம் கொண்ட இலங்கையின் மிகப் பெரியதும் உயரமானதுமான தொடர்பாடல் பரிமாற்றக் கோபுரமுமாகும். இது அரசின் வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 310 மில்லியன் செலவில் புல வசதிகளை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டது. தெற்காசியாவில் மிக உயரமான தனித்து நிற்கும் பரிமாற்றக் கோபுரமாக நிபுணர்களால் இனங்காணப்பட்டுள்ளது. தொலைத்தொடர்புகள், தொலைக்காட்சி, வானொலி மற்றும் அரச நிறுவன வசதிகள் என்பவற்றினை நிறுவ இக் கோபுரமானது பயன்படுத்தப்படும். இப்



கொக்காவில் கோபுர திறப்பு விழா

பன்முகத் தொழிற்பாட்டு தொடர்பாடல் பரிமாற்றக் கோபுரமானது, தொலைத்தொடர்பாடல், தொலைக்காட்சி, வானொலி மற்றும் இலங்கை வடபகுதி சமூகங்களைப் பாதிக்கின்ற தொடர்பாடல் சேவைகள் தொடர்பான பிரச்சினைகளை அகற்ற உதவி செய்யும். இது வட மாகாணத்தில் உயர்தர, தெளிவான தொலைக்காட்சி, வானொலி மற்றும் தொலைத்தொடர்பாடல் உள்ளடக்கலிற்கு உதவி செய்யும். மேலும் குறிப்பிட்ட பிரதேசத்தில் சம்பந்தப்பட்ட தொலைத்தொடர்புகளை விரிவாக்கம் செய்வதற்கான போதுமான இடத்தையும் வசதிகளையும் இக்கோபுரம் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 7.2.2.2 கொழும்பு லோட்டஸ் கோபுரம்

இலங்கை தொலைத்தொடர்பாடல் ஒழுங்கமைத்தல் ஆணைக்குழுவானது பன்முகத் தொழிற்பாட்டு தொலைத்தொடர்பாடல் கோபுரம் மற்றும் பொழுதுபோக்கு மையம் ஒன்றை கொழும்பின் பேரவாவி நீர்ப்பரப்பில் அமைப்பதற்கான திட்டமிடலை மேற்கொண்டது. மேலும் இது கொழும்பு 'லோட்டஸ்' கோபுரம் என பெயரிடப்பட்டுள்ளது. இக்கோபுரமானது இலத்திரனியல் ஊடகம், தொலைத்தொடர்பாடல் சேவைகள் மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படவுள்ளது. இது ஆகக் குறைந்தது 50 FM சனல்கள் மற்றும் ஒளிபரப்புச் சேவைகளை வழங்கக் கூடியதாக அமையும்; அத்துடன் 10 சேவை வழங்குனர்களுக்கு வசதிகளை வழங்குவதுடன் மறைமுகமான பசுமையான சூழல் மற்றும் கொழும்பு நகரத்தில் பல்வேறு கட்டடங்களில் நிறுவப்பட்டுள்ள கணக்கற்ற உயர் சக்தி தொலைக்காட்சி FM அன்டனாக்களை அகற்றுதல் என்பவற்றுக்கும் உதவும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செயற்றிட்ட கிரயம் அமெ. டொலர் 104.3 மில்லியன் ஆகும்.

### 7.2.2.3 கோபுரம் அமைத்தல் தொடர்பான பிரச்சினைகளும் சிக்கல்களும்

டெலிகொம் கோபுரத்திற்கான அனுமதி பெறும் செயன்முறையின் போது இயக்குநர்கள் உள்ளூர் அதிகார சபையிடமிருந்து கட்டுமான அனுமதியைப் பெற வேண்டியுள்ளது. இவை வெவ்வேறு உள்ளூராட்சி அதிகார சபைகளிடமிருந்து வெவ்வேறு கட்டண அடிப்படையில் எழுந்தமானமாக அமைவதுடன் பெறுமதியும் மிக உயர்வாகவே காணப்படுகின்றது. இது தொலைத்தொடர்பாடல் விருத்தியில் பிரச்சினைகளுக்குக் காரணமாகின்றது. உள்ளூராட்சி சபை அனுமதி பெறுவதில் காணப்படும் மிகைப்படுத்திய தாமதமானது செயற்றிட்ட நடைமுறையாக்கல் தாமதத்திற்கும் வழிவகுக்கின்றது. கோபுரங்கள் காணப்படுவதால் மின்னல் தாக்கங்கள் அதிகரிக்கும் என்கிற அச்சம் மக்களது பொதுவான கருத்தாகக் காணப்படுகின்றது. இச்சிக்கலை சுமுகமாகத் தீர்ப்பதற்காக, வலையமைப்புப் பிரிவானது துறைசார் விற்பன்னர்களின் உதவியுடன் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்தல் வேண்டும்.

### 7.2.3 உட்கட்டமைப்பு அபிவிருத்தி முறைப்பாடுகளைக் கையாளுதல்

தொலைத்தொடர்பு கோபுரங்களை அமைத்தல் செயற்பாடு அதிகரித்துச் செல்லப்படுகிற அதேவேளை இச்செயற்பாடுகளுக்கு எதிரான முறைப்பாடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது. பல்வேறு காரணங்களுக்காக கோபுரம் அமைத்தல் தொடர்பாக பொதுமக்கள் முறைப்பாடுகளைச் செய்கின்றனர். மேலும் வலையமைப்புப் பிரிவானது இவை தொடர்பாக 2011 இல் 69 விசாரணைகளை நடாத்தியுள்ளது. 2010 உடன் ஒப்பிடுகையில தொலைத்தொடர்பாடல் கோபுரங்கள் தொடர்பான நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கையானது 2011 இல் குறைவடைந்து காணப்படுகிறது. 2011 இல் அதிகளவிலான கோபுரம் மக்கள் (147) தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

### 7.2.4 பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சி

சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட காலப்பகுதியில் வலையமைப்புப் பிரிவானது தொலைத்தொடர்பாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் தொலைத்தொடர்பாடல் உபகரணங்களின் விற்பனையின் போதான சட்டத்தேவைப்பாடுகள் மீதான 16 பொது மக்கள் விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்தியுள்ளது. இந்நிகழ்ச்சிகளின் நோக்கங்களானவை பொதுமக்களின் கருத்துக்களை கவனத்திலெடுப்பதும், தொலைத்தொடர்பாடல் கோபுரங்கள் அமைத்தல் தொடர்பான தேசிய, சர்வதேச தரங்கள் மற்றும் சட்ட விரோதமாக தொலைத்தொடர்பாடல் உபகரணங்களை விற்பதன் விளைவுகள் பற்றிய அறிவை பொதுமக்களுக்கு வழங்குதலும் ஆகும். ஏற்கனவே கூறப்பட்டதைப் போன்று விழிப்புணர்வு நிகழ்வுகளானவை 2011 இல் விற்பனையாளர் அனுமதிப்பத்திரத்தின் எண்ணிக்கையை அதிகரித்தலில் பங்குவகித்துள்ளது.

### 7.2.5 வகை அனுமதி (Type approval) யும் இறக்குமதி அனுமதியும் வழங்கல்

தொலைத்தொடர்பாடல் சட்டத்தின் பிரிவு 5(q) ஏற்பாடுகளின் படி காட்சி (terminal) உபகரணங்களுக்கு ஆணைக்குழுவிடமிருந்து வகை அனுமதி அவசியமாகும். அதன்படி, தொலைபேசி உபகரணங்கள், ∴பெக்ஸ் இயந்திரங்கள், PABX (தனியார் தன்னியக்க கிளை பரிமாற்றம்), மொடம், கம்பியற்ற தொலைபேசிகள் மற்றும் அனுமதி பெற்ற வலையமைப்பில் பொறுத்தப்பட வேண்டிய வாடிக்கையாளர் இருப்பிடக் கருவிகள் என்பனவற்றுக்கு வகை அனுமதி தேவையாகும். 2011ம் ஆண்டில் அறுபத்தாறு (66) புதிய வகை அனுமதிகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருந்தன. அட்டவணை 7.1 இன் மூலம் இலங்கைக்கு தொலைத்தொடர்பாடல் உபகரண இறக்குமதிக்கான அனுமதி மற்றும் தனிப்பட்ட அனுமதி என்பவற்றில் எண்ணிக்கை ரீதியான அதிகரிப்பு உள்ளதைக் காணமுடியும்.

### 7.2.6 அமெச்சூர் வானொலி இயக்குனர் (ARO) பரீட்சை

TRCSL ஆனது அமெச்சூர் வானொலி இயக்குநர் பரீட்சைக்காக விண்ணப்பங்களைக் கோரி இலங்கை பரீட்சை திணைக்களத்தின் உதவியுடன் பரீட்சையை நடாத்தியது. 2011 இல் 20 விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றினர்.

### 7.2.7 குறுகிய முறைமையினை (Short codes) ஒதுக்குதல்

பொதுமக்கள் தம் சேவைகளை இலகுவாகப் பெறும் பொருட்டு தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் குறுகிய முறைமையை ஒதுக்குதல் மீதான கோரிக்கைகளை மேற்கொள்கின்றன. இவ்வகை கோரிக்கைகள் பெறப்படும் போது, இப்பிரிவானது சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து செயற்றிட்ட முன்மொழிவுகளைப் பெற்று, அருமையான வளங்களின் ஒதுக்கீட்டில் அதி உச்ச கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதனால் முன்மொழிவுகளின் விபரங்கள் ஆய்ந்தறியப்படுகின்றன. இவற்றின் முடிவில் பிரிவானது குறிப்பிட்ட கோரிக்கை தொடர்பான விதப்புரைகளை ஆணைக்குழுவிற்கு வழங்குகின்றது. 2011 வரை ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த குறுகிய முறைமைகளின் எண்ணிக்கை 26 ஆக இருந்தது.

### 7.2.8 அன்டனா கட்டமைப்பு நிர்மாணம் தொடர்பான தேசிய கொள்கையும் அமைத்தல் மற்றும் பேணுதலுக்கான வழிகாட்டல்களை விருத்தி செய்தலும்

தொலைத்தொடர்பாடல் சேவைகள் அபிவிருத்தியை முறையற்ற விதத்தில் தடை செய்யாமலும் அதே வேளை சூழல் மற்றும் பொதுமக்கள் மீதான கவனம் என்பவற்றைப் பாதுகாக்கும் நோக்கிலும் இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. TRCSL தனது அன்டனா அமைப்புத் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும் மற்றும் அன்டனா அமைப்புக்களை நிர்மாணித்தல், பேணுதல் தொடர்பான கொள்கை வழிமுறைகளின் வரைவினை மேற்கொள்வதற்காகவும் தொழிநுட்ப ஆலோசனைக்

குழுவொன்றை நியமித்துள்ளது. இக் கொள்கை வழிமுறைகளானது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வழிமுறைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் பின்பற்றும் போது கோபுரம் அமைத்தல் மற்றும் அதனைப் பேணுதல் தொடர்பான பிரச்சினைகள் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 7.2.9 சட்ட விரோதமான வழங்குனர்கள் குறித்த விசாரணை

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல தொலைத்தொடர்பாடல் உபகரணங்கள் விற்பனைக்கு TRCSL இன் அனுமதியைப் பெறல் அவசியமானதாகும். கைத்தொலைபேசி உள்ளடங்கலாக தொலைத்தொடர்பாடல் உபகரணங்கள் விற்பனை நிலையங்களை சட்டரீதியாக நிர்மாணிப்பதை கட்டாயப்படுத்தும் அல்லது ஊக்குவிக்கும் வகையில் வலையமைப்புப் பிரிவானது இலங்கை பொலிசுடன் இணைந்து பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்வுகளையும், சட்டவிரோதமான விற்பனையாளர்கள் மீதான விசாரணைகளையும் தொடர்ந்து மேற்கொண்டது.

### 7.2.10 சட்ட விரோதமான கேபிள் தொலைக்காட்சி சேவை செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல்

சட்டத்தின் பிரிவு 22(A) (1) இன் படி, ஆணைக்குழுவின் அதிகாரத்தின் கீழ் குறிப்பிட்ட நோக்கத்திற்கான அனுமதி வழங்கப்பட்டாலன்றி எந்த ஒரு நபரும் எந்த ஒரு இடத்திலும் கேபிள் அமைத்தல் தொடர்பான வேலைகளை மேற்கொள்ள முடியாது. 2011 இல் வலையமைப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உதவியுடன் நாடளாவிய வகையில் சட்ட விரோதக் கேபிள் தொலைக்காட்சி சேவைகளைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டது.

## 7.3. ஊழியர்கள்

2011 ஆம் ஆண்டில் வலையமைப்புப் பிரிவானது தனக்குக் கையளிக்கப்பட்ட தொழிற்பாடுகளை தனக்கான இருபத்துநான்கு (24) உறுப்பினர்களைக் கொண்டு நிறைவேற்றியது. இவ்வெண்ணிக்கையானது ஒரு பதில் பணிப்பாளர் (01), மூன்று உதவிப்பணிப்பாளர்கள் (03), பதினெட்டு முகாமைத்துவ உதவியாளர் தர அலுவலர்கள் மற்றும் (02) இரண்டு ஆரம்ப மட்டம்-1 அலுவலர்களை உள்ளடக்கியது.

# அனுமதிப்பத்திர நிர்வாகப் பிரிவு

அத்தியாயம் 8

தொலைத்தொடர்புகள் அதிகாரச் சட்டத்தின்படி ஆணைக்குழுவின் கடப்பாடுகளை நிறைவேற்றும் முகமாக அனுமதிப்பத்திர நிர்வாகப் பிரிவானது 2011ல் பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொண்டது.

## 8.1. தொழிற்பாடுகள்

- தொலைத்தொடர்பு முறைமை அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான செயற்பாடுகளின் முகாமைத்துவமும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளின் நடைமுறைப்படுத்துதலும்.
- விண்ணப்பங்களையும், முதலீட்டாளர்களின் வியாபாரத் திட்டங்களையும், தொழில்நுட்ப நோக்கில் மதிப்பீடு செய்தலும், தொடர்பான பொருளாதார, சட்ட, நுகர்வோர் விடயங்களை ஒருங்கிணைத்தலும்.
- அனுமதிப்பத்திரக்காரர்கள் அனுமதிப்பத்திர நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ரீதியாக இணங்கியொழுகுதலை உறுதி செய்தல்.
- தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குவதற்கான புதிய விண்ணப்பங்கள் தொடர்பாக ஒழுங்குளையும், நடைமுறைகளையும் பேணுதலும் நடைமுறைப்படுத்துதலும்.

- தொலைத்தொடர்பு செயற்பாடுகள், கொள்கைகள், ஒழுங்கு விதிகள் என்பவை பற்றி TRCSL இன் ஏனைய பிரிவுகளுடன் இணைந்து நடத்தல்.

- உள்ளிணைப்பும் அடைகையும், வலையமைப்பு மற்றும் உலகளாவிய சேவைக் கடமைப்பாடுகளை உள்ளடக்கிய (ஆனால் அவற்றை மட்டுமல்லாத) சந்தை அபிவிருத்தி பொருளாதார ஒழுங்குபடுத்தல் பிணக்குத் தீர்த்தல் தொடர்பான பிரச்சினைகளின் முகாமைத்துவம்.

- ஒழுங்குபடுத்தல் Domain பகுப்பாய்வு தொடர்பாக TRCSL இன் ஏனைய பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்குதலும் சிறந்த ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தவும் ஒழுங்குபடுத்தல் அறிக்கைகளை மீளாய்வு செய்யவும் தொடர்பான உள்ளீடுகளை வழங்குதலும்

- தொழில்நுட்ப, ஒழுங்குபடுத்தல், கொள்கை விடயங்களின் அபிப்பிராயங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வதில் உதவுவதற்காக ஏனைய பிரிவுகளுடன் நல்ல தொடர்புகளை ஏற்படுத்துதலும் பேணுதலும்.

- ஏனைய தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துதல் நிறுவனங்களின் தொலைத்தொடர்பு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) ஒழுங்கு விதிகளினதும் கொள்கைகளினதும் போக்குகளை பகுப்பாய்வு செய்தலும், ஆணைக்குழுவின் அவதானத்தை வேண்டி நிற்கும் ஒழுங்குபடுத்தல் மற்றும் கொள்கை பிரச்சினைகளை அடையாளம் காணுதலும் ஆணைக் குழுவிற்கு பொருத்தமான விதந்துரைகளை வழங்குதலும்.

- தொழில்நுட்ப, ஒழுங்குபடுத்தல் மற்றும் கொள்கை விடயங்களில் நோக்குகளையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வதில் உதவுதற்காக ஏனைய பிரிவுகளுடன் சுமுகமான தொடர்புகளை ஏற்படுத்தலும் பேணலும் ஏனைய தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களிலுள்ள தொலைத்தொடர்பு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) ஒழுங்கு விதிகள், கொள்கைகள் என்பவற்றின் போக்குகளைப் பகுப்பாய்வு செய்தலும் ஆணைக்குழுவின் கவனத்தை ஈர்க்க வேண்டிய ஒழுங்குபடுத்தல் மற்றும் கொள்கை பிரச்சினைகளை அடையாளம் காணலும், அது தொடர்பான பொருத்தமான விதந்துரைகளை ஆணைக்குழுவுக்கு வழங்கலும்.

## 8.2. செயலாற்றல்

### 8.2.1. அனுமதிப் பத்திரங்களின் மாற்றம் / புதுப்பித்தல்

தமது அனுமதிப்பத்திரங்களின் மாற்றம் / புதுப்பித்தல் தொடர்பான வேண்டுகோள்களை இயக்குநர்களிடமிருந்து ஆணைக்குழு பெறும் போது அந்த வேண்டுகோள்களை அனுமதிப்பத்திர நிர்வாகப் பிரிவு செயன்முறைப்படுத்தி ஆணைக்குழுவுக்கு பொருத்தமான விதந்துரைகளை வழங்குகின்றது. அத்தகைய வேண்டுகோள்கள் தொடர்பான ஆணைக்குழுவின் தகவுரைகளை பத்திரிகை அறிவித்தல் மூலமாக பொதுமக்கள் அறியச் செய்யவும் பொது மக்களிடமிருந்து கருத்துக்களை / ஆட்சேபனைகளை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அத்தகைய கருத்துக்களை / ஆட்சேபனைகளை கருத்திலெடுத்த பின்னர் ஆணைக்குழுவானது அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு அனுமதிக்காக தனது விதந்துரைகளைச் சமர்ப்பிக்கின்றது.

#### 8.2.1.1. அனுமதிப் பத்திரங்களின் மாற்றம்

2011 ஆம் ஆண்டில் ஆணைக்குழு சட்டத்தின் 18 ஆம் பிரிவின்படி தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் படி பின்வரும் தரப்பினருக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்வதற்கான முன்மொழிவுகள் தொடர்பான கருத்துக்களை அல்லது ஆட்சேபனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக பொது

அறிவித்தல்களை மேற்கொண்டது. ஆணைக் குழுவின் உத்தியோகப்பூர்வ இணையத்தளமான www. trc.gov.lk என்பதில் உத்தேச அனுமதிப்பத்திர மாற்றத்தின் வரைவு கிடைக்கத்தக்கதாக உள்ளது என பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அத்தகைய கருத்துக்களும் ஆட்சேபனைகளும் 10.1.2012 இற்குப் பிந்தாமல் தெரிவிக்கப்பட வேண்டும் எனவும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

### (i) வரையறுக்கப்பட்ட Dialog Axiata

தொலைந்த அல்லது களவாடப்பட்ட செல்லிடத் தொலைபேசிகள் பிற செல்லிட வலைப் பின்னல்களில் தொடர்புபடுத்தப்படாமையை உறுதிப்படுத்தும் முகமாக அத்தகைய தொலைந்த அல்லது களவாடப்பட்ட செல்லிடத் தொலைபேசிகளின் தகவல்களை ஏனைய இயக்குநர்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு வரையறுக்கப்பட்ட Dialog Axiata கேட்டுக் கொள்ளப்படும் என்பதே மாற்றத்தின் பயனாகும்.

### (ii) வரையறுக்கப்பட்ட Etisalat Lanka (தனியார்)

வலையமைப்பு நெருக்கடியைக் குறைத்தல் மூலம் சேவையின் தரத்தைக் குறிப்பிடத்தக்க அளவு மேம்படுத்தும் முகமாக ஹோட்டல்கள், கடைத் தொகுதிகள் போன்ற சனநெருக்கடி மிகுந்த இடங்களில் Wireless Fidelity (Wi-Fi) ஐ உபயோகித்து இடம்பெயர் இணையச் சேவையை வழங்குவதற்கான இயக்குநரின் வேண்டுகோளை அனுமதிப்பதே மாற்றத்தின் பயனாகும்.

### (iii) Hutchison Telecommunications Lanka (pvt.) Ltd

தொலைந்த அல்லது களவாடப்பட்ட செல்லிடத் தொலைபேசிகள் பிற செல்லிட வலைப்பின்னல்களில் தொடர்புபடுத்தப்படாமையை உறுதிப்படுத்தும் முகமாக அத்தகைய தொலைந்த அல்லது களவாடப்பட்ட செல்லிடத் தொலைபேசிகளின் தகவல்களை ஏனைய இயக்குநர்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு வரையறுக்கப்பட்ட Hutchison Telecommunications Lanka கேட்டுக் கொள்ளப்படும் என்பதே மாற்றத்தின் பயனாகும்.

### (iv) வரையறுக்கப்பட்ட மொபிட்டல் (தனியார்)

வலையமைப்பு நெருக்கடியைக் குறைத்தல் மூலம் சேவையின் தரத்தைக் குறிப்பிடத்தக்க அளவு மேம்படுத்தும் முகமாக ஹோட்டல்கள், கடைத் தொகுதிகள் போன்ற சன நெருக்கடி மிகுந்த இடங்களில் Wireless குனைநடவைல (Wi – Fi) ஐ உபயோகித்து இடம்பெயர் இணையச்சேவையை வழங்குவதற்கான இயக்குனரின் வேண்டுகோளை அனுமதிப்பதே மாற்றத்தின் பயனாகும். தொலைந்த அல்லது களவாடப்பட்ட செல்லிடத் தொலைபேசிகள் பிற செல்லிட வலைப்பின்னல்களில் தொடர்புபடுத்தப்படாமையை உறுதிப்படுத்தும் முகமாக அத்தகைய தொலைந்த அல்லது களவாடப்பட்ட செல்லிடத் தொலைபேசிகளின் தகவல்களை ஏனைய இயக்குநர்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு வரையறுக்கப்பட்ட மொபிற்றல் (தனியார்) கேட்டுக் கொள்ளப்படும் என்பதே மாற்றத்தின் பயனாகும்.

### 8.2.1.2 அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பித்தல்

வரையறுக்கப்பட்ட லங்கா தொடர்பாடல் சேவைகள் (தனியார்) நிறுவனமானது இலங்கையின் தரவு தொடர்பாடல் சேவையை வழங்குவதற்கான ஒரு தொலைத்தொடர்புகள் முறைமையை செயற்படுத்த 1991 இன் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் அதிகாரச் சட்டத்தின் 17(2) ஆம் பிரிவின் கீழ் 4.7.1991 இல் அமைச்சரால் வழங்கப்பட்ட தனது அனுமதிப்பத்திரத்தின் புதுப்பித்தலுக்காக விண்ணப்பித்திருந்தது.

லங்கா தொடர்பாடல் சேவைகள் (தனியார்) நிறுவனத்திற்கு 4.7.2011 இல் இருந்து பத்து வருட காலப் பகுதிக்கு ஓர் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு விதந்துரை செய்வதற்கு ஆணைக்குழு உத்தேசித்துள்ளதாக பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

10.3.2006 திகதியிட்ட 1435/20 இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்தலுக்கான வழிகாட்டிகள் மற்றும் நடைமுறைகளில் உள்ள தேவைப்பாடுகளை வரையறுக்கப்பட்ட இலங்கை தொடர்பாடல் சேவைகள் (தனியார்) நிறுவனம் பூர்த்தி செய்துள்ளதென ஆணைக்குழு திருப்திப்பட்டது. உத்தேச அனுமதிப்பத்திரத்தின் ஓர் வரைவு ஆணைகுழுவின் உத்தியோகப் பூர்வ இணையத்தளமான www.trc.gov.lk இல் உள்ளதெனவும் பொது மக்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும், வரையறுக்கப்பட்ட லங்கா தொடர்பாடல் சேவைகள் (தனியார்) நிறுவனத்திற்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் குறித்த கருத்துக்களை அல்லது ஆட்சேபனைகளை 10.1.2012 இற்குப் பிந்தாமல் மேற்கொள்ளலாம் எனவும் பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

### 8.2.2 அடுத்த தலைமுறை வலையமைப்பு (NGN) கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் சட்டகம்

அடுத்த தலைமுறை வலையமைப்பு தொழில்நுட்பமானது எல்லாவகையான சேவைகளுக்கும் துணை செய்யக்கூடிய தனித்த அளவிடத்தக்க அடிப்படை வலையமைப்பால் (Core-NGN) ஓர் இயக்குநரால் நடத்தப்படும் சகல வழமையான அடிப்படை வலையமைப்புகளையும் மாற்றீடு செய்தலை இயலுமானதாக்குகின்றது. ஒரு தனித்த செயற்பாட்டுக் குழுவே முழுமையான வலையமைப்பை செயற்படுத்தவும், பராமரிக்கவும் இயலுமாயிருக்கும் என்பதால் அடிப்படை NGN இன் அமுலாக்கலுடன் இயக்குநர் தனது செயற்பாட்டுச் செலவினத்தை (Opex) குறிப்பிடத்தக்களவு குறைக்க இயலுமாயிருக்கும். அத்துடன், இணைய நடைமுறையை (Internet Protocol) அடிப்படையாகக் கொண்ட ஒரு தனித்த தொழிநுட்பத்தையே NGN பயன்படுத்துவதால், பாரிய அளவீட்டுச் சிக்கனத்திற்கு வழியமைத்து அதன் மூலம் இயக்குநரின் மூலதனச் செலவுகளை (Capex) குறைக்கக் கூடியவாறு வலையமைப்பிலுள்ள சகல உபகரணங்களும் ஒரே மாதிரியானவையாக இருக்கும். TRCSL தனது அறிவுசார் அடித்தளத்தையும் அமுலாக்கல் திறனையும் அபிவிருத்தி செய்வதற்காக தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) துறையில் ஒழுங்குபடுத்தல் சீராக்கத்தின் இரண்டாம் தலைமுறையை வடிவமைக்கவும், அமுல்நடத்தவும் செய்யக்கூடியவாறு நிறுவக அபிவிருத்தி நிதியத்திலிருந்து (IDF) ஒரு மானியத்தைப் பெற்றுக் கொண்டது. அதன்படி, TRCSL அடுத்த தலைமுறை வலையமைப்புகளுக்கான ஒரு கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் சட்டகத்தை அமைப்பதற்கான நடவடிக்கையை ஆரம்பித்தது. இந்நோக்கத்திற்காக கொள்வனவு நடைமுறையை பின்பற்றி ஓர் ஆலோசகரின் சேவைகள் பெறப்பட்டன. ஆலோசனைச் சேவையின் முழுமையான நோக்கமாவது, அடுத்த தலைமுறை வலையமைப்பிலும், பிற புதிய ஒப்பிடத்தக்க தொழில்நுட்பங்களிலும் திறமையாக முதலீடுகளுக்குத் துணை செய்தல். நுகர்வோர் நலன்களைப் பாதுகாக்கும் அதே போதில் உட்கட்டமைப்பு, மற்றும் சேவை வழங்குநர்களிடையே பயனுறுதிவாய்ந்த போட்டித் தன்மையைப் பேணுதல் என்பனவற்றுக்காக ஒரு கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் சட்டகத்தை அமைத்தலாகும். விசேடமாக, பின்வருவனவற்றை நிறைவேற்றுமாறு ஆலோசகர் கேட்கப்பட்டார்:

1. சர்வதேச நல்நடைமுறைகள், அனுபவங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஆனால் இலங்கையின் சூழலை மையமாகக் கொண்ட ஓர் அடுத்த தலைமுறை வலையமைப்பிற்கான கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் சட்டகத்தினை தயாரித்தல்.

2. ஓர் ஆலோசனைப் பத்திரம், வரைவு மற்றும் இறுதி விதந்துரைகள், இறுதி அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய ஆவணங்களைத் தயாரித்தல்.

3. இந்த ஆவணங்களின் முன்னேற்றத்தைத் தெரிவிப்பதற்காக சகல அக்கறையுள்ளோருடனும் ஒரு விரிவான ஆலோசனைச் செயன்முறையைப் பயன்படுத்துதல்.

4. அடுத்த தலைமுறை வலையமைப்பிற்கான கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் சட்டகத்தினை வடிவமைத்தல் எனும் இலக்கினை நோக்கி நகர்வதில் TRCSL இற்கு உதவுவதற்காக காட்சியளிப்புகளையும் ஏனைய தொடர்பான ஆவணப்படுத்தல்களையும் மேற்கொள்ளல்.

இணைய நடைமுறையை (Internet Protocol – IP) அடிப்படையாகக் கொண்ட அடிப்படை வலையமைப்புகள் மற்றும் அடுத்த தலைமுறை வலையமைப்புகளுடனான (NGN) அவற்றினது இடைத் தொடர்புகள் என்பவை தொடர்பான பிரச்சினைகளையும், NGN களுடன் இறுதிப் பயன்பாட்டாளர்களை இணைக்கும் IP அடிப்படையிலான அடுத்த தலைமுறை அடைகை வலையமைப்புகள் தொடர்பான பிரச்சினைகளையும் குறித்து கருத்திலெடுக்கும்படி ஆலோசகர் மேலும் கேட்கப்பட்டார்.

ஆலோசனை ஆவணம் பூர்த்தி செய்யப்பட்டு இலங்கையிலுள்ள சகல முக்கிய தொலைத்தொடர்புகள் அக்கறையுள்ளோருக்கும் "அடுத்த தலைமுறை வலையமைப்பிற்கான (NGNs) கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் சட்டகம்" மீதான ஓர் ஆலோசனைப்பத்திரம் 2010 செப்ரம்பரில் வழங்கப்பட்டது. ஆலோசனையின் நோக்கங்கள் நான்கு வகைப்பட்டன.

- NGN களுக்கும் அவ்வலையமைப்புகளைப் பயன்படுத்தி வழங்கக் கூடிய சேவைகளுக்குமான ஓர் அறிமுகத்தை வழங்குதல்.

  இலங்கையில் NGN களையும் அவை தொடர்பான சேவைகளையும் அறிமுகப்படுத்துவதிலுள்ள எதிர்கால நன்மைகளை விளக்குதல்.

- NGN இற்கு மாறுவதிலும் அதனைக் கடைப்பிடிப்பதிலும் எதிர்கொள்ள வேண்டிய பிரதான தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் ஒழுங்குபடுத்தல் பிரச்சினைகளுக்கான சில அணுகு வழிகளை வழங்குதலும், அதே போதில் இலங்கை வாடிக்கையாளர்களின் நலன்களைப் பாதுகாத்தலும்.

- NGN கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் சட்டகத்தை உருவாக்குதல் குறித்த நோக்கில், அக்கறையுள்ளோரின் அவதானிப்புகளையும் கருத்துக்களையும் பெற்றுக் கொள்ளல்.

  TRCSL அக்கறையுள்ளோர் பலரிடமிருந்து பதில்களைப் பெற்றது. ஆலோசனை செயன்முறையின் பின்னர் NGN கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் சட்டகம் என்பன வரையப்பட்டு ஆணைக்குழுவின் அனுமதிக்காக 2011 இல் சமர்ப்பிக்கப்பட்டது.

### 8.2.3. ஒழுங்குபடுத்துநர்களுக்கான உலகளாவிய மாநாடு
**(Global Symposium for Regulators – GSR)**

சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் (ITU) ஒழுங்குபடுத்துநர்களுக்கான உலகளாவிய மாநாடானது (GSR) அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலுள்ள தேசிய ஒழுங்குபடுத்தல் அதிகார நிறுவனங்களுக்கும், முக்கிய ICT அக்கறையுள்ளோருக்குமிடையில் ஒழுங்குபடுத்தல் விடயங்கள் தொடர்பான தகவல்களைப் பகிர்வதற்கும் பரிமாறிக் கொள்வதற்குமாக வருடாந்தம் நடாத்தப்படும் ஓர் உயர்மட்ட உலகளாவிய நிகழ்வாகும். 2000 ஆம் ஆண்டில் இது தொடக்கப்பட்டதிலிருந்து GSR ஆனது அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள தேசிய ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களின்

தலைவர்களை ஒன்றுசேர்த்ததுடன் தமது அவதானிப்புகளையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொள்வதற்கு ஒழுங்குபடுத்துநர்களுக்கான உலகளாவிய வருடாந்த நிகழ்வு எனும் பெயரையும் ஈட்டிக்கொண்டது. தனியார் துறையினர் முதலீட்டாளர்கள், நுகர்வோர் ஆகிய முக்கிய ICT அக்கறையுள்ளோருக்கும் உலகளாவிய ஒழுங்குபடுத்துநர் சமூகத்தினருக்குமிடையே ஒரு திறந்த உரையாடலையும் வளர்க்கின்றது.

ITUவின் இந்த நிகழ்வு அனுசரணை வழங்கும் நாட்டின் தேசிய ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்படுகின்றது. ஒவ்வோர் ஆண்டும் GSR இற்கு ஒரு குறிப்பிட்ட தலைப்பு உண்டு. புறோட்பேண்ட் உலகிற்கான சிறப்பான ஒழுங்குவிதி என்பதே 2011 ஆம் ஆண்டிற்கான தலைப்பாகும். GSR இற்கு சமாந்தரமாக இயங்கும் உலகளாவிய தொழிற்துறைத் தலைவர்கள் அமர்வானது (Global Industry Leaders Forum – GILF), ICT அபிவிருத்தியிலுள்ள சமீபத்திய தடைகள் குறித்து விவாதிக்க ICT தொழிற்துறையிலுள்ள பிரதான நிறைவேற்றுநர்களை ஒன்று சேர்க்கும் தொலைத்தொடர்பு அபிவிருத்தித்துறையின் ஒரு நிகழ்வாகும்.

சகலருக்கும் புறோட்பேண்ட் கிடைக்கச் செய்தல், நவீனமயமாக்கலுக்கு ஆதரவளித்தல், புறோட்பேண்ட் சூழலின் சிக்கல் தன்மை, சவால்கள் என்பவற்றுக்கு முகம்கொடுத்தல் என்பன தொடர்பாக ஒழுங்குபடுத்துநர்கள் எடுக்கக்கூடிய ஒழுங்குபடுத்தல் வழிமுறைகளை 11 ஆவது ஒழுங்குபடுத்துநர்களுக்கான உலகளாவிய மாநாடு (GSR), 4 ஆவது உலகளாவிய தொழிற்துறைத் தலைவர்கள் அமர்வு (GILF), என்பவற்றின் பங்கேற்பாளர்கள் ஆராய்ந்தனர். புறோட்பான்டின் கண்டுபிடிப்பானது நாம் தொடர்பு கொள்ளும் முறை, தகவல்களை அணுகுதல், அறிவையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளல், வியாபாரம் செய்தல், ஒருவர் மற்றவருடன் இணைந்து செயற்படுதல் என்பவற்றைக் குறிப்பிடத்தக்க அளவு மாற்றியது. பொருளாதாரத்தில் புறோட்பேண்ட்டின் தாக்கமானது மேலும் அதிகரித்த அளவில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. புறோட்பேண்ட் உலகால் தரப்படும் புதிய பிரயோகங்கள், சேவைகள் மற்றும் வியாபார வாய்ப்புக்கள் என்பவற்றால் சகல குடிமக்களும் நன்மை பெறுவதை உறுதி செய்தலுக்காக திறமையான புறோட்பேண்ட் தந்திரோபாயங்களும், திட்டங்களும் அவசியப்படுகின்றன.

பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியில் ITU ஆல் தொடக்கப்பட்ட ICT அபிவிருத்திகள் தொடர்பில் இலங்கை வகிக்கக்கூடிய பங்குபற்றி, 2011 ஒக்ரோபர் 24-27 திகதிகளில் ஜெனிவாவில் நடைபெற்ற ITU தொலைத்தொடர்பு – 2011, நிகழ்வில் பங்குபற்றிய அலுவலர்கள் ITU வின் செயலாளர் நாயகத்துடனும் மூன்று பணியகப் பணிப்பாளர்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். GSR 2012 இற்கு அனுசரணை வழங்குவதன் மூலம் இலங்கை ITU செயற்பாடுகளில் உலகளாவிய ரீதியில் பயனுள்ள முறையில் பங்களிப்புச் செய்யலாம் என இந்த உத்தியோகத்தர்கள் சுட்டிக் காட்டியதுடன், 2012 இல் இந்த நிகழ்விற்கு இலங்கையில் அனுசரணை வழங்க TRCSL அலுவலர்கள் தமது விருப்பத்தையும் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து, தேவையான அனுமதியைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் GSR 2012 இற்கு அனுசரணை வழங்குவதற்கான ஒரு கேள்விமனுவும் சமர்ப்பிக்கப்பட்டது. GSR – 12 இற்கு அனுசரணை வழங்க TRCSL மேற்கொண்ட முயற்சி வெற்றியளித்ததுடன் கேள்வியை ஏற்றுக் கொண்டதாக தகவல் திணைக்களத் தலைவரின் 2011 டிசம்பர் 05 திகதியிட்ட உறுதிப்படுத்தல் மின்னஞ்சலையும் TRCSL பெற்றது. இதன்படி, சர்வதேச தொலைத்தொடர்புகள் ஒன்றியத்தின் 2012 ஆம் ஆண்டு ஒழுங்குபடுத்துநர்களுக்கான உலகளாவிய மாநாடு (GSR –

12), உலகளாவிய தொழிற்துறை தலைவர்கள் அமர்வு என்பவற்றிற்கு அனுசரணை வழங்கும் வாய்ப்பை இலங்கை பெற்றுக் கொண்டது. இந்த நிகழ்வு கொழும்பு ஹில்ரன் ஹோட்டலில் 2012 ஒக்ரோபர் 2 தொடக்கம் 4 ஆம் திகதி வரை நடத்தப்படும். 192 அங்கத்துவ நாடுகளிலிருந்து தொலைத்தொடர்புகள் அமைச்சர்கள் உள்ளிட்ட பங்கேற்பாளர்கள் GSR – 12 இற்கு சமூகமளிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப் பெருமைமிக்க உலகளாவிய நிகழ்வானது நாட்டின் மதிப்பையும் உல்லாசப் பயணத் துறையையும் உயர்த்துவதுடன் நாட்டில் மேலதிக வெளிநாட்டு நேரடி முதலீட்டையும் ஊக்குவிக்கும்.

#### 8.2.4. முறைமை அனுமதிப்பத்திரப் பிரச்சினைகளைக் கையாளலும், ஏனைய பிரிவுகளுக்கு துணை செய்தலும்

அனுமதிப்பத்திர நிருவாகப் பிரிவு இயக்குநர் அனுமதிப் பத்திரங்களிலிருந்து (முறைமை அனுமதிப் பத்திரங்கள்) எழும் நாளாந்தப் பிரச்சினைகளைக் கையாண்டதுடன் தேவையான சமயங்களில் TRCSL இன் ஏனைய பிரிவுகளுக்கும் தொழில்நுட்ப மற்றும் ஒழுங்குபடுத்தல் உள்ளீடுகளையும் வழங்கியது.

### 8.3. அலுவலர்கள்

2011 ஆம் ஆண்டின் போது அனுமதிப்பத்திர நிருவாகப் பிரிவு ஒரு (1) பிரதிப் பணிப்பாளர், ஒரு (1) ஆலோசகர், மூன்று (3) முகாமைத்துவ உதவியாளர் மட்ட அலுவலர்கள், இரண்டு (2) முதனிலை மட்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட ஏழு (7) அலுவலர்களுடன் தனக்குப் பொறுப்பளிக்கப்பட்ட பணிகளை மேற்கொண்டது.

# நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவு

அத்தியாயம் 9

நிர்வாகம் மற்றும் மனித வளப்பிரிவானது நிறுவனத்தின் சுமுகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு 2011 இலும் பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொண்டது.

## 9.1. தொழிற்பாடுகள்

- மனித வள முகாமைத்துவம் மற்றும் பொது நிர்வாகம் தொடர்பான விதிகள் ஒழுங்கு விதிகள் மற்றும் நடைமுறைகளை தயாரித்தல்.
- ஊழியரிடல், நியமனத்தை உறுதிப்படுத்தல், பதவியுயர்வுகள், விடுமுறை பதிவுகள், வரவு, இடமாற்றங்கள், செயற்றிறன் மதிப்பீடு, ஒழுக்காற்று கட்டுப்பாடுகள், விடுவிப்பு மற்றும் அலுவலர் இளைப்பாறுகை.
- அலுவலர்களின் தனிப்பட்ட கோவைகளைப் பராமரித்தல்.
- சிரேஷ்ட முகாமையாளர்களது ஆலோசனையுடன் ஒவ்வொரு பதவிக்குமான தொழில் விபரணத்துடன் இணைந்ததாக ஆணைக்குழுவுக்காக ஊழியர் திட்டத்தை தயாரித்தல்.
- சிரேஷ்ட தொழிற்பாட்டுத் தலைமைகளுடன் இணைந்து மனிதவள அபிவிருத்திப் பாதீட்டைத் தயாரித்தல்.
- வருடாந்த ஊழியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்.
- உள்ளூர், வெளிநாட்டு ஊழியர்களுக்கான பயிற்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும் பயிற்சியாளர்களுக்கு அவசியமான பயணம், பதிவுகள் மற்றும் ஏனைய ஆயத்தங்களை மேற்கொள்ளுதலும்.
- வருடாந்த அறிக்கை, கூட்டிணைப்புத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- பாதுகாப்பு சேவை, சுத்திகரிப்பு சேவை, கட்டிட பராமரிப்பு, இயந்திர உபகரணங்களது திருத்தம், இயந்திரங்களின் கொள்வனவு, மற்றும் பராமரிப்பு தொடர்பான

நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

- மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசிச் சேவைகளின் வினைத்திறனான கிடைப்பனவை உறுதிப்படுத்தல்.
- வாகன அணியைப் பேணுதல்
- TRCSL இன் ஏனைய பிரிவுகள் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அலுவலகம்சார் உதவிகளை வழங்கல்.
- கொடுப்பனவுகளை விதந்துரைத்தலும், அனுமதித்தலும்
- இருப்பு மற்றும் பதிவேட்டு அறைகளை பராமரித்தல்
- வருடாந்த மெய்மையாய்வுச் சபையை நடாத்துதலும். தேவையற்ற பொருட்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.
- ஊடகப் பிரிவை நிர்வகித்தல்
- பாராளுமன்ற கேள்விகளுக்குப் பதில்களை சமர்ப்பித்தல், கணக்காய்வாளர் நாயகம், பொது முயற்சிகள் குழு (COPE) ஆகியோருக்கு அறிக்கைகளை சமர்ப்பித்தல் மற்றும் அமைச்சரவைக் குறிப்புகளை சமர்ப்பித்தல் ஆகிய நடவடிக்கைளை ஒருங்கிணைத்தல்.
- பொது நிறுவனங்கள் திணைக்களம், முகாமைத்துவ சேவைத் திணைக்களம் மற்றும் சம்பள மற்றும் ஆளணிக்கான தேசிய ஆணைக்குழு ஆகியவற்றுடன் தொடர்பாடல்களை மேற்கொள்ளல்.
- வருடாந்த 'தேசத்திற்கு மகுடம் (தயட்ட கிருள') நிகழ்வில் பங்கேற்கும் போது சகல நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல்.
- தொழிற் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதிப்படுத்தல்.
- ஊழியருக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டத்தை நிருவகித்தல்
- ஊழியருக்கான நலன்புரிச்சேவைகள், நிதி மற்றும் நிதிசாரா ஊக்குவிப்புக்களை வழங்குவதற்காக முரண்பாடுகள் மற்றும் ஆற்றுப்படுத்தல்களைக் கையாளல் முதலிய நலன்புரி நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- கூட்டிணைப்பு சமூகப் பொறுப்பு நிதியைக் கையாளல்.

## 9.2. செயலாற்றல்

### 9.2.1. தாபன வேலைகள்

2011 டிசம்பரில் உள்ளவாறு, TRCSL இன் மொத்த ஊழியர் எண்ணிக்கையானது 30 முகாமைத்துவ தர அலுவலர்கள், 129 முகாமைத்துவ தரமற்ற அலுவலர்கள் மற்றும் 44 ஆரம்ப நிலை ஊழியர்கள் உள்ளடங்கலாக 203 ஊழியரைக் கொண்டிருந்தது. 2011 இல் TRCSL இற்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி 265 ஆகும். டிசம்பர் 2011 இல் நிறுவன அமைப்பானது அட்டவணை 9.1 இல் தரப்பட்டுள்ளது.

நிருவாகப் பிரிவானது, அலுவலர் தொடர்பான தாபன வேலைகளான தனியார் கோவைகளைப் பேணுதல், ஊழியர் நியமனம், வேலையில் உறுதிப்படுத்தல், பதவியுயர்வுகள், விடுமுறைப் பதிவுகள், வரவு, ஊழியர் செயற்றிறன் மதிப்பீடு, ஒழுக்காற்று விசாரணைகள் முதலியவற்றை மேற்கொண்டது. தேசிய சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழு, முகாமைத்துவ சேவைத் திணைக்களம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களம் என்பவற்றுடன் TRCSL இன் ஊழியர்களது நியமனம்,' மற்றும் பதவியுயர்வு தொடர்பான நடைமுறைகள் ஆளணிக்கான அனுமதி, வரிச்சலுகைகளின் கீழ் வாகனக் கொள்வனவுக்கான அனுமதி என்பவை தொடர்பான தொடர்பாடல்களை இப்பிரிவானது மேற்கொண்டது.

**TRCSL** இன் ஆளணி மாற்றங்கள் 1997 - 2006 (அட்டவணை 9.1)

| ஆண்டும் மாதமும | 1997 டிசம்பா | 2001 சனவரி | 2001 ஆகஸ்ட் | 2002 மே | 2005 ஏப்ரல் | 2006 பெப்ரவரி |
|---|---|---|---|---|---|---|
| ஆளணி | 149 | 175 | 189 | 202 | 245 | 265 |

# தற்போதைய நிறுவனக் கட்டமைப்பு - TRCSL



### 9.2.2. ஆளணி மற்றும் நிறுவனக் கட்டமைப்பின் மீளமைப்பு

2006 இலிருந்து TRCSL இன் ஆளணி, மற்றும் நிறுவனக் கட்டமைப்பில் எவ்வித மீளமைப்புகளும் மேற்கொள்ளப்படவில்லை. சம்பளம் மற்றும் ஆளணி குழுவானது TRCSL இற்கான முதலாவது ஆளணி மற்றும் நிறுவனக் கட்டமைப்பை 1997ல் விதந்துரைத்தது. 1997 இலிருந்து 2006 இற்கிடைப்பட்ட காலத்தில் முகாமைத்துவ சேவைத் திணைக்களமானது 5 சந்தர்ப்பங்களில் ஆளணி அமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டது. 1997 இலிருந்து TRCSL இன் ஆளணிக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை அட்டவணை 9.1. காட்டுகிறது.

பின்வரும் காரணங்களின் நிமித்தம் நிலவுகின்ற ஆளணி மற்றும் நிறுவனக் கட்டமைப்பை மீளமைப்பதற்கான தேவை அமைகின்றது.

- தொலைத்தொடர்பாடல் துறையில் விரைவான அபிவிருத்திகளோடு இணைந்ததாக TRCSL இன் தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் விரிவாக்கம்.
- அனுமதிப்பத்திரம் பெற்றவர்களிடமிருந்து பெறப்பட்ட வருமானங்கள் மீதான நெருங்கிய மேற்பார்வைக்கான தேவை.
- சட்டரீதியற்ற ஒலிபரப்பு நிலையங்கள், அனுமதியளிக்கப்படா அலைவரிசைப் பயன்பாடுகளின் அதிகரிப்பு.
- சர்வதேச தொலைத்தொடர்பாடல் சேவைகளின் தரத்தினை மேம்படுத்த வேண்டிய தேவைப்பாடு.
- முகாமை சுற்றறிக்கை வழிகாட்டல்களின்படி 17.01.2007 திகதிய 30ஆம் இலக்க புதிய ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் சீரமைக்கப்பட்ட ஆளணி முன்மொழிவுகள் தொடர்பான அறிமுகத்தின் தேவைப்பாடு.

இவற்றின்படி, TRCSL ஆனது ஆளணி மீளமைப்பை 2011 இல் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுத்ததுடன் இவை இக் காலப் பகுதியில் நிருவாகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கையுமாகும். மீளமைக்கப்பட்ட ஆளணிக்கான அனுமதி டிசெம்பர் 2011 இல் ஆணைக்குழுவிடம் பெறப்பட்டதுடன் தொடர்ந்து முன்மொழிவுகளானது நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதியைப் பெறுவதற்காக தேசிய சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

### 9.2.3. சுற்றறிக்கைக் கடிதங்களை வழங்கலும் பொருத்தமான செயன்முறைகளை அறிமுகப்படுத்தலும்

2011 இல், விடயப்பரப்புகளின் வினைத்திறன் மற்றும் நிறுவன உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக நிருவாகப் பிரிவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக சுற்றறிக்கை கடிதங்களை வழங்கியது.

- உள்வரும் அழைப்புக்களுக்கு பதிலிறுக்கத் தவறுதல்.
- TRCSL க்கான IT உபகரணங்கள் மற்றும் சேவைகளது கொள்வனவும் விநியோகமும்.
- TRCSL இன் சாரதிகளுக்காக வழங்கப்பட்ட பணிப்புரைகள்
- நலன்புரி நோக்கங்களுக்காக அலுவலக பேருந்தைப் பாவித்தல்.
- சரியான மற்றும் வினைத்திறனான சேவைகளுக்காக அலுவலக நடைமுறைகளை பின்பற்றல் / ஒழுகுதல்.
- அலுவலகக் கடமையின் போது எழும் சட்டம் சார் விடயங்கள் மட்டில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- TRCSL இன் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல்.
- TRCSL இன் பதிவேடுகள் அறையின் கடமைகளை ஆரம்பித்தல்.
- வீடமைப்பு / வீட்டு வாடகைப் படிகள்.
- உள்வரும் தொலைபேசி அழைப்புக்களுக்கான உடனடியானதும் பணிவானதுமான பதிலுரை.
- அலுவலக நோக்கிற்கான வாகனங்களைப் பெறுவதற்கான கோரிக்கைகள்.
- பயன்படுத்தப்படாத விடுமுறைகளுக்கான கொடுப்பனவு
- நிதிப்பிரமாணம் 135 – 139 இன் படி நிதியியல் அதிகாரத்திற்கான ஒதுக்கீடு.
- TRCSL இற்கு Microsoft Office Package கொள்வனவு.
- மேலதிக நேர வேலைக்கான முன்னனுமதியைப் பெறுதல்.
- பணியின் சில பகுதிகளில் குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்ட

போது பொருத்தமான செயன்முறைகளை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் நிருவாகப் பிரிவு மேற்கொண்டது. சுற்றறிக்கைகளை வழங்கல், சில சமயங்களில் வாய்மொழி அறிவுறுத்தல்களை வழங்கல் என்பவற்றை இது உள்ளடக்கியது. தகவல்களை இலகுவாகக் கையாள்வதற்காகவும், சிக்கல்களின்றி உரிய விடயங்களை புதிய ஒருவருக்கு அல்லது பின் தொடர்ந்து வருபவருக்கு அவசியமான போது உதவுவதற்காகவும் இற்றைப்படுத்திய பட்டியல் பதிவேடுகளைப் பேணுவதற்கு சிரேஷ்ட அலுவலர்கள் தம் சக ஊழியர்களை நெருங்கிய மேற்பார்வை செய்தனர். இதுவும் TRCSL இன் ஒட்டு மொத்த உற்பத்தித்திறனையும் ஊழியர் வினைத்திறனையும் முன்னேற்றியது.

### 9.2.4. பயிற்சி

TRCSL ஆனது தன் ஊழியர்களது அறிவை விரிவாக்கம் செய்வதற்கும், திறன்களை விருத்தி செய்வதற்கும், மனப்பாங்குகளை மாற்றுவதற்குமான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை வழங்கியது.
2011 இன் பயிற்சிநெறிகள்/ ஒன்று கூடல்கள்/ கருத்தரங்குகள் தொடர்பான தகவல்கள் அட்டவணை 9.2. இல் தரப்படுகிறது.

பயிற்சி நெறிகள் ஒன்றுகூடல்கள் கருத்தரங்குகளில் வுசஊளுடு ஊழியர்களின் பங்குபற்றல் - 2011 (அட்டவணை 9.2)

வெளிநாட்டு நிகழ்ச்சிகள்

| பயிற்சி ஒன்றுகூடல் கருத்தரங்கின் விடயப்பரப்பு | நாடு | காலப் பகுதி இருந்து வரை | பங்கு பற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| புறோட்பேண்ட் தொடர்பாடலுக்கான தகவல் பாதுகாப்பு தொடர்பான பயிற்சி | ஜப்பான் | 1/19/11 - 1/28/11 | 1 |
| விண்வெளி தொடர்பாடல் பயிற்சி | ஜப்பான் | 2/1/11 - 2/9/11 | 1 |
| GSM இடம் பெயர் உலக மாநாடு குறித்த அமைச்சு நிகழ்ச்சித் திட்டம் | ஸ்பெயின் | 2/14/11 - 2/16/11 | 1 |
| நல்லாட்சியை கடைப்பிடிக்க தேசிய தரவுத் தொகுப்பிற்கான தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி | ஜப்பான் | 2/24/11 - 3/2/11 | 1 |
| 12ஆவது SATRC ஒன்றுகூடல் | ஈரான் | 2/27/11 - 3/1/11 | 1 |
| புறோட்பேண்ட் தொடர்பாடலை பயன்படுத்தி அனர்த்த தடுப்பு முறைகளை பலப்படுத்தல் தொடர்பான பயிற்சி | ஜப்பான் | 2/28/11 - 3/18/11 | 1 |
| டிஜிட்டல் புவிசார் தொலைக்காட்சி உள்ளடங்கல் மற்றும் அலைவரிசைத் திட்டமிடல் தொடர்பான பயிற்சிப்பட்டறை | மலேசியா | 3/7/11 - 3/8/11 | 1 |
| அடுத்த தசாப்தத்திற்கான IMT க்கான பயிற்சிப்பட்டறை / APT கம்பியற்ற குழுவின் 10 ஆவது ஒன்றுகூடல் | தாய்லாந்து | 3/21/11 - 3/25/11 | 1 |
| தகவல் பாதுகாப்பு மற்றும் கணினித் தொடர்பாடல் தொடர்பான பயிற்சி நெறி | சீனா | 3/21/11 - 3/29/11 | 1 |

| பயிற்சி ஒன்றுகூடல் கருத்தரங்கின் விடயப்பரப்பு | நாடு | காலப் பகுதி இருந்து வரை | பங்கு பற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கற்கைக் குழு 03 கூட்டம், இணைந்த ஆதரவாளர்கள் குழுக் கூட்டம் மற்றும் IP போக்குவரத்து சுற்றோட்ட அளவீடு கருத்தரங்கு | சுவிற்சலாந்து | 3/24/11 - 4/1/11 | 1 |
| சூழல் ஒருங்கிணைப்பின் போது அனுமதிப் பத்திரம் மாற்றப்படல் தொடர்பான பயிற்சிப்பட்டறை | மலேசியா | 4/5/11 - 4/8/11 | 1 |
| IP மெட்ரோபொலிட்டன் பிரதேச வலையமைப்பு மற்றும் அதன் பிரயோகங்கள் தொடர்பான பயிற்சிப்பட்டறை | சீனா | 4/13/11 - 4/21/11 | 1 |
| 4G கைத்தொலைபேசி (மேம்படுத்தப்பட்ட IMT) முறைமை பிரயோகங்கள் மீதான பயிற்சிப்பட்டறை | கொரியா | 4/25/11 - 4/28/11 | 1 |
| கொள்கை மற்றும் விதிகள் தொடர்பான SATRC இன் 2வது பயிற்சிப்பட்டறை | மாலைதீவு | 5/3/11 - 5/5/11 | 2 |
| CTO இன் நிர்வாகக் குழு கூட்டம் | ஐக்கிய இராச்சியம் | 5/8/11 - 5/16/11 | 1 |
| 11 வது APT கொள்கை மற்றும் ஒழுங்கமைத்தல் ஒன்றுகூடல் | வியட்நாம் | 5/17/11 - 5/19/11 | 1 |
| ICT பிரயோகங்கள் தொடர்பான ஆசிய பசுபிக் பிராந்திய ஒன்றுகூடல் மாநாடு | தாய்லாந்து | 5/18/11 - 5/21/11 | 1 |
| அடுத்த தலைமுறைக்கான வலையமைப்பு வடிவமைப்பும் சேவைத் திட்டமிடலும் | சீனா | 5/19/11 - 5/27/11 | 1 |
| 'டிஜிட்டல் ஒலிபரப்பு அனுபவத்தைப் பலப்படுத்தல் மற்றும் ஊடக ஒன்றுகூடல் தொடர்பான பிராந்திய பயிற்சிப்பட்டறை | வியட்நாம் | 5/22/11 - 5/27/11 | 1 |
| 18 வது ASTAP WTSA -12க்கான 1 ஆவது APT ஆயத்த ஒன்றுகூடல் | தாய்லாந்து | 5/23/11 - 5/27/11 | 1 |
| வேலைக் குழு IB மற்றும் கற்றல் குழு 1 இற்கான கூட்டம் | சுவிற்சலாந்து | 5/25/11 - 6/3/11 | 1 |
| வேலைக் குழு 14 மற்றும் கற்றல் குழு 1 இற்கான கூட்டம் | சுவிற்சலாந்து | 5/25/11 - 6/3/11 | 1 |
| ITU வேலைக்குழு 5A | சுவிற்சலாந்து | 6/13/11 - 6/22/11 | 1 |
| சர்வதேச இடம்பெயர் தேடல் (Mobile Roaming) தொடர்பான APT பயிற்சிப்பட்டறை | சீனா | 6/13/11 - 6/15/11 | 1 |
| ITU வேலைக்குழு 5C இன் கூட்டம் | தாய்லாந்து | 6/13/11 - 6/23/11 | 1 |
| தொழில்நுட்பம் மற்றும் IPTV பிரயோகம் தொடர்பான பயிற்சி நெறி | தாய்லாந்து | 6/20/11 - 6/24/11 | 1 |
| அனைவருக்குமான டிஜிட்டல் உள்ளடக்கங்கள் தொடர்பான ஆசிய-பசுபிக் பிராந்திய மாநாடு | சிங்கப்பூர் | 6/21/11 - 6/23/11 | 2 |
| ICT பொருளாதார வளர்ச்சிக்கான ஊக்கி என்பது தொடர்பான கருத்தரங்கு | சுவீடன் | 6/27/11 - 6/30/11 | 1 |
| 8ஆவது ஆசிய-பசுபிக் தொலைத்தொடர்பாடல் மற்றும் ICT அபிவிருத்தி மாநாடு | சீனா | 6/28/11 - 6/30/11 | 1 |

| பயிற்சி ஒன்றுகூடல் கருத்தரங்கின் விடயப்பரப்பு | நாடு | காலப் பகுதி இருந்து வரை | பங்கு பற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| IP தொழிநுட்பம் மற்றும் Router Configuration தொடர்பான பயிற்சி | இந்தியா | 7/11/11 - 7/15/11 | 1 |
| 3G மொபைல் புறோட்பேண்ட் தொடர்பான பயிற்சி நெறி | தாய்லாந்து | 7/25/11 - 7/29/11 | 1 |
| புறோட்பேண்ட் கொள்கை மற்றும் விதிகள் தொடர்பான பயிற்சி | தாய்லாந்து | 8/2/11 - 8/6/11 | 1 |
| GA தயாரிப்பு APT விதிகளின் திட்டமிடப்படாத தொடர்பாடலுக்கான குழுவின் 3வது கூட்டம் | தாய்லாந்து | 8/9/11 - 8/12/11 | 1 |
| IPV 6, அதன் பிரயோகங்கள் தொடர்பான பயிற்சி | தாய்லாந்து | 8/22/11 - 8/26/11 | 1 |
| WRC க்கான தயாரிப்பிற்கான 5வது APT மாநாடு | கொரியா | 8/29/11 - 9/3/11 | 1 |
| தொலைத்தொடர்புாடல் சேவைகள், சம்பந்தப்பட்ட பொருட்கள் தொடர்பான ITU பயிற்சிப்பட்டறை | தாய்லாந்து | 9/1/11 - 9/3/11 | 1 |
| கற்றல் குழு 1, 2இன் கூட்டம் | தாய்லாந்து | 9/5/11 - 9/16/11 | 1 |
| வளர்ந்து வரும் டெலிகொம் சூழலுக்கான ஒழுங்குபடுத்தல் சட்டம் தொடர்பான பயிற்சி | இந்தியா | 9/6/11 - 9/9/11 | 1 |
| 51வது CTO கவுன்சில் கூட்டமும் வருடாந்த மாநாடும் | ட்றினிடாட், ருபேகோ | 9/12/11 - 9/16/11 | 2 |
| 11 ஆவது APT கம்பியற்ற குழுக்கூட்டம் | தாய்லாந்து | 9/14/11 - 9/17/11 | 1 |
| வேலைக்குழு 4A மற்றும் கற்றல் குழு 4 இற்கான கூட்டம் | சுவிற்சலாந்து | 9/21/11 - 9/30/11 | 1 |
| கிராமப் புறங்களில் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ICT உடனான சேவைகள் மற்றும் தீர்வுகள் தொடர்பான விடய ஆய்வு | ஜப்பான் | 9/27/11 - 10/7/11 | 1 |
| இ - பிரயோகங்கள்/ இ - அரசாங்கம் தொடர்பான APT பயிற்சிப்பட்டறை | அவுஸ்திரேலியா | 10/4/11 - 10/6/11 | 1 |
| ITU கவுன்சில் 2011 இற்கான அமர்வு | சுவிற்சலாந்து | 10/11/11 - 10/21/11 | 1 |
| கற்றல் குழு 3, வேலைக்குழு 3M | சுவிற்சலாந்து | 10/17/11 - 10/28/11 | 1 |
| அடுத்த தலைமுறை நடமாடும் தொலைத்தொடர்புாடல் தொழிநுட்பம் மற்றும் வலையமைப்பு மீதான பயிற்சி | சீனா | 10/17/11 - 10/27/11 | 1 |
| Bandwidth & Backhaul மாநாடு | இந்தோனேசியா | 10/19/11 - 10/20/11 | 1 |

| பயிற்சி ஒன்றுகூடல் கருத்தரங்கின் விடயப்பரப்பு | நாடு | காலப் பகுதி இருந்து வரை | பங்கு பற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அனர்த்த முகாமைத்துவம்/தொடர்பாடல் பயிற்சிப்பட்டறை | ஜப்பான் | 10/19/11 - 10/21/11 | 1 |
| ITU டெலிகொம் உலகு | சுவிற்சலாந்து | 10/24/11 - 10/27/11 | 1 |
| ITU டெலிகொம் உலகு மற்றும் கற்றல் குழு 12 | சுவிற்சலாந்து | 10/24/11 - 11/5/11 | 1 |
| 9ஆவது ASYAP / WTSA – 12 இற்கான 2 ஆவது APT தயாரிப்புக் கூட்டம் | பிலிப்பைன்ஸ் | 10/24/11 - 10/28/11 | 1 |
| வானொலி நிலைய நிர்வாகம் மற்றும் வானொலி உபகரண உறுதிப்படுத்தல். | ஜப்பான் | 11/8/11 - 11/16/11 | 1 |
| புறோட்பேண்ட் தொடர்பாடல்களுக்கான Cyber பாதுகாப்பு கொள்கைகள் மற்றும் தொழிநுட்பங்கள் தொடர்பான பயிற்சி | ஜப்பான் | 11/9/11 - 11/18/11 | 1 |
| புறோட்பேண்ட் வலையமைப்பு அபிவிருத்திக்கு உதவுவதற்கான FITH மற்றும் கம்பியற்ற அடைகை (Access) தொழிநுட்பம் | ஜப்பான் | 12/1/11 - 12/7/11 | 1 |
| APT Cyber பாதுகாப்பு மாநாடு | ஜப்பான் | 12/5/11 - 12/7/11 | 1 |
| அடுத்த தலைமுறை நடமாடும் தொலைத்தொடர்புாடல் முறைமைக்கான நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சிநெறி | ஜப்பான் | 12/6/11 - 12/14/11 | 1 |
| ICT நிதி: வளரும் சந்தைகள் பூகோள மாநாடு 2011 | ஐக்கிய இராச்சியம் | 12/12/11 - 12/15/11 | 1 |
| நடமாடும் தொடர்பாடல் மற்றும் புறோட்பேண்ட் தொடர்பான பயிற்சி | கொரியா | 12/12/11 - 12/20/11 | 1 |
| புறோட்பேண்ட் மற்றும் சந்திப்பு கொள்கைகள் பற்றிய பயிற்சி | கொரியா | 12/12/11 - 12/20/11 | 2 |
| டிஜிட்டல் அடையாளப்படுத்தல் தொடர்பான ITU பயிற்சி | ஜப்பான் | 12/13/11 - 12/14/11 | 1 |
| நியமங்கள் மற்றும் புலமைச் சொத்துக்களுக்குள் உரிமை தொடர்பான பயிற்சிப்பட்டறை | இந்தியா | 12/19/11 - 12/20/11 | 1 |
| வலையமைப்பு, சேவைகள் மீதான SATRC WG | ஈரான் | 12/19/11 - 12/20/11 | 1 |
| கொள்கை மற்றும் ஒழுங்குகள் மீதான SATRC வேலைக்குழுவின் 2 ஆவது கூட்டம் | இந்தியா | 12/28/11 - 12/29/11 | 2 |

**b)** உள்நாட்டு நிகழ்ச்சிகள்

| நிகழ்ச்சி | காலப்பகுதி, இடம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 3 D அனிமேஷன், Visual Effects இற்கான டிப்ளோமா | 01 வருடம் SLITT இல் | 1 |
| IT டிப்ளோமா | 15/05/2011 - 31/11/2011, SLIDA | 13 |
| IT அடிப்படையான வணிக கடிதம் எழுதுதல் | 31/05/2011- 04/06/2011, SLIDA | 7 |
| தகவல் முறைமை முகாமைத்துவ நிகழ்ச்சிக்கான பட்டப்பின் டிப்ளோமா | 2011 கொழும்புப் பல்கலைக்கழகம் | 1 |
| அரச சம்பள முகாமைத்துவ முறைமை பற்றிய பயிற்சி | 25-30 ஏப்ரல் 2011 நிதிக்கற்கைகளுக்கான கல்வியகம் | 1 |
| பொருளியல் முதுமாணி | 2010 / 2011 களனி பல்கலைக்கழகம் | 1 |
| "கூட்டிணைப்பு ஆளுகை இலங்கையில் உண்மையில் செயற்படுகின்றதா அல்லது அது வெறும் மன்னிப்பு வேண்டுதல் மட்டுமா" என்பது குறித்த கருத்தரங்கு | 27 மே 2012 ஹில்டன்,கொழும்பு | 1 |
| நூலக மற்றும் தகவல் விஞ்ஞானம் தொடர்பான தேசிய மாநாடு | 28 ஜுன் 2011 கலதாரி ஹோட்டல் | 2 |
| தகவல் பரிமாற்றத்தின் பரிணாமம் தொடர்பான கருத்தரங்கு | 22 ஜுலை 2011 கலதாரி ஹோட்டல் | 6 |
| இலங்கை: வளர்ந்து வரும் ஆசியாவின் அதிசயம் "அறிவுத்தள அச்சாணி மற்றும் அலுவலக வசதிகள் அச்சாணியாக இலங்கையை மாற்றுதல்" தொடர்பான ஆரம்ப கருத்தரங்கு | 25 ஜுலை 2011 சினமன் லேக் சைற் 2 | 2 |
| நகரமும், அமைப்புகளும் சான்றுப் பத்திர தர கற்கை | ஸ்ரீ சுமங்கல வித்தியாலயம்,கொழும்பு | 1 |
| களஞ்சிய முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப்பட்டறை | 05 ஆகஸ்ட் 2011 ICTAD | 2 |
| தொழில் வாய்ப்பிற்கான ஆங்கிலம் என்பது தொடர்பான சான்றுப்பத்திர கற்கை | ஞாயிறுகளில் SLIDA | 7 |
| நிலைத்து நிற்கும் வலு தொழிநுட்பம் தொடர்பான பயிற்சி | 15,16,17 செப்டெம்பர் 2011 மொறட்டுவ பல்கலைக்கழகம் | 1 |
| மோட்டார் இயந்திரவியல் தொடர்பான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை | 225 ஒக்டோபர் 2011 தேசிய தொழிற் பயிற்சி நிலையம் | 2 |
| இலங்கை பட்டயக் கணக்காளர்களின் 32ஆவது தேசிய மாநாடு | 20 – 22 ஒக்டோபர் 2011 | 1 |

| நிகழ்ச்சி | காலப்பகுதி, இடம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|
| ஊழியர் சேமலாபநிதி / ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் ஊழியர் நல்லுறவு தொடர்பான கருத்தரங்கு | 28 ஒக்டோபர் 2011 தேசிய வணிக சம்மேளனம் | 2 |
| பாதீட்டு கருத்தரங்கு | 23 நவம்பர் 2011 ICASL | 1 |
| வரி முன்மொழிவுகள் மற்றும் வணிகத்தில் தாக்கங்கள் தொடர்பான கருத்தரங்கு | 25 நவம்பர் 2011 தாஜ்சமுத்ரா | 1 |

### 9.2.5 கொள்வனவு நடவடிக்கைகள் நிருவாகப் பிரிவானது

ஆலோசனைச்சேவை, பாதுகாப்புச்சேவை, துப்பரவாக்கும் சேவை முதலிய பல்வேறு வகையான சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தது. இந் நடவடிக்கைகளானது கேள்விப் பத்திரங்களைத் தயாரித்தல், அறிவித்தல்களை பிரசுரித்தல், தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமித்தல் (TECS), கொள்வனவுக் குழுவை நியமித்தல் (PCS), அறிக்கைகளைத் தயாரித்தல், அவசியமான அனுமதிகளைப் பெறுவதற்கான அறிக்கைகளை சமர்ப்பித்தல், தெரிவு செய்யப்பட்ட தரப்பாருக்கு தீர்மானங்களை தெரிவித்தல், தேவையான போது சட்டப் பிரிவுடன் இணைந்து சேவை உடன்படிக்கைகளைத் தயாரித்தல், மற்றும் சேவை வழங்குனர்களின் வேலையை மேற்பார்வை செய்தல் மற்றும் சேவை உடன்படிக்கையினின்று விலகல்கள் அவதானிக்கப்படுமிடத்து திருத்த நடவடிக்கைகளை கைக்கொள்ளல் ஆகியவற்றை உள்ளடக்கியது. மேற் கூறப்பட்ட கொள்வனவு நடை முறைகளானது கட்டிட பராமரிப்பு மற்றும் திருத்தம், இயந்திரங்கள், உபகரணங்கள் கொள்வனவும், பராமரிப்பும் ஆகியவை தொடர்பில் பின்பற்றப்பட்டது. விசேட கொள்வனவு நடவடிக்கையாக கட்டிடத்தின் உள்ளேயும், வெளியேயும் நிகழ்வுகளைக் கண்காணிக்கின்ற இணையம் சார் பாதுகாப்பு முறைமையானது பொருத்தப்பட்டது.

TRCSL இன் பழைய கட்டடத்தின் குளியலறை திருத்தப்பட்டது இன்னுமொரு பெரிய பாரிய நடவடிக்கை ஆகும்.

மீளாய்வுக் காலப் பகுதியின்போது, 209 கூறுவிலைகள் கோரப்பட்டிருந்ததுடன் முறையே 04 மற்றும் 08 சிறிய மற்றும் பெரிய கேள்விச் சபைக் கூட்டங்களும் நடத்தப்பட்டிருந்தன. சிறிய கேள்விச்சபையால் ரூ..4.1 மில்லியன் பெறுமதியான கொள்வனவுகளும் பெரிய கேள்விச் சபையால் ரூ..93.2 மில்லியன், பெறுமதியான கொள்வனவுகளும் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. இதன்படி, இரு கேள்விச் சபைகளாலும் அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவுகளின் மொத்தப் பெறுமதி ரூ..97.3 மில்லியன்களாகும்.
அலுவலக நேரத்தின் போதும் அலுவலக நேரத்தின் பின்னரும் தடங்கல்கள் ஏற்பட்ட வேளைகளில் நிருவாகப் பகுதி உரிய நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு மின்சாரம், நீர், தொலைபேசிச் சேவைகளின் வினைத்திறனான வழங்கலை உறுதி செய்தது.
TRCSL இன் ஏனைய பகுதிகள்/பிரிவுகளுக்கும் அவை தமது கடமைகளைத் தடங்கலின்றி மேற்கொள்வதற்காக அவற்றின் தேவைக்கேற்றவாறு காகிதாதி, அலுவலக உபகரணங்கள், இயந்திரங்கள் என்பவற்றின் உரிய நேரத்தின் போதான வழங்கலை இப்பகுதி உறுதி செய்தது.
இந் நடவடிக்கைகளின் பிரதான நோக்கமானது நிறுவனத்தின் சுமுகமான செயற்பாட்டை

வெளிப்படைத்தன்மையாகவும், பயனுறுதி வாய்ந்த செலவிலும், நியாயமான முறையிலும் செய்வதற்காக தேவையான சேவைகளையும், பொருட்களையும் உரிய நேரத்தில் வழங்குதலாகும்.

### 9.2.6. வாகன அணியினைப் பேணல்

TRCSL இன் வாகன அணி பத்தொன்பது கார்கள், மூன்று டபிள்கப்கள், மூன்று ஜீப் வண்டிகள், ஐந்து வான்கள், ஒரு பஸ், நான்கு லொறிகள், ஒரு முச்சக்கர வண்டி என்பவற்றைக் கொண்டிருந்தது. பரிசோதனை நடவடிக்கைகள், கண்காட்சிக்காக உத்தியோகத்தர்களை ஏற்றிச் செல்லல், அலுவலர்களின் நலன்புரி நடவடிக்கைகள் போன்றவற்றுக்காக பஸ் வண்டி ஒதுக்கப்பட்டிருந்தது. சில வாகனங்கள் ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கு உரித்துடைய அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய வாகனங்கள் பரிசோதனை நடவடிக்கைகள், கூட்டங்கள்/ வேலைப்பட்டறைகள்/கருத்தரங்குகள் போன்றவற்றில் கலந்து கொள்ளல், கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல், கடிதங்கள் சேகரித்தல், அலுவலகக் கடிதங்களை நேரடியாக விநியோகித்தல் போன்றவற்றுக்காகப் பயன்படுத்தப்பட்டன. வாகன அணியின் ரயர்கள், பற்றறிகள் என்பவற்றைத் திருத்தவும் பதிலீடு செய்யவும் 2011 இன் போது ரூ..8.54 மில்லியன் செலவிடப்பட்டது.

### 9.2.7. மெய்ம்மையாய்வுச் சபை

2010 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மெய்ம்மையாய்வுச் சபை 2011 ஜனவரியில் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வை மேற்கொள்ள மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சபை நியமிக்கப்பட்டது. அகற்ற வேண்டிய பொருட்கள் அடையாளம் காணப்பட்டதுடன் இப் பொருட்களை உரிய நடைமுறைகளின்படி அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 9.2.8. 'தேசத்திற்கு மகுடம்' கண்காட்சி நடவடிக்கைகளில் இணைப்பை ஏற்படுத்தல்

'தேசத்திற்கு மகுடம்' தேசிய அபிவிருத்திக் கண்காட்சியானது அரசாங்கம், அரசதுறை மற்றும் தனியார் துறையினர் பங்கேற்கும் ஒரு வருடாந்த நிகழ்ச்சித்திட்டமாகும். இலங்கையின் கிராமப் பகுதிகளின் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கும் மகிந்த சிந்தனை நோக்கங்களுக்கேற்ப 2011 இல் இந்தக் கண்காட்சி மொனராகலை மாவட்டத்தின் புத்தள நகரில் நடத்தப்பட்டது. இலங்கையின் சுதந்திர தினத்துடன் இணைந்த நிகழ்வாக அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களால் இக் கண்காட்சி 2011 பெப்ரவரி 4 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. TRCSL இன் பகுதியை ஒழுங்கு செய்யும் பணிக்கு நிருவாகப் பகுதி தலைமை தாங்கியதுடன் இப்பணிக்கு ஏனைய பகுதிகள் / பிரிவுகளும் தமது முழுமையான ஆதரவை நிருவாகப் பகுதிக்கு வழங்கின. நிருவாகப் பகுதி கண்காட்சி ஒழுங்கு செய்யும் குழுவினருடன் இணைப்பை ஏற்படுத்தி TRCSL பகுதிக்குப் பொருத்தமான இடத்தைப் பெற்றுக் கொண்டது. அலுவலர்களையும் கண்காட்சிப் பொருட்களையும் ஏற்றிச் செல்லவும், கண்காட்சிப் பகுதியில் பணியாற்றுவதற்காகத் தங்க வேண்டிய உத்தியோகத்தர்களுக்கான தங்குமிட வசதியை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கண்காட்சிப் பகுதி தொலைத்தொடர்புத் துறையின் மிகப்பிந்திய முன்னேற்றங்களைக் காட்சிப்படுத்தியதுடன், கண்காட்சிக் காலத்தில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட ஆயிரக் கணக்கானோர் இப்பகுதிக்குச் சமுகமளித்திருந்தனர்.


பிலியந்தல, தம்பேயில் குடும்ப உறுப்பினர்கள் ஒன்றுகூடினர்

### 9.2.9. நலன்புரி நடவடிக்கைகள்

இக் காலப்பகுதியின் போது பின்வரும் நலன்புரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

i. பிலியந்தலையில் தம்பேயில் உத்தியோகத்தர்கள் குடும்பநாள் நடத்தப்பட்டது.

ii. TRCSL இன் விளையாட்டுக் கழகத்தின் உதவியுடன் விளையாட்டு விழா நடத்தப்பட்டது.



விளையாட்டு விழாவின் ஆரம்பம்

iii. உத்தியோகத்தர்களது உறவினர்களின் இறப்பின் போது மரண நன்கொடைகள் வழங்கப்பட்டன.

iv. நலன்புரிக் குழு ஒரு நலன்புரிக் கடையை நடத்தியது.

#### 9.2.9.1. உத்தியோகத்தர்களது குடும்ப நாள்

இது 2011 ஒக்ரோபர் 15 ஆம் திகதி நடத்தப்பட்ட ஒரு நாள் நிகழ்வாகும். இந் நிகழ்வின் நோக்கமானது பொழுதுபோக்குடன் உத்தியோகத்தரிடையே மட்டுமல்லாது அவர்களது குடும்ப உறுப்பினர்களிடையேயும் மகிழ்ச்சியான உறவை உருவாக்குதலுமாகும்.

#### 9.2.9.2. விளையாட்டு விழா

விளையாட்டு விழா 2011 செப்ரம்பர் 4 இல் நடத்தப்பட்டது. உயர்மட்டத்திலிருந்து கடைசி மட்டம் வரையிலான உத்தியோகத்தர்கள் பராக்கிரம, விஜய, கெமுனு என மூன்று இல்லங்களாகப் பிரிக்கப்பட்டனர். அவர்கள் உள்ளக விளையாட்டுகள், வெளி விளையாட்டுகள், தடகள நிகழ்வுகள் என்பவற்றிற் பங்கேற்றனர். விளையாட்டு விழாவானது உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பொழுதைக் கழிக்கவும், அவர்களது விளையாட்டுத் திறமைகளைக் காண்பிக்கவும் உகந்த சந்தர்ப்பமாக அமைந்தது.

#### 9.2.9.3. மரண நன்கொடைகள்

உத்தியோகத்தர்களுக்கு அவர்களது உறவினர்களின் இறப்பு நிகழும் போது ஒரு சிறிதளவாவது உதவி வழங்கும் நோக்குடன் தனது சொந்த நிதியிலிருந்து நன்கொடைகள் வழங்கும் வழக்கத்தை TRCSL இன் நலன்புரிச் சங்கம் தொடர்ந்து செய்தது.

#### 9.2.9.4. நலன்புரிக் கடை

உத்தியோகத்தர்கள் நியாயமான விலையில் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும், விரும்பியவர்களுக்கு, தவணைக் கட்டண அடிப்படையில், பொருட்களைக் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தை வழங்கவும் நலன்புரிக் கடை உதவியது. அலுவலர்கள் தமது தேர்வுக்கேற்றவாறு வசதியாகப் பொருட்களைக் கொள்வனவு செய்ய உதவும் வகையில் நலன்புரிச் சங்கம் வர்த்தகர்களை TRCSL வளாகத்திற்கு அழைத்துவர ஏற்பாடுகளைச் செய்தது.

### 9.2.10 அலுவலகம் சார் உதவிகள்

கூட்டங்கள் வேலைப்பட்டறைகள், கருத்தரங்குகள் நடத்துதல், பரிசோதனைக்குச் செல்லல், செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்கு TRCSL இன் ஏனைய பகுதிகளுக்கு நிருவாகப் பகுதி அலுவலகம் சார் உதவிகளை வழங்கியது.

### 9.2.11 கொடுப்பனவுகளுக்கான விதந்துரை / அனுமதி

சம்பளவேற்றம், மேலதிகநேரம், நிலுவைகள், பிரயாணச் செலவுகள், ஒழுக்காற்று விசாரணைக் கட்டணங்கள், வாகனத் திருத்தங்கள், நுகர்பொருட்களின் கொள்வனவு,

உபகரணங்களும் இயந்திரங்களும், புத்தகங்களும் சஞ்சிகைகளும், சேவைகள் வழங்கல் (பாதுகாப்பு, தூய்மைப்படுத்தல், நீர், தொலைபேசி, மின்சாரம்) போன்றவை தொடர்பான பல்வேறு கொடுப்பனவுகளுக்கு அனுமதி வழங்குதல் நிருவாகப் பகுதியின் பிரதான செயற்பாடாகும். நிருவாகப் பகுதி கொடுப்பனவு உறுதிச் சீட்டுகளைக் கவனத்துடன் பரிசீலித்து கொடுப்பனவின் தன்மை, நிதி அதிகார எல்லை என்பவற்றிற்கிணங்க விதந்துரைகளை அல்லது அனுமதியை வழங்கியது. கொடுப்பனவுகளை தாமதமின்றிச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 9.3. அலுவலர்கள்

2011 ஆம் ஆண்டின் போது நிருவாகம் மற்றும் மனிதவளப் பகுதி ஒரு (1) பணிப்பாளர், ஒரு (1) பிரதிப்பணிப்பாளர், ஒரு (1) உதவிப் பணிப்பாளர், இருபத்தொரு (21) முகாமைத்துவ உதவியாளர் மட்ட உத்தியோகத்தர்கள், இருபத்துநான்கு (24) முதனிலைமட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோரைக் கொண்ட நாற்பத்தெட்டு (48) உத்தியோகத்தர்களுடன் தனக்குக் கொடுக்கப்பட்ட தொழிற்பாடுகளை நிறைவேற்றியது.

# சட்டப் பிரிவு

அத்தியாயம் 10

சட்டப் பிரிவானது, இலங்கைத் தொலைத்தொடர்புகள் அதிகாரச் சட்டத்தின் படி ஆணைக்குழுவிற்குள்ள அதிகாரங்களையும், கடமைகளையும் ஆற்றுவதில் 2011 இல் பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொண்டது.

## 10.1 தொழிற்பாடுகள்

- ஆணைக்குழுவிற்கு சட்ட அபிப்பிராயம் / அறிவுரைகள் தேவைப்படும் விடயங்கள்/ ஆவணங்கள் மீது அத்தகைய கருத்துகளை வழங்குதல்.
- ஆணைகுழுவிற்காக விதிகள், ஒழுங்கு விதிகள், கட்டளைகள், பணிப்புரைகள், வழிகாட்டுதல்கள், அனுமதிப்பத்திரங்கள் என்பவற்றினை வரைதல்.
- வழக்குத் தொடர்தல் நோக்கங்களுக்கான விடயங்களை கௌரவ சட்டமா அதிபதிக்கு அல்லது தனியார் வழக்குரைஞருக்கு அனுப்புதல்.
- வழக்குகள் மற்றும் வரைவு தயாரித்தல், வழக்குத் தொடுத்தல் என்பவற்றை உள்ளடக்கி சகல விடயங்களிலும் ஆணைக்குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.
- ஆணைக்குழுவிற்காக அலுவலக ரீதியான கடிதங்கள், ஏனைய கடிதத் தொடர்புகள், ஆணைக்குழுப் பத்திரங்கள், ஒப்பந்தங்கள்

மற்றும் உடன்படிக்கைகள் என்பவற்றை வரைதல்.

- இலங்கை தொலைத்தொடர்புகள் அதிகாரச் சட்டத்தின் 18(a) ஆம் பிரிவை நடைமுறைப்படுத்துதல்
- இலங்கை தொலைத்தொடர்புகள் அதிகாரச் சட்டம், 2004இன் 11ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம், விதிகள், ஒழுங்கு விதிகள், அனுமதிப்பத்திரங்கள், கட்டளைகள், தீர்மானங்கள் போன்றவற்றின் கீழான நடைமுறைப்படுத்தல் முறைகளில் ஏனைய பிரிவுகளுக்கு சட்டத் துணையை வழங்குதல்.
- ஏனைய நிறுவகங்களுக்கு சட்ட உதவி வழங்குதல்

## 10.2 செயலாற்றல்

அலைவரிசை அனுமதிப் பத்திரம் வழங்கல், வியாபார அனுமதிப் பத்திரம் வழங்கல், கட்டணங்கள், அமைந்தொழுகல் பிரச்சினைகள், நுகர்வாளர் விடயங்கள், நிருவாக மற்றும் மனித வளங்கள் தொடர்பான சட்ட விடயங்கள் போன்ற ஒழுங்குபடுத்தல் விடயங்களில் சட்டப் பிரிவு ஆணைக்குழுவிற்கும் TRCSLஇன் ஏனைய பகுதிகள் / பிரிவுகளுக்கும் உதவி வழங்கியது. இப் பகுதியின் அலுவலர்கள் TRCSL சார்பாக நீதிமன்றங்களில் தோற்றினர். சில நீதிமன்ற வழக்குகளில் TRCSL சட்ட மாஅதிபதி திணைக்களத்தினதும் தனியார் வழக்குரைஞர்களதும் சேவைகளையும் பெற்றது. சட்டச் செலவுகளுக்கான 2011ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு ஆணைக்குழுவால் முழுமையாகப் பயன்படுத்தப் பட்டிருந்தது. சட்டப் பிரிவால் 2011இன் போது மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகளின் ஒரு சுருக்கமான விபரம் கீழே தரப்படுகின்றது.

### வழக்குகள்

2011இல் TRCSL இற்கு எதிராக சில வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன.

### 10.2.1. உச்ச நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்குகள்

- பின்வரும் தரப்பினரால் உச்சநீதிமன்றில் தொடுக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் வழக்கு TRCSL ஆல் இணையத்தளங்கள் தடை செய்யப்பட்டதற்கு சவால் விடுத்தன.
- இதுவே இலங்கையில் ஆரம்பிக்கப்படும் செய்திகளைப் பரப்பும் இணையத் தளங்களைத் தடை செய்தலுக்கு எதிராக இலங்கையில் தொடரப்பட்ட முதலாவது வழக்காகும்.

கெலும் ஷிவந்த றொட்றிகோ எதிர் TRC மற்றும் ஏனைய ஐவர். சுனில் ஜயசேகரவும், உதய களுபத்திரனவும் (சுதந்திர ஊடக இயக்கம்) எதிர் TRC மற்றும் ஏனைய பத்துப்பேர்.

www.srilankmirror.com எனும் இணையத்தளத்தை இலங்கையில் அடைதலைத் தடைசெய்தல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் உறுப்புரைகள் 10, 12(1), 14(1)(a) மற்றும் 14(1)(g) என்பவற்றின் கீழான உத்தரவாதங்களை மீறுவதாகக் குற்றம் சாட்டி ஓர் இணையத்தளத்தின் உரிமையாளரும் ஆசிரியருமான கெலும் ஷிவந்த றொட்றிகோ என்பவர் இல. 548/2011 கொண்ட ஓர் அடிப்படை உரிமைகள் விண்ணப்பத்தை உச்ச நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

சம்பந்தப்பட்ட தரப்பார் நீதிமன்றில் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டதுடன், வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சுடன் ஒரு செய்தி வழங்கும் இணையத்தளமாகப் பதிவு செய்து கொள்ளவும், அமைச்சினாலும் TRCSL இனாலும் ஏற்கப்படாத இணையத் தளங்களுடனான தொடர்புகளை நீக்கிக் கொள்ளவும் உடன்பட்டனர். www.srilankamirror.com, www.srilankaguardian.org, www.lankanews.com, www.lankanewsweb.com மற்றும் www.paparacinews.com எனும் இணையத்தளங்களைத் தடை செய்தலுக்கு எதிராகவும், அரசியலமைப்பின் 10, 12(1), மற்றும் 14(1)(a) ஆம் உறுப்புரைகளின் கீழ் விண்ணப்பதாரருக்கு உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறியதாகவும் சுதந்திர ஊடக இயக்க ஏற்பாட்டாளர் மற்றும் உறுப்பினரால் SCFR 569/2011 இலக்க அடிப்படை உரிமைகள் விண்ணப்பம் 2011 டிசம்பரில்

சமர்ப்பிக்கப்பட்டது.
ஊழியர் விடயங்கள் தொடர்பான அடிப்படை உரிமைகள் வழக்குகளும் TRCSL ஆல் வெற்றிகரமாக எதிர்த்து வாதிடப்பட்டன.

### 10.2.2. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தொடுக்கப்பட்ட வழக்குகள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் (HRC) TRC க்கு எதிராக இரண்டு தரப்பாரால் இரண்டு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. (HRC 1655/11 மற்றும் HRC/2734/2011)
முதலாவது வழக்கில், தொலைத்தொடர்பு பாவனையாளர் நிவாரணத்திற்காக TRCSL இற்கு ஒரு முறைப்பாட்டைச் செய்திருந்தார். அவ்விடயமானது விசாரிக்கப்பட்டு, நிவாரணத்தை வழங்குமாறு தொடர்பான சேவை வழங்குநருக்கு ஒரு பணிப்புரை வழங்கப்பட்டது. இதற்குப் புறம்பாக பாவனையாளர் இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பித்திருந்தார். TRCSL ஆல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கருத்திலெடுக்கும் போது, HRC இந்த விண்ணப்பம் மட்டில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காது என்பது HRC இன் அபிப்பிராயமாகும்.

இரண்டாவது விடயத்தில், ஒரு முறைப்பாடு TRCSL ஆல் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கும் போது பாவனையாளர் HRCக்கு ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்திருந்தார். பிரச்சினையானது வாடிக்கையாளருக்கும் தொடர்பான சேவை வழங்குனருக்குமிடையேயான வர்த்தகக் கொடுக்கல் வாங்கல் எனவும், அத்தகைய முறைப்பாடுகளைக் கருத்திலெடுக்கவும் தொலைத்தொடர்புச் சேவைகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கவும் TRCSL இற்கு நியாயாதிக்கம் உண்டெனவும் TRCSL ஒரு நிலைப்பாட்டை எடுத்தது. TRCஇன் கருத்தை HRC ஆதரித்ததுடன் விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டது.

### 10.2.3. நீதிமன்றங்கள் / மன்றுகளிலுள்ள (Tribunals) வழக்குகளுக்குச் சமுகமளித்தல்

2011 இலும் கூட நாங்கள் இணையம் தொடர்பான முறைப்பாடுகளில் அதிகரிப்பைக் கண்டோம். சில வெளிநாட்டு இணையத்தளங்கள்/ முகவரிகள், நீதிமன்றக் கட்டளைகளாலும் அத்தகைய துறைகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தைக் கொண்ட பிற அதிகார நிறுவனங்களின் அறிவுறுத்தல்களாலும் இலங்கையிலிருந்து தடை செய்யப்பட்டன.

மனித வள விடயங்கள் தொடர்பாக தொழில் நீதிமன்றங்கள் கைத் தொழில் நீதிமன்றுகள் போன்றவற்றில் தொடுக்கப்பட்டவை உட்பட பல வழக்குகள் 2011 இல் தொடுக்கப்பட்டிருந்ததுடன் ஏனையவை முன்னைய வருடங்களிலிருந்தும் தொடர்ந்திருந்தன.
நடைமுறைப்படுத்தல் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, இலங்கைத் தொலைத்தொடர்புகள் அதிகாரச் சட்டத்தை மீறும் குற்றங்களை இழைத்தல், ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தல் தீர்மானங்களுக்கு அமைந்து நடக்காமை என்பவற்றுக்காக நீதவான் நீதிமன்றில் வழக்குத் தொடரும் நடவடிக்கையும் தொடங்கப்பட்டது.

### 10.2.4. ஏனைய அரச நிறுவனங்களுக்கு உதவிகள்

2011 ஆம் ஆண்டில், சட்டப்பிரிவானது 2011இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் III ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட சர்வதேச தொலைத்தொடர்புகள் இயக்குநர் வரியின் மீதான ஒழுங்கு விதிகளுக்குரிய திருத்தங்களைப் பரப்புவதற்கு நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழுள்ள பொதுத் திறைசேரிக்கு உதவி வழங்குதலைத் தொடர்ந்து செய்தது.

## 10.3 அலுவலர்கள்

2011 ஆம் ஆண்டின் போது சட்டப்பிரிவு இரண்டு (2) உதவிப் பணிப்பாளர்கள், ஐந்து (5) முகாமைத்துவ உதவியாளர் மட்ட அலுவலர்கள், ஒரு (1) முதனிலை மட்ட உத்தியோகத்தரைக் கொண்ட ஒன்பது (9) அலுவலர்களுடன் தனக்குப் பொறுப்பளிக்கப்பட்ட பணிகளை மேற்கொண்டது.

# தகவல் மற்றும் ஆவணப்படுத்தல் பிரிவு

அத்தியாயம் 11

தகவல் மற்றும் ஆவணப்படுத்தல் பிரிவானது தகவல் தொழில்நுட்ப (IT) பிரிவு, நூலக சேவைகள் பிரிவு என இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

## 11.1. தகவல் தொழில்நுட்பப் பிரிவின் தொழிற்பாடுகள்

- தற்போதிருக்கும் பிரயோக முறைமைகளைப் பராமரித்தலும், ஆவணப்படுத்தலும்.
- TRCSL இற்காக புதிய IT பிரயோகங்களை விருத்தி செய்தல்.
- IT தொடர்பாக TRC அலுவலர்களுக்கு தொழில்நுட்ப உதவி வழங்கல்
- TRC அலுவலருக்கு IT பாவனையாளர் அடிப்படைக்கான பயிற்சி வழங்கல்
- அட்டவணை மற்றும் அலுவலக அறிக்கை சபை (List and Bulletin Board) சேவைகள் உள்ளிட்ட TRCSLஇன் அனைத்து இணையச் செயற்பாடுகளையும் கையாளல்.
- இணையத்தளக் குழுவின் வழிகாட்டுதலின் கீழ் TRCSL இணையத்தளத்தைப் பராமரித்தல்.
- உள்ளக தகவல் வலையமைப்புக்களை வடிவமைத்தலும் நடைமுறைப்படுத்தலும்.
- கண்காட்சிகள் மூலம் தகவலைச் சேகரித்தலும் பரப்புதலும்.
- மின்னஞ்சல் வழங்கியின் நிருவாகமும் பராமரிப்பும்

## 11.2. IT பிரிவின் செயலாற்றல்

IT பிரிவால் மேற் கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் அட்டவணை 11.1 இல் தரப்படுகின்றன.

**IT பிரிவால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் - 2011** (அட்டவணை 11.1)

| செயற்பாடு | விவரணம் |
|---|---|
| ESET Smart Security இன் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்தல் | கணனிகளின் பாதுகாப்புக்காக வைரஸ் பாதுகாப்புகள் பொருத்தப்பட்டதுடன் பாதுகாப்பின் அனுமதிப்பத்திரம் வருடாந்தம் புதுப்பிக்கப்பட வேண்டியிருந்தது. 2011இல் இத் தேவைக்காக ரு.220,000/-ஐ செலவிடப்பட்டது. |
| வன்அணி Firewall முறைமை கொள்வனவு | TRCSL இன் Local Area Network (LAN) I பாதுகாப்பதற்காக இம்முறைமையானது அ.டொ.13,339.50 கிரயத்தில் நிறுவப்பட்டது. |
| இரண்டு வழங்கிகளின் Random Access Memory I (RAM) தரமுயர்த்துதல் | ரு.79,600/- மொத்தக் கிரயத்தில் (பெறுமதி சேர்வரி தவிர்த்து) 32 GBI (8GB x 4) கொள்வனவு செய்ததன் மூலம் இரண்டு வழங்கிகளினதும் RAM இன் இயலுமை 8GB யிலிருந்து (ஒவ்வொன்றும் 4GB) 40 GB க்கு (ஒவ்வொன்றும் 20GB) தரமுயர்த்தப்பட்டது. |
| சகல ADSL மற்றும் ஏனைய Leased Line களுக்குப் பதிலாக Dialog, Fibre Optic Leased Line ஐக் கொள்வனவு செய்தல் | தற்போதிருந்த ADSL மற்றும் ஏனைய Leased Line கள் 12 Mbps வேகத்தையுடைய ஓர் உயர் வேக Fibre optic Leased Line ஆல் பதிலீடு செய்யப்பட்டன. Fibre optic Line இன் மாதாந்த வாடகை ரு.220,000/= ஆகும். |
| சிறிலங்கா ரெலிகொம் (SLT) இடமிருந்து பெற்ற IT பிரிவிலுள்ள இரண்டு ADSL புறோட்பேண்ட் Line களை லங்கா பெல்லிற்கு மாற்றுதல். | இரண்டு SLT ADSL Line களின் வேகம் குறைவாக இருந்ததால் வேகத்தை கூடிய உயர் வேகத்திற்கு (ஒவ்வொரு Line உம் 4 Mbps) அதிகரித்தலுக்காக இவ்வாறு செய்யப்பட்டது. |
| மேலதிக Domain Server (ADS) இன் கொள்வனவு<br>System Centre Configuration Manager (SCCM) இன் கொள்வனவு<br>Data Protection Manager இன் (DPM) கொள்வனவு | இப் பொருட்களின் வழங்குநர்கள் (Domain Server, SCCM மற்றும் Data Protection Manager) கொள்வனவு நடைமுறையைப் பின்பற்றி தெரிவு செய்யப்பட்டதுடன் தெரிவு செய்யப்பட்டவர்கள் இவற்றை 2011 இல் நிறுவத் தொடங்கினர். |
| TRCSL இன் இணையத்தளத்தை மீள் வடிவமைத்தல் | அரச நிறுவனங்களின் இணையத்தளங்கள் மும்மொழியிலும் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) இருக்க வேண்டும் என்பது ஒரு தேவையாகக் காணப்பட்டது. இதன் காரணமாக TRCSL இன் இணையத்தளத்தினதில் மாற்றங்கள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது. பொருத்தமான இணைய வடிவமைத்தல் நிறுவனம் ஒன்றை தெரிவு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு தெரிவு செய்யும் செயற்பாட்டின் போது, நிறுவனங்களது பிரேரணை பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றன. |

## 11.3 நூலக சேவைகள் பிரிவின் தொழிற்பாடுகள்

- உள்ளக உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், நூலகர்கள் போன்றோருக்காக TRCSL நூலகத்தைப் பராமரித்தல்.
- பொது நூலகம், பிரிட்டிஷ் கவுன்சில் போன்ற ஏனைய நூலகங்களின் வசதிகளை வழங்கல்.
- நூலகங்களுக்கிடையிலான கடன் வசதிக்காக ஏனைய நிறுவகங்களுடன் இணைப்பு மேற்கொள்ளல்.
- முக்கிய தகவல்களைச் சேகரித்தலும், சுட்டிகளைத் தயாரித்தலும்
- PURNA முறைமையை விருத்தி செய்தல்
- நூலகத்தை வலுப்படுத்தல்
- TRCSL அலுவலர்களுக்காக கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல்
- தேவையற்ற பொருட்களை அகற்றுதல்.

## 11.4 நூலக சேவைகள் பிரிவின் செயலாற்றல்

### 11.4.1 TRCSL நூலகத்தைப் பராமரித்தலும், தகவல்களை வழங்குதலும்

நூலக சேவைகள் பிரிவானது தொலைத்தொடர்புகள் துறையுடன் தொடர்புடைய பல ஆவணங்கள், நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றைக் கொண்ட நூலகத்தைப் பராமரித்தது. தொலைத்தொடர்பு பற்றிய நூல்கள், சஞ்சிகைகளுக்கு மேலாக முகாமைத்துவம், சட்டம், பொருளியல், கணக்கியல் போன்ற ஏனைய விடயப் பரப்புகள் பற்றிய முக்கிய கற்கைப் பொருட்களையும் நூலகம் கொண்டுள்ளது. நூலகத்தின் வாடிக்கையாளர்கள் பிரதானமாக உள்ளக உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், நூலகர்கள் ஆகியோரைக் கொண்டுள்ளனர். அது இணையத்தையும், ஏனைய நூலகத் தரவுத் தளங்களையும் பயன்படுத்தி வாடிக்கையாளர்களுக்குத் தகவல்களை வழங்கியது. வாடிக்கையாளர்களுக்கு அவர்களது வேண்டுகோளுக்கிணங்க போட்டோ பிரதி வசதிகளும் வழங்கப்பட்டன. வாடிக்கையாளர்களுக்குத் தகவல்களைத் துரிதமாக வழங்குவதற்காக நூலகத்தின் மின்னஞ்சல் மற்றும் இணைய வசதிகள், பெக்ஸ் வசதிகள், தொலைபேசி வசதிகள் பயன்படுத்தப்பட்டன.

### 11.4.2. உறுப்புரிமையைப் புதுப்பித்தல் மூலம் பொது நூலகம், பிரிட்டிஷ் கவுன்சில் போன்ற பிற நூலகங்களின் நூலக வசதிகளை வழங்குதல்.

நூலக சேவைகள் பிரிவானது பின்வரும் நிறுவனங்களின் நிறுவக உறுப்புரிமையைப் புதுப்பித்தலில் உதவியாகவிருந்தது.

1. பொது நூலகம்
2. தேசிய நூலகம்
3. பிரிட்டிஷ் கவுன்சில்

பிரிட்டிஷ் கவுன்சிலின் உறுப்புரிமையைப் பெறுவதற்கு TRCSL நிதிகளை வழங்கியது. பொது நூலகத்தைப் பொறுத்தளவில், உறுப்புரிமைக் கட்டணத்தைக் கொடுத்த பின் தனிப்பட்ட உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்ளுமாறு உத்தியோகத்தர்கள் வேண்டப்பட்டனர். நிறுவக உறுப்புரிமையைக் கொண்டிருப்பதன் காரணமாக TRCSL அலுவலர்களுக்கு மேற்கண்ட நூலகங்களின் சேவைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்தது. TRCSL அலுவலர்கள் நிறுவக உறுப்புரிமையைக் கொண்டிருத்தல் அவர்களுக்கு பொதுநூலகத்தின் இடம் பெயர் நூலக சேவையிலிருந்து புத்தகங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்தலை இயலச் செய்தது. இடம் பெயர் நூலகம் TRCSL வளாகத்திற்கு 2011 இன் போது 24 தடவைகள் வருகை தந்தது.

### 11.4.3. நூலகங்களுக்கிடையிலான கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஏனைய நிறுவகங்களுடன் இணைப்பை மேற்கொள்ளல்.

நூலக சேவைகள் பிரிவானது TRCSL அலுவலர்களுக்கு நூலகங்களுக்கிடையிலான கடன் வசதியை வழங்குவதற்காக தேசிய நூலகம் மற்றும் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் (NIBM), தொழில் திணைக்களம், தேசிய விஞ்ஞான மன்றம் (NSF) போன்ற ஏனைய நிறுவகங்களுடன் இணைப்பை மேற்கொண்டது.

### 11.4.4. முக்கிய தகவல்களைச் சேகரித்தலும், சுட்டிகளைத் தயாரித்தலும்

முக்கிய உசாத்துணைப் பொருட்களைச் சேகரித்தலும், சுட்டிகளைத் தயாரித்தலும் நூலக சேவைகள் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட பாரிய நடவடிக்கையாகும். இப் பிரிவு செய்தித் தாள்களிலும், சஞ்சிகைகளிலுமிருந்து தொலைத்தொடர்பு, சுகாதாரம், கல்வி, சூழல் போன்றவை தொடர்பான கட்டுரைகளைச் சேகரித்து அவற்றைக் காலக் கிரமப்படி ஒழுங்குபடுத்தியது. இக் காலப் பகுதியில் நூலக சேவைகள் பிரிவால் ஆணைக்குழுவின் செய்தித் தாள் விளம்பரங்கள் மற்றும் பிரசுரங்கள் என்பவற்றின் சுட்டிகளும் தயாரிக்கப்பட்டன. அலுவலர்களின் வெளிநாட்டுப் பயிற்சி, மற்றும் ஆணைக்குழு, பொது நிருவாக அமைச்சு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், ஓய்வூதியத் திணைக்களம் என்பவற்றால் காலத்திற்குக் காலம் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள், சுற்றறிக்கைகள் என்பன தொடர்பான சுட்டிகளைத் தயாரித்தலையும் இப் பிரிவு ஆரம்பித்தது. பரீட்சைத் திணைக்களத்துடன் இணைந்து TRCSL ஆல் நடாத்தப்படும் பயிலுநர் வானொலிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளின் நன்மைக்காக இந்தப் பிரிவு கடந்த கால வினாத் தாள்களைச் சேகரித்தது.

### 11.4.5 PURNA முறைமையை விருத்தி செய்தல்

தகவல்களை இலகுவாக அடைதலுக்கு துணை செய்யவும், பயன்படுத்துவோருக்கு சிறந்த சேவையை வழங்கவும் இப் பிரிவு தனது PURNA ஒருங்கிணைந்த தகவல் முறைமையை திருத்தங்களுடனும் OPAC இணையத்தில் (இணைய பொது மக்கள் அடைகைப் பட்டியல்) சுட்டியிடும் முறைமையை வரையறுத்தும் மேம்படுத்தியது.

### 11.4.6. நூலகத்தை வலுப்படுத்தல்

நூலக சேவைகள் பிரிவு உலக வங்கி செயற்திட்டத்தின் கீழ் பொதுநலவாய தொலைத்தொடர்பு நிறுவனத்திடமிருந்து (CTO) நூல்களைக் கொள்வனவு செய்ததன் மூலம் நூலகத்தை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்தது. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட நூல்களின் பெறுமதி 25,000.00 டொலர்களாகும். நூலகமானது தனிப்பட்டோரிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் கூட புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் பெற்றுக் கொண்டது. நூலகத்தின் வசதிகள் ரூ.285,285.00 பெறுமதியான மூன்று கணனிகளையும் ரூ.20,000.00 பெறுமதியான ஒரு பெக்ஸ் இயந்திரத்தையும் பெற்றதன் மூலம் மேம்படுத்தப்பட்டன.

### 11.4.7. தேவையற்ற பொருட்களை அகற்றுதல்

கொள்வனவு நடைமுறையைப் பின்பற்றி ஒரு தொகையான செய்தித் தாள்கள் நூலகத்திலிருந்து அகற்றப்பட்டதுடன் இக் கொடுக்கல் வாங்கல் மூலம் ரூ.34,466/- ஆன தொகையையும் பெறக் கூடியதாகவிருந்தது.

## 11.5 அலுவலர்கள்

2011 ஆம் ஆண்டின் போது தகவல்கள் மற்றும் ஆவணங்கள் பிரிவானது ஒரு (1) உதவிப் பணிப்பாளர் (கடமை பார்த்தல்), ஆறு (6) முகாமைத்துவ உதவியாளர் மட்ட அலுவலர்கள், ஒரு (1) முதனிலைமட்ட அலுவலர்களைக் கொண்ட எட்டு (8) உறுப்பினர்களுடன் தனக்குப் பொறுப்பளிக்கப்பட்ட பணிகளை மேற்கொண்டது.

# ஊடகப் பிரிவு

அத்தியாயம் 12

TRCSL ஆல் மேற்கொள்ளப்படும் முக்கிய செயற்பாடுகளைப் பொது மக்கள் அறிந்து கொள்ளச் செய்யும் நோக்கில், TRCSL இன் முக்கிய நிகழ்வுகளை கவனித்தல், ஆவணப் படங்களைத் தயாரித்தல், வானொலி, தொலைக்காட்சி மற்றும் செய்தித் தாள்களுக்கு தொடர்பான தகவல்கள், புகைப்படங்கள், காணொளிகள் என்பவற்றை அனுப்புதல் என்பன இப் பிரிவின் பொதுவான தொழிற்பாடாகும். வெளி ஊடக மூலங்களுக்கு தகவல்களை அனுப்பும் போது இப் பிரிவு TRCSL இன் ஏனைய தொடர்பான பகுதிகள் / பிரிவுகளிலிருந்து விடயப் பரப்புகளின் விபரங்களைப் பெற்றுக் கொண்டது.

## 12.1 செயலாற்றல்

ஊடகப் பிரிவால் 2011இன் போது கவனிக்கப்பட்ட நிகழ்வுகள் அட்டவணை 12.1.இல் நிரற்படுத்தப்படுகின்றன.

2011 இல் கவனிக்கப்பட்ட நிகழ்வுகள் (அட்டவணை 12.1

| இல | நிகழ்வு | திகதி |
|---|---|---|
| 1 | புது வருடத்தின் வருகையை நினைவு கூரும் கொண்டாட்டம் | 3/01/11 |
| 2 | டயலொக் நன்கொடை | 22/1/11 |
| 3 | மொனராகலை மாவட்ட புத்தளையில் நடத்தப்பட்ட தயட்ட கிருள கண்காட்சி | 4/2/11 |
| 4 | பிட்டகொட்டுவ வர்த்தக சமூகத்திற்கு செல்லிடத் தொலைபேசிகளின் பதிவு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் | 9/4/11 |
| 5 | ஒரு பாடசாலையை இணைக்குக – ஒரு சமூகத்தை இணைக்குக | 3/5/11 |
| 6 | கொக்காவில் தொலைக்காட்சிக் கோபுர நிர்மாணத்தைப் பார்வையிடல் | 27/5/11 |
| 7 | கொக்காவில் தொலைக்காட்சிக் கோபுரத்தினைத் திறந்து வைத்தல் | 6/6/11 |
| 8 | லோட்டஸ் கோபுரத்தை நிர்மாணிப்பதற்கான உத்தேச காணியைப் பார்வையிடல் | 21/6/11 |
| 9 | வலுவற்றதாக்கப்பட்ட/ ஒதுக்கப்பட்ட சமூகங்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் | 9/7/11 |
| 10 | TPV 6 இணையத்தளம் | 5/7/11 |
| 11 | கொரிய IT தன்னார்வத்தினர் | 14/8/11 |
| 12 | Micromax இன் சர்வதேச அறிமுகம் | 16/8/11 |
| 13 | TRCSL இன் விளையாட்டு விழா | 26/8/11 |
| 14 | TRC விளையாட்டு விழா – மெய்வல்லுநர் இறுதி நிகழ்வுகள் | 5/9/11 |
| 15 | Sanjanee கண்காட்சி | 20/9/11 |
| 16 | தொலைத்தொடர்புகள் துறையில் ஆராய்ச்சிக் கற்கைகள் | 28/9/11 |
| 17 | இணைய புறோட்பேண்ட் வேக ஊடக மாநாடு | 4/11/11 |
| 18 | மரநடுகை தினம் | 18/11/11 |
| 19 | மஹரகமை புற்றுநோய் வைத்தியசாலைக்கு உபகரணங்கள் வழங்குதல் | 5/12/11 |
| 20 | தெற்காசிய தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துநர்கள் சபை (SATRC) | 12-13 Dec.2011 |

## 12.2. அலுவலர்கள்

2011இல் ஊடகப் பிரிவு நான்கு (04) முகாமைத்துவ உதவியாளர் மட்ட அலுவலர்களைக் கொண்டிருந்தது.

# உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

அத்தியாயம் 13

## 13.1 பொது நோக்கு

ஒரு நிறுவனத்தின் பெறுமதி சேர்ப்பினை மேற்கொள்வதையும், செயற்பாடுகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு சுதந்திரமான செயற்பாடே உள்ளகக் கணக்காய்வு ஆகும். தரவுகளையும், வியாபார செயன்முறைமைகளையும் பகுப்பாய்வு மற்றும் மதிப்பீடு செய்து அவசியமான உள்ளார்ந்த பார்வையையும் விதந்துரைகளையும் வழங்கி நிறுவன வினைத்திறனையும், விளைதிறனையும் அதிகரிக்கச் செய்கின்ற ஓர் ஊடகமாகவும் இது விளங்குகின்றது. ஆளும் சபை மற்றும் மேல் மட்ட முகாமைத்துவம் என்பவற்றிற்கு பெறுமதியைத் தருகின்றது. சுதந்திரமான அறிவுரைகளை வழங்குவதன் மூலம் உள்ளகக் கணக்காய்வானது நேர்மை மற்றும் கணக்களிதகைமை தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதற்கான மூலமாகவும் காணப்படுகிறது. உள்ளகக் கணக்காய்வின் பரப்பு என்பது நிறுவனத்திற்குள் பரந்ததாகக் காணப்படுவதுடன், அதன் ஒரு சில பகுதிகளாக செயற்பாடுகளில் விளைதிறன், நிதி அறிக்கையிடலில் நம்பகத்தன்மை, மோசடிகளை தவிர்த்தலும், புலனாய்தலும், சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் விதிகள் ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல் என்பனவும் அமைகின்றன.

**TRCSL** இன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் தலைமையானது (பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்) நேரடியாக ஆணைக்குழுவிற்கு அறிக்கையிடலை மேற்கொள்ளுவதுடன் அறிக்கைகள் கணக்காய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன. நிர்வாக ரீதியாக, பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடுகின்றார்.

## 13.2 தொழிற்பாடுகள் (Functions)

- TRCSL இன் தற்போதுள்ள கணக்கீடு மற்றும் அறிக்கையிடல் முறைமைகளில் முன்னேற்றங்களை மேற்கொள்ளும் நோக்குடன் அவற்றை மீளாய்வு செய்தலும், மதிப்பீடு செய்தலும்.
- TRCSL இன் நோக்கங்களை அடைய இயலாமைக்கான (ஏதுமிருப்பின்) காரண காரியங்களை ஆய்வு செய்தல்.
- TRCSL இன் சொத்துக்கள் எத்துணையளவு நட்டங்கள் மற்றும் மோசடிகளினின்று பாதுகாக்கப்படுகின்றன என்பதை நிச்சயித்தல்.
- கொடுக்கல் வாங்கலுக்கான அவசியம், அவற்றின் நன்மைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளலும், கழிவுகள் மேலதிகச் செலவுகளை அகற்றுதல் மூலம் கிரயத்தைக் குறைக்கக் கூடிய பகுதிகள் பற்றி ஆராய்தலும்.
- மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பான அறிக்கைகளை கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பித்தலும், கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தலும்.
- கணக்காய்வுக் குழுவின் தீர்மானங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவற்றைத் தயாரித்தலும் பிரிவுத் தலைவர்களுக்கிடையே வழங்குதலும்.
- அரையாண்டு அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்.
- பணிப்பாளர் நாயகம் / ஆணைக்குழு உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கமைய விசேட நுண்ணாய்வுகளை மேற்கொள்ளல்.
- அவ்வவ் பொழுது பணிப்பாளர் நாயகம் / ஆணைக்குழுவால் காலத்திற்குக் காலம் நியமிக்கப்படுகின்ற பல்வேறுபட்ட குழுக்களுக்கு உதவுதலும், விதந்துரைகளை வழங்கலும்.

## 13.3. செயலாற்றல் (Performance)

2011 இல் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் 03 இடம் பெற்றன. அவற்றில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட 27 அறிக்கைகளை குறித்துக் கலந்துரையாடப்பட்டது. இதன் போது நோக்கப்பட்ட விடயங்கள் பின்வரும் அட்டவணை 13.1 இல் தரப்படுகிறது.

உள்ளக் கணக்காய்வு அறிக்கைகளில் நோக்கப்பட்ட விடயங்கள், 2011 (அட்டவணை 13.1)

| அறிக்கை இல | அறிக்கைத் திகதி | விடயப் பரப்பு |
|---|---|---|
| CIA/11/01 | 12/1/11 | ஆதனக் கடன் |
| CIA/11/02 | 26/1/11 | TRCSL இற்குச் சொந்தமான வாகனங்களின் திருத்தம் |
| CIA/11/03 | 31/1/11 | வெளிக்களக் கடமைகளுக்கான எரிபொருள் கொள்வனவு |
| CIA/11/04 | 9/2/11 | இடர் கடன் கொடுப்பனவு |
| CIA/11/05 | 9/2/11 | இடர்கடன் கொடுப்பனவு மீதான வரையறை |
| CIA/11/06 | 1/3/11 | வயைறுக்கப்பட்ட Tritel தனியார் சேவையின் செஸ் மற்றும் இயக்குனர் கட்டணம் மீதான கொடுப்பனவு |
| CIA/11/07 | 7/3/11 | அலுவலக விடயங்களுக்கான வெளிநாட்டுப் பிரயாணங்கள் |
| CIA/11/08 | 7/3/11 | கடன் அறவீடு |
| CIA/11/09 | 15/3/11 | விடுமுறை நடைமுறைகள் |
| CIA/11/10 | 12/4/11 | செயற்றிறன் ஊக்குவிப்புத் திட்டம் |
| CIA/11/11 | 27/4/11 | System இயக்குநர் அனுமதிக் கட்டணம் |
| CIA/11/12 | 27/4/11 | கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் |

| அறிக்கை இல | அறிக்கைத் திகதி | விடயப் பரப்பு |
|---|---|---|
| CIA/11/13 | 27/4/11 | ஒப்பந்த ஊழியர்கள் |
| CIA/11/14 | 27/4/11 | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களைப் பரிசீலித்தல் |
| CIA/11/15 | 19/5/11 | முற்பணங்களின் தீர்ப்பனவு |
| CIA/11/16 | 30/5/11 | வெளிநாட்டுப் பயணம் - மேலதிகமான ஒரு நாளுக்கான செலவை மீளளித்தல் |
| CIA/11/17 | 7/7/11 | மாதாந்த நெறியாளர் சபை கூட்டங்களுக்கு சமர்ப்பிக்கப்படவேண்டிய கூற்றுக்கள் |
| CIA/11/18 | 28/7/11 | பேறுகால விடுமுறை |
| CIA/11/19 | 10/8/11 | விடுமுறை நடைமுறைகள் |
| CIA/11/20 | 19/8/11 | சம்பளங்கள் மற்றும் படிகளின் கொடுப்பனவுகள் |
| CIA/11/21 | 20/10/11 | கொடுப்பனவு சிட்டைகளைப் பரிசீலித்தல் |
| CIA/11/22 | 31/10/11 | வாகனக் கடன் |
| CIA/11/23 | 9/11/11 | கடன் அறவீடுகள் |
| CIA/11/24 | 15/11/11 | கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் |
| CIA/11/25 | 28/11/11 | அலைவரிசை அனுமதிப்பத்திர சிட்டைகள் |
| CIA/11/26 | 2/12/11 | சம்பளக் கொடுப்பனவு |
| CIA/11/27 | 5/12/11 | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களைப் பரிசீலித்தல் |

## 13.3 ஊழியர்கள்

2011 இல், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது, 01 பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், 02 முகாமைத்துவ உதவியாளர் மற்றும் அலுவலர்கள் 01 முதல் நிலை உத்தியோகத்தர் உள்ளடங்கலாக 04 ஊழியர்களைக் கொண்டு தனக்குரிய தொழிற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

# நிதிப் பிரிவு

அத்தியாயம் 14

### 14.1. பொதுநோக்கு (Overview)

நிதிப் பிரிவானது பண விடயங்களுடன் சம்பந்தப்படுவதுடன் நிதி முகாமைத்துவம் என்பது அதன் பிரதான தொழிற்பாடாகும். வருமானங்களை சேகரித்தல், நிதிகளின் செலவுகளை மேற்கொள்ளல், கட்டுப்பாடு, முதலீடு என்பன நிதி முகாமைத்துவத்தின் கூறுகளாக அமைவதுடன் TRCSL போன்ற நிறுவனங்களின் தளம்பலற்ற செயற்பாடுகளுக்கு இவை அவசியமானவையுமாகும். சரியான நிதிசார் பதிவேடுகளைப் பேணுதல் நிதி முகாமைத்துவத்தின் முக்கிய நிலைப்பாடாகும். அனைத்து அரச நிறுவனங்களும் தமது நிதியறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென சட்டத்தால் கட்டுறுத்தப்பட்டுள்ளது. கொடுக்கல் வாங்கல்களின் நிறைவுத்தன்மை மற்றும் சரியான தன்மையை நிர்ணயித்துக் கொள்ளவும், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வெளியிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள், நியமங்களுக்கமைய நிதிக் கொள்கைகள் காணப்படுகின்றன என்பதை உறதிப்படுத்தவும். அரச நிதிப்பிரமாணங்களுக்கு அமையவே நிதிசார் நடைமுறைகள் கட்டுறுத்தப்படுகின்றன.

நிதிப்பிரிவின் செயற்பாடானது வரலாற்றுத் தரவுகளைப் பதிவதோடு மட்டும் கட்டுப்படுத்தப்படவில்லை. நிதியியல் நிர்வாகம், கிரயக் கட்டுப்பாடு, அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் தந்திரோபாய தீர்மானமெடுத்தலில் பங்குபற்றல் முதலியனவும் இப்பிரிவின் முக்கியமான செயல்பாடுகளாகும். மேலும், நிதியியல் பிரிவானது வினைத்திறன் மற்றும் விளைதிறன் மிக்க முகாமைத்துவத்தையும், நிதித் தகவல் முறைமையையும் பேணி வருகின்றது. இதன்படி, நிதிப் பிரிவின் தொழிற்பாடுகள் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்படலாம்.

## 14.2 தொழிற்பாடுகள் (Functions)

- வரலாற்றுத் தரவுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் நிதியியல் விளைவுகளை அறிக்கையிடல்.
- ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறும் பொருட்டு அனைத்து பிரிவுகளுடனும் இணைந்து வருடாந்த பாதீட்டைத் தயாரித்தல்.
- வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கணக்கீடு, புள்ளிவிபர பதிவுகளைப் பேணுதல்.
- பெறுவனவுகள், கொடுப்பனவுகளை விதிகள், நிதிப் பிரமாணங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கமைய செயன்முறைப்படுத்தல்.
- நிறுவக சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வடிவமைத்தலும், பேணுதலும், அத்துடன் ஆணைக்குழுவின் முழுச் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான உரிய நிதியியல் முறைமைகள் மற்றும் கொள்கைகளுடனான அமைந்து நடத்தலை உறுதிப்படுத்தலும்.

- மூலதன, வருமானச் செலவின நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறையாக்கலில் உயர்மட்ட முகாமைக்கு உதவுதற்காக கிரய மற்றும் நிதிசார் கட்டுப்பாடுகளைப் பேணுதல்.
- வரித்திட்டமிடலும் உரிய வரிச் சட்டங்களின் சட்டத்தேவைப்பாடுகளை நிறைவு செய்தலும்.
- அரச கணக்காய்வாளர் அறிக்கை, கணக்காய்வு குழு அறிக்கைகள் போன்ற காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் செயற்பாடு மற்றும் நிதிசார் அறிக்கைகளை மீளாய்தலும் பகுப்பாய்வு செய்தலும் அத்துடன் ஏதும் வேறுபாடுகள் கண்டறியப்படின் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.
- அரசினால் விதிக்கப்படும் வரிகளை உடனுக்குடன் சேகரித்தலை உறுதி செய்தலும், அனைத்து வங்கிக் கணக்குகள் மற்றும் அறிக்கைகளுக்கான இணக்கங்களை செய்தலும்.
- பாராளுமன்ற சட்டங்களின் கீழ் தொலைத்தொடர்புத் துறை சம்பந்தப்பட்ட வெவ்வேறு வரி மூலம் சேகரிக்கப்பட்ட நிதியை முகாமை செய்தலும் இந்நிதியை அரச திறைசேரிக்கு அனுப்பி வைத்தலையும், மேலதிகமான நிதியிருப்பின் அதனை இத்துறையின் அபிவிருத்திக்காக முதலீடு செய்தலை உறுதி செய்தலும்.
- ஆணைக்குழுவுக்கான காலாண்டு மற்றும் வருடாந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்.

## 14.3. செயலாற்றல்

### 14.3.1. வருமானம்

1996இன் 27ம் இலக்க தொலைத்தொடர்பாடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஆணைக்குழுவானது, வானொலி அலைவரிசை அனுமதிக்கட்டணம், செஸ் கட்டணங்கள், சிஸ்ரம் இயக்குநர் அனுமதிக் கட்டணங்கள், விற்பனையாளர் அனுமதிப் பத்திரக் கட்டணங்கள், மற்றும் ஏனைய தொடர்பான கட்டணங்கள் என்பவற்றை PSTN இயக்குநர்கள், வானொலி அலைவரிசை பாவனையாளர்கள் ஆகியோரிடம் அறவிட்டது. 2011ஆம் ஆண்டிற்கான வருமானத்தின் ஒரு பொழிப்பு ஒப்பிடல் தேவைக்காக 2010இன் வருமானத்துடன் அட்டவணை 14.1இல் காட்டப்படுகின்றது.

2011இன் பாதீட்டு முன்மொழிவுக்கமைய, அரசாங்கமானது தொலைத்தொடர்பு சேவைகள் மீது 20% வரியை நடைமுறைப்படுத்தியதோடு, தொலைத்தொடர்பு இயக்குனர்கள் (Operators) 12% பெறுமதி

ஆணைக்குழுவின் வருமானம் 2010 - 2011 (அட்டவணை 14.1)

| வருமான மூலம் | 2011 (ரூ.'000) | 2010 (ரூ.'000) |
|---|---|---|
| System இயக்குநர் அனுமதிப் பத்திரக் கட்டணம் | 24,388 | 235,598 |
| செஸ் கட்டணம் | 2,377,597 | 340,095 |
| வானொலி அலைவரிசை அனுமதிப் பத்திரக் கட்டணம் | 6,073,988 | 5,116,864 |
| அலைவரிசை Upfront கட்டணம் | 1,758,967 | - |
| விற்பனையாளர் அனுமதிப் பத்திரக் கட்டணம் | 11,825 | 6,077 |
| பயிலுநர் வானொலி அலைவரிசை அனுமதிப் பத்திரக் கட்டணம் | 52 | 30 |
| கப்பல் நிலைய அனுமதிப் பத்திரக் கட்டணம் | 302 | 296 |
| விமான நிலைய அனுமதிப் பத்திரக் கட்டணம் | 307 | 230 |
| கம்பியற்ற தொலைபேசி முகவர் கட்டணங்கள் | 3,739 | 1,927 |
| பரீட்சைக் கட்டணங்கள் | 13 | 7 |
| விண்ணப்ப செயன்முறைப்படுத்தல் கட்டணங்கள் | 2,245 | 206 |
| Short Code கட்டணங்கள் | 5,612 | 3,608 |
| நானாவித வருமானம் (அதாவது. ஊழியர் கட்டணம் மீதான வட்டி வருமானம், முதலீடு மீதான வட்டி வருமானம், வைப்புக்கள் போன்றன, மற்றும் நானாவிதமானவை) | 87,572 | 8,830 |
| மொத்தம் | 10,346,607 | 5,713,768 |

சேர் வரியாக (VAT) செலுத்த வேண்டியுமிருந்தது. மேலும் 10% செல்லிட மற்றும் நிலையான பாவனையாளர் வரியாகவும் (MSL), 3% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாகவும் (NBT) 2% சூழல் பாதுகாப்பு வரியாகவும் (ECL) 2011 ஜனவரி 01 முதல் நடைமுறைக்கு வந்தது.

அத்துடன் சிஸ்டம் இயக்குநர் மேற்சொன்ன வருமானத்திற்கு மேலாக, 2009இன் 13ம் இலக்க நிதிச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2004இன் 11ம் இலக்க நிதிச்சட்டத்திற்கு அமைவாக ஆணைக்குழுவானது, உள்வரும் சர்வதேச அழைப்புக்கள் மீது தொலைத்தொடர்பாடல் அபிவிருத்திக் கட்டணமாக ஒரு நிமிடத்திற்கு U.S $ 0.30 உம், வெளிச் செல்லும் சர்வதேச அழைப்புக்களுக்கு நிமிடத்திற்கு ரூ.2.00 உம்

சர்வதேச தொலைத்தொடர்புாடல் இயக்குனர்கள் வரி 2010/2011 (அட்டவணை : 14.2)

| வருமான மூலம் | 2011 (ரூ.'000) | 2010 (ரூ.'000) |
|---|---|---|
| தொலைத்தொடர்புாடல் அபிவிருத்திக் கட்டணங்கள் | 1,774,458 | 418,436 |
| சர்வதேச வெளிச் செல்லும் அழைப்புக்கள் மீதான வரி | 1,258,570 | - |

அனுமதிப்பத்திரக் கட்டணம், செஸ் கட்டணம் என்பவற்றுக்குப் பதிலாக அரசாங்கமானது இயக்குநர்களின் மொத்த விற்பனைப் புரள்வில் 2% இணை செஸ் கட்டணமாக அறிமுகப்படுத்தியது.

சர்வதேச தொலைத்தொடர்பாடல் இயக்குநர்களிடமிருந்து அறவிடப்பட்டது. மேற்சொன்ன மூலங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் அட்டவணை 14.2. இல் தரப்படுகிறது.

ஆணைக்குழுவின் மொத்த வருமானம் 2009 - 2011 (அட்டவணை 14.3)

| 2009 (ரூ.'000) | 2010 (ரூ.'000) | 2011 (ரூ.'000) |
|---|---|---|
| 6,091,312 | 5,932,148 | 29,839,187 |

### 14.3.2 செலவை விஞ்சிய வருமானம்

2011 இல் மொத்தமான செலவை விஞ்சிய வருமானம் வரி செலுத்த முன் ரூ.29,350 மில்லியனாகக் காணப்பட்டது. 2010 இல் இது ரூ.5,378 மில்லியனாக அமைந்திருந்தது. ஆயினும் செலுத்தப்பட்ட வருமான வரி 2010 இல் ரூ.1,767 மில்லியனாகவும் இது 2011 இல் 31 மில்லியனாகவும் காணப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கான காரணம் 2007, 2008 ஆண்டுகளுக்கான நிலுவை வரிகள் 2010ல் செலுத்தப்பட்டமையாகும். இதற்கமைய வரிக்குப் பின்னரான செலவை விஞ்சிய வருமானம் 2011 இல் ரூ. 29,319 மில்லியனாகவும் 2010 இல் ரூ.3,611 மில்லியனாகவும் காணப்பட்டது.

### 14.3.3 திரட்டு நிதிக்கான செலுத்தல்கள்

2011 இல், ஆணைக்குழுவானது ரூ.27 பில்லியன் மிகை நிதியை அரசிறைக்கு செலுத்தியதன் மூலம் அரசாங்க வருமானத்திற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை செய்துள்ளது. இது 2010 செலுத்தல்களுடன் ஒப்பிடுகையில் 610% அதிகரிப்பைக் காட்டுகிறது. இவற்றோடு, சர்வதேச செயற்பாட்டாளர் வரி மற்றும் அரச நிறுவக மிகை நிதி தொடர்பில் முறையே ரூ.1.5 பில்லியன், ரூ. 750 மில்லியன் நிதி திரட்டுநிதிக்கு செலுத்தப்பட்டது. இவற்றின்படி திரட்டுநிதிக்கு மாற்றப்பட்ட மொத்த நிதி ரூ.29.25 பில்லியனாக 2011இல் காணப்பட்டது.

### 14.3.4 ஆதனம். இயந்திரம், உபகரணங்கள்

ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணங்களின் தேய்வுக்குப் பின்னரான பெறுமானமானது 2011 ஜனவரி 01 இல் ரூ.305 மில்லியனாகக் காணப்பட்டதுடன் வருட இறுதியில் ரூ.570 மில்லியனாகக் காணப்பட்டது. இதில் சேர்ப்பனவுகளாக தொலைத்தொடர்புக் கோபுரம் ரூ.262 மில்லியன் (கொக்காவில்) ரூ.29.9 மில்லியன் (வவுனியா) ஆகியன தொலைத்தொடர்பு வலையமைப்பு இயக்குநர்களுக்காக வடக்கு மாகாணத்தில் அவர்களது தொலைத்தொடர்பு சேவைகளை விரிவாக்க அமைக்கப்பட்டன. இவ்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கணனிகளின் பெறுமதி ரூ.14.5 மில்லியன், கதிரான நிலையத்தில் கட்டப்பட்ட எல்லைச் சுவர் ரூ. 1.8 மில்லியன் ஆகிய பெறுமதி ஆதன, இயந்திர, உபகரண பெறுமதியுடன் சேர்க்கப்பட்டது. FMMS இன் ரூ.2.9 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் அகற்றப்பட்டதுடன் ரூ.3.1 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் பிரதியீடு செய்யப்பட்டன. ஏனைய சிறிய அளவிலான சேர்ப்பனவுகளுடன் 2011 இற்கான மொத்த பெறுமதி சேர்ப்பனவு ரூ.327.7 மில்லியன் ஆகும்.

### 14.3.5 முதலீடு

ஆணைக்குழுவானது 2011 இல் ரூ.3,034 மில்லியன் நிதியை மீள்கொள்வனவு ஒப்பந்த அடிப்படையில் அரச முறிகளிலும் ரூ.120 மில்லியன் நிதியை மக்கள் வங்கி நிலையான வைப்பிலும் முதலீடு செய்துள்ளது. அத்துடன், சேகரிக்கப்பட்ட தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணத்தில் 50% ஆன ரூ.2.07 பில்லியன் நிதியை அரச நிறுவக தற்காலிக மிகை நம்பிக்கை நிதியத்தில் முதலீடு செய்தது.

## 14.4 ஊழியர்

2011 இல், நிதிப்பிரிவானது தனது தொழிற்பாடுகளை பதில் பணிப்பாளர், உதவிப்பணிப்பாளர், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் 02 முதநிலை உத்தியோகத்தர் உட்பட 11 பேர் கொண்டு மேற்கொண்டது.

# நிதிக் கூற்றுக்கள்

2011 டிசம்பர் 31ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டிக்குரியது

## இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
## 2011 டிசம்பர் 31இல் உள்ளவாறான ஐந்தொகை

(இலங்கை ரூ.வில்)

| | குறிப்பு | | 31/12/10 |
|---|---|---|---|
| **மூலதன ஈடுபடுத்தல்** | | | |
| ஆதனம், பொறி, உபதரணங்கள் | 2 | 570,390,458 | 304,822,367 |
| நடைமுறை வேலை | 3 | 3,237,415 | 258,438,062 |
| | | 573,627,872 | 563,260,429 |
| **முதலீடுகள்** | 4 | 7,412,615,501 | 7,749,665,954 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| மீள்-கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழ் அரச முறிகள் | 4A | 3,034,654,795 | 0 |
| பெறவேண்டிய கணக்குகள் | 5 | 1,671,871,743 | 2,698,708,649 |
| ஏனைய பெறவேண்டியவை | | 610,000 | 610,000 |
| இடர்க் கடன்கள் | | 21,198,207 | 23,165,326 |
| முற்கொடுப்பனவுகள் | | 521,020 | 322,500 |
| விசேட முற்பணங்கள் | | 0 | 13,575 |
| விழா முற்பணங்கள் | | 137,258 | 123,758 |
| மோட்டார் வாகனக் கடன்கள் | | 55,428,682 | 57,005,466 |
| வீடமைப்புக் கடன்கள் | | 5,700,209 | 6,612,609 |
| மோட்டார் சைக்கிள் கடன்கள் | | 1,261,354 | 2,101,329 |
| பெறுமதிசேர் வரி கட்டுப்பாட்டுக் கணக்கு | | 64,408,810 | 0 |
| கொள்வனவு முற்பணங்கள் | | 208,784 | 292,080 |
| பெறவேண்டிய விமானச் சீட்டுக்கள் | | 653,836 | 285,906 |
| பெறவேண்டிய விமானச் சீட்டுக்கள் - உலக வங்கி | | 44,291 | |
| அறவிடவேண்டிய சம்பளக் கழிவுகள் | | 25,587 | 12,982 |
| நிலையான வைப்புகள் மீது பெறவேண்டிய வட்டி | | 47,746,536 | 1,664,313 |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் (உநி.வை.வ) | | 721,197 | 713,080 |
| கோரக்கூடிய பொருளாதார சேவைக் கட்டணங்கள் | | 11,153,596 | 0 |
| பெறவேண்டிய TDC | | 496,320,394 | 0 |
| பெறவேண்டிய IDD | | 178,142,201 | 0 |
| பெறவேண்டிய டெலிகொம் வரிகள் | | 1,418,062,606 | 0 |
| வங்கியிலுள்ள காசு | 6 | 136,059,478 | 1,474,454,041 |

| | | | |
|---|---|---|---|
| கையிலுள்ள காசு | 6B | 96,207 | 16,525 |
| | | 7,145,026,791 | 4,266,102,139 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| செலுத்த வேண்டிய கணக்குகள் | 7 | 43,796,749 | 27,125,752 |
| நிலுவையாக உள்ள ஊழியர் கடன் மீளறவீடுகள் | | 1,175 | 1,175 |
| விசேட முற்பணம் மீதான மேலதிக அறவீடு | | 4,175 | 0 |
| பிற்போடப்பட்ட வருமானம்(நன்கொடைகள்) | | 166,624 | 0 |
| பெறுமதிசேர் வரி கட்டுப்பாட்டுக் கணக்கு | | 0 | 87,450,766 |
| வருமான வரிக்கான ஏற்பாடு | | 30,520,632 | 236,409,096 |
| C.T.O Telecenter நிகழ்ச்சித் திட்டக் கொடுப்பனவுகள் | | 924,492 | 924,492 |
| நிர்மாண கடன்கொடுனர் | | 751,650 | 751,650 |
| முற்கூட்டிப் பெற்ற வருமானம் | | 2,898,667,108 | 2,715,896,911 |
| கேள்விப் பத்திரங்கள் மீதான மீளளிக்கக்கூடிய வைப்புகள் | | 1,173,132 | 1,153,612 |
| மீளளிக்கக்கூடிய வைப்புகள் -ஊழியர்கள் | | 2,086,843 | 0 |
| 1800 MHz Band இற்காகப் பெறப்பட்ட முற்பணங்கள் | | 307,635,000 | 307,635,000 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 23,403,160 | 21,533,040 |
| வினைத்திறனான அனர்த்த முகாமைத்துவ ஒன்றுகூடலுக்கான ICT | | 34,210 | 34,210 |
| திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய 50% TDC | | 248,160,197 | 118,458,552 |
| திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய IDD | | 178,142,201 | 0 |
| திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய Telecom வரி | | 1,420,141,820 | 0 |
| திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய பாவனையாளர் வரி | | 75,335 | 0 |
| திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய சூழல் பாதுகாப்பு வரி | | 423,942 | 0 |
| PSTN சிற்றறைகள் நிர்மாணம் - கொக்காவில் | | 4,135,901 | 0 |
| கோரப்படாத ஊழியர் நலன்கள் | | 55,381 | 7,738 |
| | | 5,160,299,727 | 3,517,381,993 |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | | 1,984,727,064 | 748,720,147 |
| | | 9,970,970,437 | 9,061,646,529 |
| அரச பங்களிப்புகளினூடாக | | | |
| - உலக வங்கிக் கடன் ஒப்பந்தம் | | 298,572,434 | 298,572,434 |
| - ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி | | 19,533,906 | 19,533,906 |
| வேறு அரச பங்களிப்புகள் | | 208,108,404 | 208,108,404 |
| | | 526,214,744 | 526,214,744 |

| | | | |
|---|---|---|---|
| சர்வதேச தொலைத்தொடர்பாடல்கள் | | | |
| இயக்குநர்கள் வரி நிதி | 7A | 6,006,025,299 | 21,254,347,225 |
| கழி: திரட்டு நிதிக்கு மாற்றியது | | 0 | (13,815,293,949) |
| | | 6,006,025,299 | 7,439,053,277 |
| சேர்: | | | |
| ஒன்றுதிரட்டப்பட்ட மிகைகள் | | 3,385,150,394 | 1,042,798,508 |
| மீள்மதிப்பீட்டு மிகைகள் | | 53,580,000 | 53,580,000 |
| | | 9,970,970,437 | 9,061,646,529 |

பக்கம் 6 தொடக்கம் 16 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும் நிதிக் கூற்றின் முக்கியமான வகிபங்குகளைக் கொண்டவை. ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் 2011 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிலையையும் அத் திகதியில் முடிவுற்ற காலப்பகுதிக்கான மிகையையும் உண்மையாகவும் நேர்மையாகவும் தருகின்றன என சான்றளிக்கின்றேன்.

**A.S.ஹப்புஆராச்சி**
உதவிப் பணிப்பாளர் (வருமானம்)
பதில் பணிப்பாளருக்காக (நிதி)

இந் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் வழங்குதலுக்கும் ஆணைக்குழுவே முழுப் பொறுப்பாகும்.
ஆணைக்குழு சார்பில் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டது.

லலித் வீரதுங்க
தவிசாளர்

**U.H.C. பிரியந்த**
பதில் பொதுப் பணிப்பாளர் (நிர்வாகம், கூட்டிணைந்த அலுவலகள் மற்றும் நிதி)
தொலைத்தொடர்பாடல் பொதுப் பணிப்பாளருக்காக

## இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
## டிசம்பர் 31, 2011 இற்கான வருமானக் கூற்று

(இலங்கை ரூ.வில்)

| | குறிப்புகள் | | 31.12.2010<br>மீளக்கூறப்பட்டவை |
|---|---|---|---|
| வருமானம் | 8 | 10,346,606,662 | 5,713,767,654 |
| கழி: தேசத்தைக் கட்டியெழுப்பல் வரி | | (208,215,714) | (200,055,587) |
| | | 10,138,390,948 | 5,513,712,067 |
| சேர்: தொலைத்தொடர்பாடல் வரி | | 16,667,767,978 | 0 |
| சேர்: Telecom அபிவிருத்திக் கட்டணம் | 8B | 1,774,458,353 | 418,436,403 |
| சேர்: சர்வதேச வெளிச்செல்லும் அழைப்பு வரி | | 1,258,570,192 | 0 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | | 29,839,187,471 | 5,932,148,470 |
| கழி: ஒழுங்கமைத்தல் செலவுகள் | 9 | (107,504,532) | (63,894,040) |
| | | 29,731,682,939 | 5,868,254,430 |
| **கழி: ஏனைய செலவினங்கள்** | | | |
| நிர்வாக, தாபன, அமயச் செலவுகள் | 10 | 333,067,055 | 287,338,563 |
| திருத்தமும் பராமரிப்பும் | 11 | 29,617,301 | 34,027,414 |
| நிதியும் ஏனையவையும் | 12 | 2,863,980 | 8,420,405 |
| அறவிட இயலாக் கடன்களுக்கான ஏற்பாடு | | 19,904,080 | 158,553,234 |
| வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல் மீதான (இலாபம்) / நட்டம் | | (1,430,869) | 1,643,316 |
| | | 384,021,548 | 489,982,932 |
| | | 29,347,661,391 | 5,378,271,498 |
| FMMS செயற்றிட்டத்தின் கீழ் பழுதடைந்த அன்டெனா மீதான (நட்டம்) / இலாபம் | | 2,800,053 | 0 |
| இவ்வருட வரிக்கு முன்னரான செலவிலும் கூடிய வருமானம் | | 29,350,461,444 | 5,378,271,498 |
| கழி: வருமான வரி | | (31,771,388) | (1,766,905,489) |

| | | | |
|---|---|---|---|
| இவ் வருட வரிக்குப் பின்னரான செலவிலும் கூடிய வருமானம் | | 29,318,690,056 | 3,611,366,008 |
| கழி: திரட்டு நிதிக்கான பங்களிப்பு Consolidated Fund | 13 | (26,976,338,170) | (3,800,000,000) |
| இவ் வருடத்திற்கான | | | |
| மொத்த செலவிலும் கூடிய வருமானம் | | 2,342,351,886 | (188,633,992) |
| சேர்: முன்கொணரப்பட்ட மிகை/ (குறை) | | 1,042,798,508 | 1,231,432,500 |
| திரண்ட மிகை / (குறை) | | 3,385,150,394 | 1,042,798,508 |

## இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
## 2011 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான காசுப் பாய்ச்சற் கூற்று

(இலங்கை ரூ.வில்)

| | | |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மீதான காசுப் பாய்ச்சல் | | |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம் | | 29,350,461,445 |
| சீராக்கங்கள் | | |
| ஆதனம், பொறி, உபகரணம் மீதான பெறுமானத் தேய்வு | 62,114,591 | |
| அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன் ஏற்பாடு | 19,904,080 | |
| பணிக்கொடை ஏற்பாடு | 2,663,638 | |
| தொலைத்தொடர்பாடல் வரிக்கான ஏற்பாடு | | |
| சர்வதேச வெளிச்செல்லும் அழைப்பு வரிக்கான ஏற்பாடு | | |
| FMMS செயற்றிட்ட பழுதடைந்த அன்டெனா மீதான இலாபம் | (2,800,053) | |
| வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல் மீதான இலாபம் | (1,430,869) | 80,451,387 |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | | 29,430,912,832 |
| தொழிற்படு மூலதன மாற்றங்கள் | | |
| மீள்கொள்வனவு ஒப்பந்தத்தின் அடிப்படையிலான அரச முறிகளின் அதிகரிப்பு | (3,034,654,795) | |
| அட்டுறுப் பெறுவனவுகளின் குறைவு | 1,006,932,825 | |
| இடர்கடன்களின் குறைவு | 1,967,119 | |
| முற்கொடுப்பனவுகளின் அதிகரிப்பு | (198,520) | |
| விசேட முற்பணங்களின் குறைவு | 13,575 | |
| விழா முற்பணங்களின் அதிகரிப்பு | (13,500) | |
| மோட்டார் வாகன கடன்களின் குறைவு | 1,576,784 | |
| வீட்டுக் கடன்களின் குறைவு | 912,400 | |
| மோட்டார் சைக்கிள் கடன்களின் குறைவு | 839,975 | |
| VAT கட்டுப்பாட்டுக் கணக்கில் அதிகரிப்பு | (64,408,810) | |
| கொள்வனவு முற்பணங்களின் குறைவு | 83,296 | |
| விமான சீட்டு பெறவேண்டியவைகளில் அதிகரிப்பு | (367,930) | |
| விமான சீட்டு பெறவேண்டியவைகளில் அதிகரிப்பு - உலக வங்கி | (44,291) | |
| சம்பளக் குறைப்பின் மீளறவீடு அதிகரிப்பு | (12,605) | |
| நிலையான வைப்பு வட்டி மீதான அதிகரிப்பு | (46,082,224) | |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கான அதிகரிப்பு (WHT) | (8,117) | |
| மீளறவிடக்கூடிய பொருளாதாரக் கட்டணங்கள் அதிகரிப்பு | (11,153,596) | |

| | | |
|---|---|---|
| TDC பெறவேண்டியவைகளில் அதிகரிப்பு | (496,320,394) | |
| IDD பெறவேண்டியவைகளில் அதிகரிப்பு | (178,142,201) | |
| பெறவேண்டிய Telecom வரி அதிகரிப்பு | (1,418,062,606) | |
| அட்டுறுக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு | 16,670,997 | |
| விசேட முற்பணங்களின் மேலதிக அறவீட்டில் அதிகரிப்பு | 4,175 | |
| பிற்போடப்பட்ட வருமானத்தில் அதிகரிப்பு (மானியம்) | 166,624 | |
| VAT கட்டுப்பாட்டுக் கணக்கில் குறைவு | (87,450,766) | |
| முற்பண வருமானப் பெறுவனவுகளில் அதிகரிப்பு | 182,770,197 | |
| கேள்வியறிவித்தல் மீதான மீளளிக்கக்கூடிய வைப்புக்களின் அதிகரிப்பு | 19,520 | |
| மீளளிக்கக்கூடிய வைப்புக்களில் அதிகரிப்பு - ஊழியர்கள் | 2,086,843 | |
| திறைசேரிக்கு செலுத்தவேண்டிய 50% TDS அதிகரிப்பு | 129,701,645 | |
| திறைசேரிக்கு செலுத்தவேண்டிய IDD இல் அதிகரிப்பு | 178,142,201 | |
| திறைசேரிக்கு செலுத்தவேண்டிய டெலிகொம் வரி அதிகரிப்பு | 1,420,141,820 | |
| திறைசேரிக்கு செலுத்தவேண்டிய பாவனையாளர் வரி அதிகரிப்பு | 75,335 | |
| திறைசேரிக்கு செலுத்தவேண்டிய சூழல் பாதுகாப்பு வரி அதிகரிப்பு | 423,942 | |
| PSTN சிற்றறைகள் கட்டுமான அதிகரிப்பு - கொக்காவில் | 4,135,901 | |
| கோரப்படாத ஊழியர் நலன்களில் அதிகரிப்பு | 47,643 | (2,390,207,537) |
| | | 27,040,705,295 |
| பெற்ற காப்பீட்டுத் தொகை | 2,800,053 | |
| செலுத்திய பணிக்கொடை | (702,667) | |
| வருமான வரி செலுத்தியது | (235,021,450) | (232,924,064) |
| செயற்பாட்டு நடவடிக்கைகள் ஊடான தேறிய காசு | | 26,807,781,231 |

## இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
## 2011 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான காசுப் பாய்ச்சற் கூற்று
(இலங்கை ரூ.வில்)

| | | |
|---|---|---|
| முதலீட்டு நடவடிக்கைகள் மீதான காசுப்பாய்ச்சல்கள் | | |
| நிலம் | (2,121,668) | |
| கட்டடங்கள் | (4,875,683) | |
| கணனிகள் | (14,502,046) | |
| ஏனைய அலுவலக உபகரணங்கள் | (892,970) | |
| செல்லிடப் பேசிகள் | (79,990) | |
| அலுவலகத் தளபாடம் | (55,944) | |
| FMMS செயற்றிட்ட உபகரணங்கள் | (3,117,726) | |
| கொக்காவில் கோபுரம் | (40,047,981) | |
| வவுனியா கோபுரம் | (3,598,126) | |
| கட்டுமான வேலை | (3,057,415) | |
| திரட்டு நிதிக்கு அனுப்பியது | (26,976,338,170) | |
| அரச நிறுவன தற்காலிக மிகை நம்பிக்கை நிதி - 1 | 2,526,146,864 | |
| அரச நிறுவன தற்காலிக மிகை நம்பிக்கை நிதி - 2 | (2,066,859,752) | |
| சர்வதேச தொலைத்தொடர்பாடல்கள் இயக்குநர் கட்டண நிதி | (1,433,027,978) | |
| முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் | | (28,144,665,244) |
| காசிலும் காசுக்குச் சமமானவற்றிலும் தேறிய அதிகரிப்பு | | (1,336,884,012) |

காசு மற்றும் காசுக்குச் சமமானவையின் பகுப்பு

| | 31.12.2011 | 01.01.2011 | காலப்பகுதிக்குள் ஏற்பட்ட மாற்றம் |
|---|---|---|---|
| வங்கியிலுள்ள காசு | | | |
| மக்கள் வங்கி – நாரஹேன்பிட்டி கிளை நடைமுறைக் கணக்கு இல.119-1-001-4-3693169 (சேகரிப்புக் கணக்கு) | 45,134,200 | 694,399,600 | (649,265,400) |
| இலங்கை வங்கி - நாரஹேன்பிட்டி கிளை, நடைமுறைக் கணக்கு இல.2323167 | 10,432,641 | 136,349,004 | (125,916,363) |
| மக்கள் வங்கி – நாரஹேன்பிட்டி கிளை, நடைமுறைக் கணக்கு இல.119-1-001-4-3693264 (ITO கட்டணம்) | 22,913,151 | 588,824,192 | (565,911,041) |

| | | | |
|---|---|---|---|
| மக்கள் வங்கி – நாரஹேன்பிட்டி கிளை, க/கு இல 119/RFC/ SA/ USD/0032 | 57,579,486 | 54,881,245 | 2,698,241 |
| | 136,059,478 | | 1,474,454,041 |
| | (1,338,394,563) | | |
| கையிலுள்ள காசு | 96,207 | 16,525 | 79,682 |
| முன் அறிக்கையிட்டபடி காசும் காசுக்கு சமமானவையும் | 136,155,685 | 1,474,470,566 | (1,338,314,881) |
| நாணய மாற்றுவீத விளைவுகள் | 0 | 0 | (1,430,869) |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 136,155,685 | 1,474,470,566 | (1,336,884,012) |

## இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு கணக்குகளுக்கான குறிப்புகள் -31.12.2011

### 1. கணக்கீட்டுக் கொள்கைகள்

#### 1.1 பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

1.1.1 **TRCSL** இன் நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் விதிக்கப்பட்ட பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு நியமங்கள் என்பவற்றுக்கேற்ப வரலாற்றுக் கிரயக் கோட்பாட்டின் கீழ் தயாரிக்கப்படுகின்றன. இக் கணக்குகளைப் பாதிக்கும் பணவீக்கக் காரணிகளுக்கு எவ்வித சீராக்கமும் செய்யப்படவில்லை.

#### 1.1.2 ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகைத் திகதிக்குப் பின்னரான சகல பொருண்மையான நிகழ்வுகளும் கருத்திலெடுக்கப்பட்டு தேவையான இடங்களில் கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### 1.1.3 வெளிநாட்டு நாணய மாற்று

சகல வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்களும் அக் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்ந்த நேரத்தில் நிலவிய நாணய மாற்று விகிதத்தில் மாற்றப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்திலுள்ள சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகைத் திகதியில் நிலவும் நாணய மாற்று விகிதங்களில் மாற்றப்படுகின்றன. இதனால் விளையும் இலாபங்களும் நட்டங்களும் வருமான செலவுக் கணக்கில் அடக்கப்படுகின்றன.

#### 1.1.4 முன்னைய ஆண்டுச் சீராக்கங்கள்

முன்னைய ஆண்டுச் சீராக்கங்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமம் இல. 10இல் (காலப் பகுதிக்கான தேறிய இலாபம் அல்லது நட்டம், அடிப்படை வழுக்கள், கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் என்பன) குறிப்பிடப்பட்ட ஒப்பீட்டடிப்படை முறையில் மாற்றப்படுகின்றன.

#### 1.2 சொத்துக்கள் விலைமதித்தல்

#### 1.2.1 பெறவேண்டிய கணக்குகள்

பெறவேண்டிய கணக்குகள் அவை தேறத்தக்க மதிப்பிடப்பட்ட தொகைகளில் கூறப்படுகின்றன. அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு செய்யப் படுகின்றது.

#### 1.2.2 ஆதனம், பொறி, உபகரணங்கள் என்பன

1.2.2.2 ஆதனம், பொறி, உபகரணங்கள் என்பவற்றின் கிரயம் என்பது கொள்வனவு அல்லது நிறுவுதற் கிரயம் என்பவற்றுடன் அதற்கான ஏதாவது அமயச் செலவுகளுமாகும். கீழே 1.2.3இல் குறிப்பிடப்பட்ட அடிப்படைகளில் ஏற்பாடு செய்யப்பட்ட திரண்ட பெறுமானத் தேய்வு கழித்த கிரயத்தில் (அல்லது விலைமதிப்பில்) ஆதனம், பொறி, உபகரணங்கள் என்பன பதிவு செய்யப்படுகின்றன.

1.2.2.2 ஆணைக்குழுவின் முழுமையாகப் பெறுமதித் தேய்விடப்பட்ட வாகனங்கள் மீளவிலைமதிக்கப்பட்டு 2010இல் ஆணைக்குழுவின் கணக்கேடுகளிற்குக் கொண்டுவரப்பட்டன. மொத்தமாக ஆணைக்குழுவின் 28 வாகனங்கள் ரூ. 53,580,000/- இற்கு மீளவிலைமதிக்கப்பட்டன

1.2.2.3 சர்வதேச அபிவிருத்திக் கழக கடன் உடன்படிக்கையின் கீழ் உரித்தாக்கப்பட்ட ஆதனம், பொறி, உபகரணங்கள் என்பன மூலதனமாக்கப்பட்டன.

#### 1.2.3 பெறுமானத் தேய்வு

பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடு ஆதனம், பொறி, உபகரணங்களின் கிரயம் அல்லது பெறுமானத்தினை அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்துக்குள் சமமான தவணைகளில் கழித்தெழுதும் பொருட்டு கீழே காட்டப்பட்டவாறு கணக்கிடப்பட்டது.

**ஆதனம், பொறி, உபகரணங்கள் என்பவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம்**

| | |
|---|---|
| கட்டடங்கள் | 20 வருடங்களுக்கு மேல் |
| தளபாடமும் பொருத்துக்களும் | 10 வருடங்களுக்கு மேல் |
| டெலிகொம் கோபுரம் | 10 வருடங்களுக்கு மேல் |
| அலுவலக உபகரணம் | 10 வருடங்களுக்கு மேல் |
| கணினிகள்/வெப் சேர்வர்கள் | 04 வருடங்களுக்கு மேல் |
| மோட்டார் வாகனங்கள் | 08 வருடங்களுக்கு மேல் |
| மின்பிறப்பாக்கிகள் | 10 வருடங்களுக்கு மேல் |
| அலுவலக தொலைபேசிகள் | 10 வருடங்களுக்கு மேல் |
| அலுவலக தளபாடங்கள் | 10 வருடங்களுக்கு மேல் |
| தொழிநுட்ப உபகரணங்கள் | 10 வருடங்களுக்கு மேல் |
| வீடியோ பிரிவு உபகரணங்கள் | 10 வருடங்களுக்கு மேல் |
| FMMS உபகரணங்கள் | 10 வருடங்களுக்கு மேல் |
| நடமாடும் அவதானிப்பு வாகனங்கள் | 08 வருடங்களுக்கு மேல் |

கொள்வனவு ஆண்டில் முழுமையாக ஏற்பாடு செய்யப்படுவதுடன் அகற்றுதல் ஆண்டில் ஏற்பாடு செய்யப்படுவதில்லை.

பெறுமானத் தேய்வு கணிக்கும்போது இலங்கைக் கணக்கீட்டு நியமம் இல. 24இன்படி மானிய நிதியிடப்பட்ட சொத்துக்களுக்காக செலவு வைக்கப்படுகின்றது.

### 1.2.4 முதலீடுகள்

முதலீடுகள் அவை பெறப்பட்ட கிரயத்தில் கூறப்படுகின்றன. முதலீடுகளின் பெறுமதியில் நிரந்தரமான குறைவு ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்டால் மாத்திரமே அதற்கான ஏற்பாடு செய்யப்படுகின்றது.

## 1.3 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

ஐந்தொகைத் திகதியிலான எல்லாப் பொருண்மையான பொறுப்புக்களும் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன், இருப்பதாக அறியப்பட்ட, ஆனால் சரியான தொகை தீர்மானிக்கப்பட முடியாத பொறுப்புகளுக்காக போதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1.3.1 மூலதனப் பொறுப்பும், நிகழத்தக்கவையும்

ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறான மூலதனச் செலவுப் பொறுப்புக்களும், நிகழத்தக்க பொறுப்புக்களும் கணக்குகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

1.3.2 சர்வதேச அபிவிருத்திக் கழகம் (IDA)

**IDA** கடன் உடன்படிக்கையின் கீழ் பெறப்பட்ட நிதிகள் இலங்கைக் கணக்கீட்டு நியமம் இல. 24 – அரசாங்க மானியங்கள் மற்றும் அரசாங்க உதவி என்பதன்படியான மூலதன அணுகுதலின்படி கணக்கிடப்பட்டன.

## 1.4 வருமானமும் செலவினமும்

வருமானமானது இலங்கைக் கணக்கீட்டு நியமம் இல.29இன்படி அட்டுறு அடிப்படையில் முதன்மையாக மதிக்கப்படுகின்றது.

1.4.1 செஸ் மற்றும் இயக்குநர் கட்டணங்கள் ஒரு நூற்றுவீதத்தில் முறையே இயக்குநர்களின் புரள்வு மற்றும் மேலதிக முதலீடு என்பதன் மேல் விதிக்கப்பட்டு இயக்குநர்களின் நிதியாண்டிற்குப் பின்னர் சேகரிக்கப்படுகின்றது.

இயக்குநர்களதும், ஆணைக்குழுவினதும் நிதியாண்டுத் திகதிகள் வேறுபடுவதால், கணக்குகளில் வருமானம் அட்டுறு அடிப்படையில் அடையாளம் காணப்படுவதை உறுதிப்படுத்தும் முகமாக செஸ் மற்றும் இயக்குநர் கட்டணங்கள் கிடைக்கப் பெற்ற மிகக் கிட்டிய தகவல்களின்படி தயாரிக்கப்பட்ட எதிர்வுகூறல்களின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன.

மேற்கூறிய கணக்கீட்டு மதிப்பீட்டில் மாற்றத்திற்கான தாக்கம் மொத்த செலவை விஞ்சிய வருமானத்தைத் தீர்மானிப்பதில் உள்ளடக்கப்பட்டன. 2010இல் தாக்கம் பின்வருமாறு:

| | 2010 ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட வருமானம் | 2010 ஆம் ஆண்டுக்கான உண்மையான வருமானம் | கணக்கீட்டு மதிப்பீட்டில் தாக்கம் அல்லது மாற்றம் |
|---|---|---|---|
| இயக்குநர் கட்டணங்கள் | 603,406,071.28 | 404,371,295.42 | 199,034,775.86 |
| செஸ் கட்டணங்கள் | 390,933,786.47 | 384,695,021.67 | 6,238,764.80 |

### 1.4.2 அரசாங்க மானியங்கள்

வருமானத்துடன் தொடர்புடைய மானியங்கள் அவை பெறப்படவேண்டிய ஆண்டில் வருமான செலவுக் கணக்கில் காட்டப்படுகின்றன.

**ஆதனம், பொறி, உபகரணங்கள்**

| கிரயம் | 1.1.2011 இல் மீதி | 2011 ஆம் ஆண்டிற்கானது சேர்ப்பனவு | அகற்றல்/ இடமாற்றம் | 31.12.2011 இல் மீதி |
|---|---|---|---|---|
| காணிகள் | 136,475,810 | 11,759,762 | 0 | 148,235,572 |
| குத்தகைக் காணிகள் | 345,502 | 0 | 0 | 345,502 |
| கட்டடங்கள் | 133,274,155 | 4,875,683 | 0 | 138,149,837 |
| கொக்காவில் கோபுரம் | 0 | 262,497,819 | 0 | 262,497,819 |
| வவுனியா கோபுரம் | 0 | 29,900,741 | 0 | 29,900,741 |
| வாகனங்கள் | 104,157,002 | 0 | 0 | 104,157,002 |
| குளிரூட்டிகள் | 8,972,573 | 0 | 0 | 8,972,573 |
| தூக்கிகள் (Elevators) | 4,683,848 | 0 | 0 | 4,683,848 |
| மின்பிறப்பாக்கிகள் | 2,665,428 | 0 | 0 | 2,665,428 |
| கணனிகள் | 35,407,534 | 14,502,046 | 0 | 49,909,580 |
| வெப் சேர்வர்கள் | 2,213,661 | 0 | 0 | 2,213,661 |
| ஏனைய அலுவலக உபகரணங்கள் | 17,514,612 | 892,970 | 0 | 18,407,582 |
| செல்லிடப்பேசிகள் | 542,086 | 79,990 | 0 | 622,076 |
| அலுவலக தளபாடம் | 11,461,760 | 55,944 | 0 | 11,517,704 |
| தொழிநுட்ப உபகரணம் | 15,601,280 | 0 | 0 | 15,601,280 |
| FMMS செயற்றிட்ட கண்காணிப்பு வாகனங்கள் | 5,800,000 | 0 | 0 | 5,800,000 |
| FMMS செயற்றிட்ட உபகரணங்கள் | 303,615,202 | 3,117,726 | 2,913,800 | 303,819,128 |
| வீடியோ பிரிவு உபகரணங்கள் | 6,541,475 | 0 | 0 | 6,541,475 |
| | 789,271,927 | 327,682,681 | 2,913,800 | 1,114,040,808 |

| பெறுமானத் தேய்வு | 1.1.2011 இல் மீதி | 2011 ஆம் ஆண்டிற்கானது சேர்ப்பனவு | அகற்றல்/ இடமாற்றம் | 31.12.2011 இல் மீதி |
|---|---|---|---|---|
| காணிகள் | 77,237,806 | 7,072,107 | 0 | 84,309,913 |
| கொக்காவில் கோபுரம் | 0 | 26,249,782 | 0 | 26,249,782 |
| வவுனியா கோபுரம் | 0 | 2,990,074 | 0 | 2,990,074 |

| | | | | |
|---|---|---|---|---|
| வாகனங்கள் | 30,287,550 | 12,936,813 | 0 | 43,224,363 |
| குளிரூட்டிகள் | 7,498,608 | 247,394 | 0 | 7,746,003 |
| தூக்கிகள் (Elevators) | 4,683,848 | 0 | 0 | 4,683,848 |
| மின்பிறப்பாக்கிகள் | 2,665,428 | 0 | 0 | 2,665,428 |
| கணனிகள் | 27,247,375 | 7,587,305 | 0 | 34,834,680 |
| வெப் சேர்வர்கள் | 2,213,661 | 0 | 0 | 2,213,661 |
| ஏனைய அலுவலக உபகரணங்கள் | 12,564,053 | 998,973 | 0 | 13,563,026 |
| செல்லிடபேசிகள் | 295,452 | 52,959 | 0 | 348,410 |
| அலுவலக தளபாடம் | 6,749,010 | 883,504 | 0 | 7,632,514 |
| தொழிநுட்ப உபகரணம் | 5,021,056 | 1,366,357 | 0 | 6,387,413 |
| FMMS செயற்றிட்ட கண்காணிப்பு வாகனங்கள் | 725,000 | 725,000 | 0 | 1,450,000 |
| FMMS செயற்றிட்ட உபகரணங்கள் | 301,723,637 | 639,654 | 2,913,800 | 299,449,491 |
| வீடியோ பிரிவு உபகரணங்கள் | 5,537,077 | 364,669 | 0 | 5,901,746 |
| | **484,449,560** | **62,114,591** | **2,913,800** | **543,650,350** |
| **தேறிய புத்தகப் பெறுமதி** | **304,822,367** | | | **570,390,458** |

குறிப்புக்கள்:

ரூ. 136,475,809.75 ஆன காணி சொத்துக்குள் நீர்கொழும்பு கதிரான எனுமிடத்தில் அமைந்துள்ள காணி ரூ. 45,000,000 என்பது உள்ளடங்குகின்றது. இக் காணியின் பரப்பு 112 ஏக்கர் 01 ரூட் 10.5 பேர்ச். ஏறத்தாழ 50% ஆன காணிப்பரப்பு கட்டான பிரதேச செயலாளரால் சுவீகரிக்கப்பட்டுள்ளது. ஆயினும் சுவீகரிப்பு காரணமாக பெறுமதியில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவுகள் கணக்கேடுகளில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

நடைமுறை வேலை

| | 1.1.2011 இல் மீதி | 2011 ஆம் ஆண்டிற்கானது சேர்ப்பனவு | அகற்றல்/ இடமாற்றம் | 31.12.2011 இல் மீதி |
|---|---|---|---|---|
| எல்லை சுவர் கட்டுமானம் - கதிரான | 9,638,094 | 2,121,668 | 11,759,762 | 0 |
| வரவேற்பறை, பிரதான தலைமை அலுவலக கட்டட திருத்தம் | 180,000 | 0 | 0 | 180,000 |
| கோபுரம் அமைத்தல் - வவுனியா | 26,302,615 | 0 | 26,302,615 | 0 |
| கோபுரம் அமைத்தல் - கொக்காவில் | 222,234,637 | 0 | 222,234,637 | 0 |
| கோபுரம் அமைத்தல் - பேலியகொட | 82,716 | 0 | 82,716 | 0 |
| குளியலறை திருத்தம் | 0 | 3,057,415 | 0 | 3,057,415 |
| | **258,438,062** | **5,179,083** | **260,379,730** | **3,237,415** |

## 4 முதலீடுகள்

| | | |
|---|---|---|
| திறைசேரி வைப்புக்கள் | 354,000,000 | 354,000,000 |
| நிலையான வைப்புக்கள் (பணிக்கொடை ஏற்பாடு) | 21,533,040 | 19,296,380 |
| அரச நிறுவக தற்காலிக மிகை நம்பிக்கை நிதி - 1 | 4,850,222,710 | 7,376,369,574 |
| அரச நிறுவக தற்காலிக மிகை நம்பிக்கை நிதி - 2 | 2,066,859,752 | 0 |
| நிலையான வைப்பு - மக்கள் வங்கி | 120,000,000 | 0 |
| | **7,412,615,501** | **7,749,665,954** |

## 4A மீள்கொள்வனவு அடிப்படையிலான அரசாங்க முறிகள்

| முதிர்வுத் திகதி | நாட்கள் | முதிர்வுப் பெறுமதி (ரூ) | கிரயம் (ரூ) |
|---|---|---|---|
| M11B-014065 - 06.01.2012 | 91 | 2,071,685,512 | 2,034,654,795 |
| M11B-015372 - 02.02.2012 | 91 | 1,018,075,342 | 1,000,000,000 |
| | | **3,089,760,854** | **3,034,654,795** |

## 5 பெறவேண்டியவைகள்

வியாபார கடன்படுநர்கள்

| | | | |
|---|---|---|---|
| Radio Frequency கட்டணம் | 1,759,562,017 | | 2,159,744,356 |
| இயக்குநர் கட்டணம் | 0 | | 404,371,295 |
| செஸ் கட்டணம் | 188,558,253 | | 390,933,786 |
| Amature Radio | 18,486 | | 22,144 |
| | 1,948,138,756 | | 2,955,071,581 |
| கழி – அறவிடமுடியா கடன்படுநர் மீதான ஏற்பாடு ** | (276,267,013) | | (256,362,932) |
| | **1,671,871,743** | | **2,698,708,649** |

குறிப்பு:

| அறவிடமுடியாக் கடன்படுநருக்கான ஏற்பாடு | கடன்படுநர் | % | **கடன்படுநர்** |
|---|---|---|---|
| 02 வருடத்திற்கு மேல் | 271,589,570 | 100 | 271,589,570 |
| 01 வருடத்திற்கு மேல் 02 வருடத்திற்குள் | 46,774,427 | 10 | 4,677,443 |
| 06 மாதத்திற்கு மேல் 01 வருடத்திற்குள் | 119,216,585 | 0 | 0 |
| 02 மாதத்திற்கு மேல் 06 மாதத்திற்குள் | 951,726 | 0 | 0 |
| 01 மாதத்திற்கு மேல் 02 மாதத்திற்குள் | 209,696,754 | 0 | 0 |
| 01 மாதத்திற்குள் | 1,111,351,446 | 0 | 0 |
| | **1,759,580,508** | | **276,267,013** |

குறிப்பு:

** ஆணைக்குழுவின் வருமானத்தை அட்டுறு அடிப்படையில் கணிப்பிடுவதால் இயக்குநர் கட்டணமும் செஸ் கட்டணமும் அனுமானத்தின் அடிப்படையில் கணக்கிலெடுக்கப்பட்டது. மேற்சொன்ன தொகைகள் கடன்படுநர் தொடர்பாகவே காட்டப்பட்டுள்ளதுடன் இயக்குநர் கட்டண மற்றும் செஸ் கட்டண கடன்படுநர் தொடர்பான அறவிடமுடியா கடன்படுநருக்கு எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை.

## இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
## கணக்கீட்டுக் குறிப்புகள் - 31.12.2011 (தொடர்ச்சி )
(இலங்கை ரூ.வில்)

| | | 31.12.2010 |
|---|---|---|
| **6 வங்கியிலுள்ள காசு** | | |
| மக்கள் வங்கி – நாரஹன்பிட்டி கிளை | | |
| (வைப்புக் கணக்கு)<br>க/கு இல: 119/RFC/SA/USD/0032 | 57,579,486 | 54,881,245 |
| மக்கள் வங்கி – நாரஹன்பிட்டி கிளை<br>(சேகரிப்புக் கணக்கு)<br>நடைமுறைக் க/கு இல: 119-1-001-4-3693169 | 45,134,200 | 694,399,600 |
| மக்கள் வங்கி - நாரஹன்பிட்டி கிளை,<br>(ITO வரி)<br>நடைமுறைக் க/கு இல: 119-1-001-3-3693264 | 22,913,151 | 588,824,192 |
| இலங்கை வங்கி - நாரஹன்பிட்டி கிளை<br>நடைமுறைக் க/கு இல: 2323167 | 10,432,641 | 136,349,004 |
| | **136,059,478** | **1,474,454,041** |
| **6B கையிலுள்ள காசு** | | |
| சில்லறைக் காசு - தலைமை அலுவலகம் | 10,000 | 6,573 |
| சில்லறைக் காசு - கதிரான | 5,000 | 2,075 |
| கையிலுள்ள காசு (சேகரிப்புக் கணக்கு | 25,826 | 140 |
| கோரப்படா ஊழியர் நலன்கள் | 55,381 | 7,738 |
| | **96,207** | **16,525** |
| **7 செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| அட்டுறு செலவுகள் | | |
| தொலைபேசி | | |
| - அலுவலகம் | 340,250 | 315,499 |
| - பங்களா | 47,472 | 58,339 |
| சம்பளக் கட்டுப்பாடு (ஒப்பந்த ஊழியர்கள்) | 902,833 | 749,020 |
| செலுத்தவேண்டிய சம்பளம் | 112,884 | 74,197 |
| மின்சாரம் | 2,355,547 | 22,626 |
| நீர் | 79,362 | 14,832 |
| சுகாதார சேவைகள் | 973,023 | 463,237 |
| பாதுகாப்புச் சேவைகள் | 1,461,411 | 1,375,232 |
| மிகைநேரம் | 467,780 | 688,034 |
| ஊ.சே.நி | 177,208 | 134,681 |
| ஊ.ந.நி | 21,265 | 16,162 |
| இணையம் | 0 | 2,849 |

அட்டுறு செலவுகள் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| வைத்திய காப்புறுதி கோரிக்கைகள் | 236,586 | 78,064 |
| ஊழியர் நலன்புரி | 203,524 | 174,067 |
| செய்தித்தாள்களும் அறிவித்தல்களும் | 137,485 | 37,080 |
| கணக்காய்வுக் கட்டணம் | 1,571,400 | 1,031,400 |
| குத்தகை வாடகை | 660,000 | 763,090 |
| மிகை ஊதியம் | 1,421,375 | 0 |
| | | 31.12.2010 மீளக்கூறப்பட்டவை |
| தடுத்துவைத்தல் | 178,864 | 40,595 |
| 2/3 வட்டி மீளளிப்பு | 292,263 | 124,199 |
| உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆ.நா ( ESC,NBT மற்றும் முத்திரை வரி) | 22,171,626 | 15,776,220 |
| சம்பளக் கழிவீடுகள் | 51,454 | 61,305 |
| திருத்தங்கள், பராமரிப்பு கொடுப்பனவுகள் | 8,743,485 | 2,568,172 |
| எரிபொருள் கொடுப்பனவு | 105,444 | 33,933 |
| அச்சிடலும் காகிதாதிகளும் | 0 | 176,140 |
| நிறுத்திவைத்தல் வரி கொடுப்பனவு (WHT) | 0 | 101,056 |
| தவிசாளர் வேதன கொடுப்பனவு | 0 | 0 |
| நானாவித கொள்வனவும் வழங்கலும் (அட் 1) | 984,209 | 2,175,519 |
| நானாவிதம் | 100,000 | 70,205 |
| | **43,796,749** | **27,125,752** |

**7A சர்வதேச தொலைத்தொடர்பாடல் இயக்குநர் வரி நிதி**

| | | |
|---|---|---|
| சர்வதேச தொலைத்தொடர்பாடல் இயக்குநர் வரி நிதி கணக்கு இல.1 | 5,939,165,547 | 7,439,053,277 |
| சர்வதேச தொலைத்தொடர்பாடல் இயக்குநர் வரி நிதி கணக்கு இல.2 | 66,859,752 | 0 |
| | **6,006,025,299** | **7,439,053,277** |

**8 வருமானம்**

| | | |
|---|---|---|
| முறைமை இயக்குநர் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 24,387,756 | 235,597,831 |
| செஸ் கட்டணங்கள் | 2,377,597,067 | 340,094,900 |
| Radio Frequency கட்டணங்கள் | 6,073,987,753 | 5,116,864,419 |
| Frequency Upfront கட்டணங்கள் | 1,758,967,041 | 0 |
| விற்பனையாளர் அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 11,824,746 | 6,076,575 |
| Amateur வானொலி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 51,556 | 29,513 |

| | | |
|---|---|---|
| கப்பல் நிலைய அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 302,378 | 295,522 |
| விமான நிலைய அனுமதிப் பத்திரம் | 306,939 | 229,917 |
| கம்பியில்லாத் தொலைபேசி முகவர் கட்டணங்கள் | 3,738,658 | 1,927,123 |
| பரீட்சைக் கட்டணங்கள் | 13,293 | 7,462 |
| விண்ணப்ப செயன்முறைப்படுத்தற் கட்டணங்கள் | 2,244,902 | 206,186 |
| Short Code கட்டணங்கள் | 5,612,292 | 3,608,248 |
| நானாவித வருமானம் (8 A) | 87,572,282 | 8,829,957 |
| | **10,346,606,662** | **5,713,767,654** |

**8A ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| ஊழியர் கடன்கள் மீதான வட்டி வருமானம் | 3,624,327 | 3,715,789 |
| வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் | 83,782,577 | 5,030,159 |
| ஏனைய வருமானம் (வழங்கல்) | 55,541 | 0 |
| நானாவிதம் | 109,836 | 84,010 |
| | **87,572,282** | **8,829,957** |

**8B டெலிகொம் அபிவிருத்திக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| TDC வருமானம் | 3,548,916,707 | 836,873,072 |
| கழி: | | |
| திறைசேரிக்கு செலுத்திய *50% TDC* | (1,526,298,157) | (299,978,117) |
| திறைசேரிக்கு செலுத்தவேண்டிய *50% TDC* | (248,160,197) | (118,458,552) |
| | **1,774,458,353** | **418,436,403** |

**9 ஒழுங்கமைத்தல் செலவுகள்**

| | | |
|---|---|---|
| ITU வருடாந்த சந்தா | 19,671,086 | 17,263,718 |
| APT வருடாந்த சந்தா | 1,398,845 | 1,438,896 |
| SAFIR வருடாந்த சந்தா | 693,113 | |
| நூலக வருடாந்த சந்தா | 5,343 | 95,631 |
| CTO வருடாந்த சந்தா | 8,674,659 | 3,506,303 |
| தேசிய இலக்கமிடல் தரவுத்தளம் | 0 | 25,250 |
| பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்வுகள் | 1,600,780 | 562,156 |
| ஒழுங்கமைத்தல் அலுவல்களில் பங்கேற்றல் | 13,836,866 | 14,570,323 |
| நீதிமன்ற நடவடிக்கைகளில் வழக்குத் தொடுத்தலும் வழக்காடுதலும் | 1,283,957 | 1,458,146 |
| டெலிகொம் அபிவிருத்தியில் பொதுமக்கள் விழிப்புணர்வு | 1,102,115 | 79,583 |
| வலையமைப்பு அபிவிருத்தி மேற்பார்வை | 33,761 | 629,430 |
| செல்லிட் மற்றும் தொலைக்காட்சி கம்பிகளை கண்காணித்தல் | 31,076 | 1,688,751 |
| ஆய்வுக் கற்கைகளை நடத்துதல் | 0 | 45,999 |

| | | |
|---|---|---|
| பாடசாலை இணைப்பு /Con.Commu. | 258,722 | 0 |
| SATRC கூட்டம் | 7,047,306 | 12,561,418 |
| SATRC செயற்பாட்டுத் திட்டத்திற்கான பங்களிப்பு | 0 | 263,973 |
| டெலிசென்ரர் செயற்றிட்டம் | 0 | 1,102,977 |
| விசேட தேவையுள்ளோருக்கான தொடர்பாடல் வசதிகள் | 645,854 | 314,524 |
| டெலிகொம் தொடர்பான ஆய்வுகள் | 250,000 | 0 |
| சமூகப் பொறுப்பு | 1,010,000 | 0 |
| வெளிநாட்டுப் பிரமுகர்களின் வருகை | 52,783 | 1,262,633 |
| இணைய வேகப் பரிசோதனை | 159,697 | 0 |
| பாடசாலை அபிவிருத்தி செயற்றிட்டம் | 32,693,760 | 0 |
| கொக்காவில் கோபுர செயற்றிட்டம் | 16,265,738 | 0 |
| வவுனியா கோபுர செயற்றிட்டம் | 171,235 | 0 |
| லோட்டஸ் கோபுர செயற்றிட்டம் | 617,836 | 7,024,331 |
| | **107,504,532** | **63,894,040** |

## 10 நிர்வாக, தாபன செலவுகள்

| | | |
|---|---|---|
| சம்பளங்கள் | 63,727,279 | 61,610,355 |
| ஊ.சே.நி (15% பங்களிப்பு) | 8,827,443 | 8,441,247 |
| ஊ.ந.நி (3% பங்களிப்பு) | 1,765,489 | 1,688,250 |
| வாழ்க்கைச் செலவுப் படி | 12,698,163 | 11,526,503 |
| போக்குவரத்துப் படி | 16,412,699 | 16,636,122 |
| வீட்டு வாடகைப் படி | 5,349,732 | 5,290,865 |
| ஏனைய படிகள் | 330,298 | 153,831 |
| செயற்றிறன் ஊக்குவிப்பு | 13,837,417 | 13,810,153 |
| விசேட படிகள் | 2,707,415 | 0 |
| மிகை ஊதியம் | 2,803,518 | 0 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 7,689,920 | 10,094,055 |
| தவிசாளர் வேதனம் | 400,000 | 300,000 |
| பயன்படுத்தப்படா விடுமுறைகள் | 3,434,126 | 3,395,212 |
| ஓய்வூதியத்திற்கான ஆணைக்குழுவின் பங்களிப்பு | 52,353 | 162,860 |
| போக்குவரத்து சலுகைகள் - புகையிரதம் | 2,180 | 8,220 |
| விடுதித் தொலைபேசிகள் | 487,947 | 623,480 |
| சீருடைகள் | 328,887 | 248,195 |
| ஊழியர் நலன்புரி | 5,883,768 | 4,766,961 |
| விளையாட்டு செயற்பாடுகளின் அபிவிருத்தி | 808,321 | 599,363 |

| | | |
|---|---|---|
| அலுவலர்களின் உயர்தொழில் உறுப்புரிமை உதவுத்தொகை. | 275,593 | 332,617 |
| உள்ளூர் பயிற்சி | 1,126,972 | 611,094 |
| ஆணைக்குழு உறுப்பினர்களது படிகள் | 25,500 | 7,341 |
| வீட்டுக்கடன் மீதான 2/3 வட்டி மீளளிப்பு | 4,107,294 | 3,669,586 |
| போக்குவரத்தும் உணவுப் படியும் | 190,052 | 227,856 |
| பணிக்கொடை | 2,663,638 | 2,368,570 |
| மின்சாரம் | 26,887,876 | 9,958,682 |
| நீர் | 1,409,645 | 1,232,851 |
| சுத்திகரிப்புச் சேவைகள் | 3,383,447 | 2,621,053 |
| பாதுகாப்பு | 6,729,720 | 5,414,622 |
| வீத வரிகளும் வரிகளும் | 0 | 0 |
| பொருளாதார சேவை வரி | 4,172,176 | 16,241,497 |
| நூலகப் புத்தகங்கள் | 0 | 350,044 |
| அச்சிடலும் காகிதாதியும் | 5,414,898 | 4,536,296 |
| எரிபொருள் | 4,699,140 | 5,220,009 |
| மின்னியல் சாதனங்கள் | 131,802 | 103,781 |
| தபால் செலவு | 651,070 | 557,542 |
| தொலைபேசி, தொலைநகல், PABX | 4,398,443 | 4,417,933 |
| காப்புறுதி (ஆதனம், மருத்துவம்) | 41,040,026 | 18,782,670 |
| இணையக் கட்டணங்கள் | 78,517 | 169,632 |
| செய்தித்தாள்களும் அறிவித்தல்களும் | 10,367,248 | 5,942,181 |
| ஆலோசனைக் கட்டணங்கள் | 0 | 0 |
| கூட்டங்களும் மாநாடுகளும் | 85,833 | 183,055 |
| கணக்காய்வுக் கட்டணம் | 540,000 | 707,059 |
| சட்டச் செலவுகள் | 129,741 | 10,727 |
| குத்தகை ஆதனங்களுக்கான வாடகை | 498,000 | 1,827,814 |
| வாகன வாடகைச் செலவு | 1,608 | 2,473 |
| இணைய Leased Line வாடகை | 1,144,216 | 412,360 |
| பெறுமானத்தேய்வு | 62,114,591 | 58,971,222 |
| நானாவித நிருவாகச் செலவுகள் | 2,690,910 | 2,257,648 |
| நானாவித கொள்வனவும் வழங்கலும் | 276,209 | 93,905 |
| நானாவித செயற்பாட்டுக் கிரயம் | 285,937 | 750,775 |
| | 333,067,055 | 287,338,563 |

| | | |
|---|---|---|
| **11 திருத்தல் மற்றும் பராமரித்தல் செலவுகள்** | | |
| அலுவலக உபகரண பராமரிப்பு | 1,700,544 | 2,218,855 |
| பாரம்தூக்கி பராமரிப்பு | 179,874 | 364,912 |
| மின்பிறப்பாக்கி பராமரிப்பு | 122,831 | 55,412 |
| வாகன பராமரிப்பு | 8,765,098 | 7,151,076 |
| கட்டட பராமரிப்பு | 1,241,978 | 1,387,271 |
| தொழிநுட்ப உபகரண பராமரிப்பு | 528,926 | 106,864 |
| மென்பொருள் பராமரிப்பும், உருவாக்கமும் | 14,356,603 | 14,468,149 |
| லோட்டஸ் டொமைன் சேர்வர் தரமுயர்த்தல் | 1,532,024 | 0 |
| பராமரிப்பு முறைமையை தரமுயர்த்தல் | 543,150 | 8,171,037 |
| ஏனைய திருத்தல், பராமரிப்பு செலவுகள் | 646,275 | 103,839 |
| | **29,617,301** | **34,027,414** |
| **12 நிதி மற்றும் ஏனைய செலவுகள்** | | |
| வங்கிக் கட்டணங்கள் | 136,575 | 123,745 |
| வங்கி பற்று வரி | 1,178,114 | 7,094,896 |
| முத்திரை வரி | 1,549,291 | 1,201,764 |
| | **2,863,980** | **8,420,405** |
| **13 திரட்டு நிதிக்கான பங்களிப்பு** | | |
| தொலைத்தொடர்பாடல் சட்டத்தின் கீழ் பங்களிப்பு | 9,050,000,000 | 8,420,405 |
| நிதிச் சட்டத்தின் கீழ் பங்களிப்பு தொலைத்தொடர்பாடல் வரி செலுத்தியது | 16,667,767,978 | 0 |
| சர்வதேச வெளிச்செல்லும் அழைப்பு வரி செலுத்தியது | 1,258,570,192 | 0 |
| | **26,976,338,170** | **8,420,405** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனதுஇல / My No: TM/E/TRC/FA/2010

ඔබේ අංකය / உமது இல / Your No.:

දිනය / திகதி / Date: 09 August 2011

**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழவின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகிறது. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை 2012 மே 08 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கண்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையான என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின்

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை
INDEPENDENCE SQUARE, COLOMBO 07, SRI LANKA

දුරකථනය / தொலைபேசி / Telephone. 2691151
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2697451
ඉලෙක්ට්‍රොනික් තැපෑල / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிரயாயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று நிதிக்கூற்றுக்களில் தனியானதோர் கூறாகும். எவ்வாறாயினும், இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 03 இல் வேண்டப்பட்டவாறு இக்கூற்று ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இது தொடர்பில் எனது முன்னைய ஆண்டிற்கான அறிக்கையினாலும் ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 9 இன் பிரகாரம் நிதியீட்ட மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் தெளிவாக இனங்காணப்பட்டு வெவ்வேறாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், இந்தச் செயற்பாடுகளிலிருந்தான ரூ. 33,002,372,764 மொத்தமான காசுப்பாய்ச்சலை வெவ்றோகக் காண்பிப்பதற்குப் பதிலாக முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) ரூ. 23,403,160 ஆன பணிக்கொடைக்கான ஏற்பாடு மற்றும் அதன் மீது மேற்கொள்ளப்பட்ட ரூ. 21,533,040 ஆன முதலீடுகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 16 இற்கு இணங்க கணக்குகளில் ஓய்வூதிய நலத் திட்டங்கள் மற்றும் பணிக்கொடைப் பொறுப்பு தொடர்பான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் படி வட்டி வருமானம் மற்றும் பங்குலாபங்கள்

தவிர்ந்த ஆணைக்குழுவின் ஏனைய வருமானங்கள் வருமான வரியிலிருந்து விலக்களிப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 24 இன் பிரகாரம் அது நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

(அ) வங்கிக் கணக்கிற்கு நேரடியாகப் பெறப்பட்ட ரூ. 11,704,355 தொகையான மீளாய்வாண்டிற்கான தொலைத்தொடர்பு தீர்வை மற்றும் பெறவேண்டிய ரூ. 31,405,442 தொகையான சர்வதேச வெளிச்செல்லல் அழைப்புத் தீர்வை என்பன கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்ததன் காரணமாக ஆண்டிற்கான வருமானம் ரூ. 43,109,797 ஆல் குறைத்துக் காட்டப்பட்ட அதேநேரம் மீளாய்வாண்டிற்கான காசும் காசிற்கு சமமான விடயங்கள் மற்றும் பெறவேண்டிய கணக்குகள் என்பனவும் முறையே ரூ. 11,704,355 மற்றும் ரூ. 31,405,442 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) கணக்குகளில் காட்டப்பட்டுள்ள கட்டிடங்களின் கிரயம் தவறான ரூ. 3,292,300 ஆல் அதிகரித்துக் காட்டபட்டிருந்தது. அதன் விளைவாக கட்டிடங்கள் மீதான பெறுமானத்தேய்வும் ரூ. 164,615 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) வட்டி வருமானத்தினைக் கணிப்பிடுகையில் சில சந்தர்ப்பங்களில் வட்டி வருமானத்தின் மீதான நிறுத்தி வைத்தல் வரியும் தவறுதலாக அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக வட்டி வருமானம் மற்றும் செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி என்பன ரூ. 185,508 ஆல் குறைத்துக் காட்டப்பட்டன.

(ஈ) தகவல்,தொடர்பாடல் தொழில்நுட்ப ஒழுங்குபடுத்தும் இயலளவை கட்டியெழுப்புதல் (ஐசீரீ-ஆர்சீபீபீ) செயற்திட்டத்திற்குரிய ரூ. 3,223,683 செலவினம் மீளாய்வாண்டிற்கான ஆணைக்குழுவின் செலவினமாக கொள்ளப்பட்டிருந்தமையால் அத்தொகையால் செலவினம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய கணக்கு மீதிகள் ரூ. 1,948,138,756 ஆகும். அந்த மீதிகளில் 01 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக நிலுவையானது காணப்பட்ட தொகை ரூ. 318,674,227 ஆனதுடன் இது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டன. அவற்றின் மீதான காலப்பகுப்பாய்வொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| 01 வருடத்திற்கு குறைந்தவை | 01 வருடத்திற்கு மேல் 02 ஆணடுகளிற்கு குறைந்தவை | 02 ஆண்டுகளிற்கு மேற்பட்டவை | மொத்தம் |
|---|---|---|---|
| ரூ. 1,629,464,534 | ரூ. 47,084,657 | ரூ. 271,589,570 | ரூ. 1,948,138,756 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன.

(i) பெறவேண்டிய கணக்கு மீதிகளில் ரூ. 1,759,562,017 அல்லது 90% பெறவேண்டிய வானொலி அலைவரிசைக் கட்டணத்தினை பிரதிநிதித்துவம் செய்திருந்ததுடன், அதில் ரூ. 105,727,791 இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்திடமிருந்து (எஸ்எல்பீசீ) அறவிடப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், எஸ்எல்பீசீ இன் கணக்குகளின் படி

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவிற்கு செலுத்தவேண்டியதாக எந்த மீதியும் காட்டப்படிட்டிருக்கவில்லை. மேலும், நீண்ட காலமாக நிலவிவரும் மீதிகளை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு எஸ்எல்பீசீ உடன் பொருத்தமான தொடர்புகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 02 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட தொகை ரூ. 271,577,267 எனக் காட்டப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியான நிலுவைக் காலம் 20 வருடங்களிற்கும் மேற்பட்டதாகும். அதன் காரணமாக இந்த மீதிகளின் அறவீடு ஐயத்திற்குரியதாகும். மேலும், நீண்டகாலமாக நிலுவையாகவிருக்கும் இக்கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு பயனுள்ள நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதிவேடுகளின் படி வானொலி அலைவரிசைக் கட்டண கடன்பட்டோர்களின் எண்ணிக்கை 917 ஆகும். ஏறத்தாழ 200 கடன்பட்டோர்களிற்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் 23 கடன்பட்டோர்களினால் அதற்குப் பதிலளிக்கப்பட்டிருந்தன. அத்துடன், ஆணைக்குழுவின் கணக்குப் புத்தகங்களின் படி, இரண்டு கடன்பட்டோர்களிடமிருந்து பெறவேண்டிய கூட்டுமொத்தத் தொகை ரூ. 168,812,935 ஆன போதிலும் அக் கடன்பட்டோர்களின் உறுதிப்படுத்தல் கடிதங்களில் அவை ரூ. 125,198,77 எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையால் ரூ. 43,614,160 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### (ஆ) அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன்கள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அறவிடப்படவேண்டிய பதவியினர் கடன் மீதிகள் ரூ. 83,725,710 ஆனதுடன் கணக்காய்விற்குக் கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக நிலுவையாகவுள்ள தொகை ரூ. 2,420,222 ஆகும். விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கடன் மற்றும் முற்பணங்களின் வகை | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா | 01 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக வெளிநின்ற தொகை ரூபா |
|---|---|---|
| இடர் கடன்கள் | 21,198,207 | 983,823 |
| பண்டிகை முற்பணங்கள் | 137,258 | - |
| மோட்டார் வாகன கடன்கள் | 55,428,682 | 1,294,405 |
| வீடமைப்புக் கடன்கள் | 5,700,209 | - |
| மோட்டார் சைக்கில் கடன்கள் | 1,261,354 | 141,994 |
| | 83,725,710 | 2,420,222 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பும் மேற்கொள்ளப்பட்டது.
2010 ஆம் ஆண்டில் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. 474,275 தொகையான இடர் மற்றும் மோட்டார் வாகனக் கடனை அறவிடுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (இ) செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூ. 3,255,142,55 ஆனதுடன் 01 வருடத்திற்கும் மேற்பட்ட கலமாக தீர்க்கப்படாதுள்ள தொகை ரூ. 312,059,587 ஆகும்.

(ii) 2003 முதல் 2008 வரையான காலப்பகுதியில் 05 நிறுவனங்களிடமிருந்து கிடைத்திருந்த ரூ. 307,635,000 முற்பணங்கள் தொடர்ச்சியாக நடைமுறைக் கணக்குகளின் கீழ் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் இவற்றைத் தீர்ப்பதற்கோ அல்லது ஆணைக்குழுவின் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

உறுதிப்படுத்தல்கள், நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, கனனிகள் மற்றும் துணைச்சாதனைங்களிற்கான பதிவேடு, கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள் மற்றும் செலுத்திய மற்றும் செயற்படுத்துணர்களினால் செலுத்தவேண்டிய தீர்வைகள் மீதான கட்டணங்களிற்கான மதிப்பீட்டு அறிக்கைகள் என்பன கிடைக்காமை காரணமாக ரூ. 30,043,711,925 கூட்டுமொத்தமான பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள், நிலையான சொத்துக்கள், பெறுமானத்தேய்வு, தொலைத்தொடர்பு தீர்வைகளும் கட்டணங்களும் மற்றும் செஸ்வரி போன்றன கணக்காய்வில் திருப்திகரமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்கி ஒழுகாமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் (i) 13 (8) ஆம் பிரிவு | 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை பணிப்பாளர் சபை பரிசோதித்து சமர்ப்பிக்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதத்திற்குள் அதில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் சபையினால் முன்னெடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்க வேண்டிய போதிலும் 2010 இன் அறிக்கை தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) 11ஆம் பிரிவு மற்றும் 2000 யூன் 27 ஆந் திகதிய பீஎப்/பீஈ/09 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2011 ஜனவரி 27 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மிகையான காசினை முதலீடு செய்வதற்குத் தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டில் ரூ. 3,120,000,000 தொகையொன்று வங்கி நிலையான வைப்புக் கணக்கு மற்றும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 2001 மே 24 ஆந் திகதி பீஎப்/பீஈ/21 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களிற்குள் வரைபு நிதிக்கூற்றுக்களை உள்ளடக்கிய வரைபு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் படி இணங்கி ஒழுகியிருக்கவில்லை. |

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

| | |
|---|---|
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் சம்பந்தமாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிவரப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) நிதிப்பிரமாணங்கள் (F.R. 371 (c))<br>(i) F.R. 371 (இ) | ஆணைக்குழுவானது உப கட்டுநிதிகளை வழங்குவதற்கு முன்னர் எதிர்பார்க்கும் செலவினத்தை நிச்சயிப்பதற்கு தவறியிருந்தது. அதன் விளைவாக செலுத்தப்பட்ட ரூ. 1,021,250 முற்பணத்தில் ரூ. 496,664 அல்லது 49% ஆனவை உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்திக் கொள்ளாது 3 தொடக்கம் 71 நாட்கள் காலதாமதத்தின் பின்னர் காசாக தீர்க்கப்பட்டிருந்தது. |
| (ii) F.R. 371 (2) (ஆ) | விதிக்கப்பட்டுள்ள உச்ச எல்லையாகிய ரூ. 20,000 இணை மீறி வழங்கப்பட்டிருந்த 83 உப கட்டுநிதிகளின் மொத்தம் ரூ. 4,519,175 ஆகும். |
| (iii) F.R. 757(2) | மீளாய்வாண்டிற்கான கணிப்பீட்டுச் சபையொன்றினை நியமித்து அதன் அறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு ஆணைக்குழு தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. |

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் ஆணைக்குழுச் செயற்பாடுகளில் இருந்தான நிதி விளைவுகள் ரூ. 29,350,461,45 மிகையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூ. 5,378,271,498 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூ. 23,972,189,947 அதிகரிப்புக் காட்டப்பட்டது.

ஆண்டிற்கான தொலைத்தொடர்புத் தீர்வைகளும் கட்டணங்களும் பிரமிக்கத்தக்க வகையில் ரூ. 23,836 மில்லியனால் அதிகரித்திருந்தமை மற்றும் அறவிடமுடியாத ஐயக்கடனிற்கான ஏற்பாடு ரூ. 138 மில்லியனால் குறைவடைந்தமையே மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பிரதான காரணங்களாக அமைந்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

| வருமானம் | முடிவடைந்த ஆண்டுக்கான | | முரண் சாதகம்/ (பாதகம்) | சதவீதமாக முரண் |
|---|---|---|---|---|
| | 2011 திசெ. 31 இல் | 2010 திசெ. 31 இல் | | |
| **வருமானம்** | **ரூ. 000** | **ரூ. 000** | **ரூ. 000** | **%** |
| தொலைத்தொடர்புகள் தீர்வை | 28,185,372 | 5,704,938 | 22,480,434 | 394 |
| தொலைத்தொடர்புகள் அபிவிருத்தி கட்டணம் | 1,774,458 | 418,436 | 1,356,022 | 324 |
| ஏனைய வருமானம் | 91,803 | 7,187 | 84,616 | 1177 |
| **மொத்த வருமானம்** | **30,051,633** | **6,130,561** | **23,921,072** | **390** |
| **செலவினம்** | | | | |
| ஒழுங்கமைப்புச் செலவினம் | 107,504 | 63,894 | (43,610) | 14 |
| செயற்பாட்டுச் செலவினம் | 593,668 | 688,396 | 94,728 | |
| **மொத்தச் செலவினம்** | **701,172** | **752,290** | **51,118** | **7** |
| **நிதி விளைவுகளிற்கான தேறிய தாக்கம்** | **29,350,461** | **5,378,271** | **23,972,190** | **446** |

i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு ஆணைக்குழுவின் வருமானம் மற்றும் செலவினங்களின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

ii). முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆணைக்குழுவின் தொழிற்படு மூலதனம் 165% இனால் அதிகரித்திருந்தமையால் மீளாய்வாண்டின் முழுவதும் தேவையற்ற திரவச் சொத்துக்களை ஆணைக்குழு வைத்திருந்தமையை அது காட்டியது மேலும், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அது திரவ விகிதம் 1.4.1 ஆனதுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அது 1.2.1 ஆக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 செயலாற்றல் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) வட பிராந்தியத்தில் தொலைத்தொடர்பாடல்கள், ஒலிபரப்பு மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான வசதிகளை வழங்கும் நோக்குடன் கொக்காவில் மற்றும வவுனியாவில் ரூ. 292.3 மில்லியன் செலவில் இரண்டு கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இருந்தபோதிலும், இந்த மூலதனச் செலவிலிருந்து மீளாய்வாண்டில் எவ்வித வருமானமும் ஆணைக்குழுவால் ஈட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு (திருத்திய) அதிகாரச்சட்டத்திலுள்ள ரீஆர்சீஎஸ்எல் இன் பிரதான பணிகளை அமுலாக்கும் நோக்கில் 2010 ஏப்ரல் தொடக்கம் செயற்படும் வகையில் தொலைந்த மற்றும் களவாடப்பட்ட கையடக்கத் தொலைபேசிகள் தொடர்பான பொதுமக்கள் முறைப்பாடுகளை பொறுப்பேற்று 2010 ஏப்ரலிலிருந்து அதன் மீது புலனாய்வினை மேற்கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், மேற்படி பொதுமக்கள் முறைப்பாடுகளிற்கு பதிலளிப்பதற்காக பொருத்தமான பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்தவதற்கு ஆணைக்குழு

தவறியிருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளில் பொதுமக்கள் முறைப்பாடுகள் மீதான பதிலளிப்புகளின் செயன்முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை | பதிலளிப்புகளின் எண்ணிக்கை | பதிலளிப்புகளின் சதவீதம் |
|---|---|---|---|
| | இல. | இல. | % |
| 2010 | 5600 | 1200 | 21.4 |
| 2011 | 5400 | 1900 | 35.2 |

இது தொடர்பில் ரீஆர்சீஎஸ்எல் இன் பணிப்பாளர் நாயகம் பின்வருமாறு எனக்கு அறிவித்திருந்தார்.

"அவ்வாறான நிகழ்வுகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தமையால் இச்சேவையை தொடர்ச்சியாக வழங்குவதற்கு ஆணைக்குழுவிற்கு முடியாதுள்ளது.

(இ) ஏதேனுமோர் தொலைத்தொடர்பு உபரணமொன்றை வர்த்தக நோக்கில் உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், இறக்குமதி செய்தல், விற்பனைக்காக முன்னிறுத்துதல், ஒப்படைத்தல், வாடகைக்கு விடுதல், குத்தகைக்கு வழங்குதல், செய்து காட்டல், பேணிவருதல் அல்லது திருத்தம் செய்தல் யாரேனுமொருவரால் மேற்கொள்ளப்படின் அதற்கான 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் படி ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப் பத்திரமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளாது நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் வணிகச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு அனுமதிப் பத்திரமின்றி வணிகக் கருமங்களில் ஈடுபட்டு வருகின்ற நிறுவனங்களைக் கண்டறிந்து கட்டணங்களை அறவிடுவதற்கான வழிமுறைகள் அல்லது தரவுமுறையொன்று ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) ரூ. 180,000 தொகையொன்று கடந்த 06 வருடங்களாக உள்முக அறை மற்றும் தலைமையக் கட்டிடத்தினை புதுப்பித்தல் என்பதாக அவ்வேலைகளைப் பூரணப்படுத்தாது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் கணக்கின் கீழ் தொடர்ச்சியாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

## 3.4 செயற்பாட்டு மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய 1686/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஒவ்வொரு தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களும் 2011 ஜனவரி 01 தொடக்கம் செயற்படும் விதத்தில் புதிய செஸ் வரியினை செலுத்துதல் வேண்டும். ஆணைக்குழுவிற்கு செஸ் வரியினை செலுத்த வேண்டிய காலஎல்லை குறிப்பிடப்படாதிருந்தமை காரணமாக செயற்படுத்துனர்களினால் அவர்களிற்குரிய செஸ் கட்டணங்கள் வெவ்வேறு காலப்பகுதிகளில் தீர்க்கப்படடிருந்தன. அதன் விளைவாக ஆணைக்குழுவிற்கு கிடைக்க வேண்டிய செஸ் வரிகள் குறிப்பிடத்தக்களவு காலதாமதத்துடனேயே கிடைத்திருந்தன. தற்போது காணப்படுகின்ற சட்டங்களில் தாமதக் கொடுப்பனவுகளிற்கான மிகைவிதிப்பிற்கு சட்டரீதியான அதிகாரங்கள் இல்லையென ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் எனக்கு அறவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 22 (ஏ) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு தொலைத்தொடர்பு வழங்குனராலும் அவர்களுக்கு விசேடமாக வருடமொன்றிற்கு விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்திற்கான செஸ் கட்டணம் மற்றும இயக்குனர் அனுமதிப்பத்திரக் கட்டணங்களை எதிர்வரும் ஆண்டின் ஜனவரி 31 இற்கு முன்னர் செலுத்த

வேண்டியிருந்த போதிலும் 13 நிறுவனங்களினால் செலுத்த வேண்டிய தமக்குரிய செஸ் கட்டணங்களாகிய ரூ. 206,384,147 கூட்டுத் தொகை மற்றும் 08 நிறுவனங்களினால் செலுத்தவேண்டிய செயற்படுத்துனர் கட்டணங்களகிய ரூ. 393,808,974 தொகை முறையே 21 தொடக்கம் 275 நாட்கள் மற்றும் 23 தொடக்கம் 275 நாட்கள் வரையிலான கால வீச்சுக்களில ் தாமதம் செய்து செலுத்தப்பட்டிருந்தன.

மேற்படி தாமதச் செலுத்துகைகளின் மீது மேலதிகக் கட்டணமொன்றை அறவிட முடியுமென செயற்படுத்துனர்களிற்கு வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு கட்டணமொன்றைத் தீர்மானித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் இயக்குனர் அனுமதிப்பத்திரம் மற்றும் செஸ் கட்டணத்தினை தாமதித்து செலுத்துதல் மற்றும் செலுத்தாதிருத்தல் மீது மேலதிக தண்டப்பணத் தொகையொன்றை அறவீடு செய்வதற்குரிய சட்டரீதியான அதிகாரம் தற்போதுள்ள அதிகாரச்சட்டதில் காணப்படாதிருப்பதுடன், அவ்வாறான சட்டரீதியான அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகளை எதிர்வரும் காலத்தில் தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் 2011 ஜூன் 28 ஆம் திகதி இது தொடர்பில் 2012 யூன் 30 வரை ஆணைக்குழுவினால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படடிருக்கவில்லை.

(இ) 2010 நவம்பர் 10 ஆந் திகதிய 1680/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வெளியிடப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஒவ்வொரு தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்களும் சர்வதேச வெளிச்செல்லல் அழைப்புத் தீர்வையினை செலுத்துதல் வேண்டுமாயினும், 08 செயற்படுத்துனர்களால் செலுத்தவேண்டிய ரூ. 29,089,578 தொகை சர்வதேச வெளிச்செல்லல் அழைப்புத் தீர்வை தொகை 18 தொடக்கம் 135 நாட்கள் கால வீச்சில் தாமதத்தின் பின்னர் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.5 மனித வள முகாமைத்துவம்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் அங்கீகரித்த ஊழியர் கோப்பு 265 ஆக காணப்பட்ட அதேநேரம், உள்ளபடியான ஊழியர் கோப்பு 203 மாத்திரமேயாகும். எவ்வாறாயினும், அங்கீகாரமின்றி ஒப்பந்த மற்றும் அமைய அடிப்படையில் 20 ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் படிகளாக ரூ. 11,777,50 அவர்களுக்கும் செலுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பும் மேற்கொள்ளப்பட்டது.

நிறைவேற்று மட்டத்தில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் பதிற்கடமையில் ஈடுபட்டமைக்காக மூன்று உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டில் ரூ. 208,725 பதிற்கடமைப் படி செலுத்தப்பட்டிருந்தது.

## 3.6 வாகனப் பயன்பாடு

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவிடம் 36 வாகனங்கள் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் வாகனங்களின் எரிபொருளிற்காகவும் பேணுகைக்காகவும் ரூ. 13,464,238 செலவிடப்பட்டது. முன்னைய ஆண்டில் செலவிடப்பட்ட தொகை ரூ. 12,371,085 மாத்திரமேயானதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9% அதிகரிப்பு காணப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூ. 2,950,000 பெறுமதியான 06 வாகனங்கள் 2010 ஆம் ஆண்டிலிருந்து ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் பகிரங்க கேள்விகோரலின் மூலம் இந்த வாகனங்களை கைதவிர்ப்பதற்கு 2012 02 இல் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii) 2004 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ரூ. 1,850,000 பெறுமதியான இரண்டு வாகனங்கள் விபத்துக்குள்ளாகியிருந்த போதிலும் இது தொடர்பில் F.R. 103 மற்றும் 105 இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், ஆணைக்குழுவின் வாகனமொன்று கடந்த பல வருடங்களாக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் இந்த வாகனங்களை திருத்தம் செய்யாது துருப்பிடிக்கும் நிலையில் வைத்திருக்கப்பட்டன.

### 3.7 சர்ச்சைக்குரிய விடயம்

நீர்கொழும்பு, கதிரானையிலுள்ள அண்ணளவாக ரூ. 45,000,000 பெறுமதியான மொத்தக் காணியில் ஏறத்தாழ 50% ஆன காணி அதிகாரமற்ற தரப்பினர் அக்கிரமித்திருந்த போதிலும் இது தொடர்பில் ஆணைக்குழு எவ்வித நடவடிக்கையினையும் மேற்கொண்டிருக்கவில்லை. ஆகவே கணக்குகளில் காட்டப்பட்டுள்ள ரூ. 136,475,809 தொகையான காணியின் கிரயத்தின் செம்மைத் தன்மை ஒவ்வொரு காணியின் விடயத்திலும் சரிவர வெளிப்படுத்தப்பட்டுள்ளதனை கருத்திற்கொள்ள முடியவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்ல ஆளுகை

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

(அ) அரசாங்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2007 திசெம்பர் 18ஆந் திகதிய பீ.ஈ.டீ/47 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் அரசாங்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் நல்ல ஆளுகைக்கான வழிகாட்டல்கள் கையேட்டின் 05ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நாளதுரையாக்கப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டமொன்றின் பிரதி வருடம் தொடங்கி 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சு (சனாதிபதி செயலகம்), அரசாங்க பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி என்போரிற்கு சமர்ப்பிக்கப்பட்ட வேண்டிய போதிலும், ஆணைக்குழு அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. தற்போது ஆணைக்குழு வசமுள்ள நாளதுவரையாக்கப்படாத கூட்டுத்திட்டத்திற்கமைய, முகாமைத்துவத்தின் பொறுப்புக்களை தெளிவாக இனங்காணத்தக்க வகையில் ஆணைக்குழுவின் முக்கிய பிரிவுகளான மனித வளங்கள், நிர்வாகம், நிதி, கிடைக்கக் கூடியதாகவுள்ள வளங்கள் போன்றவற்றை இனங்கண்டு கூட்டுத் திட்டமொன்றைத் தயாரிப்பதன் பால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் எதிர்வரும் மூன்று ஆண்டுகளிற்கான செயற்பாட்டு விளைவுகளின் மீளாய்வும் கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆணைக்ககுழுவின் தூரநோக்கு, இலட்சிய நோக்கு மற்றும் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கான தந்துரோபாய வழிமுறைகளையும் மேற்படி கூட்டிணைந்த திட்டம் கொண்டிருக்கவில்லை.

கூட்டிணைந்த திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான ஒப்பந்தம் வெளிநாட்டு நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மூன்று தவணைகளில் 2000 திசெம்பர் 06, 2000 திசெம்பர் 26 மற்றும் 2001 ஏப்ரல் 19 ஆந் திகதிகளில் முறையே ரூ. 22.2 மில்லியன் அல்லது ஐ.அ.டொலர் 262.980 செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தக்காரரினால் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்திருந்த ஆவணங்கள் சிறந்த தரத்தில் இல்லாமையும் வேறோர் நிறுவனத்திற்காக தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்று சில மாற்றங்களை மேற்கொண்ட பின்னர் இ.தொ.ஆணைக்குழுவிற்கு திணிக்கப்பட்டிருந்தமையும் 2007 யூன் 19 மற்றும் 2011 நவம்பர் 08 ஆந் திகதி இடம்பெற்ற பொதுக் கணக்குகள் குழுக் கூட்டத்தில் அவதானிப்புச் செய்யப்பட்டது. இருப்பினும், 2012 யூன் 30 வரை ஆணைக்குழுவினால் இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2011 நவம்பர் 15 ஆந் திகதி இடம்பெற்ற பொதுமுயற்சிகள் பாராளுமன்றக் குழுவினால் இது தொடர்பில் பெருமளவு விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டதுடன் மேற்படி விடயம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழுவிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

அடைய எதிர்பார்த்த இலக்குகளுடன் பதவியணியினரின் பொறுப்புக்களையும் காலப்பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகளிற்கான பாதீட்டு ஒதுக்கீடுகளையும் தெளிவாக இனங்காட்டக்கூடியதாக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று மீளாய்வாண்டிற்காக ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக திருத்த நடவடிக்கைகள் மற்றும் தேவையான மாற்றங்களை மேற்கொண்டு எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு பொருத்தமான மதிப்பிடலை மேற்கொள்ள முடியாதிருந்தது.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

பிரதான உள்ளகக் கணக்காய்வாளரை உள்ளடக்கி 03 ஊழியர்களை உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு கொண்டுள்ளது. மீளாய்வாண்டிற்கான அரையாண்டு கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 4.4 கொள்ளவனவுகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பாதிடப்படட தொகைகளிற்கும் உள்ளபடியான தொகைகளிற்கும் இடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட இருபத்திநான்கு விடயங்கள் மீளாய்வாண்டுக்காக தயாரிக்கப்பட்ட பாதிடப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறான உண்மையான காசு மீதியினை எடுக்காது முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறு பாதிடப்பட்ட நிதிக்கூற்றில் காணப்பட்ட காசு மீதியினை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிற்கான காசுப் பாதீடு தயாரிக்கப்பட்டிருந்தமையால் ஆண்டுமுழுவதும் உள்ளபடியான காசு மீதிக்கும் பாதிடப்பட்ட காசு மீதிக்குமிடையே குறைந்த ரூ. 1,000,000,000 வேறுபாடு காணப்பட்டது.

### 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்படடிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) மிகையான நிதிகளை முதலீடு செய்தல்
(ஆ) கடன்பட்டோர்
(இ) தொலைத்தொடர்புத் தீர்வைகள் மற்றும் கட்டணங்களை அறவிடுதல்
(ஈ) வாகனப் பாவனை
(உ) காணாமல்போன அல்லது களவாடப்பட்ட கையடக்கத் தொலைபேசிகள் மீதான புலனாய்வு

**ஒப்பம்: எச்.ஏ.எஸ். சமரவீர**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

www.trc.gov.lk | dgtsl@trc.gov.lk